
ஸ்ரீ :

அகநானூறு

மூலமும் உரையும்

முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும்



MADRAS :
KAMBAR VILAS BOOK DEPOT
MYLAPORE

1920

Copyright]

[Price Rs. 9



24580

ஸ்ரீ:

நெடுந்தொகை

ஆகிய

அகநானூறு

மூலமும் - உரையும்

கடவுள் வாழ்த்து

கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலியன் மலிந்த கண்ணியன்
மார்பி னஃதே மையி னுண்ஞா
ணுந்தல திமையா நாட்ட மிகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலு முண்டத் தோலா தோற்சே
யூர்ந்த தேறே சேர்ந்தோ ளுமையே
செவ்வா னன்ன மேனி யவ்வா
னிலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்
றெரியகைந் தன்ன வவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா வமரரு முனிவரும் பிறரும்

யாவரு மறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமா னுரிவை தைஇய
15 யாழ்கெழு மணிமிடற் றந்தண்
ருவி ருணிழற் றவிர்ந்தன்று வுலகே.

என்பது : கடவுள் வாழ்த்து.

— பாரதம்பாடிய பெருந்தேவனார்.

வரி

2. தாரன், மாலையன், மலைந்த கண்ணியன் - என்றது, தார் ஓர் விசேடமாக இடுவது; மாலை அழகுக்கு இடுவது; கண்ணி போர்ப்பூ.

இனித் தார் சேர்ப்பதாகவும், மாலை கட்டுவதாகவும், கண்ணி தனித்துத் தொடுப்பதாகவும், இவ் வேறுபாடு களென உரைப்பாரும் உளர்.

இம் மூன்று பெயரையும் முறைநிறீஇ 3. அவன் மார்பினது குற்றமற்ற நுண்ணிய நூலென்க.

5. கணிச்சி - குந்தாலி ; 5. மூவாய் வேல் - சூலம்; 5. கையது என்னும் ஒருமை மழுவிற்குக் கொடுக்க. 6. வேலும் என்னும் உம்மை எச்ச உம்மை.

10-11. எரி யகைந்தன்ன - எரி கப்புவிட்டாற்போன்ற; அவிர்ந்து விளங்குதல் விட்டு விளங்குதல். சடை 11. திங்களொடு சுடருஞ் சென்னி என்க. 8. மேனியையும், 11. சென்னியையும் 15. மணிமிடற்றினையும் உடைய அந்தணன் எனக் கூட்டுக.

12. யாவரும் - முன் சொன்ன யாவரும்; மாபு - தன்மை.

15. யாழ்கெழு மணிமிடறு - சாமவேதம் பாடின மணி போலும் நிறத்தையுடைய மிடறு; அந்தணன் - இவையெல்லாம் உடையாரெனச் அந்தணன் என, இவ் வுருவைத் தியானம் பண்ணுக என்றவாறு.

16. தவிர்ந்தன்று - தங்கிற்று; ஆதலால், இவ்வுலகிற்கு இடையூறு இல்லையென்றவாறு.

ஸ்ரீ :

முதலாவது

களிற்றியானைநிரை

---

1. பாலை

வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ
லிருவக் குதிரை மழவ ரோட்டிய
முருகன் றற்போர் நெடுவே ளாவி
யறுகோட்டி யானைப் பொதினி யாங்கட்
சிறுகா ரோடன் பயிலெரு சேர்த்திய
கற்போற் பிரியல மென்ற சொற்று
மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக
வழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலி
னிழறேய்ந் துலறிய மரத்த லறைகாய்
பறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலி
னுகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குந ரின்மையின் வெளவுநர் மடியச்
சுரம்புல் லென்ற வாற்ற வலங்குசினை

நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடுவளி யெடுப்ப வாருற்
றுடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன்
கடல்போற் றோன்றல காடிறந் தோரே.

என்பது : பிரிவிடை யாற்றுளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

— மாமூலனார்.

வரி

1. தகைந்த - சிதறின, மலர்ந்த.

2. உரு - உருவ என ஈறு திரிந்தது. உட்கத்தக்க குதிரை என்றலுமாம்.

2. மழவரை ஓட்டிய; 3. ஆவிநெடுவேள் - குறுநில மன்னன்.

4. அறு கோடு - அறுத்துத் திருத்தின கோடு; சிங்கத்தை வென்ற என்றுமாம்; பொதினி - ஆவி மலை.

5. காரோடன் - பணையான்; பயின் - அரக்கு.

6. கல் - சாணை; அரக்குங் கல்லுங் கூட்டிச் செய்த கல்லை வேறு பிரிக்க ஒண்ணுதென்று 'கற்போற் பிரியலம்' என்றார். 4. பொதினியிடத்துச் 6. சொல்லிய சொல் என்க.

9. வெறுக்கை - செல்வம்; தருமார் - தரவேண்டி 19. காடு இறந்தோர் - எனக் கூட்டுக.

11. தேய்ந்து - தேய; உலறிய - நேரான; காய்பு - காய.

14. வெளவுநர் - ஆறலைப்பார்.

16. நவிரல் - சுதல்.

17. சூரல் - சுழித்தடித்தல்; சூரற்கடுவளி - சுழுவளிக்காற்று; அம் - சாரியை; ஆர் - ஆர்ப்பு.

18-19. முன் கடல் - கடல் முன்; காடிறந்தோர் 7. மறந்தனர் கொல்லோ எனக் கூட்டுக.

11. மரத்த 13. வெம்மைய 15. ஆற்ற என்றவை காடு என் பதனோடு கொள்ளும்.

2. குறிஞ்சி

கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டேழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேற
லறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங்
குறியா வின்ப மெளிதி னின்மலைப்
பல்வேறு விலங்கு மெய்து நாட
குறித்த வின்ப நினக்கெவ னரிய
வெறுத்த வேளர் வேய்புரை புணைத்தோ
ணிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளு மினைய ளாயிற் றந்தை
யருங்கடிக் காவலர் சோர்பத னெற்றிக்
கங்குல் வருதலு முரியை பைம்புதல்
வேங்கையு மொள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே.

என்பது : பகற்குறிக்கட் செறிப்பறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.

— கபிலர்.

வரி

1. கோழிலை - கொழுவிய இலை; கோள் - காய்; குலையிடத்துக் 2. கனி என்க.
3. ஊழ்படு - முறைமைப்பட்ட.
5. அறியாதுண்டல் - இதனை யறியாது நீர் வேட்கையால் நீரென்று உண்டல்.
6. சாந்தம் எருதென்றது, மரமாயிற் சாந்தமே உள்ளதென்று.
7. வீயடுக்கம் - பூப்படுக்கை.

8. குறியா இன்பம் என்றது, முயற்சியும் உளப்பாடும் இன்றி வந்த இன்பமெனக் கடுவனுக்குந் தலைவனுக்கும் ஏற்பக்கொள்க.

10. எவன் அரிய - என் அரிய.

11. வெறுத்த - மிக்க, செறிந்த; ஏரையுடைய வேயை ஒத்த பெருந்தோள். பணைத்தோள் 13. இவள் எனக் கூட்டுக.

12-13. நிறுப்ப நில்லா நெஞ்சம் - நின்ற நிலையினின்றும் அழியாமல் நிறுத்தவும், அவ்வளவில் நில்லாத நெஞ்சம். நெஞ்சமொடு நின்மாட்டு • 13. இனையளாயினுள் இவளும்.

13-14. தந்தையுடைய காவலர்: சோர்பதன் - இகழ்பதம்.

15. கங்குல் வருதலுமுரியை என்றது, இவள் நின்னை யின்றியமையாள்ாய், நின்னைக் காண்டல் வேண்டி, நின் வரவிற் குடன்பட்டிருத்தலான், வருதற்குரியை நீ என்றவாறு. பகற்குறியேயன்றிக் கங்குல் வருதலுமுரியை.

16. வேங்கையும் விரிந்தன என்றது, தினைப்புனம் அறுத்து இற்செறிப்புண்டாள் என்றவாறு. எனவே, பகற்குறியும் மறுத்துக், 14. காவலர் சேர்ப்பதனெற்றி எனவே இரவுக்குறி யருமை கூறி, அதுவும் மறுத்துத், தோழி வரைவுகடாயினவாறு.

17. நெடுவெண்டிங்கள் என்றூர் ஆதித்தனுக்கு மேலாகலான். ஊர்கொண்டது என்றது, நிரம்பிற்று என்றவாறு. வளர்தல்கொண்டது என்றுமாம். வளர்பிறையின்றிக் கல்யாணநாட் கொள்ளாராகலின், அதுவும் ஆயிற்றென்றுள்.

கடுவனுனது தேனை யறியாது நுகர்ந்து, பின்பு தனது தொழிலாகிய மரமேறலு மாட்டாது, வேறோரிடத்துச் செல்லவு மாட்டாது, தனக்கு அயலாகிய சந்தனத்தின் நிழலிற் பூமேலே உறங்குகின்றுற்போல நீயும் இக்கள வொழுக்கமாகிய இன்பம் நுகர்ந்து, நினது தொழிலாகிய அறநெறியையுந் தப்பி, இக்களவினீங்கி வரையவு மாட்டாது, இக்களவொழுக்கமாகிய இன்பத்திலே மயங்கா நின்றாய் என்றவாறு.

3. பாலை

இருங்கழி முதலை மேளந்தோ லன்ன.
கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினக்
கடியுடை நனந்தலை யீன்றிளப் பட்ட
கொடுவாய்ப் பேடைக் கல்கிரை தரீஇய
மான்றுவேட் டெழுந்த செஞ்செவி யெருவை
வான்றோய் சிமைய விறல்வரைக் கவாஅற்
றுளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி
யொண்செங் குருதி யுவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
கொள்ளை மாந்தரி னுணுது கவரும்
புல்லில மராஅத்த வகன்சே ணத்தங்
கலந்தர வுள்ளமொடு கழியக் காட்டிப்
பின்னின்று துறக்கு நெஞ்ச நின்வாய்
வாய்போற் பொய்ம்மொழியெம் மெவ்வமென் களைமா
கவிரித ழன்ன காண்பின் செவ்வா
யந்தீங் கிளவி யாயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்த்த நோக்க
நெடுஞ்சே ணுரிடை விலங்கு ஞான்றே.

என்பது: முன்னொருகாலத்து நெஞ்சிலுற் பொருள்வலிக்கப் பட்டுப் பிரிந்தான் தலைமகன்; பிரிந்து இடைச்சுரத்தினின்று அவள் நலனயந்து மீளலுற்ற நெஞ்சினைக் கழறிப்போய்ப் பொருண்முடித்துவந்த தலைமகன் பின்னும் பொருள்வலிக்கப் பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

— எயினந்தைமகனார் இளங்கீரனார்.

வரி

1. மேளந்தோல் - மேவின தோல்.

3. கடி - காவல், உயரத்தால் ஏற ஒண்ணுமைபற்றி. இளைப் பட்ட - காவற்பட்ட; வலைப்பட்ட என்றுமாம்.

4. அல்கு இரை - மிக்க இரை.

5. மான்று வேட்டு எழுந்த - மயங்கி இரை வேட்டு எழுந்த; எருவை - பருந்தின் ஒரு சாதி.

6. விறல் வரை - தன் பெருமையால் பிறமலையை வென்ற வெற்றியையுடைய மலை.

7. வலம்பட - வலத்தே வீழ; வெற்றிபட என்றுமாம். தொலைச்சி - கொன்று.

8. உவறி உண்டு - ஊற்றி உண்டு; அருந்துபு - ஆர்ந்து.

9. கலவு - மூட்டுவாய்; அதுகழிந்தகடுமுடை; முடை ஆகு பெயரால் தசை, முடைநாற்ற முடைத்தாகலான்.

9. முடை 5. எருவை 10. கவரும் எனக் கூட்டுக. 10. கவரும் 11. அத்தம் என்க.

12. கலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டி என்றது — ஆபரணம் தரவேண்டும் என்னும் உள்ளத்தாலே கழிந்து போவதாக என்னை அறிவித்து.

13. தரக்கும் - முடுகும்; நெஞ்சம் - வினை; 13-14. நின் வாயின் மெய்போன்ற பொய்ம்மொழி எமது வருத்தத்தை எப்படிப் போக்கவற்று.

17. குழைக்கு அமர்த்த - குழையொடு மாறுபட்ட; 17. நோக்கம் வந்து 18. நெடுஞ்சேண் ஆரிடையிலே தடுக்கும் அன்று 13. நின் 14. பொய்ம்மொழி எப்படியாற்களைய வற்றே எனக் கூட்டுக.

4. முல்லை

முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பினி யவிழ
விரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலை தெறிப்ப
5 மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
தொழி கருஞ்சி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
ந்ரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மான்வினைத் தேர
னுவக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி ழலரி னுறு
மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே.

என்பது : தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது.

— குறுங்குடி மருதனார்.

வரி

1. முல்லை வைந்நுனை என்றது - நுனையையுடைய மொட்டை. இல்லம் - தேற்றுமாத்திற் பூ; முதல்கூறச்சினை.
2. பிணி-மொட்டு. 3. இரும்பு கிரித்தன்ன-இரும்பை முறுக்கிஞ லொத்த மருப்பு; 3. மருப்பின் 4. இரலை என்க.
4. அவலடைய - பள்ளங்களெல்லாம்; தெறித்தல் - துள்ளுதல். 5. புலம்பு - நீர்பெறுத வருத்தம்; புறக் கொடுத்தல் - புறத்தே போதல். 6. வானம் - மேகம்.
7. கானம் கானத்தை; கார் - பருவம்; பதம்.
8. குரங்குளைப் பொலிந்த-வளைந்த தலையாட்டத்தாற் பொலிந்த; புரவியினது 9. வள்பரியத் 13. தோன்று நாடன் என்க. 9. ஈரம்பு * ஆர்த்தன்ன 11. பறவை என்க.
11. பறவை - வண்டு; பேதுறல் - மயக்கமுறுதல்; அஞ்சுதல் - அருளான் அஞ்சுதல். 12. தேரன் - தேரலுய்.
13. குறும் பொறை - சிறு மலை.
14. உறந்தைக்குணது குன்றமென்றது, உறையூர்க்குக் கீழ்ப் பக்கத்ததாகிய சிராப்பள்ளி மலை. 17. அரிவை-விளி;
17. நின்னலநினைந்து 13. தோன்றுநாடன் எனக்கூட்டுக.

பி - மி. 1. வைந்நுதி 5. புறங்கொடுப்ப; 12. யாத்த, தேரவன். 13. உதுக்காண்.

---

* 'ஆர்ப்பன்ன' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம். தொல். பொருள். செய்யு. - 104. ம் சூத்திர உரை.

5. பாலை

அளிநிலை பொறுஅ தமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளா பயியண் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயண் முறுவலள்
கண்ணிய துணரா வளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த வோமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப
வுதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கு நிரைநிலை யதர
பரன்முரம் பாகிய பயமில் கான
மிறப்ப வெண்ணுதி ராயி னறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
யன்ன வாக வென்னுநள் போல
முன்னங் காட்டி முகத்தி னுரையா
வோவச் செய்தியி னென்றுநினைந் தொற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையன்
மோயின ளுயிர்த்த காலை மாமலர்
மணியுரு விழுந்த வணியழி தோற்றங்
கண்டே கடிந்தனஞ் செலவே யொண்டொடி
யுழைய மாகவு மினைவோள்
பிழையலண் மாதோ பிரிதுநா மெனினே.

என்பது: பொருள்வயிற் பிரியக்கருதிய தலைமகன் தன்னெஞ் சிற்குச்சொல்லிச் செலவழுங்கியது.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ.

வரி

1. பொருது அமரிய - பொருமையாலே மேவின.

2. வினிலை - அழைக்கும் நிலை; கொள்ளாள் என்றது போக்கிற்கு உடன்படாது ஆற்றுளாய் நின்ற நிலையைப்பற்றி; தமியள் - நாண்முதலான குணங்களொழியத் தானேயாதல்.

3. அவ்வடியாலே நிலம் வடுக்கொள்ள என்க. இயல்பாகமெத்தென நடக்கும் அடி, இப்பொழுது நிலம் வடுக்கொள்ள நடந்தவசத்தால் நிலத்தைக் காலாற் கீறி வடுப்படுத்தி என்றுமாம்.

5. வறிது - சிறிது. அகம் - இடம். 6. கண்ணியது உணரா அளவை - நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே. 7. வினை - ஆள்வினை.

7. அதனை நாம் தலைப்படுதல் செய்யாதகல, 3. நிலத்தைக் காலால் கீறி வடுப்படுத்தி என்றுமாம்; கருத்துடனே. 8. முதையற்காடு; அம் - சாரியை; 10. மோடு - உயரம்; ஈட்டுதல் - குவித்தல். 11. உதிர்வன - உதிர்ந்து; படுதல் - உண்டாதல். 12. மாய்த்தல் - தீட்டுதல். மழுகுதல் - தேய்தல்; தோற்றி - தோற்றுவித்து. 13. பாத்தி அன்ன - பதித்து வைத்தா லொத்த; குடுமி - தலை; 14. நிரை நிலை அதர - கல்லொழுங்குபட்ட நிலைமையையுடைய வழிகள்.

15. முரம்பு - வன்னிலம்.

17. தொன்றுபடு கிளவி - இயற்கைப் புணர்ச்சிக் காலத்துச் சொன்ன வார்த்தை. 18. அன்னவாத - அங்ஙனம் சொல்லிக் கழிக. 19. முன்னம் - குறிப்பு. 20. ஒன்று நினைந்து ஒற்றி - போக்கு உடம்படாமையை நினைந்து துணிந்து;

21. பாவை - கண்ணிற்பாவை; பனிநீர் - நடுக்கத்தைச் செய்கிற நீர்; நீர் நோக்கம்-நீரையுடைய பார்வை. 22. ஒடுக்கிய - அணைத்த. 23. பிணையல் - செங்கழுநீர் மாலை. 25. மணி - பவளம்; தோற்றம் - காட்சி. 26. கண்டே என்னும் ஏகாரம் ஈற்றசை;

26. ஒண்டொடி யென்பது தொடங்கி ஆற்றலாற் கூறினன்.

14. அதர 15. கானம் என்க.

6. மருதம்

அரிபெய் சிலம்பி னும்பலந் தொடலை
யரம்போ ழுவ்வளைப் பொலிந்த முன்கை
யிழையணி பணைத்தோ ளாயை தந்தை
மழைவளந் தரூஉ மாவண் டித்தன்
பிண்ட நெல்லி னுறந்தை யாங்கட்
கழைநிலை பெறுஅக் காவிரி நீத்தங்
குழைமா ணெள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயந டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே யின்றுவந்
தாக வனமுலை யரும்பிய சுணங்கின்
மாசில் கற்பின் புதல்வன் ரூயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃ தமைகுந் தில்ல
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தூம்பு வள்ள யாய்கொடி மயக்கி
வாள மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
பல்வேன் மத்தி கழாஅ ரன்னவெம்
மிளமை சென்று தவத்தொல் லஃதே [கே.
யினிமையெவன் செய்வது பொய்ம்மொழி யெமக்

என்பது: பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குத் தோழி கூறியது.

— பரணர்.

வரி

2. வளைப்பொலிந்த - வளையாற் பொலிந்த.
3. ஐயை - ஒரு கற்புடைய மகள்; இவள் தந்தை என்றது இவள் கற்புடைமை நோக்கி.

4. மழைவளம் போலத்தரும் பெரிய வண்மை ; 3. தந்தை யாகிய திதத்தன். 6. கழை - ஓடக்கோல். 7. குழை முதலான மாட்சிமையை யுடைய இழை ; நீ விரும் பின பரத்தை. 8. வேழமாகிய தெப்பம்.

9. யானை எனவே பிடியும் அடங்கிற்று. இன் - உவமம் ; ஆங்கு - அவ்விடத்து. 10. குழைய - பொலிவழிய. 13. கற்பின் தாய் என்க. 14. மாயம் - வஞ்சனை ; தம் மிடத்திற் சாய்ந்து ; பயிற்றி - பலகாலிற் சொல்லி.

15. முதுமை எள்ளல் - முதுமை எள்ளாதே கொள். அஃது அமைகும் - அம்முதுமைக்கு நாங்கள் பொருந்துவேம்; அன்றியும் நீ செய்கின்றதற்கு அமைவேம் என்றுமாம்; 'புதல்வன்தா யென்றதுகொண்டு முதுமை எள்ளல்' என்றுள். தில் - விழைவு.

16. சுடர் - நெருப்பு ; 19. அரில் - பிணக்கம்.

20. கழாஅர் - ஓர் ஊர்.

21. இளமை கழிந்து மிகப் பழைது.

22. நின் பொய்ம்மொழி எங்களுக்கு இனிமை செய்வது எவனென்றுள்.

இதன் உள்ளுறை: நீர்நாய் வாளைக்குக் காவலாகிய வள்ளை யினது நிலையை நெகிழ்த்து, இழிந்ததாகிய வாளையை நுகர்ந்து, பிரம்பாகிய முதிய தூற்றிலே தங்கினாற்போல, நீயும் பரத்தை யர்க்குக் காவலாகிய தாய்முதலாயினாரது நிலையையை நெகிழ்த் துக், குலமகளிரல்லாத விலைமகளிரை நுகர்ந்து, முன்பு நமக் குண்டாகிய எங்கள் பழைமையைப் பற்ற ஒரு பயன் கருதாது தங்குதன்மாத்திரத்திற்கு எம்மில்லில் வந்தீரென்றுளாம்.

7. பாலை

முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
யலமர லாயமொ டியாங்கணும் படாஅன்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை
பேதை யல்லை மேன்தயங் குறுமகள்

பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
வொண்சுடர் நல்லி லருங்கடி நீவித்
தன்சிதை வறித லஞ்சி யின்சில
யேறுடை யினத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையிற் போகி யீங்கோர்
தொலைவில் வெள்வேல் விடலையொ டென்மக
ளிச்சுரம் படர்தந் தோளே யாயிடை
யத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்த்தலைப் படுதல் செய்யே னித்தலை
நின்னெடு வினவல் கேளாய் பொன்னெடு
புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா னல்கு
லாய்சுளைப் பலவின் மேய்கலை யுதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.

என்பது : மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்திடைப்பின் சென்று நவ்விப் பிணைக்கண்டுசொல்லியது.

— கயமனார்.

வரி

1. முகம் செய்தல் - நிரம்புதல் ; இலங்குதல் - விழுந்தெழுந்து ஒளிவிடுதல்.
2. சான்ற - அமைந்தன ; பன்மை கூறிற்று - முடிப்பன்மை நோக்கி; தண்டழையை உடையாக வுடையை.
3. யாங்கணும் - எவ்விடத்தும் ; படால் - படாதே கொள்.
4. மூப்பு - பழமை. முதுபதி - பெயர் ; தாக்கணங்குடைய- வருத்துந் தெய்வமுடைய.
5. பூண்டி - பூண்டாய்; சின் - அசை;;இவையெல்லாம் கூறி, ஆதலால் காவலும் பூண்டாய் ; இனி வாயிலிடத்துப் போகாதேகொள், 6. அறிவுடைய இளமகளே பேதை யல்லை, 7. பெதும்பைப் பருவத்துப் புறத்து ஒதுங்கினை என - புறப்படாத பருவத்தேபோனாய் எனச் சொல்ல, அது கேட்டு.

8. சுடர் - விளக்கு. 9. தன் சிதைவு - தான் செய்த குற்றம்; என்றது - களவொழுக்கத்தை; அறிதல் அஞ்சி - யான் அறிகின்றேனென்று அஞ்சி; இன்சிலை - இனிய சிலைப்பு; உபகாரம் கூறிற்று.

10. ஈறு உயிர் - தோன்றுகின்ற உயிர்ப்பு; என்றது இளமை யான் அதன் இளைப்புக்கூறியவாறு; ஈவ்வி - வினி. ஈவ்வி 13. படர்தந்தோள் என்க. ஈவ்வி 17. நின் னெடு வினவுவல் என்க.

12. தொலைவு - தோல்வி; ஏகாரம் - ஈற்றசை; 13. பீடர் தந்தோள் ஒரு சொல்; ஆயிடை - அப்பொழுது.

14. அருஞ்சுரத்துக் கள்ளர்; ஆ தொழு அறுத்தென - ஆவைத் தொழுவினின்றும் நேராகக் கொண்டு வந் தார்களென்று.

15. பிற்படு பூசல் - பிற்படச்சென்று மீட்கும் கரந்தையார் பூசல்; இன் - பொரு. வழிவழி ஓடி - பின்னோடி.

16. மெய்த்தலைப்படுதல் செய்யேன் - அவள் மேனியை அணுகுதல் செய்யப்பெற்றிலேன். இத்தலை - இவ் விடத்து. 17. வினவல்கேள் - நின்னெடு வினவுதற் குக் காரணம் கேள். 18. பொன்னுற் செய்த புலிப் பல்லோடு கோத்த தனிமணித்தாலி. 19. ஒலித்தல் - தழைத்தல்; குழைச் செயலை - அசோகந்தளிர்; உடை - தழையுடை. அல்குல் 22. மகள் என்க. 20. கலை - முசு. 21. தூய் - தலையில் ஆர்க்கு.

22. அவள் கானக மகளாதலால் நினக்கும் ஓர் அடைவுண்டு; இனி எங்ஙனம் செய்வேனென்று கேட்கிறான் செவிலி.

பி - ம். 11. பிணையினெதுங்கி. 16. செல்லேன்.

8. குறிஞ்சி

ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
தூங்குதோற் றுகிய வள்ளுகிர் கதுவலிற்
பாம்புமத னழியும் பானட் கங்குல்
மரிய வல்லம னிகுளை பெரிய

கேழ லட்ட பேழ்வா யேற்றை
பலாவம லடுக்கம் புலர வீர்க்குங்
கழைநரல் சிலம்பி னுங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப்
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பு மவர்நாட்
டெண்ணரும் பிறங்கன் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கிய நீயி ரிச்சுர
மறிதலு மறிதிரோ வென்னுநர்ப் பெறினே.

என்பது: தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

— பெருங்குன்றூர் கிழார்.

வரி

3. ஈன்ற தோல்வளையில் அடங்கின வலிய உகிராலே கதவுதலின்; துதிய உகிர் - உறைபுக்க உகிர்.

4. பானாட் - பாதிநாளாகிய; இரவு. 6. ஏற்றை - புலியேறு. 9. அசும்பு - மலையின் நீர் அருத 'குழி. 11. படி - படியாக ; பூசல் - மரத்தோசை ; 12. விடரகம் - மலை முழை ; இயம்பும் - ஆண்டுப்போய் ஒலிக்கும்.

13. பிறங்குகல் - பிறங்கல் என விகாரம்; வழியுயர்ச்சியுமாம்; ஒரு சொல்; மான்அதர் - மான்போம்வழி.

14. மின்னுவிட - மின்வழிவிட; சிறிய ஒதுங்கி - மெத்தென நடந்து; ஒதுங்க எனத்திரிக்க.

14. ஒதுங்க 5. அரியவல்ல என முன்னே கூட்டுக. ஒதுங்கிச் செல்ல எனச் சொல் லெச்சமுமாம். மென்மெல என்பது தொடங்கி வேறு பிரித்துரைக்க.

16. புதைய - மறைய; வாரி - கோதி; குரல் - மயிர்க்கொத்து.

17. வழி, செலவுகெட விலங்கிய சுரம் என்க. .....

18. என்னுநரை - என்று சொல்லுவாரை; பெறிற் 4. பாலுட்கங்குலும் 14. சேறற்கு 5. அரியவல்ல என்ற பொருளுரைக்க. [5. மன் - கழிவு. சொல்லுவா ரில்லை என்றவாறு.

இப் பாட்டினுள் ஏற்றையினது வள்ளுகிர் கதுவலின் பாம்பு மதனழியும் என்ற இறைச்சிப் பொருள்: — ஏற்றையானது பாம்பை வருத்தவேண்டும் என்னும் கருத்தில்லையாயினும், அது தன் காரியஞ் செய்யவே வள்ளுகிர் படுதலாகிய அவ்வளவிற்குப் பாம்பு வலியழிந்தாற்போல, அவர் நம்மை வருத்தவேண்டுமென்னும் கருத்தில்லையாயிருக்கவே, தமது காரியமாகிய களவின்பத்திலே ஒழுகவே, ஆறின்னுமை ஊறின்னுமை முதலாகிய இவ்வளவிற்கே நாம் வருந்தும்படியாய் விட்டது என்றவாறு.

'பெரிய கேழலட்ட' என்பது முதலாகப் 'புலரலீர்க்கும்' என்பதிறுதியாக நின்ற உள்ளுறைப் பொருள்: — புலியானது தான் நுகர்தற்பொருட்டுக் கேழலையட்டுப் பழ நாற்றத்தை யுடைய பலாவமலடுக்கம் புலரலீர்த்தாற்போல, அவரும் இன்பந்துய்த்தற்பொருட்டு வந்து நம்மைக்கூடி, அக் கூட்டத்தாலே புகழ்ச்சியை யுடைத்தாகிய நம் குடியை இகழ்ச்சியுடைத்தாம்படி பண்ணினர் என்றவாறு.

'வழையொடு வாழையோங்கிய' என்பது முதலாக 'விண்டோய் விடரகத் தியம்பும்' என்பதிறுதியாக நின்ற சொற்களின் உள்ளுறைப் பொருள்:—வாழை நுகர வந்த யானை அதன் அயலாகிய அசும்பின் குழியிலே விழுந்ததாகப், பின்பு அக் குழியினின்றும் ஏறமாட்டாது வாழையாகிய உணவையும் இழந்துழிப், பிடி அது ஏறுதற்குப் படியாக மர முறிக்கின்ற ஓசை விண்டோய் விடரகத்து இயம்பினாற்போல, அவரும் நமது நலம் நுகரவந்து களவொழுக்கமாகிய சூழியிலே விழுந்து, இக்கள வொழுக்கமாகிய இதனைவிட்டு வரையவுமாட்டாது நமது காவலருமையால் இக்கள வொழுக்கினை நுகரவுமாட்டாது தயரப்படுகின்றுழி, அறத்தொடு நிலை முதலாகிய இவற்றுள் மகளிராகிய நாமே வரைய முயலும் வழி, அம் முயற்சியானே ஊரெல்லாம் அறியும்படி பண்ணினர் என்றவாறு.

பி - ம். 2. வள்ளுகிர்க்காலிற். 10. படிகடுங்.

9. பாலை

கொல்லிஞெப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
வப்புதுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்படை ரன்ன செங்குழை யகந்தோ
நிழுதி னன்ன நீம்புழற் றுய்வா
யுழுதுகாண் டுளைய வாகி யார்கழல்
பாலி வாலிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை நிணைத்திற் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறார்க்
கொடுநுண் ணேதி மகளி ரோக்கிய
தொடிமா லுலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையோ டிரட்டுங்
குன்றுபின் னெழியப் போகி யுரந்துரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தெனாது
தூனெபரி துரக்குந் துஞ்சாச் செலவி
னெம்மிறும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணேங்கிய நல்லி லொருசிறை நிலவிப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றே ளெய்திக்
கைகவியாச் சென்று கன்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடுக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணெடு மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகண்
மென்றோள் பெறுநசை இச் சென்றவென் னெஞ்சே.

என்பது : வினைமுற்றிமீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

— கல்லாடனார்

வரி

1. கொல்வினை - கொற்றொழில்; புழுகாகிய 3. அம்பென் றது மெல்லிய முட்டை. 5. இன் - அல்வழிக்கண் வந்தது.

4. செப்பு அடர் - செப்புத் தகடு.

5. தும்வாய் என்றதனைப் பெயர்ப்படுத்து ஆகுபெயராற் பூ என்க. வாயையுடையது - வாய் என்றுயிற்று. தும்- பஞ்சு; தீம் பூ என்று சேரும்; புழல் - தூள்.

6. உழுது காண்டல் - தூளாதாள் நீக்கிக்காண்டல்; ஆர் - ஆர்க்கு. 7. ஆலிவானின் - வானின்று விழும் ஆலி போல; காலொடு - காலாற்; சிதறி. 8. கோடு - மேடு; இயவு - வழி; 11. கொடுநுண்ஒதி - வளைந்தபனிச்சை; ஒக்கிய - எடுத்த. 12. தாண்டுதல் - குத்துதல். 14. உரந்துரந்து - வலியாற் செலுத்தி. 16. தூணபரி - விரைந்து செல்லுங் குதிரை; தூரத்தல் - பின்னும் முடுக்குதல்.

16. துஞ்சாச் செலவினையுடைய 17. எம் என்க.

17-18. பன்மாணல்லில் பலகட்டு மாட்சிமைப் பட்ட மாளிகை. 19. பாங்கர்-கல்ல பக்கம். 21. குறுகிக் கண்புதைத்து என்க; 22. பின்னகம்-பின்னின மயிர்; முறுக்கி முடித்த கொண்டை; 23. தோய்ந்தன்றுகொல் - தழுவிற்று கொல்.

பி - ம். 18. ணேங்குயர்.

10. நெய்தல்

வான்கடற் பரப்பிற் றாவற் கெதிரிய
மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த
முட்டாமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப்
புள்ளிறை கூரு மெல்லம் புலம்ப
நெய்த லுண்கண் பைதல கலுழப்
பிரித லெண்ணினை யாயி னன்று
மரிதுதற் றுனையாற் பெரும வரிதினிற்

கொண்டாங்குப் பெயர்தல் வேண்டுங் கொண்டலொடு
குரூஉத்திரைப் புணரி யுடைதரு மெக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டுமனை லடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி யன்னவிவ ணலனே.

என்பது : இரவுக்குறிவந்து தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனை யெதிர்ப்பட்டுநின்று தோழி சொல்லியது.

— அம்மூவனார்.

வரி

1. தூவல் - துவலையை; துவலையை யேற்ற 3. புன்னை.
2. மீன் - வானமீன்; ஊழ்த்த - புறப்படவிட்ட. 3. முடவு-முடத்தன்மை. 4. இறைகூரும் - தங்குதன் மிகும்.
5. பைதல கலுழ - வருத்தமுடையவாய் அழ.
7. அரிதுதுற்றனை - அரியதனைச் செலுத்துதலுற்றாய்; உரிதினின் - இவளுக்கே உரித்தாக.
8. ஆங்கு - நின்னூரிடத்து; கொண்டலொடு - கீழ் காற்றால்.
10. கொன்ற - அழிவு சோர்ந்த.
12. பகுத்தல் - பலர்க்குங் கொடுத்தல்.
13. நலம் இவட்கு 7. உரித்தாகக் 8. கொண்டுபோகவேண்டு மென்றது வரைந்துகொண்டுபோகவேண்டும் என்ற வாறு. அன்றுயின் இவள் இறந்துபடுமென்பது தோன்றக் கூறியவாறு.

புன்னையது கொம்பிலே புள்ளிறைகூரும் என்றது புள்ளுக்குப் புன்னை இருப்பிடமாயினாற்போல எங்களுக்கு ஆதாரமாகி நீ ஆயிற்றில்லை என்றவாறு.

'பழந்திமில் கொன்ற' என்பது முதலாகக் 'கொண்டி' என்பது ஈறாக நின்ற சொற்கு இறைச்சிப் பொருள்: பரதவர் தாம் அழிவு சோர்ந்த திமிலானும் பண்ணின வலையானும் தமது தொழிலாகிய வேட்டைமேற் செல்லாது, தேடாமல்வந்த இழிந்த சுறாமீனை அகப்படுத்து, அதனை அழித்துக் கூறுவைத்து எல்லாரையும் அழைத்தாற்போல, நீயிரும் நமக்கு உறுதியாக

ஆக்கிக்கொள்ளப்பட்ட நன்மைகளான் நமக்கு ஒழுக்கமாகிய நல்வழியின் ஒழுகாது, கண்டோ ரிகழ்ந்த களவொழுக்கிலே ஒழுகி, இக் களவினைப் பரப்பிப் பலரும் அலர் கூறும்படி பண்ணுகின்றீர் என்றவாறு.

பி - மீ. 9. குரூஉக்கிளை.

11. பாலை

வான மூர்ந்த வயங்கொளி மண்டில
நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட்
டிலையில மலர்ந்த முகையி லிலவங்
கலிகொ ளாய மலிபுதொகு பெடுத்த
வஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்தக ளாகிய பயந்தபு கான
மெம்மொடு கழிந்தன ராயிற் கம்மென
வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயிலிணை யெக்கர்
மெய்புகு வன்ன கைகவர் முயக்க
மவரும் பெறுகுவர் மன்னே நயவர
நீர்வார் நிகர்மலர் கடுப்ப வோமறந்
தறுகுள நிறைக்குந போல வல்கலு
மழுதன் மேவல வாகிப்
பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே.

என்பது: தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்ரு ளாய தலைமகள் வேறுபாடுகண்டு ஆற்ருளாய் தோழிக்குத் தலை மகள் ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

— ஔவையார்.

வரி

2. சிவத்தல் - கோபித்தல். உருப்பு - வெப்பம். 3. இலையிலவாய்; 4. ஆயம் - மக்கள்தொகுதி. விருப்பமிக்கு. 5. சுடர் நெடுங்கொடி - விளக்கின் ஒழுங்கு; என்றது கார்த்திகை விளக்கை. தோன்றி - தோன்ற. 7. கம்மென - விரைய; தேய வழக்கு. 9. படுசினை -

பெரிய கொம்புகள். எக்கரிடத்துக் 10. கைகவர்-கை விரும்புகின்ற. முயக்கினை 11. நயவரப் பெறுகுவர். 12. நிகர்- ஒளி; ஓ மறந்து - ஓவுதன் மறந்து. 14. மெலி வான் மேவலவாய் அழுதல்; பொருந்தாவாய்.

7. கொண்டு கழிந்தோராயிற் கம்மென 11. அவரும் பெறுகு வர் 15. கண்ணும்படும்; அது செய்கின்றிலர் என்ற வாறு. மன் - கழிவு.

காரியவாய்பாடு சொல்லுதலால் ஏற்றுதல் பெற்றும்.

பி - ம். 1. வயங்கொளிர். 3. டிலையின். 8. விரிந்தன்ன. 13. வைகலும்.

12. குறிஞ்சி

யாயே கண்ணினுங் கடுங்கா தலளே
யெந்தையு, நிலனுறப் பொருஅன் சீறடி சிவப்ப
வெவனில குறுமக ளியங்குதி யென்னும்
யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பி
னிருதலைப் புள்ளி னொருயி ரம்மே
யேனலங் காவல ராஞ தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயங் கொண்மார்
குறவ ரூன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழ
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரு
நல்வரை நாட நீவரின்
மெல்லிய லொருந் தான்வா ழலளே.

என்பது: பகற்குறிவாராநின்ற தலைமகன் தோழியாற் செறிப் பறிவுறுக்கப் பட்டு இரவுக்குறிவாரா வரைவல் என்றற்கு அதுவும் மறுத்து வரைவுகடாயது. இப்பாட்டினுள் நீவரின் என்றது வரவு மறுத்தது. சீறடி சிவப்ப என்றது செறிப்பறிவுறீஇயது.

— * கபிலர்.

---

* தொல்கபிலர் என்றும் பாடம்.

வரி

3. எவனியற்குதி - என் செய்யப் போகின்றாய்? இல - ஏடு; குறுமகள் - விளி; 4. துவரா - உவரா; நட்பின் - நட்பினால். 5. புள்ளின் - புட்போல; யாங்கள் ஒருயிரம்; யாம் கண்டவிடத்து ஒருயிரம் என்றுமாம். 8. கோள் - காய்; பழு - பழுப்பு; தொழிற்பெயர்; கனியின் பயன் என்றவாறு.

9. ஊன்றிய - நாட்டிய; தோற்றம்-தோற்றத்தை; 12. கழை பட - மூங்கில் காலிலே மடிய; 14. ஒரும் - அசை;

13. வரின் 14. மெல்லியல் வாழாள் என்க. 10. தேம்-தேன்; யானையானது வெருவத்தக்காத குரம்பையை வெருவத்தக்க புலியென்று கருதிச் தனக் குணவாகிய கழை முறியப் பாய்ந் தாற்போல வெருவத்தகாத எங்கள் தமரை வெருவி வரைய முயலாது திரியவே, நாங்கள் இறந்துபடும்படியாயிற்று என்றவாறு.

பி - ம். 2. பெருஅச்சிறடி. 8. பழூஉப்பயம். 10. வேங்கைபாய.

13. பாலை

தன்கடற் பிறந்த முத்தி னாரமு
மூனதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத்
தெறலரு மரபிற் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தி னாரமு
மிருபே ராரமு மெழில்பெற வணியுந்
திருவீழ் மார்பிற் றென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியி னுணர்த்துஞ் சிறுவரை யல்லது
வானிலை யின்றி யிரவலர்க் கீயும்
வள்வா யம்பிற் கோடைப் பொருநன்
பண்ணி தையிய பயங்கெழு வேள்ளியின்
விழுமிது நிகழ்வ தாயினுந் தெற்கேர்பு
கழிமழை பொழிந்த பொழுதுகொ ளமையத்துச்
சாய லின்றுணை யிவட்பிரிந் துறையி

15 னெயின் முக செய்பொருள் வயிற்பட
மாசி றாமடி விரிந்த சேக்கைக்
கவவின் புறுமைக் கழிக வளவய
லழனுதி யன்ன தோகை யீன்ற
கழனி நெல்லின் கவைமுத லலங்க
20 னிரம்பகன் செறுவின் வரம்பணையாத் துயல்வரப்
புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை
யிலங்குபூங் கரும்பி னேர்க்கழை யிருந்த
வெண்குருகு நரல வீசு
நண்பகற் றவலைய தண்பனி நாளே.

என்பது: பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனைத் தோழி செலவழுங்குவித்தது. உடம்பட்டதாமாம்.

— பெருந்தலைச் சாத்தனார்.

வரி

1. முத்தின் - இன் அல்வழிச் சாரியை; முத்தாரம்; 2. தப்பினை யுடையதான என்க. 2. பிறராற் றெறுதலரிய கடவுள்; பேணி - பூசை பண்ணி; 6. மறவன் - படைத் தலைவன். மறவனாகிய 11. பண்ணி என்க.

7. மராஅ - மருவாத; 8. மொழியினுணர்த்தும் - மொழியி னாற் பொருளறிவிக்கும்; சிறுவரை யல்லது - சிறிது பொழுதல்லது; 9. வரைநிலை யின்றி - தனக்கென வரைந்து நிறுத்தும் நிலைமையின்றி; 10. கோடை - கோட்டோர். 11. தைஇய - செய்த; வேள்வி - கள வேள்வி; 12. விழுமிது நிகழ்வதாயினும் - அப் பொரு ளான் அறமுதலாயின விழுமிய நடக்குமாயினும்;

13. பொழுது - காலத்தன்மை; அமயம் - கூதிர். இக் காலத்து 14. இன் துணையாகிய இவள் என்று தேர்ந்து, இவளைத் 24. தண்பனி நாளிடத்துப் 14. பிரிந் துறைவராயின் என்று பொருளுரைக்க.

14. சாயலிவள் என்றது, கூதிர்க்குத் துணையாகிய இவ ளென்று உதவிகூறி, அதற்கு அந்தரமாகிய 24. பனிக் காலத்துப் பிரியாமற் கூறினள்.

24. பனி நாளகத்து 17. ஈண்டின்புறுமற் கழிவதாக; 15. நீ தேடுகின்ற பொருட்கும் ஓர் குறை பிறவாதொழிக வென்றுள்; நோயுறுமென்று நினைத்து, அதுபடா தொழிக என்றுள்.

17. இன்புறுப்ப் என்னும் பாடத்திற்குக் குறிப்புரையாக்கிப் பொருளுரைக்க. அதுவும் இன்புறுமைக் கழிக என்னும் பொருளைக் கொள்ளும்.

18. அழல் நுதி - அழற்கோடு; தோகை - நெற்றோடு. கணை கூர்த்துச் சிவந்திருத்தலான் அவ்வாறு கூறினர்.

19. அலங்கல் - ஆகுபெயரான் அசைகின்ற கதிர்; 20. நிரம் பகன் செறு - ஒத்து அகன்ற செறு. துயல்வர - புடை பெயர; பெயர வந்தலைக்கும் 21. வாடை.

22. எர் கழை - ஒங்கினகழை; 23. நரல - கதற; 19. செய்ந் நெல்லீன்ற முதலிலைருகதிர். தோகைக்கதிராவது, அதனை முற்பட ஈனுமாதலின், அதனை ஈன்ற செய்ந் நெல் என்பாருமுளர்.

பி - மி. 1. தண்கடல்; 2. முறைதிறை; 3. தொல்லரு.

14. முல்லை

அரக்கத் தன்ன செங்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்ம ருஅய்ப் பலவுட
னீயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய
வங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும்பொறை மருங்கி னறும்பூ வயரப்
பதவுமேய லருந்து மதவுநடை நல்லான்
வீங்குமாண் செருத்த றீம்பால் பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு

மாலையு முள்ளா ராயிற் காலை
யாங்காகு வங்கொல் பாண வென்ற
மனையோள் சொல்லெதிர் சொல்லல் செல்லேன்
செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுண் மெய்ந்நிறுத்
தவர்திறஞ் செல்வேன் கண்டனென் யானே
விடுவிசைக் குதிரை விலங்குபரி முடுகக்
கல்பொரு திரங்கும் பல்லார் நேமிக்
கார்மழை முழக்கிசை கடுக்கு
முனைநல் லூரன் புனைநெடுந் தேரே.

என்பது : பாணன் தனக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

— ஒக்கூர் மாசாத்தனார்.

வரி

2. தாய் - தாவ ;

9. மேயலருந்து - மேயலாக ஆர்ந்த. மேயல் - உணவு. மதவு - வலி ; 10. செருத்தல் - ஆமடி ; பிலிற்ற - புறப்படவிட ; 12. மாலையும் என்ற உம்மை : சிறப்பு ; காலை — இக் காலத்து.

14. சொல்லல் செல்லேன் என்றான், கூறுதலருமையான் ; என்றது தலைவி ஆற்றுமை கூறியவாறு.

16. பையுண்மெய் - நோய்மெய் ;

19. நேமித் 21. தேர் என்க.

3 - 4 பவளமொடு மிடைந்தாலொத்த குன்ற மென்க. 4. ஒத்த 7. புலம் என்றுமாம்.

4. குன்றங் கவையிய என்பதே தொடங்கி 7. முல்லையின் புலத்திற்கு அடை.

பி - ம். 3. பரப்ப. 8. மருங்கினிறும் பூதயரப். 10. பிலிற்றி.

15. பாலை

எம்வெங் காம மியைவ தாயின்
மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவிற் றுளுநாட் டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்
செறிந்த சேரிச் செம்மன் மூதூ
ரறிந்த மாக்கட் டாகுக தில்ல
தோழி மாரும் யானும் புலம்பச்
சூழி யானைச் சுடர்ப்பூ ணன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர்ச்
செறிந்த காப்பிகந் தவனெடு போகி
யத்த விருப்பை யார்கழல் புதுப்பூத்
துய்த்த வாய துகணிலம் பரக்கக்
கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி
வன்கை யெண்கின் வயநிரை பரக்கு.
மின்றுணைப் படர்ந்த கொள்கையொ டொராங்குக்
குன்ற வேயிற் றிரண்டவென்
மென்றோ ளஞ்ஞை சென்ற வாறே.

என்பது : மகட்போக்கிய தாய் சொல்லியது.

— மாமூலனார்.

வரி

1. எம் வெம் காமம் இயைவதாயின் 8. அறிந்த மாக்களை யுடைத்தாக என்க. யாம் வேண்டின காரியம் முடியு மாயின் அப்படியாக என்றாள்.

2. கோசர் 4. துளுநாடு.

3. கொம்மை - பெருமை. அம் - சாரியை ; குடுமி - தலை யில் ஆர்க்கு. குடுமியை யுடையது குடுமி ; காயாகிய குடுமி; அது விளைந்த பாகல் என்றது பாகற் பழத்தை; விளைதல் - முற்றுதல்.

4. ஆர்கைத் 5. தோகை என்க.

4. பறைக்கண் - வட்டமானகண் ; 8. அறிந்தமாக்கள் - முக மறிந்தமாக்கள் 7. மூதூர் 8. உடைத்தாக என்க.

11 பாழி - ஊர் ; நகர் - மாளிகை. 14. வாய - வாயவாய் ; துகள் நிலத்திலே பரக்க.

19. அஞ்ஞை - அம்மை ;

2. புலம்பப் 12. போகிச் 19. சென்றவழி என்று சேர்க்க.

10. சூழி - முகபடாம் ; பட்டயானை ;

இப் பாட்டினுள் இறைச்சிப் பொருள் : கரடி ஆர்கழல் புதுப்பூவை நுகர்ந்த வாயையுடையவாய், அதிலே நிறைந்து கொன்றைப் பழத்தைக் கோதிப்போலுற்போல, அவளுந்தலைவ னுடனுகூடிய இன்பத்திலே நிறைந்தசெருக்கினுலே கூடிவளர்ந்த தோழிமாரையும், பெற்று வளர்த்த என்னையும் புறக் கணித்துப் போனுள் என்றவாறு.

பி - ம். 5. துள்ளு நாடன்ன. 12. காப்பிறந். 14. பரிப்ப.

16. மருதம்

நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதி னல்லி யயலிதழ் புரையு
மாசி லங்கை மணிமரு ளவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவருங்
காணுங் ரின்மையிற் செத்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை
வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டன னின்மோட் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமக ளெவன்பே தற்றனை
நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனென் கவைஇக்

15 களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா
நாணி நின்றேரு ணிலைகண் டியானும்
பேணினெ னல்லனே மகிழ்ந வானத்
தணங்கருங் கடவுளன் னேணின்
மகன்று யாதல் புரைவதாங் கெனவே.

என்பது : பாத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகன் யாரையும் அறியேனென்றற்குத் தலைமகள் சொல்லியது.

— சாகலாசனர்.

வரி

3. மணி -- பவளமணி ; 4. நவிறல் - பழகுதல் ; நகை - மகிழ்ச்சி ; 5. யாவரும் - பகைவரும் ; 6. தேர் - சிறுதேர் ; தனியனுய்க் கண்டே.

8. செத்தனள் பேணி - கருதிப் பேணி ; செத்து - ஒப்பு மாம் ; ஒப்பு - தலைவனை ஒப்பு.

9. முலை - முலையிடத்து 11. முலையிடத்துக் கொண்டு நின்றுள் என்க.

10. மாள - அசை ; 11. நின்ற நிலையினின்றும் போகேனுய் : 12. என்ன மயக்கமுற்றுய் ? 13. விரையவந்து தழுவி ; 15. களவு ; உடம்படுதல் - இசைதல் ; 17. பேணுதல் - விரும்புதல் ; 18. கடவுள் - அருந்ததி ;

உன்னையொழிய அறியாதவள் என இகழ்ந்து கூறியவாறு.

19. புரைவதென்று மேல்நிற்றலின் 17. பேணினெனல்லனே என்றுள். ஆங்கு அசை.

அவள் பதற்றங்கண்டு 12. எவன் பேதுற்று யென்றுள்.

அணங்கருங் கடவுள் என்பதற்கு பிறரை வருத்துகின்ற எய்தற்கரிய தெய்வமகள் என்றுமாம்.

3. மாசில் அங்கை - இலக்கணக் குறையற்றகை.

பி - ம். 6. கண்ட. 8. குறுகியாவரும். 19. புரைவதா லென்னவே.

17. பாலை

வளங்கெழு திருநகர்ப் பந்துசிறி தெறியினு
மிளந்துணை யாயமொடு கழங்குட னுடினு
முயங்கின் றன்னெனென் மெய்யென் றசைஇ
மயங்குவியர் பொறித்த நுதல டண்ணென
முயங்கினள் வதியு மன்னே யினியே
தொடிமான் சுற்றமு மெம்மு முள்ளா
ணெடுமொழித் தந்தை யருங்கடி நீவி
நொதுமல ளாள னெஞ்சறப் பெற்றவென்
சிறுமுதுக் குறைவி சிலம்பார் சீறடி
வல்லுகொல் செல்லத் தாமே கல்லென
வூரெழுந் தன்ன வுருகெழு செலவி
னீரி லத்நத் தாரிடை மடுத்த
கொடுங்கோ லுமணர் பகடுதழு தெள்விளி
நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள வியம்புங்
கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கற்
பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலைய வதர்படு மருங்கி
னீளரை யிலவத் தூழ்கழி பன்மலர்
விழவுத் தலைக்கொண்ட பழவிறன் மூதூர்
நெய்யுமிழ் சுடரிற் கால்பொரச் சில்கி
வைகுறு மீனிற் றோன்று
மைபடு மாமலை விலங்கிய சுரனே.

என்பது : மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

— கயமனார்.

வரி

1. சிறிது|- சிறிதுபொழுது ; 3. அசைஇ - வருந்தி ; 4. செறிவியர் ; தண்ணெனை - குளிர|; 5. என்னைத் தழுவி ; மன் - கழிவு.

8. அற - தனக்கென ; 9. சிறுமுதுக் குறைவி - இளமையிலே அறிவு முதிர்ந்தவள் ; 11. ஊர் குடியாக எழுதல் ; உரு - உட்கு ; 13. தெழித்தல் - உரப்புதல் ; 12. மடித்த 13. பகடு ; 14. இமிழ் - இசை ; 15. ஆகித் தன் ஒளி முடுகிய.

15. திருகிய 20. மலை ; பிறங்கல் 20. மலை.

16. மண்ணைரை யாம் - மாரிக்காலத்துண்டான சேறு உலர்ந்து விறுவிறுத்த உடலை உரோசுதலால் மண்ணையுடைய அரை.

17. கவலையவதர் - கவர்த்தவழி.

20. கால் பொருகையாலே நெய்யுமிழ் சுடர்போல 18. ஊழ் கழி பன் மலர் 20. பின்பு சில்கி 21. மீனிற்றேறன்றும் என்க.

18. ஊழ்கழி - முறைமை மிக்க; என்றது, நாட்புக்கு முதிர்ந்த பூவை நெய்யுமிழ் சுடர்போல விழும்படி காற்றுப் பொருதலாலே நின்றவை சில்கி, விடிகின்ற காலத்து மீன்போலத் தோன்றும் என்றுமாம்.

9-10. சிறடிதாஞ் செல்லவல்லவோ எனக் கூட்டுக.

11. செலவின் - செலவிடத்து.

15. திருகிய 17. அருஞ்சுரம் எனவுமாம்.

பி - ம். 3 முன்னே. 17. கவலையதர். 18. தாழ்படு.

18. குறிஞ்சி

நீர்நிறங் கரப்ப வூழுறு புதிர்ந்த
பூமலர் களுலிய கடுவரற் கான்யாற்றுக்
கராஅந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
மராஅ யானை மதந்தப வொற்றி
5 யுராஅ வீர்க்கு முட்குவரு நீத்தங்
கடுங்கட் பன்றியி னடுங்காது துறந்து
நாம வருந்துறைப் பேர்தந் தியாமத்
தீங்கும் வருபவோ வோங்கல் வெற்ப
வொருநாள் விழுமு முறினும் வழிநாள்

வாழ்குவ ளல்லளென் றேழி யாவது
மூறில் வழிகளும் பயில வழங்குநர்
நீடின் றுக விழுக்குவ ரதனை
யுலமரல் வருத்த முறுதுமெம் படப்பைக்
பகாடுந்தே னிழைத்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பிற் காந்தளம் பொதும்பிற்
பகனீ வரினும் புணர்குவை யகன்மலி
வாங்கமைக் கண்ணிடை கடுப்பயா
யோம்பின ளெடுத்த தடமென் றேளே.

என்பது : தோழி இரவுவருவானைப் பகல்வர வென்றது.

— கபிலர்.

வரி

3. கல்லுயர் மறிசுழி - உயர்ந்த கல்லிலே மோதி மறிந்த சுழியெனக் கூட்டுக. 4. மராஅ யானை - மதத்தானே பிடியொடுங் கன்றெறுழும் மருவாத யானை.

3. முதலை துஞ்சுஞ் சுழி என்க. மறிசுழியையுடைய 5. நீத்தம் ; நீத்தத் 7. துறையைப் பேர்ந்து.

9. விழுமம் - இடர் ; வழிநாள் - பின்னுள் ; என்றது, விழுமம் அறிவது பின்னுளென்று.

12. நீடின்று - நீடுதலிலையாக ; இழுக்குவர் - குற்றப்படுவர் ; 15. நளிப்பு - செறிவு ; 17. கண்ணிடை-இரண்டு கண்ணுக்கும் நடுவு ; 18. எடுத்த - எடுத்து வளர்த்த ;

18. தோள் 16. பகலும் புணர்குவை எனக் கூட்டுக.

14. தேனிழைத்த என்றதனானே தேனழிக்க வருவாராலும், 15. பழந்தூங்கு நளிப்பென்றதனானே பழமெடுக்க வருவாராலும், காந்தளம் பொதும் பென்றதனானே பூப்பறிக்க வருவாராலும் பகற்குறியும் அரிதென்று குறிப்பான் மறுத்தாளாம்.

பி - ம். 3. மறுசுழி. 6. துணிந்து.

19. பாலை

அன்றவ ணொழிந்தன் றிலையே வந்துநனி
வருந்தினை வாழியெ னெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை
யுருடுடி மகுளிபிற் பொருடெரிந் திசைக்குங்
கடுங்குரற் குடிஞையு நெடும்பெருங் குன்ற
மெம்மொ டிறத்தலுஞ் செல்லாய் பின்னின்
றழியச் சூழ்ந்தனை யாயிற் றவிராது
செல்லினிச் சிறக்கநின் னுள்ளம் வல்லே
மறவ லோம்புமதி யெம்மே நறவின்
சேயித ழனைய வாகிக் குவளை
மாயிதழ் புரையு மலிர்கொ ளீரிமை
யுள்ளகங் கனல வுள்ளுதொ றுலறிப்
பழங்கண் கொண்ட கலிழ்ந்துவீ ழவிரறல்
வெய்ய வுகுதர வெரீஇப் பையெனச்
சில்வளை சொரிந்த மெல்லிறை முன்கை
பூவீ கொடியிற் புல்லெனப் போகி
யடர்செ யாயகற் சுடர்துணை யாக
வியங்காது வதிந்தநங் காதலி
யுயங்குசாய் சிறுபுற முயங்கிய பின்னை.

என்பது : நெஞ்சினைப் பொருள்வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் தலைமகள் நலனயந்துள்ளிய நெஞ்சினைக் கழறியது*.

— †பொருந்தில் இளங்கீரனார்.

உரை

1. வந்து - போந்து ; 4. உருள் துடி - கடிப்பு உருளுகின்ற இழுகு பறை. மகுளி — ஓசை ; இன் - பொரு ; ஒப் புரைத்தது ஓசைமாத்திரம் பற்றி ; பொருடெரிதல்

---

* பொருள்வயிற் பிரிந்த தலைமகன் இடைச் சுரத்திற்றன் னெஞ்சிற்குச் சொல்லியது என்றும் பாடம்.

† உலோச்சனார் என்றும் பாடம்.

குடிஞை யோசைக்குள்ளது ; 'குத்திப் புதை' என்ற தோர் பொருள் தோன்ற இசைக்கும். தெரிய எனத் திரிக்க. பொருள் - போவார் காரியம். பொருளும் ஆம். 7. ஒழிப்பு - ஓகையை ஒழிப்பு. 8. செல் - திரியப்போ ; உள்ளம் - நெஞ்சினது உள்ளம் ; சிறத்தல் - நினைத்தது பெறுதல். 9. எம்மைக் கடுக மறப்பை, மறவாதொழியவேண்டும் என்றான்.

9 - 14. 'நறவின் சேயிதழ்.....பையென' என்றது - உள்ளுந்தொறும் உள்ளகங்கனலுகையாலே குவளையினது கரிய இதழை ஒக்கும் நீர்மிகுதல்கொண்ட கரிய இமை பின்பு நறவின் சேயிதழனையவாகி / உலறிப் பழங்கண் கொண்ட விரைந்துவிழுகின்ற அவிரறல் வெய்யவாகச் சொரிய என்க. நறவின் சேயிதழ் செவ்வரிக்கு உவமமாகவும், குவளை கண்வடிவிற்கு உவமமாகவும் உரைப்பாரும் உளர்.

12. உள்ளகம் - நெஞ்சு ; உலறி - வற்றி ; 13. பழங்கண் - புன்கண் ; அறல் - இமையிடத்து அற்று விழுகின்ற நீர் ; கொண்ட அவிரறல் - கோடற்கு ஏதுவான அவிரறல் ; 14. வெரீஇ - பிறர் காண்பரென்று அஞ்சிப் பையெனப் 16. போகி என்க.

15. சில்வளை சொரிந்த என்றது பல்வளையெல்லாம் முன்பே கழன்றோடின ; சில்வளைகள்தாமும் போயின என்றவாறு. 15. முன்கைக் 18. காதலி என்க.

17. அடர் - பொன்னடர். அகல் - விளக்கு அகல் ; 18. வலியின்மையின் உலவமாட்டாது ஓரிடத்தே இருந்த; 19. உயங்குபுறம் - மெலிந்த புறம். சிறுபுறம் முயங்கிய என்றான், மறையகின்று பின்னே கட்டுதலான் ; இதுவும் ஓர் செய்தி.

19. முயங்கியபின் 9. மறவலோம்பு எனக் கூட்டுக.

பீ-ம். 12. உள்ளம். 13. கதழ்ந்து. 18. வதிந்தவெம்.

20. நெய்தல்

பெருநீ ரழுவத் தெந்தை தந்த
கொழுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி
யெக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டலை கெண்டி
ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை விழ்கயிற் றாத றாங்கிக்
கொண்ட லிடுமணற் குரலை முனையின்
வெண்டலைப் புனரி யாயமொ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகப்
பல்பூங் கான லல்கினம் வருதல்
கவ்வை நல்லணங் குற்ற விவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
யெல்லையு மிரவு மென்னுதல் கல்லென
வலவ னுய்க்த வண்பரி
நிலவுமணற் கொட்குமோர் தேர்ருண் டெனவே.

என்பது: பகற்குறிவந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத்தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய், தலைமகன்கேட்பச்சொல்லியது.

— உலோச்சனார்.

வரி

1. அழுவம் - பரப்பு. 2-3. நிழலிடத்துத் தங்கி ஒப்பி என்க.

4. செக்கர் - சிவந்த; ஞெண்டு. 16. கொட்கை - பரந்து திரிய விடுதல்; 5 - 6. ஞாழலொடுந் தாழை யொடும் பிணித்த ஊசல் என்க. 10. அல்கினம் வருதல்-தலைவனொடு தங்கிவருதல்; அல்கினம் வருதலைப் 12. பெண்டிர் சொற்கொண்டு அன்னை 13. காவல்கொண்டாள் என்க. 12. கொடிது - கொடுமைத் தொழில்.

11. கவ்வை நல்லணங்குறுதல் - அலராகிய பேய் பிடித்தல்.

பி - ம். 9. அணித்தகைப்; பொருந்தில் இளங்கீரனார்.

21. பாலை

மனையிள நொச்சி மௌவல் வான்முகைத்
துணைநிரைத் தன்ன மாவீழ் வெண்ப
லவ்வயிற் றகன்ற வல்குற் றைஇத்
தாழ்மென் கூந்தற் றடமென் பணைத்தோள்
மடந்தை மானலம் புலம்பச் சேய்நாட்டுச்
செல்ல லென்றியான் சொல்லவு மொல்லாய்
வினைநயந் தமைந்தனை யாயின் மனைநகப்
பல்வேறு வெறுக்கை தருகம் வல்லே
யெழுவினி வாழியெ னெஞ்சே புரியினர்
மெல்லவி ழுஞ்சினை புலம்ப வல்லோன்
கோடறை கொம்பின் வீயுகத் தீண்டி
மராஅ மலைத்த மணவாய்த் தென்றல்
சுரஞ்சென் மள்ளர் சுரியற் றாற்று
மென்றுழ் நின்ற புன்றலை வைப்பிற்
பருந்திளைப் படூஉம் பாறுதலை யோமை
யிருங்கல் விடரகத் தீன்றிளைப் பட்ட
மென்புனிற்றம் பிணவு பசித்தெனப் பைங்கட்
செந்நா யேற்றை கோழ முக்க
ளிரியற் பிணவு றீண்டலிற் பரீஇச்
செங்கா யுதிர்ந்த பைங்குலை யீந்தின்
பரன்மட் சுவல முரணில முடைத்த
வல்வாய்க் கணிச்சிக் கூழார் கூவல
ரூரு திட்ட வுவலைக் கூவல்
வெண்கோடு நயந்த வன்பில் கானவ
ரிகழ்ந்தியங் கியவி னகழ்ந்த குழிசெத்
திருங்களிற் றினநிரை தூர்க்கும்
பெருங்க லத்தம் விலங்கிய காடே.

என்பது : பொருள்வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் இடைச் சுரத்து நின்று மீளலுற்ற நெஞ்சினைக் கழறியது.

— காவன்முல்லைப் பூதனார்.

வரி

1. நொச்சியிள மெளவல்; 2. மா - வண்டு; திருவுமாம். 3. அவ்வயிறு - ஐதானவயிறு; தைஇ - கைசெய்து; 6. ஒல்லாய் - அதற்குப் பொருந்தாய்; அங்கே நான் சொல்லவும் அதற்குப் பொருந்தாயாய் 7. வினையை விரும்பி யவ்வினைக்கமைந்து போந்தாயாயினென்க; மனை - தலைவி; நக - மகிழ; இல் விளங்க என்றுமாம். 8. பல கூறுபட்டவெறுக்கை; தருகம் - தருவேம்.

9. இனி-இப்போது; புரியிணர்-வலஞ் சுரிந்த பூங்கொத்தி. 10. அது மெத்தென மலர்கின்ற கொம்பு; புலம்ப - கொம்பே கொம்பாய்த் தனிப்ப; 10. வல்லோன் -, பூக்கொள்ள வல்லவன்; 11. கோடு - பெருங்கொம்பு; கொம்பு - அடிக்குங் கோல். 13. சுரியல் - குழன்ற மயிர்; 14. வைப்பு - ஊர்.

20 - 21. ஈந்தின்பரலொடுகூடிய மண்ணையுடைய மேடு; முரணிலம் - வன்னிலம்; 22. கணிச்சி - குந்தாலி; 23. ஊரூர்திட்ட - ஊரூமையாலே அவர் விட்டுப் போன; உவலைக்கூவல், உண்டாயின் உள்ளது சருகென்றவாறு.

25. இகழ்ந்தியங் கியவென்றது-இங்கோரேத மில்லையென்று மதியாது திரியும் வழி. குழியென்று கூவலருடைத்த குழியைக் கருதித் தூர்க்கும் காடென்க.

13. தூற்றும் 14. வைப்பு.

15 - 16. ஓமையையுடைய கன் முழையில் காவற்பட்ட 17. பிணவு என்க. 27. காட்டிலே 3. எழு என்க.

பி - ம். 1. மனைவளர் 4 - றகைமென், 6. செல்லலமென்றியான்.

22. குறிஞ்சி

அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதரும்
கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்ல
லிதுவென வறியா மறுவரற் பொழுதிற்

படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவ லிவளென
முதுவாய்ப் பெண்டி ரதுவாய் கூறக்
களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
தருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநா
ளார நாற வருவிடர்த் ததைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கி
னெளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவல ரறியாமைத்
தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப
வின்னுயிர் குழைய முயங்குதொ றுமெய்ம்மலிந்து
நக்கனெ னல்லனே யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவீண்
டேதில் வேலற் குலந்தமை கண்டே.

என்பது : 1. வரைவிடை வைத்துப் பிரிந்தகாலத்துத் தலைமகள் ஆற்றுளாகத் தோழி தலைமகனை இயற்பழிப்பத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

2. தலைமகன் இரவுக்குறிவந்து சிறைப்புறத்தானாகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

— வேறிபாடிய காமக்கண்ணியார்.

வரி

4. இதுவென வறியாமை - மார்பு வருத்த மென்றறியாமை. மறுவரல் - சுழற்சி ; 5. படியோர் என்றது பிரதியோர் என்னும் வடமொழித் திரிவு ; பல் புகழ் - வென்றியுந் தியாகமுமுதலாயினவற்றாலுள்ள புகழ் ; 6. தணிதல் - செல்லல் தணிதல் ; 7. வாய்கூற-மெய்யாக்கூற ; 8. சூட்டி - சூட்ட ; என்றது வேலிற்கு. அவ்வேலன் முருகனை இங்ஙனஞ் செய்து ஆற்றுப்படுத்தானென்க. 11. ஆற்றுப் படுத்தல் - மனையிற் கொண்டு புகுதல்.

14. ஒதுக்கின் - ஒதுக்கொடு ; 17. தன்னசையுள்ளம்-தன்னை நச்சுதலையுடைய உள்ளமென்று உள்ளத்திற்கு அடை; அதில் நம்முடை நசை யென்றது வேட்கையை. 19 - 20. எய்த்த நோய் - இளைத்தற்குக் காரணமாகிய நோய். 21. உலந்தமை கண்டு 19. நக்கனெனல்லனே என்க.

வெறியெடுத்துத் தீராதவழியில் அஃதியாராலே வந்த தென்றயிராதபடி வரையவந்த பேருதவியினுரைப் பொல்லாங்கு சொல்லக் கடவையோ என இயற்பட மொழிந்தது.

4. இதுவென வறியாமை - இதுவென்று துணிந்து தமரறியாப் பொழுதென்றுமாம்.

பி - ம். 16. காவலறியாமை 18. குழைப்ப.

23. பாலை

மன்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்
பாடுலந் தன்றே பறைக்குர லெழிலி
புதன்மிசைத் தளவி னிதன்முட் செந்நனை
நெருங்குகுலைப் பிடவமொ டொருங்குபிணி யவிழக்
காடே கம்மென் றன்றே யவல
கோடுடைந் தன்ன கோடற் பைம்பயிர்ப்
பதவின் பாவை முனைஇ மதவுநடை
யண்ணல் ரலை யமர்பிணை தழீஇத்
தண்ணறல் பருகித் தாழ்ந்துபட் டனவே
யனையகொல் வாழி தோழி மனைய
தாழ்வி னெச்சி சூழ்வன மலரு
மெளவன் மாச்சினை காட்டி
யவ்வள வென்ரு ராண்டுச்செய் பொருளே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

— ஓரோடோகத்துக் கந்தரத்தனுர்.

வரி

1. மண்கண் - மண்ணிடம்; வீசுதல் - கொடுத்தல்; மழையை வீசி.

2. பாடு - ஒலி; உலத்தல் - ஓசை ஆறுதல்; 5. கம் - அருகரணம். 6. கோடு - சங்கு; கோடலாகிய பயிர். கோடலெக்களையாக வுடைய வரகு முதலாகிய பயிர் என்றுமாம். 9. தாழ்ந்துபடுதல் - ஓரிடத்தே சேர்ந்து தங்குதல்; தாழ்விஞெச்சி - குறுமையினையுடைய நோச்சி; 12. மாச்சிலை - மெளவல் சூழ்ந்த நொச்சிக் கருங்கொம்பு. 13. என்றூரென்பது முற்று.

10. அனையகொல்;- அது மலர்ந்த மாத்திரையோ மேலே போய்த்தோ என்றுள். மேலே போனபடி கூறுவாள்; பொருள் அங்ஙனம் சிறந்ததோ என்றுமாம்.

பி-ம். 4 பிடவொடு. 8. யமர்துணை.

24. முல்லை

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந் தொழிந்த கொழுந்தி னன்ன
தளைபிணி யவிழாச் சுரிமுகப் பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலருந்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குன் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குலுந் தமிய ணீந்தித்
தம்மூ ரோளே நந்நுதல் யாமே
கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து
நதிமுக மழுகிய மண்ணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா வொண்மணி
கழிப்பிணிக் கறைத்தோற் பொழிகணை யுதைப்புத்
தழங்குகுரன் முரசமொடு முழங்கும் பாமத்துக்

கழித்துறை செறியா வாளுடை யெறுழ்த்தோ
ளிரவுத்துயின் மடிந்த தானை,
யுரவுச்சின வேந்தன் பாசறை யேமே.

என்பது: 1. தலைமகன் பருவங்கண்டு சொல்லியது.

2. வினைமுற்றுந் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியதனுமாம்.

— ஆவூர் மூலங்கிழார்.

வரி

1. வேளாப் பார்ப்பான் - யாகம்பண்ணுத லூர்ப்பார்ப்பான்; இவர்களுக்குச் சங்கறுக்கையுந் தொழில்; 2. வளையாக் களைந்தொழிந்த; கொழுந்து - சங்கின் தலை; 4. சிதர லந்துவலை - சிதறுகின்ற துவலை; 5. தைஇ நின்ற - தைத்தன்மை நின்ற; 6. கதிர்கரந்தவைகறை; 8. மங்குல் - இருள்.

5. கடைநாளாகிய 9. பனிக்காலம் என்றது அற்சிரத்தை.

13. மணி - மணியோசை; 14. உதைப்பு - உதைப்பாலுள தாகிய ஓசையை; கறைத்தோல் - கருங்கடகு; 16. கழித்து - உருவி.

12 - 13. கோட்டியானை என்க. 10. யாம் 18. பாசறையேம்.

7. விசும்பு தோலுரிவதுபோலு மென்க; 12. மண்ணை வெண்கோடு-மழுமட்டையான கோடு; 16. வாளுடை 18. வேந்து என்க.

பி - மி. 2. தொழித்த. 12. மழுங்கிய.

25. பாலை

நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅ
யவிரறல் கொண்ட விரவுமண லகன்றுறைத்
தண்கய நண்ணிய பொழிறொறுங் காஞ்சிப்
பைந்தா தணிந்த போதுமலி யெக்கர்
வதுவை நாற்றம் புதுவது களுல
மாநனை கொழுதிய மணிநிற விருங்குயில்
படுநா வினியா னெடுநின் றல்கலு

முரைப்ப போல வூழ்கொள்பு கூவ
வினச்சித முருத்த விலவத் தாங்கட்
சினைப்பூங் கோங்கி னுண்டாது பகர்நர்
பவளச் செப்பிற் பொன்சொரிந் தன்ன
விகழுந ரிகழா விளநா ளமையஞ்
செய்தோர் மன்ற குறியென நீநின்
பைத லுண்கண் பனிவார் புறைப்ப
வாரா மையிற் புலந்த நெஞ்சமொடு
நோவல் குறுமக ணுயிரென
மெல்லிய வினிய கூறி வல்லே
வருவர் வாழி தோழி பொருநர்
செல்சமங் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதிய
னின்னிசை யியத்திற் கறங்குங்
கன்மிசை யருவிய காடிறந் தோரே.

என்பது : பருவங்கண்டழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. *

— ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்.

வரி

2. அறலாந்தன்மை கொண்ட 3. கயம் - மடு ; 4. தாதுமலர்ந்தபோது பூவுதிர்ந்த எக்கர். 5. நாற்றம் மிக ; புதுவதாகிய வதுவை நாற்றம் என்க ; 7. படுதல் - ஒலித்தல் ; அடு நின்று - வருத்தா நின்று ; நடுச் சொல்லுதலிலே நின்று என்றுமாம். 8. உரைப்பபோல - சில வார்த்தை சொல்லுவனபோல ; ஊழ் - முறைமை ; பேடை கூவச் சேவல் கூவ என்க.

9. சிதர் - வண்டு ; இனச் சிதரானது 10. கோங்கின் கண்ணே இருந்து 9. இலவத்தாங்கணுதிர்த்த 10. கோங்கின்தாது என்க.

10. பகர்நர் - விற்பார் ; 12. இகழ்ந்து பிரிவோரும் பிரிய ஒண்ணுத இளவேனிற் காலம் ; 15. அவர் வாராமை

---

* 'தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட' தலைமகளை என்றும் பாடம்.

யின் அவரைப் புலந்த நெஞ்சத்தொடு ; 16. என்னுயிர் நோவதாக வென்று நீ நோவாதேகொள் என்று ஆற்றுவித்தாள். உடலே யன்றி யுயிருநோவதாக வெனச் சொல்லி 17. மெல்லிய இனியகூறி, வல்லே 18. வருவரென்று வேறறுத்துரைக்க.

20. பொதியில் மலை.

பி - ம். 7. பாடுநா, னீடுநின். 8. நுவல. 18. வருப. 22. கன்முகை.

26. மருதம்

கூர்முண் முள்ளிக் குவிகுலைக் கழன்ற
மீன்முள் ளன்ன வெண்காற் மாமலர்
பொய்தன் மகளிர் விழவணிக் கூட்டு
மவ்வய ணண்ணிய வளங்கே ழூரனைப்
புலத்தல் கூடுமோ தோழி யல்கற்
பெருங்கதவு பொருத யானை மருப்பி
னிரும்புசெய் தொடியி னேர வாகி
மாக்க ணடைய மார்பகம் பொருந்தி
முயங்கல் விடாஅ லிவையென மயங்கி
யாஞை மென்னவு மொல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே, யினியே,
புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்
திதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுத ழுமஞ் சினரே, யாயிடைக்,
கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க் கொத்தனிர் நீயி ரிஃதோ
செல்வற் கொத்தனம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தேனை யதுகண்
டியாமுங் காதல மவற்கெனச் சாஅய்ச்

சிறுபுறங் கவையின ருகவுறுபெயற்
றண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போ னெகிழ்ந்தவற் கழுந்தே
நெஞ்சறை போகிய வறிவி னேற்கே.

என்பது : தலைமகன் தோழியை வாயில்வேண்டி, அவ்ளால் தான் வாயில்பெறுது ஆற்றுமையே வாயிலாகப்புக்குக் கூடிய தலைமக னீக்கத்துக்கண் புக்கதோழிக்குத் தலைமகள் சொல் லியது.

—பாண்டியன் கானப்பேரெயில்தந்த உக்கிரப்பெருவழுதி.

வரி

2. கால் - காம்பு ; 3. விழவிற்கு அணியாகக் கூட்டும் ; 5. கூடுமோ - பொருந்துமோ : அல்கல் - இரவு. 7. தொடி யினேரவாகி என்றது - தொடியினது அழகையுடை யவாகி யென்றவாறு.

8. அடைய - பொருந்த ; மாக்கண் 9. இவை ; 6. கிம்புரிக் குவமை 9. கண்.

9. மயங்கி - வருந்தி ; 10. ஓ மென்னவும் - ஒழியும் என்ன வும் ; இடைக் குறைந்தது. 11. இவை என்றது முலையை ; 10. மற்று - அசை ; 11. பருவம் - காலம். 12. தடைஇ-வளைந்து ; சரிந்து என்றபடி ; 13. தேங் கொள் - இடங்கொள் ; பால்பற்றி இனிமையுமாம்.

13. முலை 15. வீங்கமுயங்கல் என்க. ஒழுகும் பொழுது விம்முதல்.

17. ஆயிடை - அவ்விடை ; கவவுக்கை - அகத்திட்டொழுக் கம். நெகிழ்தல் - நழுவுதல் ; போற்றி - கருதி.

17. மதவு நடைப் 18. புதல்வன்.

18. செவிலிகை - செவிலியிடம் ; 19. புதல்வனைப் பார்த் தச் சொல்லுகின்றாள்: நல்லோர்க்கு ஒத்தனீர் என்று; நல்லோர் - அழகியரான பரத்தையர். 19-20 இஃதோ செல்வன் - இந்தச் செல்வன்;..... என்னுமிடைச்

சொல் இஃதோ எனத் திரிந்தது. 20. செல்வன் - பிள்ளை 22. சாஅய் -- என்னிடத்தே தாழ்ந்து. 23. என் முதுகைக் கட்டிக் கொண்டானுக, 24. பலபடியாக வுழுத செம்பாட்டு நிலத்திற் செய்யின்மண்.

25 - 26. அவன்கண் கண்கலங்கிக் கீழற்ற அறிவினேற்குப் 5. புலத்தல் கூடுமோ தோழி என்க. 5 அல்கல் 26. அறைபோன என்க.

இதனுள்ளுறை : முள்ளியின் பக்கலிலே தோற்றிவாழும்பூ அதனைவிட்டுப் பிறர்க்குப் பயன்பட்டவாறுபோல நம்முடன் பிறந்த நெஞ்சு அவருடன் ஏகுகையாயிற்று. அவருடைய வத்தவை விழவிற்கும் உடலாய்த் திரியாநின்றுல் புலத்தல் கூடுமோ. என்க.

பி - ம். 14. நறுஞ்சாந்து புலர்ந்த 23. விருபெயற். 25. கலுழ்ந் தென்.

27. பாலை

கொடுவரி யிரும்புலி தயங்க நெடுவரை
யாடுகழை யிருவெதிர் கோடைக் கொல்குங்
கானங் கடிய வென்னுர் நாமழ
நின்றதில் பொருட்பிணிச் சென்றிவட் டருமார்
5 செல்ப வென்ப வென்போய் நல்ல
மடலை, மன்ற நீயே வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட் டியானை
மறப்போர்ப் பாண்டிய ரறத்திற் காக்குங்
கொற்கையம் பெருந்துறை முத்தி னன்ன
10 நகைப்பொலிந் திலங்கு மெயிறுகெழு துவர்வாய்
தகைப்பத் தங்கல ராயினு மிகப்ப
யாங்ஙனம் விடுமோ மற்றே தேம்படத்
தெண்ணீர்க் கேற்ற திரள்காற் குவளைப்
பெருந்தகை சிதைத்து மமையாப் பருந்துபட

15 வேத்தமர்க் கடந்த வென்றி நல்வேல்
குருதியொடு துயல்வந் தன்னநின்
னரிவே யுண்க ணமர்த்த நோக்கே.

என்பது : செலவுணர்ந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

— மதுரைக் கணக்காயனர்.

வரி

1. தயங்க - விளங்க ; 2. கழை - தண்டு ; வெதிர் - திணிமூங்கில், கோடை - மேல்காற்று. ஒல்கும் - ஒடுங்கும்.

3. வெதிர் சாய்ந்தால் உள்ளுக்கிடந்த புலி தோன்று மென்று கூறிற்று.

4. நின்றதில் - இன்னவிடத்திலே நின்றதென்று சொல்லுதலில்லாத, பொருள் ; பிணி - பிணிப்பு. 5. போவர் என்று சொல்லாநின்றார்கள் என்று எனக்குச் சொல்லுவாய். 7. வேங்கடம் பயந்த - அங்குள்ள அரசர் திறையிட்ட. 9. முத்தினன்ன 10. எயிறு ; நகையொடு பொலிந்திலங்கும் பல். 11. தங்கலராயினும் ; இகப்பபோக, யாங்ஙனம் விடும் ? விடாதுகாண். 14. அமையா - அதனைவிட விடாவாய் ; 15. வேந்து - வேத்தென விகாரம். 16. துயல்வருதல் - அசைவருதல்.

17. கண்ணின் மலர்ந்த நோக்கு 12. எங்ஙனம் விடு மென்க. 3. கடிய வென்னராய்த் 4. தரவேண்டிச் 5. செல்வரென்னை நின்றாரென்க.

பி - ம். 1. தயங்கு. 11. தாங்கல.

28. குறிஞ்சி

மெய்யிற் றீரா மேவரு காமமொ
டெய்யா யாயினு முரைப்ப றேழி
கொய்யா முன்னுகுங் குரல்வார்பு தினையே
பருவி யான்ற பைங்கா றேறு

மிருஷி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்
பரிய னுயொடு பன்மலைப் பிடரும்
வேட்டுவற் பெறலொ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடைபிடை பயிற்றி
யாங்காங் கொழுகா யாயி னன்னை
சிறுகிளி கடிந்த றேற்ற ளிவளெனப்
பிறர்த்தந்து நிறுக்குவ ளாயி
னுறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே.

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

இது பகலே சிறைப்புறம்.

— பாண்டியன் அறிவுடை நம்பி.

வரி

I. காமமொடு - காம்த்தால் 4. கால் முதல்; 6. முரண் கோடல் - பலபூவாதலாற் பலநாற்றமா யிருத்தல். 8. அமைந்தனை - அமைந்தாய். 9. எழுந்து நின்று; 10. கிள்ளைத் தெள்விளி - கிள்ளைகளை ஓட்டுகிற ஓசை; இடையிடை - அவற்றின் பேச்சுக் கிடையிடையே; பயிற்றி - பலகாற் சொல்லி; 11. அப்படியே அப் படியே; அவ்வவ்விடங்களிலே யென்றுமாம்; 12. தேற் ருள் - தெளிய அறியாள்.

13. பிறரைக் காக்கக்கொடுவந்து நிறுத்துவளாயின் 14. அவன் மார்பு உறுதற்கு அரிது என்க.

I. மெய்யிற்றீரா மேவருங்காமம் - ஒருவர் மெய்யினின்றும் ஒருவர் நீராமைக்குக் காரணமாகிய காமம்.

பி - ம். 4 அருவியார்ந்த. 7. பரிப்பன்னுயொடு 8. டமர்ந்தனை. 9. வெழுந்து.

29. பாலை

தொடங்குவினை தவிரா வசைவி னென்றுட்
கிடந்துயிர் மறுகுவ தாயினு மிடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த
தாழ்வி லுள்ளந் தலைத்தலைச் சிறப்பச்
செய்வினைக் ககன்ற காலை யெஃகுற்
றிருவே ருகிய தெரிதகு வனப்பின்
மாவி னறுவடி போலக் காண்டொறு
மேவ றண்டா மகிழ்நோக் குண்க
ணினையாது கழிந்த வைக லெனையதூஉம்
வாழலென் யானெனத் தேற்றிப் பன்மாண்
டாழக் கூறிய தகைசா னன்மொழி
மறந்தனிர் போறி ரெம்மெனச் சிறந்தநின்
னெயிறுகெழு துவர்வா யின்னகை யழுங்க
வினவ லானுப் புனையிழை கேளினி
வெம்மை தண்டா வெரியுகு பறந்தலைக்
கொம்மை வாடிய வியவுள் யானை
நீர்மருங் கறியாது தேர்மருங் கோடி
யறுநீ ரம்பியி னெறிமுத லுணங்கு
முள்ளுநர்ப் பனிக்கு மூக்கருங் கடத்திடை
யெள்ள னெனைப் பொருடரல் விருப்பொடு
நாணுத்தளை யாக வைகி மாண்வினைக்
குடம்பாண் டொழிந்தமை யல்லதை
மடங்கெழு நெஞ்ச நின்னுழை யதுவே.

என்பது : வினைமுற்றி மீண்ட தலைமகன் எம்மையும் நினைத் தறிதிரோ என்ற தலைமகட்குச் சொல்லியது.

— வெள்ளாடியனார்.

வரி

1. நோன்றுட் புலி என்க ; தாளது என்றும் பாடம் 2. கிட ந்து 3. மிசையா.

2. மறுகுதல் - வருந்துதல் ; இடம்படின் - இடத்தேவீழின் 5. எஃகு-கத்தி ; 6. தெரிதகு-ஆராயத்தக்க ; 8. மேவ்

றண்டா - பொருந்துதலமையா ; 9. எனையதூஉம் - சிறிதும் ; 12. எம்மென - எம்மிடத்தென்று ; 14. வினவுதலமையாத. 15. பறந்தலை - பாழ் ; 16. கொம்மை - பெருமை ; இயவுள் - தலைமை ; வழியிடத்தியானையுமாம். 17. நீருள்ள விடங்காணாது ; 18. அறுநீரம்பி - நீரற்றயாற்றிலம்பி.

20. எள்ளல் நோனா விருப்பெனக் கூட்டி - பிறரிகழ்தலைப் பொறாத விருப்பென்க.

21. தொடங்கின காரியம் முடியவேண்டுமென்னும் மானம் தலையாக வைகி ; 23. மடங்கெழு நெஞ்சென்றான், கூடநின்றே என்னுற்றுமை அறிவியா நெஞ்சு என்று. நின்னுழையது என்பது முற்று.

5. செய்வினைக்கு அகன்றகாலை 12. மறந்தனிர் என்க. 19. கடத்திடத்துத் 22. தங்கியொழிந்தமை யல்லது என்க.

பி - ம். 1 வசையிலென்றூட். 7. னவ்வடி. 13. இன்னகையிலங்க. 22. யல்லது. வெண்வட்டியார். வேளாவட்டனன்.

30. நெய்தல்

நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலைக்
கடல்பா டழிய வினமீன் முகந்து
தணைபுண ருவகையர் பரத மாக்க
ளினையரு முதியருங் கிளையுடன் றுவன்றி
யுப்போ யுமண ரருந்துறை போக்கு
மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
யயிர்திணி யடைகரை யொலிப்ப 'வாங்கிப்
பெருங்களந் தொகுத்த வுழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
பாடுபல வமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் தறைவ
பெருமை யென்பது கெடுமோ வொருநாண்
மண்ணு முத்த மரும்பிய புன்னைத்

தண்ணருங் கானல் வந்துறும்
15. வண்ண மெவனே வென்றனிர் செலினே.

என்பது : பகற்குறிவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

— முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்.

வரி

1. நெடுங்கயிறு - வலையிறுக்கும் பெருங்கயிறு ; வலத்தல். அக்கயிறு கட்டப்படுதல் ; வலை - வலையால் ; 2. பாடு - பெருமை. 6. ஒழுகை - சகடம். 7. ஒலிப்ப வாங்கி - இழுத்த லருமையால் ஆரவாரித்து வாங்கி யென்றுள். கரையிடத்து வலித்து. 8. தொகுத்த - ஒருப்படுத்தின. 10. பாடு - கூறு ; தங்களிற் கூடுதல் சாற்றி ; அமைத்து. 12. என்பது - என்று சொல்லப்படுகின்ற அது. 13. முத்தம் - முத்தம்போல ; 14-15. வாராநின்றீர், வந்தாலிது கேட்கின்றிலீர் என்றுள்.

15. உங்களழகு செய்த தென்னென்று சொல்லி வினவிப் போகிற், பெருமை கெடுமோ என்றுள், வண்ணங் கேட்கில் வரைவதென்று : வண்ணத்திற்கு அழிவல்ல தில்லாமையால்.

4. துவன்றி 6. குழீஇ 7. வாங்கி 9. வீசி 10. அமைத்து 11. மணற்கண்ணே துஞ்சு மென்க.

இதனுள்ளுறை : பெருங் கடலுட் சிக்கிக் கிடக்கின்ற மீனை நுளையர் அதனின்று நீக்கி உயிர் செகுத்துக் கண்டா ரெல்லார்க்குங் கூறுவைத்துப் பரப்பிப் பின்பு உயிர் வருத்தினே மென்னும் பிரக்கமின்றி, மணற்குன்றிலே யுறங்கினாற்போல, பெருங் குலத்துப் பிறந்த இவளை நீயிர் நம்வசமாக நீக்கி வருத்தி, வேறு பாட்டா னெல்லாரு மிவளைச் சூழும்படி அலராக்கிப் பின்பு நீர் துயரமின்றி உறங்குகின்றீர் என்றவாறு.

13. புன்னை அரும்பிய என்றதனாலும், பகற்குறி யிடையீடு குறியாதாகும்.

15. வண்ண மெவனே வென்றது, இனிநீ ரென்செய்தீ ரென்று கேட்கு மளவல்ல, நும்மழகு என் செய்தது என்று கேட்கவேண்டு மென்றவாறு.

பி - மீ. முடங்கிடந்த, முடக்கிடந்த.

31. பாலை

நெருப்பெனச் சிவந்த வுருப்பவிர் மண்டிலம்
புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞாள்கி,
நிலம்புடை பெயர்வ தன்றுகொ லின்றென
மன்னுயிர் மடிந்த் மழைமா றமையத்
திலையில வோங்கிய நிலையுயர் யாஅத்து
மேற்கவட் டிருந்த பார்ப்பினங் கட்குக்
கல்லுடைக் குறும்பின் வயவர் வில்லிட
நிணவரிக் குறைந்த நிறத்த வதர்தொறுங்
கணவிர மாலை யிடூஉக்கழிந் தன்ன
புண்ணுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுகின் கான நீந்திச்
சென்ற ரென்பிலர் தோழி வென்றியொடு
வில்லலைத் தண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கு
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே.

என்பது : பிரிவிடை ஆற்றுளாயினுளென்று பிறர் சொல்லக் கேட்டு வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

— மாமூலனார்.

வரி

1. சிவந்த - கோபித்த ; 2. புலக்கடை புலங்கடையென நின்றது; புலத்திட மென்றவாறு ; மடங்க - பயிரெல் லாம் தீய ; ஞாள்கி - குறைவுபட்டு. 3. இன்று நிலம் புடை பெயர்வ தல்லவோ எனச் சொல்லி ; 4. மன் னுயிர் - ஆண்டு வாழும் மக்கள். 9. கணவிரம் - செவ் வரலி ; இடூஉக் கழிந்தன்ன - விழவிட்டு. 10. குருதி பரிப்ப - குருதி விழுந்தோரைச் சூழ.

4. மடிதல் - மரித்தல் ; 7. குறும்பு - குறும்பரிடம் ; வயவர் - அக் குறும்பில் வீரர் ; வில்லிட - விற்கள் விட ; 8. நிண வரி - நிணவொழுங்கு ; குறைந்த - அற்ற ; வதர் - அதர்க்கடை.

24580
தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம்
31 மே 1983
தஞ்சாவூர்-613001

10. புண்ணுமிழ்குருதி வாய்க்கொண்டுபோய்ப் 6. பார்ப்பிற்கு
11. உமிழ்ந்து கொடுக்குங் கானமென்க.

12. வென்றியொடு - வென்றியால். என்பிலர் - என்பு அளவு இலர்; என்றுசொல்லும் வார்த்தையளவு இலர் என்று பெயர்ப் படுத்துக. 13. வில்லா லலைத்துண்ணும் 14. மூவர் காக்கும் தமிழ்கெழு 15. மொழி பெயர்ந்த தேசமென்க; அந்நாட்டுப் பல மலைகளைக் கடந்து தூரப் போனர் என்க.

4. அமையத்துச் 12. சென்றுரென்க.

12. சென்றுரென்று சொல்லுத்தலிலர், பிரிவாற்றுமை வருந்துகின்று ளென்று சொல்லுவ ரென்றுள்.

பி - மீ. 18. நிறைத்த.

32. குறிஞ்சி

நெருந லெல்லை யேனற் றேன்றிக்
திருமணி யொளிர்வரும் பூணன் வந்து
புரவலன் போலுங் தோற்ற முறழ்கொள
விரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றிச்
சிறுதினைப் படுகிளி கடிஇயர் பன்மாண்
குளிர்கொ டட்டை மதனில புடையாச்
சூரர மகளிரி னின்ற நீமற்
றியாரை யோவெம் மனைங்கியா யுண்கெனச்
சிறுபுறங் கவையின ளாக வதற்கொண்
டிகுபெயன் மண்ணின் ளெகிழ்பளு ருற்றவென்
னுள்ளவ னறித லஞ்சி யுள்ளில்,
கடிய கூறிக் கைபிணி விடாஅ
வெரூஉமான் பிணையி னெரீஇ நின்ற
வென்னுரத் தகைமையிற் பெயர்த்துப்பிறி தென்வயிற்
சொல்ல வல்லிற்று மிலனே யல்லாந்
தினந்தீர் களிற்றிற் பெயர்ந்தா னின்றுந்
தோலாவா றில்லி தோழிநாஞ் சென்மோ

சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே
மாசின் றுதலு மறியா னேசற்.
20. றென்குறைப் புறனிலை முயலு
மண்க ணுளனே நகுகம் யாமே.

என்பது : 1. பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.

2. தோழிக்குத் தலைமகள் சொற்றதூஉமாம்.

— நல்வெள்ளியார்.

வரி

3. புரவலன் - புரப்பவன் ; தோற்றம் - பொலிவு ; உறழ் கொள - மாறுகொள. 6. குளிர் - ஈரம். மதனில - வலியிலாதன ; தன்னு லெடுக்கலாவன. 7. சூரரமகளிரைப்போல வென்றூன், தன்னை வருத்துதலான். 8. யாரையோ -யாரோ; ஐ - அசை. உண்கென - உண்பே னெனச் சொல்லி ; 9. அதற்கொண்டு - அதனை மனத்தாலே கருதி ; 11. உள்ளறிதல் - நெகிழ்ந்தமை யறிதல். 12. கடியவை என்றுள், முன்சொல்லக் கடவன வாகச் சொன்னவை யல்ல என்று. கையைப் பிணிப்பு விடா. 17. சென்மோ - செல்வேம். அது 14. கழித்து ; இன் - அசை ;

18. சாயிறை - வளைந்த சந்து. 19. மாசின்றுதலும் - குற்றமின்றித் தனக்கே யாதலும். ஏசற்று - வருத்தமுற்று; 20. என் குறைக்கு - என்னுற் பெறுங் காரியத்திற்கு, என் பின்னிற்றலிலே முயலும். புறனிலை - பின்னிலை. 21. அண்கண் - கண் அண் என்க.

பி -ம். 14. வெண்ணூர்த். 15. சொல்லல்.

33. பாலை

வினைநன் றுதல் வெறுப்பக் காட்டி
மனைமான் சுற்பின் வாணுத லொழியக்
கலைவழுறி யிழந்த செந்நிலை யாஅத்
தொன்றேறுங் குயர்சினை யிருந்த வன்பறை

வீளைப் பருந்தின் கோள்வல் சேவல்
வளைவாய்ப் பேடை வருதிறம் பயிரு
மிளிதேர் தீங்குர லிசைக்கு மத்தஞ்
செலவருங் குரைய வென்றது சென்றவண்
மலர்பா டான்ற மையெழின் மழைக்கண்
டெளியா கோக்க முள்ளினை யுளிவாய்
வெம்பர லதர குன்றுபல நீந்தி
யாமே யெமிய மாக நீயே
யொழியச் சூழ்ந்தனை யாயின் முனைஅது
வெல்போர் வானவன் கொல்லி மீமிசை
நுணங்கமை புரையும் வணங்கிறைப் பணைத்தோள்
வரியணி யல்குல் வாலெயிற் றேர்ள்வயிற்
பிரியா யாயி னன்றுமற் றில்ல
வன்றுநம் மறியா யாயினு மின்றுநஞ்
செய்வினை யாற்றுற விலங்கி
னெய்துவை யல்லியோ பிறர்நகு பொருளே.

என்பது : தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

— மதுரை அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனார்.

வரி

1. வெறுப்ப - மிக ; மிகவென்றது செறிய ; என்றது-அறப் பொருளாயிற்று.
2. மனையில் வாணுதல் ஒழிய ; 4. ஒன்றேருங்குயர் சினை - கப் பின்றி ஒன்றேருங்கு உயர்சினை ; ஓங்கின கொம்பு. 5. வீளை - சிள்ளென்ற ஓசை ; பருந்தின் சேவல் ; இரை கொள்ளவல்ல சேவல் ; 6. வருந் திறத்திலே யழைக்கும் ; 7. இளியென்னும் பண்ணென்று கேட்டார் விசாரிக்குங் குரல் ; மெத்தெனப் பேடையை அழைத்தலால் இளிபோன்றது.
8. அவள் 9. கண் ; மலர் பெருமையழிதற்குக் காரணமாகிய கண். 10. தெளியா நோக்கம் - வெருவின பார்வை.

10. உள்ளினையாயின் 12. நீயே 13. ஒழியச் சூழாதின்றீ யாயின்.

13. ஒழிய - ஊங்கே போக; முறைஅது - பழைதாக. 16. வரி - திதலை; 17. பிரியாயாயின் நன்றுமன்; அது மாட்டாயன்றே என்றான். தில் - அசை.

18. அன்று - பிரிகின்ற அன்று; நம்மை அறியாயாயினும் என்றது, நாம் மூடியப் போகமாட்டேமென்று உள்ள படி அறியாதே பிரிந்தாயாயினும் என்றவாறு.

18-19. நம்வினை, அதுதான் செய்யும் வினை; வினை - காரியம்; ஆற்றுற விலங்கின் - செய்வினையை வழியுற்றவள விலே விலக்குவையாயின். 20. பிறர் நகு பொருள் - பிறர் சிரிக்கத் தகுங் காரியம்.

இங்கு வந்து மீள நம்மாலாகாதுகாண் என்று நெஞ்சினை மீளாதபடி கூறினான்.

1. காட்டிச் 8. சென்று; என்றது, போந்து என்றவாறு.

5. பருந்து 6. துணைப்பயிரும் 7. காட்டில் 8. அடைந்து 2. துணைப் பிரிந்தார்க்குப் 8. போதலரி தென்றது என்றவாறு.

12. யாமே, நீயே என்னும் ஏகாரம் பிரிநிலை.

பி - மி. 3. வீழ்ந்த. 4. வண்பறை. 7. மிளியேய். 8. செல்லருங். 11. வெம்பாறுஅய. 12. தமியமாக. 14. வெவ்வேல்.

34. முல்லை

சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல்
கண்ணியின் மலருந் தண்ணறும் புறவிற்
றெடுதோற் கானவன் கலைபொறுத் தன்ன
விருதிரி மருப்பி னன்ன லிரலை
செறியிலைப் பதவின் செங்கோன் மென்குரன்
மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்திக்
தெள்ளற றழீஇய வார்மண லடைகரை
மெல்கிடு கவுள துஞ்சுபுறங் காக்கும்

பெருந்தகைக் குடைந்த நெஞ்ச மேமுறச்
செல்க தேரே நல்வலம் பெறுக
பசைகொன் மெல்விரற் பெருந்தோட் புலைத்தி.
துறைவிட் டன்ன தூமயி ரெகினந்
தூஉணையொடு திளைக்குங் காப்புடை வரைப்பிற்
செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
யின்றுவர வுரைமோ சென்றிசினோர் திறத்தென
வில்லவ ரறித லஞ்சி மெல்லென
மழலை யின்சொற் பயிற்று
நாணுடை யரிவை மாண்நலம் பெறவே.

என்பது : வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது

— மதுரை மருதன் இளநாகனார்.

வரி

1. வெண்டலையாயிற்று பூவால். 2. கண்ணியின் - தொடை போல. 3. கவை - கவைக்கோல்; பொறுத்தல் - சுமத்தல். 8. அசை விடுகின்ற கவுளவாய் உறங்கு புறத்தைப் பாதுகாக்கும் 9. பெருந்தன்மை. 10. வலம் - கடுக விடவல்ல வெற்றி. 11. பசை - கஞ்சிப் பசை; கொல்லுதல் - வஸ்திரம் அறப் பண்ணுதல்; 12. விட்டன்ன.....; எகினம்-அன்னம்; 13. திளைத்தல் - விளையாடல். வரைப்பு - மாளிகை; ஆகுபெயர்.

15. சென்றிசினோர் திறத்து ஒன்று உரைப்பையாகில் அவர் இன்று வருவர் என்னும் உரையை உரை என்றவாறு. திறத்தென்புழி உரைக்கில் என ஒரு சொல் வருவிக்க.

18. பெறச் 10. செல்க தேர் என்க.

2. புறவில் 6. அருத்திக் 8. காக்கும் என்க.

6. மறியாடு மருங்கின் மடப்பிணை - மறி வயிற்றிலே முழுகி விளையாடும் பக்கத்தையுடைய பிணை.

நம்மை இங்கே கலையும் பிணையும் வருத்த, அவளை அங்கே அன்னமும் துணையும் வருத்த என்றவாறு.

பி - ம். 5. புதவின்.

35. பாலை

ஈன்று புறந்தந்த வெம்மு முள்ளாள்
வான்மிரு யிஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை
தழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டிச் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந்
துணிந்துபிற ளாயின ளாயினு மணிந்தணிந்
தார்வ நெஞ்சமொ டாய்நல னளைஇத்தன்
மார்புதுணை யாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவிற் கோவற் கோமா
னெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கு
நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே.

என்பது : மகட்போக்கிய நற்றாய் தெய்வத்திற்குப் பராஅயது

— அம்மூவனார்.

வரி

3. தாள் - மூட்டுவாயில் விலங்கச் செறிக்கும் கடையாணி ; கடிகை - காம்பு. 4. குறும்படை - கோட்டை ; மழவர் - வீரர் ; குறும்படைந்த வீரர் என்றுமாம். 5. முனை ஆ - பகைப் புலத்தவாய நிரை.

5 - 7. 'முனைதந்து.....பேண்மார்' - என்றது முனையிடத்து ஆவைமீட்டு, முரம்பின்கண்ணே வெட்சியாரை வீழ்த்த மறவரது பதுக்கையெனக் கூட்டுக; வலிய ஆண்மை யாலிட்ட பதுக்கை ; பதுக்கைக் கடவுள் என்றான், பதுக்கைக் கல்லிற் கடவுளுறைதலான்.

9. தோப்பிக்கள் - நெல்லாற் செய்யுங்கள்; தரு - செம் மறிக்குட்டி; 10. கவலையசுரம் - அருவழிகளையுடைய நெறி; 11. தணிந்து - போக்கை நிச்சயித்து.

14. கோவல் - திருக்கோவலூர். 15. கொடுங்கால் என்னும் ஊர்.

15கொடுங்காலிற் 16. பெண்ணையாற்றின் 15. முன்றுறை.

18. ஆற்றிய - செலுத்திய; துணை - தலைவன்.

1. உள்ளாளாய்ப் 11. பிறளாயினளாயினும் என்க. 2. புலம் பும்படி 11. பிறளாதல்.

4. மழவர்-மழநாட்டார். 17. பேதைக்குத் 18. துணை என்க.

பி-ம். 8. துடிபடத். அம்மூவனார். அவர்

36. மருதம்

பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்துக்
கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி
யாம்பன் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந்
5 தரில்படு வள்ளோ யாய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது
கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு
நாட்கய முழக்கும் பூக்கே ழூர
வருபுனல் வையை வார்மண லகன்றுறைத்
10 திருமரு தோங்கிய விரிமலர்க் காவி
னறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை யயர்ந்தனை யென்ப வலரே
கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய
னலங் கானத் தகன்றலை சிவப்பச்
15 சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூ ணெழினி
நாரரி நறவி னெருமை யூரன்
றேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி
னிருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென்

20 றெழுவர் நல்வல மடங்க வொருபகன்
முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீர ராரப்பினும் பெரிதே.

என்பது: தலைமகள் பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனெடு புலந்து சொல்லியது.

— மதுரை நக்கீரர்.

வரி

2. கோளிரை - அதற்குக் கூற்றமாகிய இரை; 17. நார் - பன்னுடை; நறவினையுடைய எருமையூர். 20. ஓர் நாள் ஒரு பகலிலே பொருதுழக்குமென்ப.

12. அலர் 20. ஆர்ப்பினும் பெரிது என்க.

3. ஆம்பன் மெல்லடை கிழியவும் குவளை மலர் 4. சிதைய வும் எழுந்து பாய்ந்து எனக கூட்டி, மெல்லடை கிழிய எழுந்து, குவளை மலர் சிதையப் பாய்ந்தென அறுக்க.

வேட்டுவன் தண்டிலிற் கோத்த இரையை இலையின் கீழ்க் கிடந்தவாளை நுகர்ந்து, தண்டிற்றுவக்கு விடாது இலை கிழிய எழுந்து குவளைப் பூ முறியப் பாய்ந்து அக்குவளையைச் சூழ்ந்த வள்ளையை மயக்கி, நாட்காலத்தே எல்லாரும் காணக் கயத் தை உழக்குகின்றாற்போல; நின்பாணனுடைய நெஞ்சுவலிதாய்ப் புறம்பு மெல்லிதாயிருக்கின்ற இன்சொல்லாலே அப்பரத்தையர் நலத்தை நுகர்ந்து, அப் பரத்தையர் தாய்மார் நெஞ்சுவருந்த அவ்விடத்தை விடாத அன்புடனே போந்து, நாங்கள் நுமது நிறங்கண்டு வருந்த இங்கே வந்து, குவளை மலர்சூழ்ந்த வள்ளை போலும் எங்கள் சுற்றத்தார் மயங்க அகர்சாளை வருத்தி, ஊரை யெல்லாமிப்படி எல்லாருமறியக் கலக்குவானெருவனல்லையோ என்றவாறு.

பி - மி. 10. வரிமலர். 11. மகளிரொடு. தலைமகன் பரத்தையிற் பிரிந்துவரத் தலைமகள் புலந்து சொல்லியது.

37. பாலை

மறந்தவ ணைமையா ராயினுங் கறங்கிசைக்
கங்கு லோதைக் கலிமகி ழூழவர்
பொங்கழி முகந்த தாவி னுண்டுகண்

மங்குல் வானின் மாதிர மறைப்ப
வைகுபுலர் விடியல் வைபெயர்த் தாட்டித்
தொழிற்செருக் கனந்தர் வீட வெழிற்றகை
வளியொடு சினைஇய வண்டளிர் மாஅத்துக்
கிளிபோல் காய கிளைத்துணர் வடித்துப்
புளிப்பத னமைத்த புதுக்குட மலிர்நிறை
வெயில்வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடைக்
கயமண்டு பகட்டிற் பருகிக் காண்வரக்
கொள்ளொடு பயறு பால்விரைஇ வெள்ளிக்
கோல்வரைந் தன்ன வாலவிழ் மிதவை
வாங்குக்க ழடுத்த பின்றை யோங்கிய
பருதியங் குப்பை சுற்றிப் பகல்செல
மருத மரனிழ லிலருதொடு வதியுங்
காமர் வேனின் மன்னிது
மானல நகருந் துணையுடை யோர்க்கே.

என்பது: 1. தலைமகள் தோழிக்கு வன்புறை யெதிரழிந்து சொல்லியது.

2. பிரிவுணர்த்திய தோழி சொல்லியதூஉமாம்.

பொங்கழி யென்பது தூற்றுப்பொலி.

— விற்றூற்று மூதெயினனார்.

வரி

1. மறந்து அவ்விடத்துத் தங்காராயினும் என்றது அங்கு மறந்து அமைகுவர் என்பது கொண்டு. 1 - 2. கறங் கிசைக் கங்குல் - பள்ளியெழுச்சிக் காலம். ஓதை - ஆளழைக்கு மாரவாரம். 3. பொங்கழி - தூற்றுப் பொலி; தாவில் - வலியில்லாத; துகள் - கூளம்; 4. மங்குல்வானின் - இருண்டமேகம்போல. 5. வைகு புலர்விடியல் - இராப்பொழுது வைகின இருள்புலர் கின்ற விடியல்; ஆட்டி - அலைத்து; கடாவிடுதல்.

6. தொழிற் செருக்கால் வந்த மயக்கம். எழிற்றகையை யுடையவாய். 7. மா - அத்துச்சாரியை; மாவில். 8. வடித்தல் - உறத்திடுதல். 9. புளிப்பதன் - மாதுளங் காய் முதலாகிய சில்பதம்; அமைத்தல்; புளிக்குஞ்

செவ்வி யுண்டாக்கப்பட்ட என்றுமாம்; புதுக்குடங்களின் மிகுகின்ற நிறை - ஆகுபெயர்: ஊறினசாரம் என்றவாறு.

10. வெயிலிடத்து முதுகு புறந்தோன்ற நட்ட; இதழ்-தோடு; பசுங்குடை - செவ்வியிலாக்கின பனையோலைக்குடை.

10 - 11. குடையாற் பருகி.

12. விரவி - விரவ; 13. கோல்வரைந்தா லொத்த என்க. மிதவை - கூழ்; 14. வாங்குகை - வலித்துண்ணுங்கை; தேர்ந்துண்டல்; விலக்குதல்.

15. பருதிபோன்ற செந்நெற்குப்பை; சுற்றி - கூடாகச் சுற்றி; 16. எருதெதாடுவதிதல் - சாதி கூறியது.

18. நலத்தை யனுபவிக்குந் துணையுடையோர்க்கு 17. நல்ல வேனில்; மன் - அது கழிந்ததென்றுள்; என்றது நம் காதலர் மறந்து அமையாராயினும் இதுதான் துணையுடையோர்க்கு நல்ல காலம்; அது நமக்கென் என்றுள். 2. உழுஅர் 5. ஆட்டிப் 11. பருகி 15. சுற்றி என்க.

11. பருகி 14. உண்டபின் என்க.

பி - ம். 1. ணமைகுவ. 13. கோலறை.

38. குறிஞ்சி

விரியினர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
றெரியிதழ்க் குவளைத் தேம்பாய் தார
னஞ்சிலை யிடவ தாக வெஞ்செலற்
கணைவலந் தெரிந்து துணைபடர்ந் துள்ளி
வருதல் வாய்லது வான்றோய் வெற்பன்
வந்தன னுபி னந்தளிர்ச் செயலைத்
தாழ்வி லோங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்
றூசன் மாறிய மருங்கும் பாய்புட
னுடா மையிற் கலுழ்பில தேறி
நீடிதழ் தலைஇய கவின்பெறு நீலங்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை
மடக்கிளி யெடுத்தல் செல்லாக் கடக்குரற்
குலவுப்பொறை யிறுத்த கோற்றலை யிருவி

கொய்தொழி புனமு நோக்கி நெடிதுநினைந்து
பைதலன் பெயரலன் கொல்லோ வைதேய்
கயவெள் ளருவி சூடிய வுயர்வரைக்
கூஉங்க ணஃதெம் மூரென
வாங்கதை யறிவுறன் மறந்திசின் யானே.

என்பது : 1. தோழி தலைமகன் குறை கூறியது.

2. பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லு வாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியதூஉமாம். *

3. தோழி குறிபெயர்த்திட்டுச் சொல்லியதூஉமாம்.

— வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்

வரி

2. தொரிதல் - நீதுகழித்தல்.

4. வலந் தெரிந்து - வலத்தை ஆராய்ந்துகொண்டு. துணை-தலைவி ; படர்ந்துள்ளி-வருந்தினைந்து. 5. வாய்வது-வாய்ப்புடையது ; மெய்யென்றபடி. 6. வந்தனனையின்-அங்ஙனம் வந்தானையின். 7. வீழ்கயிறு - தாழ்கயிறு.

8. மாறுதல் - ஆடாதொழிதல். மருங்கும் - பக்கத்தையும்.

10. இதழ் நெருங்கிக் கலந்த நீலம்.

12. எடுத்தல் செல்லாதென்றுன் கனத்தால் ; தடக்குரல் - பெரிய கதிர்.

13. குலவுப்பொறை - வளைந்தபாரம் ; இறுத்த - முறித்த ; கெடுத்தலுமாம் ; கதிர்த்தலைபோய்க் கோற்றலையா யிற்று.

---

* "தன்குறி தள்ளிய தெருளாக் காலை, வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித், தன்பிழைப் பாகத் தழீஇத் தேறல்" என்ற துறைக் குதாரணமாகக் காட்டி, "இதனுள் ஊசன் மாறுதலும், புனமும் தன்குறி தள்ளிய இடன் ; மறந்திசின் என்றது தெருளாக்காலை ; ஊங்கண்ணது ஊரென உணர்த்தாமையின் இடையீடுபடுவதன்றி அவன்கண் தவறுண்டோவெனத் தன் பிழைப்பாகத் தழீஇயினுள். இது சிறைப்புறமாகவரைவு கடாயது" என்றார் நச்சினார்க்கினியர். தொல். பொருள். களவு. 20.

பாங்கியாடிடம் விடுத்துக்கொண்டகறற்கு உதாரணமாகக் காட்டினர் அகப்பொருள் விளக்க உரைகாரர். சூத். 156.

13-14. இருவிப்புனம், புனத்தையும் பார்த்து. நெடிது - பெரிதாக ; நினைந்தெனவே எல்லாம் கூறியவாறு.

15. பைதலனுய்ப் போகமாட்டாது வருந்துகின்ரு னின்றே என்ருள். பெயரலன் என்று அங்கே அறுத்து, பின் தோழி தன்னுள்ளே * யாற்றல் கூறிற்ருக்குக.

16. அயவெள்ளருவி - சுனையினின்றும் தாழ்ந்துவிழுகின்ற வெள்ளருவி.

18. ஆங்கு - அவ்விடத்து ; அது - அதை என்று ஈறு திரிந்தது. அதனை எனவிரியும். அதனை அறிவுறுத்துதல் மறந்தேன், அதனல் 15. தேய்வேனுக என்ருள். 4. தலைவி நோவாளாக 6. வந்தனனுயின் 15. பெயரலன் என்க.

பி - மி. 7. காவிலோங்கு. 3. பாய்புடை. 15. போகுவன்.

39. பாலை

ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்
துள்ளியு மறிதிரோ வெம்மென யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவ லழுங்க
நோய்முந் துறுத்து நொதுமன் மொழியனின்
5. னுய்ந்ல மறப்பனே மற்றே சேணிகந்
தொலிகழை பிசைந்த ளெலிசொரி யொண்பொறி
படுளெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுன் மீமிசை வளிசுழற் றுரூஅக்
காடுகவர் பெருந்தீ யோடுவயி னேடலி
10. னதர்கெடுத் தலறிய சாத்தொ டோராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்
தினந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்ரூற் பட்டெனக்
கட்பட ரோதி நிற்படர்ந் துள்ளி
15. யருஞ்சில வாற்ரு வாரிடை ளெரேரெனப்
பரந்துபடு பாய னவ்வி பட்டென

---

* யாற்றல் என்றும் படிக்கலாம்.

விலங்குவ ளொ செறியா விகுத்த நோக்கமொடு
நிலங்கிளை நிலைவினை நின்ற நிற்கண்
டின்னகை யினைய மாகவு மெம்வயி
னாடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுறுத னீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவி
னேற்றேக் கற்ற வுலமரல்
போற்ற யாகவிற் புலத்தியா லெம்மே.

என்பது : பொருண் முற்றிய * தலைமகன் தலைமகளைக்கண்டு சொல்லியது. இப்பாட்டு நிலத்தாற் பாலை

— மதுரைச் செங்கண்ணனர்.

வரி

1. ஒழித்தது - ஸ்ரீ விஸரம்பண்ணலாகாதென்று முன்னோர் கழித்தது. பழித்தல் - அதனை இகழ்தல். இர 'வலர்க்கு இட இல்லாமல் அவரை யொழித்ததனைப் பழித்தலென்றுமாம். வழியிலே போந்து.

4. முந்துறுத்து - தோற்றுவித்து ; கொதுமல் மொழியல் - எதிர்மை சொல்லாதேகொள்.

5. ஆய்தலம் - ஆயத்தாரால் ஆராயப்பட்ட அழகு ; ஆயத்தார்க்கு விநோதமிது ; மற்று - வினைமாற்று.

6. பிசைதல் - ஒன்றோடொன்று தேய்த்தல் ; ஞெலி - கடையப்பட்ட மூங்கில் ; ஆகுபெயர். 7. ஞெமல் - சருகு.

6 - 7. ஒண்பொறி மறையப்பொத்தி என்க. பொத்த எனத் திரிக்க.

8. முளிபுல் - உலர்ந்த ஊழ்ம் புல் ; மூங்கிலுமாம் ; என்னை: 'புறக்காழனவே புல்லெனப் † படுமே' (தொல். பொருள். மரபு. 85.) என்றாராகலின். உறுஅ - உறுத்தி ; உறுத்த என்க.

---

* முற்றி மீண்ட என்பதும் பாடம்.
† மொழிப என்பது மூல பாடம்.

9. ஓடுவயின் ஓடல் - காற்றோடின விடமெங்கும் ஓடுதல்.

10. அதர் கெடுத் தலறிய சாத்தொடு - வழியற்றுக் கூப்பிட்ட சாத்தொடே; சாத்தரொடு 15. ஞரேரென 16. பரந்துபட்ட பாயல் - ஞரேரென்னும் அநுகரணத்துடன் சாத்தரொடு பரந்து கண்படுபாயல் எனக் கூட்டுக. 16. படுதல் - கண்படுதல்; பாயல் - சயனம்.

13. ஞான்று தோன்று அவிர் சுடர் - வீழ்கின்றபோது தாழ்ந்து தோன்றுகின்ற சுடர்; மயங்கிப் பட்டதாக, ஆல் - அசை. கள் - வண்டு; படர்தல் - வந்து படிதல்; படர்ந்துள்ளி - நினைந்து நினைந்து.

15-16. காட்டில் அருவழியில் பரந்துபட்ட பாயல். ஞரேரென - பொதுக்கென; குறிப்புமொழி; அநுகரணமுமாம்; பரத்தல் - வேண்டினபடி கிடத்தல்; பாயலிடத்து 18. நின்னைக் கண்டென்க. நவ்வியைப் பட்டாலொப்பத் 17. தாழ்ந்த நோக்கத்துடனே.

17-18. மெலிவாற் கழன்று விழுகின்ற வளையை யேறத் தடுக்கி, நிலத்தைக் காலாற் கீறுகின்ற வருத்த முடையையாய் நின்ற நின்னை யென்க. கவிழ்ந்து நிற்றலாற் சுழ்ந்த நோக்கமாயிற்று.

19. * இன்னகாய்! இயையமாகவும் - நாங்கள் இப்படிப் போந்து தனித்து வருந்தவும்.

19-20. எம்மிடத்து நீ ஊடுகின்ற ஊடல் யாங்கு வந்ததென்க, எனச் சொல்லி, என்று சொல்லெச்சமாக்கி ஒரு சொல் வருவிக்க. யாழ - அசை.

21. கோடு - பக்கம்; குவிவுதல் - திரண்டு சிறுகுதல்; நீவி - துடைத்து. உளரிய - கோதிய; நன்னர் அமையம் - நல்ல பொழுது; என்றது கனவிற்கண்ட பொழுதாகலான்.

---

* இவ்வடிமுதலாக 'யாயல்கன' வென்பதீறாக நின்ற அடிகளைக் "கனவு முரித்தா லவ்விடத் தான" என்ற சூத்திரத்திற்கு உதாரணமாகக் காட்டினர் நச்சினார்க்கினியர். (தொல். பொருள். பொருளி. 3)

23. * வறுங்கை காட்டிய கனவாவது - புணர்ச்சி போலேயிருந்து பொய்படுத்தினகனவு; கையில் ஒன்றுள்ளது போலப்பிடித்துப் பின் வறுங்கை காட்டுதல் வழக்கு.

23-24. கனவிடத்துத் துயிலேற்றுக் காணுது எக்கற்றதுமாம்.

25. போற்றி யாகலின் - நீ புத்திபண்ணி யாகலின்; எம்மைப் புலக்கின்றி யன்றே மியன்றுன்.

20-21. புலவிதீர அவள் அளகமும் நுதலும் நீவினுன்.

பி-ம். 6. மிசைந்த. 8. நிறுஅலிற். 13. மான்றுழ்பட்.

40. நெய்தல்

†கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனர் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
வசைவண் டார்க்கு மல்குறு காலைத்
தாழை தளரத் தூங்கி மாலை
யழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சங் கையறு பினையத்
துயரஞ் செய்தநம் மருளா ராயினு
மறுஅ லியரோ வவருடைக் கேண்மை
யளியின் மைபி னவணுறை முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடுந்தா ணுரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை

---

*"இதனுள் 'வறுங்கை காட்டிய வாயல் கனவி' னென்ன நனவின்றிச் சென்றவற்றைத் தலைவன் கூறியவாறு காண்க." வென்றார் நச்சினார்க்கினியரும் (தொல். பொருள். கற்பு. 5.)

†'நெய்தற்கு மாலையும் வந்த' தென இவ்வடியினைக் காட்டாகக் காட்டினர் நச்சினார்க்கினியர் (தொல். பொருள். அகத்திணை. 8.)

யகமடற் சேக்குந் துறைவ
னின்றுயின் மார்பிற் சென்றவென் னெஞ்சே.

என்பது : தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழிக் கிழத்தி தோழிக்குச் சொல்லியது. *

— குன்றியனார்.

வரி

2. பாடெழுந்து - ஒலி மிக்கு. 3. தொழுதி - தொகுதி. 4. குவை - நிரட்சி. 5. அசைவண்டென்பது, தாமிருந்த நீர்ப்பூவை விட்டுக் கோட்டுப்பூ வேறப் போவேமோ இல்லேமோவென்று அசைதல்; அல்குறு காலை - எல்லாம் தம் பதிகளிலே சென்று தங்கும் அந்திக்காலம். 6. தளர - ஒல்க; தூங்கி - அசைந்து. அல்குறு காலை என்றதற்கு ஈங்கே 6. மாலையென்று பெயரிட்டார்.

7. பிரிந்திருப்பார் அழிதற்கு வந்த கீழ்காற்று; 6. தூங்கி வந்த 7. கொண்டல்; கொண்டலொடு - கொண்டலான். 9. நம் - நம்மை. 11. உறை - உறைதல். 13. ததும்பும் - ஒலிக்கும். 15. மடை - மூட்டுவாய்; கொம்பிற் றலையில் இரும்பாலும் செம்பாலும் பண்ணித் தைத்தலான் மூட்டாயிற்று. பிளிற்றி - ஒலித்து.

12. வாரற்க என்றான், இங்கு வந்தால் என்னெஞ்சு கிடந்து துயருறுமென்று. 4. சேர 5. அல்குறுகாலை என்க.

வெண்ணெல் அரிநர், தங் காரியஞ் செய்யப் பறைகொட்டி விக்க, நாரை வேற்று நிலத்ததாகிய பெண்ணையிலே சென்று தங்கித் தான் வாழுமிடமாகிய மருத நிலத்தை மறந்தாற்போலத் தங்காரியஞ் செய்ய நம்மைப் பிரிவர் இல்லைப் பிரிந்தவழி நம்முடைய நெஞ்சு நம்மை விட்டுத் தனக்கு அந்நியமாகிய அவர் மார்பிலே சென்றது என்றவாறு.

பி-ம். 6. தூக்கி. 11. னவணுறைவு.

---

* "இது பொருட் பிரிவிடைத் தோழிக் குரைத்தது. இக் கலித்தியானைநிரையுள் நெய்தற்கு முதலுங் கருவும் வந்து உரிப் பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது" என்றார் நச்சினார்க்கினியரும். (தொல். பொருள். அகத்திணை 3.)

41. பாலை

வைகுபுலர் விடியன் மைபுலம் பரப்பக்
கருநனை யவிழ்ந்த வூழுறு முருக்கி
னெரிமருள் பூஞ்சினை யினச்சித ராரப்ப
நெடுநெ லடைச்சிய கழனியோர் புகுத்துக்
குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர
வரிகால் போழ்ந்த தெரிபகட் டுழவ
ரோதைத் தெள்விளி புலந்தொறும் பரப்பக்
கோழினை நெதிரிய மரத்த கவினிக்
காடணி கொண்ட காண்டகு பொழுதி
னும்பிரி புலம்பி னலஞ்செலச் சாஅய்
நம்பிரி பறியா நலனெடு சிறந்த
நற்றோ ணெகிழ வருந்தினள் கொல்லோ
மென்சிறை வண்டின் றண்கமழ் பூந்துணர்
காதின் றுவலை தளிர்வார்ந் தன்ன
வங்கழுழ் மாமை கவினிய
நன்பல் நித்தி மாஅ யோளே.

என்பது: தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்துக் கிழத்தியை நினைந்து சொல்லியது.

— குன்றியனார்.

வரி

1. மை - எருமை; 8. விளக்கி மாத்த 9. காடு 10. அழகு கெட மெலிந்து. 11. நம்பிரிபறியா 12. நற்றோள் 13. வண்டின் - வண்டினையுடைய; வண்டினையுடைய பூங்கொத்து. 14. காதிலுண்டான மகிழ்த்துவலை தளிரிலொழுகின லொத்த 15. கழுழ்மாமை; ஒழுகின லொத்த மாமை நிறம். 15. கவினிய - தோற்றின.

10. சாய் 12. வருந்துகின்ற *எறே என்க. 11. பிரிபறியாது என்று வேறறுத்து, அது 12. நெகிழ என்க.

பி-ம். 2. கருநனை. 4. அடக்கிய. சோமசுந்தரனார்.

---

* இது வடவெழுத்தை சம்பிரதாய நூல்களில் வழங்கும் 'ஏறே' என்பதனோடு ஒப்பிடத் தக்கது. ஒரு குற்றுச்சொற் போலும்.

42. குறிஞ்சி

மலிபெயற் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயலரு நிலைஇய பெயலோர் மணமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட்
டளிரேர் மேனி மாஅ யோயே
நாடுவறங் கூர நாஞ்சி றுஞ்சக்
கோடை நீடிய பைதறு காலைக்
குன்றுகண் டன்ன கோட்ட யானையுஞ்
*சென்றுசேக் கல்லாப் புள்ள வுள்ளி
லென்றாழ் வியன்குள நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த வேம வைகறைப்
†பல்லோ ருவந்த வுவகை யெல்லா
மென்னுட் பெய்தந் தற்றே சேணிடை
யோங்கித் தோன்று முயர்வரை
வான்றோய் வெற்பன் வந்த மாறே.

என்பது: தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

— கபிலர்.

வரி

I. பெயலால். 2. கொய்யலருமை பூவின் மிகுதியால்; பெயலுக்கு எழுச்சி பெற்ற முகைவெரிந் - கண்ணுக்கு உவமை. 5. தொழிலின்றித் துஞ்சும் நாஞ்சில். 6. நீரில்லாத. 9. வீசி - உதவி. 13. தோன்றும் 14. வெற்பன். 13. வரை - பக்கமலை.

14. வந்தமாறு - வரையவந்தபடி சொல்லில் 11. பல்லோ ருவந்த உவகை யெல்லாம் 12. என்னுட் பெய்தந்தற்று எனக் கூட்டி, 3. மழைக்கண்ணும் 4. தளிர்மேனியும்

---

* 'சென்றுசேக் கல்லாப் புள்ள — குளம்' என்பது 'அருங் கேடன்' என்பதுபோல நின்றது என்றூர் பரிமேலழகர். (குறள் 210).

† இவ்வீரடியினையும் பயனிலை யவமத்திற்கு உதாரணமாகக் காட்டினர் பேராசிரியர். (தொல். பொருள். உவமை. 14)

வேறுபட்டு நீ வருந்தாமல் வரைவொடு வந்தார்; அவ் வுவகை எனக்கு இவ்வாறிருந்த தென்றவாறு.

பி-மீ. 1. மழைபெயக் 2. முன்முகை. 8. சேர்கல்லா.

43. பாலை

கடன்முகந்து கொண்ட கமஞ்சூன் மாமழை
சுடர்நிமிர் மின்னெடு வலனேர் பிரங்கி
யென்றா ழுழுங்க புன்றலை மடப்பிடி
கைமாய் நித்தங் களிற்றொடு படீஇய
நிலனு விசும்பு நீரியைந் தொன்றி
குறுநீர்க் கன்ன லெண்ணுந ரல்லது
கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாஅய்த்
தகரிமயங் கிற்றே தண்குர லெழிலி, யாமே,
கொய்பகை முல்லை காலொடு மயங்கி
மையிருங் கான நாறு நறுந்தகற்
பல்லிருங் கூந்தன் மெல்லியன் மட்ந்தை
நல்லெழி லாகஞ் சேர்ந்தன மென்று
மளியரோ வளியர் நாமே யளியின்
றேதில் பொருட்பிணிப் போகித்த
மின்றுணைப் பிரியு மடமை யோரே.

என்பது : தலைமகன் பொருள்கடைக்கூட்டிய. நெஞ்சிற்குச் சொல்லியது.

— மதுரையாசிரியர் நல்லந்துவனார்.

வரி

2. சுடர்-ஒளி. 4. யானை யெடுத்த கை. 5. ஒன்றி-ஒன்ற. 6. குறுநீர் - நாழிகை வட்டிலில் அளவுபட்ட நீரால். கன்னல் - கன்னலை. 7. கதிர்மருங் கறியாமல் - ஆதித் தனின்ன வளவிலே சென்றுனென் றறியாமல்; உலக மஞ்ச. 8. தளி - தளியொடு; எழிலி :- ஆகுபெயராற் காலம். 9. கொய் முல்லை, அகைத்த முல்லை. காற் றுன்; மயங்குதல் - ஒன்றோடொன்று நெருங்குதல். 10. மை - பசுமை. 12. சேர்ந்தனம் - முற்று. 13. அளியர் அளியர் என்பது விரைவு.

14. முன்போகி, இக் காலத்தைக் கண்டு வர மினையாது 15. பிரிந்தோர்! 13. அளியரெனக் கூட்டுக. அளியரென்றது அறிவில்லாதோ ரென்றவாறு. ஓகாரம் அசை, குறிப்புமாம்.

பி-டி. 4. கழைமாய். 8. யின்குர.

44. முல்லை

வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவருந்
தந்திறை கொடுத்துத் தமரா யினரே
முரண்செறிந் திருந்த தாணை யிரண்டு
மொன்றென வோர்ந்தன படையேய் நின்றோர்/
முன்னியங் கூர்தி பின்னிலை யீயா
* துர்க பாக வொருவினை கழிய
நன்ன னேற்றை நறும்பூ ணைத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றுங்
கன்றவர் குழீஇய வளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனு னுகித் திண்டேர்க்
கணைய னகப்படக் கழுமலந் தந்த
பினையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி
யழும்பி லன்ன வறுஅ யாணர்ப்
பழம்பன் னெல்லின் பல்குடிப் பரவைப்
பொங்கடி படிகய மண்டிய பசுமிளைத்
தண்குட வாயி லன்னேட்
பண்புடை யாகத் தின்றுயில் பெறவே.

என்பது: வினைமுற்றிமீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

— குடவாயிற் கீரத்தனர்.

---

* இவ்வடியினைப் "பேரிசை யூர்திப் பாகர் பாங்கினும்" என்றதுறைக்கு உதாரணமாகக் காட்டி, "இதுதானுற்ற இன்பத்தினைப் பாகற்குக் கூறியது" என்றுர் நச்சினர்க்கினியர். (தொல். பொருள். கற்பு. 5.)

வரி

1. வினை முடித்தல் - வினையை ஆக்குதல். 2. தந்திறை - தமக்கு நிச்சயித்திருந்ததிறை; தமராயின வென்றது - பரிகாரமாயினு வென்றவாறு. 4-5. படையின் முன்னே இயங்குகின்ற நின்றோராகிய ஊர்தி; பின்னிலை யியா தென்றது - இனிப் பின்னிற்றலைக் கூடாதென்ற வாறு. 6. ஒருவினை யென்றது, மீண்ட தேர்களை ஒரு வினையாய் என்க; கழிய வென்றது, இச் சுரத்தை நாம் கழிய என்றவாறு.

7. நன்னன் முதலாயினர் சேரன் படைத்தலைவர். 11. பருந் தபலவு முண்டாகப் பண்ணிப் போர் செய்து; பழை யன், சோழன் படைத்தலைவன். 13. கணையன், சேரன் படைமுதலி; முன் சொன்னவர்க்குப் பிரதானி; கழு மலம் - ஓர் ஊர்; 14. பிணையலங் கண்ணி - கட்டின கண்ணி; அல், அம் - சாரியை. சென்னி 18. குடவா யில் என்க. 15. அழும்பிலன்ன என்றதை தொடங்கிக் 18. குடவாயிற்கு அடை. அழும்பில் - பாண்டிநாட்டூர்.

15. அழும்பிலன்ன 17. காட்டுப் 15. புதுவருவாயுடைய குட வாயில். 16. பரவை - குடிப்பரப்பு. 17. பொங்கடி - யானை; கயம் - கயத்தையும், தெருங்கிய மிளையையும். மண்டுதல் - நெருக்கம்.

19. துயில்பெற 6. ஊர்களாக எனக் கூட்டுக. 9. ஆங்கு - அசை. 'என்று' என்றது, 'என்று சொல்லப்பட்ட' என்று ஒரு சொல்லை ஏற்கும். 19. பண்புடையாகம், நாம் செல்லுமளவும் இறந்துபடாதாயிற்றிருந்த பண்பு.

பி-ம். 4. வறைந்தன. பணையே. 5. கழீஇய. 10. கடலூர். உறையூர்ச் சல்லியங்குமரனார்.

45. பாலை.

வாட லழுஞ்சில் விளைநெற் றந்தணர்
நாடுகளப் பறைபி னரிப்பன வொலிப்பக்
கோடை நீடிய வகன்பெருங் குன்றத்து
நீரிலா ராற்று நிவப்பன களிறட்
5 டாளி லத்தத் தழுவை யுகளுங்

காடிறந் தனரே காதலர் மாமை
யரிநுண் பசலை பாஅய்ப் பீரத்
தெழின்மலர் புரைதல் வேண்டு மலரே
யன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
றொன்னிலை முழுமுத றுமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரிய
ரின்னிசை யார்ப்பினும் பெரிதே யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்
தாங்கி மந்தி போலப் பேதுற்
றலந்தனெ னுழல்வென் கொல்லோ பொலந்தார்க்
கடல்கால் கிளர்ந்த வென்றி நல்வேல்
வான வரம்ப னடன்முனைக் கலங்கிய
வடைமதி லோரரண் போல
வஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே.

என்பது : வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

— வெள்ளிவீதியார்.

வரி

1. துணர் - நெற்றின் கொத்து. 2. பறை - கரடிகை; அரிப்பன ஒலிப்ப - விட்டுவிட்டு இசைப்ப. 4. ஆராறு - போதற்கரிய வழி; நிவப்பன களிறு - ஓங்கின களிறு. 5. உகளுதல் - நிரிதல். 7. அரிநுண் பசலை - ஐதாய நுண்ணிதான பசலை. 13. கெடுத்தல் - காணுதொழிதல். 15. உழறல் - தேடித் திரிதல்; உழல்வேனை வென்றுள் இறந்து படுதலை நினைந்து. 16. கடல்கால் கிளர்தல் என்பது, கடலிடம் கிளர்தல் என்றவாறு. வேலாற் கடலோட்டினை நுதலால், கிளர்ந்த என்றார்; கிளர்தல் - புடை பெயர்தல்.

17-18. முனையாற் கலங்கிய மதிலாகிய ஓரரண் என்க. 18-19. அரண்போலத் துஞ்சாதுழல்வேனை என்றுள் இறந்து படுதலை நினைந்து; அரண் - ஆகுபெயர்.

பி - ம். 3. வியன்பெருங்.

46. மருதம்

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரா
னூர்மடி கங்குலி னேன்றனெ பரிந்து.
கூர்முள் வேலி கோட்டி னீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுட னிரிய
வந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டோ தனிமல ராரு மூர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்
றுறையிறந் தொளிருந் தாழிருங் கூந்தற்
பிறரு மொருத்தியை நம்மனைத் தந்து
வதுவை யயர்ந்தனை யென்ப வஃதியான்
கூறேம் வாழிய ரெந்தை செறுநர்
களிறுடை யருஞ்சமந் ததைய நூறு
மொளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவென்
னெண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ. *

என்பது: வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயின் மறுத்தது. †

— அள்ளூர் நன்முல்லையார்.

வரி

7. புலக்கேம் - புலப்பேம்; அதற்கு யாரோ நீ யென்க. ஐகாரம் - இடைச் சொல்; என்ன உறவினை நீ என்றபடி; வாருற்று - நீட்சியுற்று. 8. உறை யிறந்து - மழைகால் வீழ்ச்சியைக் கடந்து. 9-10. பிறரு மொருத்தியை வதுவை யயர்ந்தாய் என்ற நின்றூர்கள்; என்று

---

* ஆசிரியம் ஓகாரத்தான் இற்றமைக்கு இதனையே காட்டாகக் காட்டினர் உரையாளர் பலரும். † "இது வாயின் மறுத்தது" என்றும், 'வண்டோ தனிமல'ரெனவே வைகறையும் வந்தென்றும், "செல்லாக் காலைச் செல்கென விடுத்தது" என்றும், "உறுகண் காத்தற்பொருட்டாகத் தலைவி வருந்தினும் நீ செல்லென்றாள், தலைவன் செல்லாமை அறிதலின்" என்றும் கூறி

சொல்லுகின்றவர்கள் நம் மனையிலே கொடுவந்து சொல்லாநின்றார்கள் என்றவாறு; தருதல் - அவளைச் சொல்லும்பொழுது அவளைப் புகுதவிட்டுச் சொல்லுதல். 11. கூறேம் - நீ யயர்ந்தா யென்று யாங்கள் சொல்லேம்.. 12. தகைய நாறும் - போர் சிதைதையைக் கெடுக்கும். 14. அள்ளூர் - அள்ளியூர்; அன்ன என்னுடைய. 15. நெகிழ்தல் - கழறல். 14. 'என்' என்றுள் தானவளென்னும் வேற்றுமை யின்மையால். 15. ஒண்டொடி என்று ஆகுபெயரால் தலைவியை ஆக்கி அவள் மெலியினும் மெலிக வென்பாரு முளர். 16. சென்றீ - செல்; தகைக்குநர் - விலக்குவார்.

6. வண்டே பனிமல ரென்றது, இராக்கால மானபடியாலே வண்டு உள்ளே ஊதும் மலர்.

1-6 காரான் தனக்கு நிலையென்று புகுதப்பட்ட கொட்டிலே நீராலுஞ் சாணகத்தாலுந் தானே சேறுக்கிக்கொண்டு, தளையையு மறுத்துக்கொண்டு, பழனத்துக்குக் காவலாகிய வேலியையுங் கோட்டா லெடுத்து, மீன்களிரியத் தாமரையைச் சூழ்ந்த வள்ளையை மயக்கி, மலர்ச்சி யின்றி வண்டொடு குவிந்த தாமரையை ஆர்ந்தாற்போல, நீயே ஆதரித்துக் கொள்ளப்பட்ட இவளை நீ தானே வேறுபடுத்தி நாணமாகிய தளையையு / மறுத்துக் கொண்டு, பரத்தையர்க்குக் காவலாகிய விறலியையும் பாணனாகிய கோட்டாலே நீக்கி, அப் பரத்தையருடனுறையும் தோழி மாரிரிய அப்பரத்தையருடைய தாய்மாரையும் மயக்கி, அகமலர்ந்துன்னை எதிரேற்றுக் கொள்ளாத மகளிரை நுகர்வானொருத்தனல்லையோ என்றவாறு.

பி - ம். 9. யெம்மனை. 13. கொற்கைச். 14. ரன்ன வெம்மொ.

47. பாலை

அழிவி லுள்ளம் வழிவழிச் சிறப்ப
வினையிவண் முடித்தன மாயின் வல்விரைந்
தெழுவினி வாழிய நெஞ்சே யொலிதலை

னர் நச். "'வண்டே பனிமல' ரெனப் பிறர்க்குரிய மகளிரெனவும், அவரை நயப்பா யெனவும் உள்ளுறையுவமம் மருதத்துக்கண் வந்தது" என்றார் போரா. (தொல். பொருள். 3., 147., 239., 304.)

யலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து
கடுவளி யுருத்திய கொடிவிடு கூரெரி
விடர்முகை யடுக்கம் பாய்தலி னுடனிலையந்
தமைக்கண் விடுநொடி கணக்கலை யகற்றும்
வெம்முனை யருஞ்சுர நீந்திக் கைம்மிக்
ககன்சுடர் கல்சேர்பு மறைய மனைவயி
னெண்டொடி மகளிர் வெண்டிரிக் கொளாஅலிற்
குறுநடைப் புறவின் செங்காற் சேவல்
நெடுநிலை வியனகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை
யாண்டுளர் கொல்லெனக் கலிழ்வோ ளெய்தி
யிழையணி நெடுந்தேர்க் கைவண் செழியன்
மழைவிளை யாடும் வளங்கெழு சிறுமலைச்
சிலம்பிற் கூதளங் கமழும் வெற்பின்
வேய்புரை பணைத்தோட் பாயு
நோயசா வீட முயங்குகம் பலவே.

என்பது: தலைமகன் இடைச்சுரத்து அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது.

— ஆலம்பேரிச்சாத்தனார்,

வரி

1. வழிவழி - மேன்மேலும். 3. தழைத்த தலை. 4. விலங்குபக்கம். 5. கடுவளி - குரூவளி. உருத்திய - வெப்ப முறப் பண்ணிய. 6-7. பரத்தலான், அமையிற்கண் விடுகின்ற ஓசை. 8. முனை - போர் செய்யுமிடம். 10. திரிக் கொள்ளுதலால், 12. பயிருமென்க. 16-17. சிறுமலை யென்னும் பெயரினையுடைய வெற்பு; சிலம்புபக்கமலை. 18. தோளிடத்துப் பரந்த நோய். 19. அசாநோயான் வரும் வருத்தம்.

2. வினை முடித்தனமாயின் 19. பலபடியாக முயங்குவேம் 3. எழு நெஞ்சே என்றான். 8. நீந்தி 14. எய்தி என்க.

பி-ம். 5. யருத்திய. 7. கலைக்கணம். 12. நிளந்துணை.

48. குறிஞ்சி

அன்னுய் வாழிவேண் டன்னை நின்மகள்
* பாலு முன்னுள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி யத்தன்றிறம்
யானுந் தெற்றென வணரேன் மேனுண்
மலிபூஞ் சாரலென் றேழி மாரோ
டொலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
† புலிபுலி யென்னும் பூச றேன்ற
வொண்செங் கழுநீர்க் கண்போ லாயித
ழூசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்ல னெருகணை தெரிந்துகொண்
டியாதோ மற்றம் மாதிறம் படர்ந்தென
வினவி நிற்றந் தோனே யவற்கண்
டெம்முள் ளெம்முண் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றனை மாகப் பேணி
யைவகை வகுத்த கூந்த லாய்நுதன்
மையீ ரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யு முளவோ வென்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேர னெதிர்மறுத்து
‡ நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச்
சென்றோன் மன்றவக் குன்றுகிழ வோனே
பகன்மா யந்திப் படுசுட ரமையத்

---

* இது "பசியட நிற்றல்" என்றும், செவிலி கூற்றென்றும் கூறுவர் பேரா. (தொல். பொருள். 270., 510.)

† "இது புலிகாத்தற்கு வந்தானென இட்டுரைத்தது" என்பர் நச். (தொல். பொருள். 207.)

‡ இது "உருவு நிறுத்த காமவாயில் என்பர் பேரா. (தொல். பொருள். 273.)

தவன்மறை தேய நோக்கி மற்றிவன்
25 * மகனே தோழி யென்றன
ளதனள வுண்டுகொண் மதிவல் லோர்க்கே.

என்பது : செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது. †

— தங்கால்முடக்கொற்றனார்.

வரி

I. வேண்டு - நான் சொல்லுகின்றதனை விரும்பு. 4. தெற்றென-தெளிய; தோன்ற; 7. பூசல் தோன்ற - தோன்றிற்றாக. 8. கண் - மகளிர்கண். இதழ் - பூ. 9. ஊசியாற் கோத்துச் சுற்றின பூமாலை; ஊசி போறலான் அல்லி யென்று போகல் ; அது கழித்துத் தொடுத்த என்றுமாம். 11. குயம் - முலை. குயமண்டாகம், மார்பிற் கடை; நீவி - பூசி உதிர்த்து. 12. வரி - சித்திரம்; வரிதலுமாம். 13. மா படர் திறம் யாது? திறம் - வழி; 14. நிற்றந்தோன் - நின்றோன். 15. மெய்ம்மறை பொடுங்கி - முதுகிலே மறைந்தொடுங்கி. 16. பேணி 17. வகுத்த கூந்தல்.

18. மையீரோதி மகளீர் என்று ஒரு பெயர்ப்படுத்தி ஒன்றுக்குக. 19. என்றனனுய். 20. எதிர் மறுத்து நோக்குதல் - எதிர்த்துப் பார்த்துப் பார்த்துவிட்டபின் பார்த்தல். 21-22. நோக்கிச் சேறல் - நோக்கா நின்று போதல். 23. பகற் பொழுது மாய்கின்ற அந்திப் பொழுது; படு சுடரை யுடைய பொழுது. 24. தெவெம் - திக்கு; மகனே - ஒரு புருஷனே; என்று வியந்து கூறிற்று புலி யென்னுங் காட்டிலே வந்து உதவினன் என்றவாறு. 26. அதனளவாக வுண்டோர் கோட்பாடு விசாரிப்பார்க்கு. ‡ கோள் - விசாரம்.

---

* இது தலைவனை எத்தல் என்றும், † "இது செவிலி கூற்றினைத் தோழி கொண்டு கூறியது" என்றும், ‡ "அதனளவுண்டு கோல்" என்று பாடங்கொண்டு "துணிவின்கண் ஐயஞ்சிறிது நீண்டதல்" என்றும் கூறுவர் நச்சினார்க்கினியர். (தொல். பொருள். 207., 115.)

7. 'புலி யென்பது, வேங்கை மலர் கொய்யத் தாழ்ந்து கொடுக்கு மென்றூர் பேதைத் தன்மை. அதுவும் மலையில் வாழ்வார்க்கு உள்ளதோர் பண்பு.

பி-மீ. 9. மூசு போகிய. 18. மகளீர். 26. இதனள வுண்டுகொல்.

49. பாலை

கிளியும் பந்துங் கழங்கும் வெய்யோ
ளளியு மன்புஞ் சாயலு மியல்பு
முன்னுட் போலா ளிறீஇயரென் னுயிரெனக்
கொடுங்கொடைக் குழவியொடு வயின்மரத் தியாத்த
கடுங்கட் கறவையிற் சிறுபுற நோக்கிக்
குறுக வந்து குவவுநுத னீவி
மெல்லெனத் தழீஇயினே னுக வென்மக
னன்ன ராகத் திடைமுலை வியர்ப்பப்
பல்கான் முயங்கினண் மன்னே யன்னே
விறன்மிகு நெடுந்தகை பலபா ராட்டி-
வறனிழ லசைஇ வான்புலந்து வருந்திய
மடமா னசாவினந் திரங்குமரல் சுவைக்குங்
காடுடன் கழிந்த லறியிற் றந்தை
யல்குபத மிகுத்த சுடியுடை வியனகர்ச்
செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழற் போலக்
கோதை யாயமொ டோரை தழீஇத்
தோடமை யரிச்சிலம் பொலிப்பவவ
ளாடுவழி யாடுவழி யகலேன் மன்னே.

என்பது: உடன்போயின தலைமகளை நினைந்து செவிலித்தாய் மனையின்கண் வருந்கியது. *

— வண்ணப்புறக் கந்தரத்தனார்.

---

* இப் பாட்டினை இத்துறைக்கே உதாரணமாகக் கொண்டு "'அல்குபத மிகுத்த கடியுடை வியனகர்' என நெல்லுடைமை கூறியவதனானே வேளாண்வருணமென்பது பெற்றும்" என்றார் நச்சினார்க்கினியர். (தொல். பொருள். 15. 42.)

வரி

I. வெய்யோள் - பெயர். 2. இயல்பு - செய்தி. 3. முன்னுட் போலாமை, அவனுடு கூட்டத்தாலே வேறுபட் டிருத்தல்; என-எனச் சொல்லி. 4. கொடுந்தொடை-வளைந்தகால்; வயின்மரம் - மரத்துவயினென்க. ஒரி டத்து மரம் என்றுமாம். 5. கடுங்கட் கறவை - விரை ந்து விரைந்து கன்றைப் பார்க்கின்ற பசு; இன் - உவ மம்; சிறுபுறம் - முதுகு. 8. இடை முலை - முலையிடை. 9. முயங்குதல் - தழுவுதல்; மன் - கழிவு; அதனை அறியப்பெற்றிலேன் என்றவாறு. போக்கை நினைந்து, வியர்த்தும் பல்கான் முயங்கிற்று. அன்னை - ஐயோ! 10. பாராட்டி - தன்னைக் கொண்டாடி. 11. வற்க டமா யுலறின நிழலிலே தங்கிக் 13. கழிதலறியின் என்க. 11. மேகத்தை வெறுத்து வருந்திய மடமா னகிய இனம். 13. உடன் - அவளும் அவனுங் கூட. 14. பதம் - சோறு. 15. மெய்ந்நிழல் - அவள் மெய் யினிழல்.....திரட்சி; 15. மெய்ந்நிழல் போல 18. அகலேன் என்க.

பி - ம். I. குறுகச் சென்று. வண்ணப்புறக்கல்லாடனார்.

50. நெய்தல்

கடல்பா டவிந்து தோணி நீங்கி
நெடுநீ ருருங்கழிக் கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினு
மாணிழை நெடுந்தேர் பாணி நிற்பப்
பகலு நம்வயி னகலா னாகிப்
பயின்றுவரு மன்னை பனிநீர்ச் சேர்ப்ப
னினியே, மணப்பருங் காமந் தணைப்ப நீந்தி
வாரா தோர்நமக் கியாஅ ரென்னுது
மல்லன் மூதூர் மறையினை சென்று
சொல்லி னெவனோ பாண வெல்லி
மணிசேர் பெண்ணை மடிவா யன்றி
றுணையொன்று பிரியினுந் துஞ்சா காணைனைக்

கண்ணிறை நீர்கொடு கரக்கு *
மொண்ணுத லரிவையா ளென்செய்கொ வெனவே.

என்பது : * தோழி பாணனுக்குச் சொல்லியது.

— கருவூர்ப் பூதஞ்சாத்தனர்.

வரி

I-2. 'அவிந்து' 'நீங்கி' என்று நின்ற செய்தென் னெச்சங்க ளெத் திரித்துச் செய என் னெச்சமாக்கக், கடலோ சையவிந்தாற் ரோணியுள்ளே புகுமென்றபடியாம்;நீங்க என்ரூர் அக்காலம் பார்த்துக், கடுமீன்-சுரு முதலியன, கலித்தல் - செருக்கொடு திரிதல்; அவிய - அவிந்த காலத்திலே. 4. பாணி - தாமத காலம். 5. பகலும் என்ற உம்மை .....; 6. பயின்று - அடுத்து; மன், அது கழிந்தது; ஏகாரம் ஈற்றசை; வரும் என் பது முற்று. 7. மணப்பருங்காமம் - களவுக்காலத் துக் கூடுதற்கரிய வேட்கை; தணப்ப - இது தமக்கு நீங்குகையாலே; நீந்தி - கழித்து. 8. யாரென்னது - என்ன உறவினரென்னது. 12. ஒன்று துணை என்க; ஒன்றுதல் - கூடுதல்; பிரியினும் என்ற உம்மை எச்ச வும்மை, நெடும் பிரிவின்றி இணைந்து ஒன்றுதலே பிரியி னுமென்றமையான்; துஞ்சா என்று பன்மை கூறினர், இப்படியே அவ்வினங்கள் செய்வனவென்று. 13. ஆற் ரூத்தன்மை பிறரறியாமை மறைத்துச் செலுத்தும்.

கூடி நீங்கிப்போம் வழியிலே தாம் வருங்காலத்தும் அலர் தூற்றினராயினும் பயின்றுவரும் முன்; இப்பொழுது வேட்கை நீங்குதலான் வருகின்றிலான்; அங்ஙனம் வாராதோர் நமக்கு என்ன உறவினரென்னது, துஞ்சாகாணென்று சொல்லி, கண் ணிறை நீர்கொடு கரக்கும் யான் இதற்கு என் செய்வேனென்று நீ இதனைச் சொல்லின் என்னும் பாணனே எனப் பாணனுக்குத் தோழி கூற்ரூக்குக. 13. இதற்கென்றது அன்றில் துஞ்சா வருத்தத்தை நோக்கி. 11. மடிவாய் - வளைந்தவாய்.

பி - ம். 11. மடல்வா. கருவூர்ப் பூதனர்மகனர் கொற்றனர்.

---

* இப்பாட்டினை "மெல்லியற் பொறையும் நிறையும்" என்ற துறைக்கு உதாரணமாகக் காட்டி, "இதனுட் காம மிகுதியால் கண்தாமே அழவும், கற்பிற் கரக்குமெனத் தலைவி பொறையும்

51. பாலை

ஆள்வழக் கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தா னியாத்துப்
போழ்வளி முழங்கும் புல்லெ னுயர்சினை
முடைநசை யிருக்கைப் பெடைமுக நோக்கி
யூன்பதித் தன்ன வெருவரு செஞ்செவி
யெருவைச் சேவல் கரிபுறை தீய
வேனி னீடிய வேயுயர் நனந்தலை
நீயுழந் தெய்துஞ் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோள்வயிற்
பிரியிற் புணர்வ தாயிற் பிரியா
தேந்துமுலை முற்றம் வீங்கப் பல்லூழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ நாளு
மினைமுதல் வினையொடு முவப்ப
நினைமா னெஞ்ச நீங்குதன் மறந்தே.

என்பது : பொருள்வயிற் பிரிவுகடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

— பெருந்தேவனார்.

வரி

2. மிக்க உஷ்ணம். 9. வயின் - இடத்தினின்றும். 10-11. தம்மிற் பிரியாதேந்தின முலை. முற்றம் - பரப்பு. 13. மினைமுதல் - தலைவி; வினை - இல்வாழ்க்கை.

நிறையும் தோழி பாணற்குக் கூறினள், அவன். தலைவற்கு இவ் வாறே கூறுவனெனக் கருதி. 'இனி' என்றதனால் கற்பும் பெற் றும்" என்றார் நச்சினார்க்கினியர் (தொல். பொருள். 152)

'"எல்லி, மினைசேர் ..... வெனவே" என்பது தன்பத்துப் புலம்பல்; என்பது, பிரிவாற்றாது தன்புறுங்காலை, அவ்வாற் றுமை தலைமகற்கின்றித் தானே தன்புறுகின்றாளாகச் சொல் லுதல். அவை கூட்டத்தை வெறுத்த குறிப்பாயினும் அக் கூட்டத்திற்கே நிமித்தமாகும், ஆராய்ந்துணரி னென்றவாறு' என்பர் பேரா. (தொல். பொருள். 270.)

8. அப்பொருட் கூட்டம் 10. பிரிவாயிற் புணர்வது. அங்ஙனம் பிரிய நினையாது 13. இல்வாழ்க்கைத் தொழிலொடு நிகழும்படி 14. நினையாய் நெஞ்சே என்றான். என்றது, பிரியில் இவள் இறந்துபடும் என்பது கருதி.

பி-ம். 10. பிரியப்புணர்வ. கடுகு பெருந்தேவனார்.

52. குறிஞ்சி

வலந்த வள்ளி மரனெங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமக
ளின்ன விசைய பூசல் பயிற்றலி
னேக லடுக்கத் திருளளைச் சிலம்பி
னகொள் வயப்புலி யாகுமஃ தெனத்த
மலைசெழு சீறார் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாட
னெஞ்சமர் வியன்மார் புடைத்தென வன்னைக்
கறிவிப் பேங்கொ லறியலங் கொல்லென
விருபாற் பட்ட சூழ்ச்சி யொருபாற்
சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை
யின்னுயிர் கழிவ தாயினு நின்மக
ளாய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே.

என்பது: தலைமகள் வேறுபட்டமையறிந்த செவிலித்தாய்க்குத் தோழி யறத்தொடு நிற்குமெனத் தலைமகள் சொல்லியது. *

— நோச்சிநியமங்கிழார்.

வரி

1-2. மரனெங்குசாரலிடத்து வலந்த வள்ளியையுடைய கிளர்ந்த வேங்கை யென்க. 9. நெஞ்சமர்வியன் மார்பு நம்முடைய நெஞ்சம்மேவினவனுடைய பெரிய மார்

* "இது சிறைப்புறமாக "விட்டுயிர்த் தழுங்கல்" என்றும், "செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செப்பு, மறிவு மருமையும் பெண்

பைக் காரணமாக வுடைத்து 14. உண்கட்பசலை என்க. 10. அறியலங்கொல்லென - அறிவியாதொழி யக்கடவேமோ என. 11. ஒருபாற் 12. சேர்ந்தன்று - சொல்லக்கடவதான ஒரு கூற்றிலே சேர்ந்தது. 15. அது சொல்லுமிடத்துக் காமநோயென்று இங்ஙனம் விளங்கச் சொல்லாது கூட்டமிஞட்டத்தாற் சொல்லுக வென்றவாறு.

வேங்கையைக் கொடிசூழ அவ்வேங்கையிலே அலருண்டான அளவில் ஆண்டுவாழு மறவர் புலி யுலி என்று பூப்பறித்தற்குச் சொன்ன அரவத்தாலே ஊரெல்லாம் ஆரவாரித்தாற் போல அவரை நாம் தலைப்பெய்தவளவிலே அலர் பிறந்ததாக அவ்வலர் முதற்சீராலே முகிழ்முகிழ்த்துப் பின்னை யெல்லாரு மறிந்தது என்றவாறு.

பி - ம். 10. அறிவியேங்கொல். மாற்றார்கிழார்மகனர் கொற்றங்கொற்றனர்.

53. பாலை

அறியாய் வாழி தோழி யிருளற
விசும்புடன் விளங்கும் விரைசெலற் றிகிரிக்
கடுங்கதி ரெறித்த விடுவாய் நிறைய
நெடுங்கான் முருங்கை வெண்பூத் தாஅய்
நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை யுழிஞ்சி
லுள்ளூன் வாடிய சுரிமூக்கு நொள்ளை
பொரியரை புதைத்த புலம்புகொ ளியவின்
விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோ

பாலான" என்ற இலக்கணத்தோ டொத்தமைந்தது "இன்னுயிர் கழிவ ..... தீமே" என்றது என்றும் கூறுவர் நச். இனிப்பேரா. இவ்வடிகளை "வாழ்க்கை முனிந்து தலைமகள் சொல்லியது" என்பர். (தொல். பொருள். 111., 209., 271.)

'ஈகலடுக்கம்' என்பதில் 'ஏ' பெருக்கத்தையும் அடுக்குதலையும் உணர்த்திற்று என்றார் நச். (தொல். சொல். 305.)

ரெழுத்துடை நடுக லின்னிழல் வதியு
மருஞ்சுரக் கவலை நீந்தி யென்று
மில்லோர்க் கில்லென் றியைவது காதல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காத
லருளே காதல ரென்றி நீயே.

என்பது: வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.*

— சீத்தலைச்சாத்தனார்.

வரி

1. அறியாய் காண். 2. திகிரி - ஆகித்தன் 3. எறித்தலாற் பிளந்த பிளப்பு. 4. தாஅய் - தாவ 5. நிரம்பா - தொலையாதாய் 6. அப்பிண வொடு 11. வதியும் 12. சுரம். 7. கோழரை யுழிஞ்சில். 9. பொரியரை புதைத்துப் பற்றிக் கிடக்கிற. 10. விழுத்தொடை - தப்பாத தொடை. 14. வல்லா - மாட்டா; 5. காத லர் காதல் பொருளே.

14. நம்மேல் அருளே காதலரென்னு நின்ரு யாதலால்.

1. அறியாய் காண் என்க.

12. நீந்திக் 15. காதலித்தது என்க.

வேறு நிழலில்லாமையால் 11. கல்லின் நிழல் இனிய நிழலாயிற்று.

54. முல்லை

விருந்தின் மன்ன ரருங்கலந் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன் தீம்பெயற்
காரு மார்கலி தலையின்று தேரு
மோவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வா யாழி யுள்ளுறு புருளக்

* இப்பாட்டினை. இத்துறைக்கே உதாரணமாகக் கொண்டு, பிரிதல் நிமித்தமென்றும், தலைவன்கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக்குக் கூறியது என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 14, 43.)

*கடவுக கான்குவம் பாக மதவுநடைத்
தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற பயநிரை யாயங்
கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலர் பின்றைத் தூங்க
மனமனைப் படரு நனநகு †மாலைத்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பன்னன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையிற் றீய மிழற்றி
‡முகிழ்நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மக னெற்றி
வருகுவை யாயிற் றருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.

என்பது : வினைமுடித்துமீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

— மாற்றார்கிழார்மகனார் கோற்றங்கோற்றனார்.

வரி

1. புதுமை; தெறுப்ப - குவிப்ப 2. வேந்தன் - தான் துணையாகப்போன வேந்தன். 3. ஆர்கலி தலையின்று - ஓரவாரத்தோடு பெய்தது; தலையிற்று என்பது தலை

---

*"இது பாகற் குரைத்தது" என்றும் †"முல்லைக்கட்காரும் மாலையும் வந்தது" என்றும், ‡"கார்காலத்து மீள்கின்றான் முகிழ் நிலாத்திகழ்தற்குச் சிறந்த வேனிலிறுதிக்கண் தலைவிமாட்டு நிகழ்வனகூறி, அவை காண்டற்குக் கடிது தேரைச செலுத்தென்றது" என்றும், "முல்லைக்கண் வேனில் வந்தது" என்றும், வேந்தன் பகைமையைத் தான்தணிவித்தமை கூறலின் அந்தணன் தூதிற் பிரிந்தமை பெற்றும்" என்றும் கூறினர் நச். (தொல். பொருள். 6. 12., 26.)

யின்று என மெலிந்தது. 4. ஓவம்போன்ற நிலம்; ஓவம் - சித்திரம். 5. உள்ளுற்றுருள; உள்ளுறுதல் - பெயலால் நனைதல்.

7. தாம்பாற்கட்டின குழவியிடத்தே தன் வீங்கின சுரை மடியவேண்டிக் 8. கனைக்கின்ற குரலவாய்க்காற் செலவைப் பயிலச் செய்து 12. மனைதொறும் படரும் என்க.

9. பயநிரைக் 7. குழவியையுடைய 12. மனை என்ச் சேர்ப்பாருமுளர்; 9. பாற்பசுவினம்.

10. கொடுமடி அடகுபறித்திடுதற்குக் குழியக்கோலின மடி. 11. பின்றை - ஆயத்தின்பின்; தங்க - மெத்தென நடக்க. 12. நனைநகுமாலை - மொட்டு மலரும் மாலைக் கண்ணே 16. இனிதாக வார்த்தை சொல்லி.

17. முகிழ்நிலா - முகிழ்க்கின்ற திங்கள்; விளி. 18. பொன்னுடைய புலிப்பற்ருலி; * ஒற்றி - நினைந்து 20. ஒருக் கடித்துப் பார்க்கும் கண்ணளாய்; விரலால் அழைத்து.

22. பூங்கொடிநிலை 6. காண்குவம் கடவுக என்க.

பி - ம். 6. கடவிக் காண்குவம் 19. பயனிரையாயம். 15. புன்கா னெல்லி. நொச்சி நியமங்கிழார் மகனார்.

55. பாலை

காய்ந்துசெலற் கனலி கல்பகத் தெறுதலி
னீந்து குருகுருகு மென்றாழ் நீளிடை
யுளிமுக வெம்பர லடிவருத் தருளின்
விளிமுறை யறியா வேய்க்கரி கானம்
வயக்களிற் றன்ன காளையொ டென்மகள்
கழிந்ததற் கழிந்தன்றே விலனே யொழிந்தியா
னூதுலைக் குருகி னுள்ளுயிர்த் தசைஇ
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு

* "வருவதொற்றி" என்னுமிடத்தும் 'ஒற்றல்' நினைதல் என்றூர் அடியார்க்குநல்லார். (சிலப். அரங்கு. 65.)

*கண்படை பெறேன் கனவ வொன்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் ணுணிய சேர லாத
னின்னிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
வின்னு வின்னுரை கேட்ட சான்றோ
ரரும்பெற லுலகத் தவனொடு செலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்குப் பிறிந்திவட்
காதல் வேண்டியெற் றுறந்து
போதல் செல்லா வென்னுயிரொடு புலந்தே.

என்பது: புணர்ந்துடன்போன தலைமகட் கிரங்கிய தாய் தெருட்டு மயலிலாட்டியர்க்கு உரைத்தது.

— மாமூலனார்.

வரி

3. உளிபோன்ற முகத்தை யுடைய பரல் 4. விளிமுறை யறியா - இன்ன விடத்தில் இன்ன கேடுவரு மென்று அறியாத; காடு; 6. ஒழிந்து - விட்டிருந்து 9. கனவ - வாய்வெருவ. 11. புண் - புண்ணுக்குத் தானழிந்தமை 12. வாள் - வாளொடு 13. இன்னு இன்னுரையாவது - மரிக்கின்றானென்ற இன்னுமையும், புறப்புண் பட்ட பழிதீர இருந்து உயிர்விடுகின்றானென்கிற இனிமையுமுடைய உரை. 14. உலகம் - வீரசுவர்க்கம் 15. இவட்காதல் வேண்டி - இவ்வுலகி லிருந்த ஆசையால். 16. என்னைப் பிரிந்துவிட்டுப் போதல்.

17. புலந்து - புலந்தேனெனத் தன்மை வினையாக்குக. உயிரொடு புலந்து 6. அழிந்தென்பாருமுளர். 6. ஓகாரம் - ஒழியிசை: 9. கனைக்கண்டு வருந்தும்படி 17. போகாதிருக்கின்ற என்னுயிரென்க.

சான்றோர் தங்களுக்கவ்வன்னியனாகியவன் வடக்கிருந்த வழி அச்சான்றோர் உயிர்துறந்தமாத்திரமும் யான் மாட்டிற்றிலேன் என்மகளுக்கு என்று அதற்கு நோகின்றேன் என்றவாறு.

பி - ம். 8. போலுமவல நெஞ்சமொடு.

---

*"தாய்க்கு முரித்தாற் போக்குடன் கிளப்பின்" என்ற சூத்திரத்திற்கு இவ் வடியை உதாரணமாகக் காட்டினர் நச். (தொல். பொருள். 198.)

56. மருதம்

* நகையா கின்றே தோழி நெருநன்
•மணிகண் டன்ன துணிகயந் துளங்க
விரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை
. யாம்பன் மெல்லடை கிழியக் குவளைக்
5 கூம்புவிடு பன்மலர் மாந்திக் கரைய
காஞ்சி நுண்டா தீர்ம்புறத் துறைப்ப
மெல்கிடு கவுள வல்குநிலை புகுதருந்
தண்டுறை யூரன் றிண்டா ரகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
10 பரிவொடு வருஉம் பாணன் றெருவிற்
புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்மனைப் புகுதந் தோனே யதுகண்டு
மெய்ம்மலி யுவகை மறையினெ னெதிர்சென்
றிம்மனை யன்றஃ தும்மனை யென்ற
15 வென்னுந் தன்னு நோக்கி
மம்மர் நெஞ்சினேன் றெழுதுதின் றதுவே.

என்பது: பரத்தைமனைக்குச் செல்கின்ற பாணன் தன்மனைக்கு வந்தானுகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

— மதுரை அறுவைவாணிக னிளவேட்டனர்.

வரி

2. மணி - பளிக்கு மணி 3. இரும்பாற் செய்தா லொத்த கருங் கோடு. 7. மெல்கிடுதல் - அசையிடுதல். அல்கு நிலை - தங்கு மிடங்களிலே. 8. அகலம் 9. புணர வேண்டி. 9. வதுவை ஒப்பனையுடைய; புதுவோர் - பரத்தையர். 13. மெய்மலி உவகை - உடம்பு பூரிக்கும் படி யெழுந்த உவகை. 15. நோக்கி - விசாரித்து.

இரும்பியன்றன்ன கருங்கோட் டெருமை கயங் கலங்க ஆம்பன் மெல்லடை கிழியக் குவளைக் கூம்புவிடு பன்மலரை

---

* இது "பிறன் பேதைமை பொருளாக நக்கது" என்றுந் போரா. (தொல். பொருள். 252.)

மாந்திக் காஞ்சி நுண்டாது புறத்துறைப்ப மெல்கிடு கவுளவாய்த் தங்குநிலைக்கட் புகுதரு மென்றது, இரும்புபோன்ற நெஞ்சினை யுடையராகிய பரத்தையர் ஊர் முழுதங் கலங்கத் தான் முன்பு கூடின பரத்தையர் தாய்மார் கலங்க, அப்பரத்தையர் அவ் வாம்பற்பூப்போலக் குவியக், குவிதல்விட்ட குவளை மலர் போலும் பூப்பெய்து கொள்ளப்பட்ட பரத்தையரை நுகர்ந்து, வருகின்ற காலத்து, வழியிலகப்பட்ட சேடியர் முதலாயினரை நுகர்ந்து, பின்னுஞ் சிலரைக் கூடக் கொடுநாக் கெறிந்து கொண்டு, நம்மனையிலே தங்குதற்பொருட்டு வருகின்றான் என்று தோழிக்கு வாயின் மறுத்தது.

4. குவளைக் 5. கூம்புவிடு பன்மலரென்றதனானே ஆம்பற் பூக்குவிதல்கொள்க. பூ ஆண்டுக் கூறிற்றிலரேனும் குறிப்பினுற் கொள்க.

15. என்னுந்தன்னும் நோக்கி என்றது - எனது இகழ்ச்சியும் தனது இளிவரவும் நோக்கி என்க.

57. பாலை

சிறுபைந் தூவிச் செங்காற் பேடை
நெடுநீர் வானத்து வாவுப்பறை நீந்தி
வெயிலவி ருருப்பொடு வந்துகனி பெருஅது
பெறுநாள் யாண ருள்ளிப் பையாந்து
5 புகலேக் கற்ற புல்லெ னுலவைக்
குறுங்கா லிற்றிப் புன்றலை நெடுவீ
ழிரும்பிணர்த் துறுகற் றீண்டி வளிபொரப்
பெருங்கை யானை நிவப்பிற் றாங்குங்
குன்ற வைப்பி னென்றாழ் நீளிடை
10 யாமே யெமிய மாகத் தானே
பசுநிலா விரிந்த பல்கதிர் மதியிற்
பெருநல் லாய்தவி னெரீஇச் சிறுபீர்
வீயேர் வண்ணங் கொண்டன்று கொல்லோ
கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
15 முதுநீர் முன்றுறை முசிறி முற்றிக்
களிறுபட வெருக்கிய கல்லென் ஞாட்பி

னரும்புண் ணுறுநரின் வருந்தினள் பெரிதழிந்து
பானுட் கங்குலும் பகலு
மானு தழுவோ ளாய்சிறு நுதலே.

என்பது : பொருள்வயிற் பிரிந்த தலைமகன் கிழத்தியை நினைந்து சொல்லியது.

— நக்கீரர்.

வரி

2. நெடுநீர் - நெடியதன்மை; பறையால் நீந்தி; அவ்வரனத்தை நீந்தித் 4. நான் முன்பு கனிபெறுநாளின் வளனை நினைந்து. 5. புகுதலுக்கேக்கற்ற, பயனில்லாமையின் மரங்களைப் புகுதலின் ஏக்கற்ற; உலவையை உடைய 6. இற்றி; உலவை - கொம்பு, 8. நிவப்பு - ஓக்கம்; ..... யானை நிவப்பை ஒத்த 6. விழுது 7. கல்லெத்தீண்டி வளி பொருதலால் 8. அசையும் என்க. 9. குன்றவைப்பு - மலைகளையுடைய ஊர். 11. பசுநிலா - குளிர்ந்தநிலா; கதிர் - கிரணம்; மதியின் - மதிபோன்ற; 15. முதுநீர் - கடல்; 16. எருக்கிய - கெடுத்த; 17. அரும்புண் - தீர்தற்கரிய மருமத்திற்புண். 19. நுதல் 13. வீயேர் வண்ணம் கொண்டு 11. பரந்ததோ, பரந்திலதோ என்க.

பி - ம். 4. பெயர்ந்து. 8. றேன்றுங். 16. வருத்திய.

58. குறிஞ்சி

இன்னிசை யுருமொடு கனைதுளி தலைஇ
மன்னுயிர் மடிந்த பானுட் கங்குற்
காடுதோர் வேட்டத்து விளிவிடம் பெறுஅது
வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழைத்
தேனுறு கதுப்பிற் கொடிச்சியர் தந்தை
கூதிரிற் செறியுங் குன்ற நாட
வினைந்துவர விளமுலை யெழுமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலி னினிதா கின்றே
நும்மில் புலம்பினும் முள்ளுதொறு நலியுந்
தண்வர லசைஇய பண்பில் வாடை

பதம்பெறு கல்லா திடம்பார்த்து நீடி
மனைமர மொசிய வொற்றிப்
பலர்மடி கங்கு னெடும்புற நிலையே. *

என்பது : சேட்படுத்துவந்த தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

— மதுரைப் பண்டவாணிகனிளந்தேவனார்.

வரி

I. தலைஇ.....3. வேட்டத்து - வேட்டை யிடத்து; விளிவிடம் - உறங்குமிடம்; முடிவிடமுமாம். 4. வரியதள் - புலித்தோல்; சேக்கையிடத்துக் 6. கூதிர்க் காலத்து இல்லிலேவந்து செறியும். 7. பண்ணினற் போலே வருதலை யுடையமுலை. பல்லூழ் 8. புறஞ்சுற்ற 9. அடையுமதனினும். 10. புலம்பின் - புலம்பால். 11. குளிர்ந்த வரவோ டசைகிற; பண்பு - குணம். 12. காலம்; நீடி - தாழ்த்து; தன் வருத்தந் தோன்ற. 13. மனைமரம் முறிய வலித்து 14. எல்லாரும் உறங்கவும் தான் உறங்காது நெடுங்காலம் நிற்கிற புறநிலை. 9. இனிதாயிற் றென்க.

சேட்படுத்து வருதல் ..... தான் செய்தொழிற்கு இடம் பெறுது கூதிர்க்காலத்து இல்லிலே செறியும் குன்றநாட என்ற தனாற் பயன் புறத்து வினையில்லாக் காலத்து எம்மை நினைக் கின்றாய் என்றாளாம்.

---

* இப்பாட்டினைப் "பெற்றவழி மலியினும்" என்ற சூத்திரத்திற்கு உதாரணமாகக் காட்டி, "முயக்கம் இனிதென மகிழ்ந்து கூறுவாள் நும்மில் புலம்பால் வாடைக்கு வருந்தினேம் என்றலினிரண்டுங்கூறினாள்" என்றார் நச். (தொல்.பொருள். III)

இனிப் பேராசிரியர் 'வனைந்துவரலிள முலை.....கின்றே' என்ற அடிகளை உதாரணமாகக் காட்டி, "இவை களவியலுள் உயிர்மெலிந்தவிடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவை யின்றியும் புணர்ச்சி நிகழ்ந்தவாறு" என்றும், இது கண்டவழி உவத்த லாகாதோ எனின், ஆண்டுத் தன் உவகை கூறளன்றே கரந்திடத் தொழிந்தாளாகலின் என்பது என்றும், இது கிழத்திகூற்று என்றும், அதனைத் தலைமகன் கேட்டது என்றும் கூறுவர். (தொல். பொருள். 268., 502., 509.)

59. பாலை

தண்கயத் தமன்ற வண்டுபடு தூமலர்ப்
பெருந்தகை யிழந்த கண்ணினை பெரிதும்
வருந்தினை வாழியர் நீயே வடாஅது
*வண்புனற் றெருழுறை வார்மண லகன்றுறை
யண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போலப்
புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை
நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
படிஞ்மிறு கடியுங் களிறே தோழி
சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற்
சினமிகு முருகன் றண்பரங் குன்றத்
†தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
யின்றீம் பைஞ்சுனை யீரணிப் பொலிந்த
தண்ணறுங் கழுநீர்ச் செண்ணியற் சிறுபுறந்
தாம்பா ராட்டிய காலையு முள்ளார்
வீங்கிறைப் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்
டருஞ்செயற் பொருட்பிணி முன்னிநப்
பிரிந்துசே ணுறைநர் சென்ற வாறே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்ட கிழத்திக்குத் தோழி சொல்லியது.

— மதுரை மருதனிளநாகன்.

---

* "நீனிற வண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னெக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் றெருழுனை யாற்றுட்
கோனிற வளையி னர்க்குக் குருந்தவ னெரிசித்த தென்றான்."

எனச் சிந்தாமணியினும் (209) இக் கதை கூறப்பட்டுள்ளது.

† இவர் 'நல்லந்துவனார்' என்னும் புலவர். "கையாற் றலை தொட்டேன் தண்பரங் குன்று" என்பது இவர் வாக்கு. "நிறை கடன் முகந்து" என்று தொடங்கும் பரிபாடலிற் காண்க.

வரி

1. மலரினுடைய 2. பெருந்தன்மை. 5. அண்டர் - இடையர். 6. மரஞ்செல மிதித்த மால்: — ஆயர் பெண்கள் குளியாதின்றார்களாக, அவர் இட்டுவைத்த துகிலெல்லாம் பின்னை எடுத்துக்கொண்டு குருந்தமரத்தேறினராக, அவ்வளவில் நம்பிமூத்தபிரான் வந்தாராக, அவர்க்கு ஒருகாலத்தே கூடமறைதற்கு மற்றொரு வழியின்மையின் ஏறினின்ற குருந்தமரத்துக் கொம்பைத் தாழ்த்துக்கொடுத்தார், அதற்குள்ளே அடங்கி மறைவாராக. அவர் போமளவுந் தானேயாகவுடுக்கத் தாழ்த்தா ரென்பாரு முளர்.

7. குழை - தழை. 8. ஒற்றி - வளைத்து; மதத்தானனைந்த கவுளிற் 9. படிகிற குரிசிற்றைக் கடியும் களிறே கணவர் சென்ற ஆற்றின்கண்; அவர் இது கண்டு வருவரென்று ஆற்றுவித்தாள். 10. மருங்கு - சுற்றம். 11 - 12. குன்றமாகிய வரை. அந்துவன் - ஒரு புலவன். அத்து, சாரியை. சந்து - சந்தனம். 13 - 14. பைஞ்சுனையிற் கழுநீர். ஈரணிப் பொலிந்த - பெரிய ஒப்பனையாற் பொலிவுபெற்ற. செண்ணுதல் - கைசெய்தல்; செண்ணுதலாற் செண்ணென்று கொண்டைக்குப் பெயராயிற்று. இயறல் - அசைவருதல். 15. உள்ளாராய்ப் 18. பிரிந்து தாழ்க்க உறைகின்றவர் போன வழி என்க.

பி - மீ. 7. வங்குழை. 9. படுகிறு. 13. ஈண்டிப் பொலிந்த.

60. நெய்தல்

பெருங்கடற் பரப்பிற் சேயிரு நடுங்கக்
கொடுந்தொழின் முகந்த செங்கோ லவ்வலை
நெடுந்திமிற் றிழிலொடு வைகிய தந்தைக்
குப்புநொடை நெல்லின் சூரல் வெண்சோ
5 †றயிலை தழுந்த வம்புளிச் சொரிந்து
கொழுமீன் றடியொடு குறுமகள் கொடுக்குந்
திண்டேர்ப் பொறையன் றொண்டி யன்னவென்

† அயிரை என்பதும் பாடம்.

மொண்டொடி ஞெமுக்கா தீமோ தெய்ய
வூதை யீட்டிய வுயர்மண லடைகரைக்
கோதை யாயமொடு வண்ட றைஇ
யோரை யாடினு முயங்குநின் ஞெளியெனக்
கொன்னுஞ் சிவப்போள் காணின் வென்வேற்
கொற்றச் சோழர் *குடந்தை வைத்த
நாடுதரு நிதியினுஞ் செறிய
வருங்கடிப் படுக்குவ ளறனில் யாயே.

என்பது: தலைமகற்குத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

குடவாயிற் கீரத்தனார்.

வரி

2. கோல் - வலையிற்கட்டின கோல்; வலையை யுடைய 3. திமில்; 3. தொழிலொடு - தொழிலால். 5. அயிலை - ஒருமீன்; அயிலையொடு வலந்தபுளி; புளி யென்றூர் புளியிட்ட கறியை. 6. தடி - கருவாடு; கொடுக்கும் 7. தொண்டி. 8. ஞெமுக்குதல் - வளைதானிட்டுத் தழும்பாதல்; பரப்புதலுமாம். ஒண்டொடி யென்று தலைவியையாக்கி யவளை வருத்தாதேகொள் என்பாரு முளர். 11. உயங்கும் - மடங்கும். 12. கொன்னும் சிவப்போள் - ஒரு பயனின்றியுங் கோபிக்கு மவள், காணின் - இவளைக் காணில் 15. காவற் படுத்துவளா தலான் 7. ஞெமுக்காதே கொள் என்றாள்.

திமிற்றொழிலொடு வைகிய தந்தைக்கு இளமகளானவள் மீன் கொண்டு வருதற்கு முன்னே தான் உப்பு விற்ற நெல்லாலே ஆக்கப்பட்ட மூரல்வெண் சோற்றையும் புளிக் கறியையும் சொரிந்து கொழுமீன் தடியொடு கொடுத்தாற் போலத் தாம் வரைதற்குத் தாமும் புறம்பே முயல, நாங்களும் அறத் தொடுநிலை வகையால் ஈங்கே முயல்வேம் எனச் சொல்லிய வாறுக்குக.

பி - ம். 8. ஞெமுங்கா.

---

* குடவாயில் என்பதனைக் குடந்தை யென மேலையோர் திரித்தார் என்பர் பேராசிரியர். (தொல். பொருள். 392.)

61. பாலை

* நோற்றோர் மன்ற தாமே கூற்றங்
கோளுற விளியார்பிறர் கொளவிளிந் தோரெனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்
நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்
5 தாழல் வாழி தோழி தாழாது
கருமெனச் சிலைக்கு மூக்கமொடு பைங்கால்
வரிமா ணுன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
யருநிறத் தழுத்திய வம்பினர் பலருட
னண்ணல் யானை வெண்கோடு கொண்டு
10 நறவுநொடை நெல்லி ணுண்மகி ழயருங்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
பழகுவ ராதலோ வரிதே முனாது
15 முழவுறழ் திணிதோ ணெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி யன்னநின்
ணெண்கேழ் வனமுலைப் பொலிந்த
நண்பூ ணுகம் பொருந்துதன் மறந்தே.

என்பது: தலைமகன் பொருள்வயிற் பிரிய வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

— மாமூலனார்.

வரி

1-2. கூற்றங் கோடலுற விளிதல் - உபகாரமின்றி வெறிதே மரித்தல்; பிறர் கொள விளிதல் - பிறர் தம் கைப் பொருள் கொள்ளுங்படி மரித்தல்; என்றது, உபகாரத் தோடே மரித்தல். 3. தாள் - உற்சாகம். 4. இழைத்தல் - கிறுதல். 5. ஆழல் - அழுந்தாதே. 12. மழபுலம்

---

* "இப் பாட்டின் மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தாரே துறக்கம் பெறுவரெனத் தன் சாதிக்கேற்பத் தலைவன் புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலைத் தோழி கூறினாள்" என்றார் நச்சினார்க்கினியர். (தொல். பொருள். 44.)

வணக்குதல் - மழவர் தேயத்தை வணக்கி, அவரைத் திறைகோடல். 14. அங்கே பழகவிருத்த லரிது. மூனது - பழையதான. 16. பொதினி - ஊர். 18. மறந்து 13. வேங்கடம் பெறினும் 14. பழகுவராதல் அரிதென்க.

பி - ம். 7. வார்சிலை.

62. குறிஞ்சி

* அயத்துவளர் பைஞ்சாய் முருந்தி னன்ன
நகைப்பொலிந் திலங்கு மெயிறுகெழு துவர்வா
யாகத் தரும்பிய முலையள் பணைத்தோண்
மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு
பேயு மறியா மறையமை புணர்ச்சி
பூசற் றுடியிற் புணர்வுபிரிந் திசைப்பக்
கரந்த கரப்பொடு நாஞ்செலற் கருமையிற்
கடும்புனன் மலிந்த காஷிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்த மண்ணுநீர் போல
நடுங்கஞர் தீர முயங்கி நெருநை
லாக மடைதந் தோளே வென்வேற்
களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
யொளிறுநீ ருடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவு ளெழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே.

என்பது : அல்லகுறிப்பட்டுழித் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. — பரணர்.

வரி

1. முருந்து - வேரின்மேற்றண்டு 2. நகை - ஒளி. 3. பேயு மறியா மறையமை புணர்ச்சி - களவின்கட் புணர்கிற

---

* "'களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்' என்பதனால் தலைவியாற் குறிபெற்றும் தோழியை இரக்கும்" என்று கொண்டு அதற்கு இப் பாட்டினை உதாரணமாகக் காட்டினர் நச்.' (தொல் பொருள். 102)

போது பேயு மியங்காது வைகு காலத்துப் புணர்ச்சி. மறை - இரகசியம். 7. பூசற்றுடியின் - துடிபோல; புணர்வு பிரிந்திசைப்ப - தங்களிற் கூடியும் தனித்தும் அயலார் சொல்லுவன; புணர்ந்தகாலத்து மேனி அழகாலும், பிரிந்தகாலத்து மேனி வேறுபாட்டாலும் அறிவிக்க என்றுமாம். இப் பொருட்குப் புணர்தலினும் பிரிதலினும் இசைப்ப என்க.

10-11. நீத்தம் மண்ணுநீர் போல முயங்கி - நீத்தத்திற் குளிக்குமிடத்துக் குளிருமாறுபோலக் குளிர முயங்கி என்றவாறு.

5. மழைக்கண் மாயோளென்றது, குளிர்ந்த கண்களியோளெனக் கண்ணிற் கேற்றுக, மாயோளெனப் பின்னுங் கூறுகின்றுணர்தலின்.

பி - மி. 5. வாயிதழ். 10. மண்ணுநள். அல்லகுறிப்பட்டழிந்த.

63. பாலை

* கேளாய் வாழியோ மகளிநின் றோழி
திருநகர் வரைப்பகம் புலம்ப வவணெடு
பெருமலை யிறந்தது நோவே னெவல்
கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதா ளூதைத்த பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விரிந்துவெயி லெறிப்பக்
கருந்தார் மிடற்ற செப்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையு மாங்க
ணஞ்சுவரத் தகுந கான நீந்திக்
கன்றுகா ணுதுபுன் கண்ண செவிசாய்த்து
மன்றுநிறை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த கடுங்கான் மறவர்
கல்லென் சீறூ ரெல்லியி னரைஇ
முதுவாய்ப் பெண்டின் செதுகாற் குரம்பை
மடமயி ரன்னவென் னடைமெலி பேதை

* இப் பாட்டு அச்சங் கூறிற்று என்றுர். நச்சினர்க்கினியர். (தொல். பொருள். 36.)

தோட்டுணை யாகத் துயிற்றித் துஞ்சாள்
வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கட்
சேக்கோ ளறையுந் தண்ணுமை
கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே.

என்பது : தலைமகள் புணர்ந்துடன் செல்லச் செவிலி தன் மகளுக்குச் சொல்லியது.

— கருவூர்க் கண்ணம் புல்லனார்.

வரி

I. ஓ - அசை; ஐகாரம் அசை; மகளே 3. போகின்றதற்கு நோகின்றேனல்லேன், 19. கலங்கின நெஞ்சை 3. நோகின்றேன் என்க. 5. பூழியிடத்தே 8. குடையும்; 6. விடிந்தகாலத்து வெயிலெறிக்கக்குள்ளக்* குடையு மென்க. 8. குடையாகின்ற அவ்விடத்தை யுடைய 9. கானநீங்கி 13. இரவின்கண் அசைந்து.

II. மூன்றுநிறைதலோடு பைதல் கூரும்படி 12. கறவைக் கணம் கொண்டுபோந்த மறவர். அம் மறவர் 13. சீறூரிலே இரவு தங்கிச் 14. சோர்ந்த காலையுடைய குடிலிடத்து 16. அவன் தன் தோளே துணையாக வுறக்க வுறங்காது. 17 - 18. கடுங்கண் தண்ணுமை, சேக் கொள்ளும்பொழுது அறையும் பறை.

பி - ம். 5. புலங்கெழு. 11. கூடி 12. கடுங்கண். 14. முதுகாற்.

64. முல்லை

களையு மிடனுற் பாக வளையணி
யுலகுகடப் பன்ன புள்ளியற் கலிமா
வகையமை வன்பின் வள்புறீ தெரியத்
தளவுப்பிணி யவிழ்ந்த தண்பதப் பெருவழி
ன்யதிலங் ககலிலை நெய்கனி நோன்காழ்
வென்வே லிளையர் வீங்குபரி முடுகச்
செலவுநா மயர்ந்தன மாயிற் பெயல
கடுநீர் வரித்த செந்நில மருங்கின்
விடுநெறி யிர்மணல் வாரணஞ் சிதரட்

*'குள்ளக்குளிரக்குடைந்து நீராடாதே'என்பது திருப்பாவை 13.

பாம்புறை புற்றத் தீர்ம்புறங் குத்தி
மண்ணுடைக் கோட்ட வண்ணல் லேன
றுடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ
யூர்வயிற் பெயரும் பொழுதிற் சேர்புடன்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு
மாபூண் டெண்மணி யைதியம் பின்னிசை
புலம்புகொண் மாலை கேட்டொற்றுங்
கலங்கின ளுறைவோள் கையறு நிலையே.

என்பது: விளைமுற்றிமீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

— ஆர்க்காடுகிழார்மகனார் வேள்ளைக் கண்ணத்தனார்.

வரி

3. வள்பு-வாய்க்கயிறு. தெரிய-ஆராய; போகின்ற கடுமையால் உறுமென நவறுத புரவி.....தெரிந்திட என்றவாறு.

4. தண்பதம் - செவ்வி. 5. நெய் - எண்ணெய்; காழ் - வேற்றண்டு. 6. இளையர் தாளான்.....

9. நெறி - வழி; வாரணம் - காட்டுக்கோழி; சிதர - கிளர. 14. நிறை - நிறையாக. 15. ஐதியம்புதல் - நடக்க நடக்க விட்டிசைக்கு மோசை. 3. தெரிய நீ 7. நாஞ் செலவை விரும்பினேமாயின் 17. அவள் கையறுநிலை 1. களையுமிடமிது என்க. 9. வாரணஞ் சிதரச் செய்தே 15. ஆ 13. ஊர்வயிற் பெயரும் பொழுது என்க.

3. வகையமை வனப்பின்வள்பு - செலுத்துங் கூறுபாடமைந்த வனப்பினை யுடையவர்.

பி-ம். 3. தெரிந்த. 4. பெருவளி. 13. சேர்வு. 15. ஐதியங்கின்.

65. பாலை

உன்னங் கொள்கையொ டுளங்கரந் துறையு
மன்னை சொல்லு முய்க மென்னதூஉ
மீரஞ் சேரா வியல்பிற் பொய்ம்மொழிச்

*சேரியம் பெண்டிர் கௌவையு மொழிக
நாடுகண் ணகற்றிய வுதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
வுவவினி வாழி தோழி யவரே
பொம்ம லோதி நம்மொ டொராங்குச்
செலவயர்ந் தனரா லின்றே மலைதொறு
மாக்கழை பிசைந்த கால்வாய் கூரெரி
மீன்கொள் பரதவர் கொடுந்திமி னளிசுடர்
வான்றேய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாழுவுயர் நனந்தலை
†யுயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்த
லாறுகடி கொள்ளு மருஞ்சுரம் பணைத்தோ
ணுறைங் கூந்தற் கொம்மை வரிமுலை
நிரையித ழுண்கண் மகளிர்க்
கரிய வாலென வழுங்கிய செலவே. ‡

என்பது : வேறுபட்ட தலைமகட்குத் தலைமகன் உடன்போக்கு வலித்தமை தோழி சொல்லியது.

— மாமூலனார்.

வரி

1-2. உன்னங் கொள்கையொடு - நம்மனக்கருத்தை யறிந்த அறிவோடே, தானறிந்தவற்றைக் காரந்து சொல்

---

* இது "'பாராட்டெடுத்தல், மடந்தப வுரைத்தல்' என்புழி அடங்கும் என்பது" என்றும், "'பாடிச்சென்ற ..... வாழி' என்பது உவகை யுவமம்' என்றும் கூறுவர் போரா. நச்சினார்க்கினியர், † "யானையின் முதுகின்மேற் சென்றன்ன என விரிக்க" என்றும், (தொல். எழுத்து. 299.) ‡ "இதனுள் அன்னை சொல்லும் பெண்டிர் கௌவையும் தலைவரும் விழுமம் என்று தலைவிக்குத் தோழி கூறினாள்" என்றும், "அம்பலும் அலரும் அஞ்சிப் போக்குடன்பட்டது" என்றும் கூறுவர். "உடன்போக்கு நயப்பித்தது" என்பர் இளம்பூரணவடிகள். (தொல். பொருள். 267., 294., 39., 225., 42.)

. லாதே செலுத்துகிற அன்னை ; அறிந்தவை, இக்கூட்டங்காரணமாக அறிந்தவை.

1-2. அன்னை மனத்திலே சிலவற்றை நினைந்து அது தோன்றுமற் சில சொல்லுகின்றவற்றையும் தப்புதும். 5. நாடு கண்ணகற்றுதல் - பிறர் நாடுகொண்டு தனதாக்குதல். 9. அவர் நம்மொடு செலவை விரும்பினர். 7. இனி உவவாய் என்றுள். 10. மால்-மயக்கம்; காற்று வாய்த்த மிக்க எரி. எரி தோன்றும் 17. அருஞ் சுரம் 19. மகளிர்க்கு 20. அரியவெனச் சொல்லி அழுங்கின செலவு 8. நம்முடன் 9. செல்ல இன்று விரும்பினர் எனக் கூட்டுக.

16. காட்டை மேம்படச் சொல்லுதற்குக் காரணமான யானையின் 17. வழியைக் காவல்கொள்ளுஞ் சுரம். 19. மகளிர் என்றுள் பொதுவகையாக.

பி - ம். 14. உறுவல்யானை. வெருவச்சென்.

66. மருதம்

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செறுநரும் விழையுள் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி
*நிரைதார் மார்ப னெருங லொருத்தியொடு
வதுவை யயர்தல் வேண்டிப் புதுவதி
னியன்ற வணிய னித்தெரு விறப்போன்
மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவவென் றிழிந்தனன் முருங்காது

---

* இதனைத் தலைவிபுலவிக்கட் புகழ்ந்ததற்கு உதாரணமாகக் காட்டுவர் நச். (தொல். பொருள். 228.)

மணிபுரை செவ்வாய் மார்பகஞ் சிவணப்
புல்லிப் பெருமை செல்லினி யகத்தெனக்
கொடுப்போற் கொல்லான் கலுழ்தலிற் றடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனெடு
தானே புகுதந் தோனே யானது
படுத்தனை னுகுத னுணி யிடித்திவற்
கலக்கினன் போலுமிக் கொடியோ னெனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்
டிமிழ்கண் முழவி னின்சீ ரவர்மனைப்
பயிர்வன போலவங் திசைப்பவுந் தவிரான்
* கழங்கா டாயத் தன்றுநம் மருளிய
பழங்க ணைட்டமு நலிய
வழுங்கின னல்லனை வயர்ந்ததன் மனனே.

என்பது : பரத்தையிற் பிரிந்த தலைமகற்கு வாயிலாய்ப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது. †

— செல்வூர்க் கோசிகன் கண்ணனூர்

வரி

2. எய்துப - சேர்வர். 3. காட்சி - அழகு. 6. வாய்த்தனம் - மெய்த்தனம், உண்மையாகக் கண்டனம். 9. தெருவைக் கடப்போன் 10. கறங்குகையாலே அவ்வோசையைக் கேட்டுக் கடையைக் கழிந்து. 13. தாங்கு - பிடித்துநில்; இழிந்தனன் - இழிந்து; தாங்காது - தாமதியாது. 14. மணி - பவளம். 16. கொடுப்போன் - தலைவன். 16. தடுத்த 17. மகனெ டென்க. 17. நிதிக்கிழவன் - அளகேசுவரன். 16 - 18. தடுத்தமா நிதிக்கிழவனும் போலுமென்று கண்டார் சொல்லும்

---

* 'மெய்யே என்றல்' "கழங்கா.....மனனே" என்பது. "தானே தன்மகனை வாயில் கொண்டு புக்காளையினும், அதனைப் பழங்கணைட்டமும் நலிதரப் பொய்யே, புகுந்தானென்று மெய்யாகத் தணிந்து கோடலால் அப் பெயர்த்தாயிற்று" என்பர் பேரா. இனி நச். † "'உரிய' என்றதனால் தோழி வாயிலாகச் சென்றுழித் தலைவி வெளிப்படக் கூறுதலுங் கொள்க. அஃது 'இம்மையுலகு' என்னும் அகப்பாட்டினுட் காண்க" என்பர். (தொல். பொருள். 241. 270.)

படி மகனெடு புகுந்தா னென்றுமாம். மகனேயன்றி இவ்வாறுஞ் சொல்ல நின்றமையால் எச்சவும்மை. 19. செல்வித்தே மாதற்கு ஈணி. 21. தலைக்தொண்டு - பிள்ளையைத் தன்னிடத்தே எடுத்துக்கொண்டு. 22. சீர் - ஓசை. 23. தவிரான் - அழுத..... ...தவிராஞய். 24. அன்று - இயற்கைப் புணர்ச்சிக் காலத்தொரு நாள். 26. தான் விரும்பின மணத்தைத் தவிர்ந்தன னென்க. 9 - 10. மாண்டொழின்மா என்க.

பி - ம். 1. யுலகமுமி 5. பயமொ. செயலூர்க்கோசங்கண்ணனூர்

67. பாலை

*யானெவன் செய்கோ தோழி பொறிவரி
வானம் வாழ்த்தி பாடவு மருளா
துறைதுறந் தெழிலி நீங்கலிற் பறைபுடன்
மரம்புல் லென்ற முரம்புயர் நனந்தலை
யரம்போழ் நுதிய வாளி யம்பி
னிரம்பா நோக்கி னிரையங் கொண்மார்
நெல்லி நீளிடை யெல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயருங் பீடு மெழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலுன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
மொழிபெயர் தேஎந் தருமார் மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோ னிரைகண் டன்ன
வுவலிடு பதுக்கை யாளுகு பறந்தலை
யுருவில் பேய யூராத் தேரொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுட
னிலங்குபர லிமைக்கு மென்பநந்
நலந்தறந் தூறூர் சென்ற வாறே.

என்பது : பொருள்வயிற் பிரிந்தவழி வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

— நோய்பாடியார்.

---

* "இது மண்டிலத் தருமை தலைவன் கூறக் கேட்ட தோழி கூறியது" என்பர். நச். (தொல். பொருள். 44.)

வரி

2. வானம் வாழ்த்தி - வானம்பாடிப் புள். 3. இலை பறந்து. 5. போழ்தல் - அராவுதல்; வாளியம்பு - எயிற்றம்பு.

6. நிரம்பா நோக்கு - ஆட்குறித்துப் பார்க்கும் பொழுது இடுக்கிப் பார்க்கும் பார்வை; நிரயங்கொண்மார் - நரகம் புகுவார்; கொள்ளவேண்டி என்றுமாம்.

4. நனந்தலை யுடைய 7. நீளிடை எல்லியிடத்து மண்டி 8. அமர்கடந்த மறவர். 9-10. எழுதி நடுதல், வேலை நட்டு அதன் கண்ணே பலகை சார்த்துதல் மரபு. வேற்று முனையிடத்து வேலொன்று பலகையைப் போர்க்கு நடுகல் என்க. 11. கடுக்குந் 12. தேம்.

11. வேற்றுமுனை கடந்தென்னும் பாடத்திற்கு நடுகலிடத் தவன் பிடித்த கருவிகளாய் ஊன்றியும் சார்த்தியும் வைக்கப்பட்ட வேலையும், பலகையையுமுடைய வேற்றுமுனை என்க; அதனைக் கடந்து என்றுரைக்க.

13. கழியாற் பிணிக்கப்பட்ட கருங்கடகு; மன்னர் கடகுக் காரரை அழைத்துப் படைகாண்டல். 14. உவலிடு பதுக்கை கருகினவை கருங்கடகிற்கு உவமை. ஆளுகுதல் - ஆட்படுதல்; 15. உருவில் பேய் - பேய்த்தேர்; கடுக்கும் தேசத்தைக் கொள்ளவேண்டி மன்னர் தோற் படையைக் கண்டாலொத்த பதுக்கையென்க.

11. கடந்து 18. சென்ற ஆறு 15. தேரோடு 17. பரலி மைக்கு மென்னுநின்றார்கள், 1. யானெவன் செய் வேன் தோழி யென்று 4. காட்டை நினைந்து ஆற்றுளாயினுள்.

8. நாணுடை மறவர் - கரந்தையார்.

பி - ம். 3. உறையிறந். பறையுடன் 11. கடந்து. 12. மள்ளர் 14. அழிதருபதுக்கை. கொய்ப்பாடியார்.

68. குறிஞ்சி

அன்னைப் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்ணையத் தமன்ற கூதளங் குழைய
வின்னிசை யருவிப் பாடு மென்னதூஉங்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை

5 * யூட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை
யோங்குசினைத் தொடுத்த வூசல் பாம்பென
முழுமுத றுமிய வுருமெறிந் தன்றே
பின்னுங் கேட்டியோ வெனவுமஃ் தறியா
ளன்னையுங் கனைதுயின் மடிந்தன ளதன்றலை
10 மன்னுயிர் மடிந்தன்றுற் பொழுதே காதலர்
வருவ ராயிற் பருவ மிதுவெனச்
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயிற்
படர்ந்த வுள்ளம் பழுதன் றுக
வந்தனர் வாழி தோழி யந்தரத்
15 திமிழ்பெய றலைஇய வினப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளந் தலைத்தலை சிறப்ப
† கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் தழுவு
20 மகலவாய்ப் பாந்தட் படாஅர்ப
பகலு மஞ்சும் பனிக்கடுஞ் சுரனே.

என்பது: தலைமகன் இரவுக்குறிவந்தமையறிந்த தோழி தலை மகட்குச் சொல்லியது. ‡

— ஊட்டியார்.

வரி

3. அருவிப்பாடு மென்னதூஉம் என்றது, இவ்வோசையு மேதேனுங் கேட்டாயோ என்றவாறு. 4. பின்னையும்

---

* “‘ஊட்டி ... செயலை’ என்புழி இன்னதனை யென்று தெரித்து மொழியாமையின் வழுவாம்பிற வெனின் — உவமை யென்னு மலங்காரமாயினன்றே இன்ன தொன்றனையெனல் வேண்டுவது; செயலையந் தளிரினது செய்யாத நிறத்தைச் செய்ததுபோலக் கூறுங் கருத்தினனுதலிற் பிறிதோ ரலங்காரமாம்” என்பர் சேனாவரையர். “ஊட்டாததனை ஊட்டியது போலக் கூறலின் வேறோர் உவமையிலக்கணமாம்” என்பர் நச். (தொல். சொல். 56.) † இது ‘யானையுங் குதிரையுங்.....ரிய’ என்றதனால் அமைந்தது. (தொல். பொருள். 571.) ‡ “இதுதாயது துயிலுணர்ந்து தலைவன் வந்தமை தோழி தலைவிக்குக் கூறிக் குறிவயிற்சென்றது” என்றார் நச். (தொல். பொருள். 114.)

வேண்டென்றுள், மறித்தொன்று சொல்லுவாளாக. 5. ஊட்டுதல்-அரக்கூட்டுதல். 7. முதல்-செயலேமுதல். 11. பருவமிது-பொழுதிது. 12. சுடர்ந்திலங்குதல்-விட்டு விளங்குதல். 15. கொண்மூப்பெய்த 16. தவிர்வில் வெள்ளம். தலைத்தலை சிறப்ப - மேன்மேலும் மிக. 17. ஒய்யும் - இழுக்கிற. நீத்தந் 19. தழவும். 18. பிடிப்பூசல் பலவுடன் யானைவிளியு முண்டாகத் தழவு மென்க. 20. பாந்தட்படார் - பாம்புச்செடி. 21. சுரத்தை 14. வந்தனரெனக் கூட்டுக.

[illegible]யானைகளுங் கன்று காரணமாகப் பிடி வருந்திய பின்பு எடுக்க முயன்றுற்போல, அவரும் அலராலும் வழிய தருமையாலும் நாம் நலனழிந்த பின்பு வரைய முயலுமதல்லது முன்பு முயலாரென்பது கருத்து.

பி - ம். 2. தண்கயத்.

69. பாலை

ஆய்நலந் தொலைந்த மேனியு மாமலர்த்
தகைவனப் பிழந்த கண்ணும் வகையில
வண்ணம் வாடிய வரியு நோக்கி
யாழ லான்றிசி னீயே யுரிதினி
5 னீத லின்பம் வெஃகி மேவரச்
செய்பொருட் டிறவ ராகிப் புல்லிலைப்
பராரை நெல்லி யம்புளித் திரள்காய்
கான மடமரைக் கணநிரை கவரும்
வேனி லத்த மென்ஞ தேமுற்று
10 வின்பொரு நெடுவரை யியறேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
வறையிறந் தகன்றன ராயினு மெனையதூஉ
நீடலர் வாழி தோழி யாடியன்
மடமயி லொழித்த பீலி வார்ந்துதஞ்
15 சிலைமாண் வல்விற் சுற்றிப் பலமா
ணம்புடைக் கைய ரரண்பல நூறி
நன்கலந் தருூஉம் வயவர் பெருமகன்
சுடர்ம்ணிப் பெரும்பூ ணஞ்அய் கானத்துத்

தலைநா ளலரி நாறுநின்
னலர்முலை யாகத் தின்றுயின் மறந்தே.

என்பது : பொருள்வயிற்பிரிந்து நீட்டித்தான் தலைமகனெனைக் கவன்ற தலைமகட்கு வருவரென்பதுபடச் சொல்லித் தோழி யாற்றுவித்தது.

— உமட்டூர்கிழார்மகனார் பரங்கோற்றனார்.

வரி

2. வகையிலவாய் 3. அழகு வாடின தித்தலை. 4. உரித்தாக 5. ஈதலான் வரும் இன்பத்தை விரும்பிச் 6. செய்கிற பொருட் கூற்றராய். 9. எழுற்று - மயக்கமுற்று.

10. நெடுவரை - பெருமலை ; 14. வார்ந்து - உரித்து ; 15. சிலை - ஓசை; ஒரு மரமுமாம். 6. செய்பொருட் டிற வராய் அத்தமென்று பாராது மயங்கி, 12. அறை யிறந் தகன்றூராயினும் சிறிதும் 13. நீடலர் என்க. 16. கையராய்ப் பகைவர் அரண்களைப் பொடியாக்கி.

பி-ம். 10. நெடுங்குடை. 18. சுடர்மலி. உரூஉடூர்கிழார்மகனார் பரங்கொற்றனார்.

70. நெய்தல்

கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென
விரும்புலாக் கமழுஞ் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கை வல்வலைப் பயம்பா ராட்டிக்
கொழுங்கை யயிலை பகுக்குந் துறைவ
னம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
யலர்வாய்ப் பெண்டி ரம்ப றாற்றப்
பலருமாங் கறிந்தனர் மன்னே யினியே
வதுவை கூடிய பின்றைப் புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்குங்
கானலம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கா னெய்தல்
விழுவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை

15 வெல்போ ரிராம னருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
யொலியவிந் தன்றிவ் வழுங்க லூரே.

என்பது : தலைமகன் வரைவுமலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

— மதுரைத் தமிழ்க்கூத்தனர் கடுவன்மள்ளனர்.

வரி

3. வலையின் பயம் பின்பு கொண்டாடி; பாராட்டி 4. அயிலை யென்னும் மீனைக் கூறிடும் துறைவன் 5. கேண்மை யைப் 7. பலர் அறிந்தார். உம்மை - அசைநிலை; ஆங்கு - அவ்விடத்து; மன் - கழிவு.

9. வரிக்கும் - சித்திரமெழுதினுற்போல உதிர்த்து அழகு செய்யும். 10. கழனி 11. தழைத்த நெய்தல். 13. கவு ரியர் - பாண்டியர். 13. கோடி - திருவணைக்கரை; 15. மறை - அவ்விடத்துத் தாமும் பரிகரமும் விசாரிக் கப்புக்கமறை. மறை சொல்லுதல் காரணமாக, அவி த்தல் - அவ் 16. வாலிற் புட்கள்கத்தாமல் அவித்தல். 6. அலர் முன்பு பலரறிந்தது; அவன் 8. வரைய வரு கின்றபொழுது இப்படியே 17. அவிந்ததென்றாள்.

8-9. புதுவதாக வரிக்கும்; 12-13. தழையணிக்குக் கூட்டும் கோடி.

1-4 பரதவர் தம் முயற்சியானே வேட்டை வாய்த்ததாகிலும் குறுங்கண் வலையைப் பாராட்டி அம்முயற்சியாலுண்டான அயி லையைக் கடலினின்றும் நீக்கி, எல்லார்க்கும் பகுத்துக்கொடுத்து மகிழ்வித்தாற்போல, அவரும் தம்முடைய முயற்சியானே வதுவை கூடிற்றாயினும் அதற்குத் துணையாக நின்ற என்னைக் கொண்டாடி, நின்னைப் பெரிய இச்சுற்றத்தினின்றுங் கொண்டு போய்த் தம்மூரின்கண்ணே நின்னைக்கொண்டு விருந்து புறந் தந்து தம்மூரையெல்லாம் மகிழ்விப்பர் என்றவாறு.

1ற்2நெய்தற்பூவானது, ஞாழலும் புன்னையுங் கரையிலே நின்று தாதை யுதிர்த்துப் புறஞ்சூழ, நீரிடத்துத் தன்னை விடாதே அலைகள் சூழ நடுவேநின்று செருக்கி வளர்ந்து பின்னை விழவணி மகளிர் அல்குலுக்குத் தழையாய்ப் பயன்பட்டாற்போல, இரு முதுகுரவர் புறங்காப்ப லுயவெள்ளத்தார் மெய்யை விடாதே

சூழ்ந்து புறங்காப்ப, இப்படிச் செல்வத்தால் வளர்ந்த நீயும் நம் பெருமானுடைய இல்லறமாகியபிரிவிற்குத் துணையாகப்போகா நின்றாயன்றே வென்று வியந்து கூறியவாறு கண்டு கொள்க.

பி - ம். 13. கவிரியர்.

71. பாலை

நிறைந்தோர்த் தேரு நெஞ்சமொடு குறைந்தோர்
பயனின் மையிற் பற்றுவிட் டொளூஉ
நயனின் மாக்கள் போல வண்டினஞ்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர
மையின் மானின மருளப் பையென
வெந்தாறு பொன்னி னந்தி பூப்ப
வையறி வகற்றுங் கையறு படரோ
டகலிரு வான மம்மஞ் சீனப்
பகலாற்றுப் படுத்த பழங்கண் மாலை
காதலர்ப் பிரிந்த புலம்பி னேதக
வாரஞ ருறுந ரருநிறஞ் சுட்டிக்
கூரெஃ கெறிஞரி னலைத்த லானு
தெள்ளற வியற்றிய நிழல்காண் மண்டிலத்
துள்ளூ தாவியிற் பைப்பய நுணுகி
மதுகை மாய்தல் வேண்டும் பெரிதழிந்
திதுகொல் வாழி தோழி யென்னுயிர்
விலங்குவெங் கடுவளி யெடுப்பத்
துளங்குமரப் புள்ளிற் றுறக்கும் பொழுதே. *

என்பது: பொருள் வயிற் பிரிந்தவிடத்து ஆற்றுளாய தலை மகட்குத் தோழி சொல்லியது.

— அந்தியிளங்கீரனார். †

வரி

1. நிறைந்தோர் - செல்வமுடையோர். 6. அந்தி - செக்கர்; ஒரு பூவுமாம். 7. வியக்கத்தக்க அறிவைப் போக்கு

---

* இப்பாட்டினை, "வேட்கை யொருதலை....." என்னுஞ் சூத்திரத்தினுள் சாக்காட்டிற்கு உதாரணமாகக் கட்டுவர் நச். (தொல். பொருள். 100.). † அந்திலினங்கீரனென்பதும் பாடம்.

கின்ற செயலறவைச் செய்யும் படர்; கூரிய அறிவென் றுமாம். 8. வானம் அம்மஞ்சின வென்றது, அக்காலத் துப் பல நிறத்தையுடைய மேகத்தைத் தரும் வானம் என்றவாறு. 7 - 8. பிரிந்திருப்பார்க்கு நோவையும் மேகத்தையுந்தர என்றபடி.

10. காதலரைப் பிரிந்த புலம்பான் நோகச் செய்தே 9. மாலை 12. யலைத்தலமையாதென முற்றுவிக்க. 11. சுட்டி - கருதி. 13. மண்டிலம் - கண்ணுடி, அதில் 14. ஆவி முன்பு பசந்து பின்பு சுருங்கினாற்போலக் காணக் காணச் சுருங்கி 15. என் வலிதான் மாய்தல் வேண்டி யிராநின்றது. 17. விலங்குவளி - சூறாவளி; எடுப்ப - எழுப்ப; 16. உயிர் 18. புட்போலப் போம்பொழுது இதுவோ தோழி என்க.

72. குறிஞ்சி

இருள்கிழிப் பதுபோன் மின்னி வானந்
துளிதலைக் கொண்ட நளிபெய னடுநாள்
மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டும் பெருங்கை யேற்றை
யிரும்புசெய் கொல்லெனத் தோன்று மாங்க
ணுறே யருமர பினவே யாறே
சுட்டுநர்ப் பனிக்குஞ் சூருடை முதலிய
கழைமாய் நீத்தங் கல்பொரு திரங்க
வஞ்சுவந் தமிய மென்னுத மஞ்சுசுமந்
தாடுகழை நரலு மணங்துடைக் கவாஅ
னீருயிர்ப் பினவின் வயவுப்பசி களைஇய
விருங்களி றட்ட பெருஞ்சின வழுவை
நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த
மேய்மணி விளக்கிற் புலர வீர்க்கும்
வாணடந் தன்ன வழக்கருங் கவலை
யுள்ளுந ருட்குங் கல்லடர்ச் சிறுநெறி

* யருள்புரி நெஞ்சமொ டெம்குதுணை யாக
வந்தோன் கொடியனு மல்லன் றந்த
20 நீதவ றுடையையு மல்லே நின்வயி †
னனை வரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே.

என்பது : தலைமகன் இரவுக்குறிக்கண் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.

— எருமைவெளியனார்மகனார் கடலனார்.

வரி

1-2. வானம் தளியைத் தன்னிடத்தே கொண்ட. 3. புற்றத்தை; 4. சுடர - மின்மினி ஒளிவிட; வாங்கி - இடந்து; 6. தோன்றுமவ்விடத்து. 7. போதற்கரிய தன்மைய; ஆறு. 8. சூர் - பயம்; 9. இரங்க - ஒலிப்ப; இவ்வளவும் வழியருமை சொல்லிற்று. இனித் தலைவன் கருத்தைக் கொண்டுகூறுகின்றது.

10. தமியமாதலால் அஞ்சுவ மென்னுது; 12. ஈருயிர்ப் பிணவு - சூற்பிணவு; வயவுப்பசி - வேட்கைப்பசி. 15. மேய்மணி-மேய்தல் காரணமாக உமிழ்ந்த மணி. விளக்கின், அதுவே விளக்காக. 16. கவலை - அருவழி; 17. கல்லடர்ந்து கிடக்கிற இட்டியவழி; வழியை இரண்டு கூறிட்டாள். 18. அருள் - நம்மேலருள். 19-20. தந்த நீ - கூட்டின நீ; 21. தோழி ஆற்றுளாம்படர்.

---

* தோழிகூட்டவே கூடுகின்றேன் என்பது அறிந்தே தலைமகள் கூடும் என்பதற்கு இது முதலாக ஐந்தடியும் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன. (இறை. களவு. 13.) † 'தன்னை அழிதல்' என்னுந் துறைக்கு இது முதலாக மூன்றடியினையும் உதாரணமாகக் காட்டி, "அவன் வரவினை உவவாது துன்பங்கூர்தல் வழுவாயினும், அதுவும் அவன்கண் அன்பாதலின் அமைத்தார்" என்பர் பேராசிரியர். இனி நச்சினார்க்கினியர் இப்பாட்டினை 'அவனளி சிறப்பினும்' என்ற துறைக்கு உதாரணமாகக் கொண்டு, "'வந்தோன்' என்பது அவனளிசிறத்தல்; 'தவறுடையேன்' என்பது தன்வயின் உரிமை, 'கொடியனு மல்லன்' என்பது அவன்வயிற் பரத்தமை" என்பர். (தொல். பொருள். 210., 111.)

9 கல் பொருதிரங்க என்பதனை 8 முதலிய வெண்ணும் முற்று வினைக்குறிப்பொடு முடிக்க.

புலி துணைபுறந்தருதற்குப் பிறவற்றைத் தீங்குசெய்யும் பாம்பும் அதற்குத் துணையாயினுற் போல, நீயுங் குடியோம்பற் செய்தி காரணமாக வரைவொடுவரிற் கடுஞ்சொற் சொல்லுகிற பேரும் இன்சொற்சொல்லி வரைவுடம்படுவர் என்பதாம்.

பி - மீ. 6. தோன்றியாங்கண். 15. புலாலெயீர். மோகமானக் கடலார்.

73. பாலை

* பின்னெடு முடித்த மண்ணு முச்சி
நெய்கனி வீழ்குழ லகப்படத் தைஇ
வெருகிரு ணோக்கி யன்ன கதிர்விடு
பொருகாழ் முத்த மிடைமுலை விளங்க
5 வணங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
நின்னெய்த் தலையையு மல்லை தெறுவர
வென்னு குவள்கொ லளிய டானென
வென்னழி பிரங்கு நின்னெடி யானு
மாறன் றென்னு வேறல் காட்சி
10 யிருவே ணம்படர் தீர வருவது
காணிய வம்மோ காதலந் தோழி
கொடிபிணங் கரில விருள்கொ ணுதல
மடிபதம் பார்க்கும் வயமான் றுப்பி
னெனலஞ் சிறுதினைச் சேணோன் கையதைப்
15 பிடிக்கை யமைந்த கனல்வாய்க் கொள்ளி
விடுபொறிச் சுடரின் மின்னியவர்
சென்ற தேஎத்து நின்றதான் மழையே.

என்பது: தலைமகன் பொருள்வயிற் பிரிகின்றுன் குறித்த பருவ வரவு கண்டு அழிந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.

— எருமைவெளியனுர்.

---

* "'பின்னெடு முடித்த மண்ணு முச்சி' என்னும் பாட்டி னுள் 'அணங்குறு கற்பொடு.....டியானும்' என்றவழித் தலை

வரி

1. பின் - பின்னுதல்; மண்ணுமை - கை செய்யாமை; 2 நெய் - வாசநெய்; வீழ்குழல் - இருகுழல்; அகப்படக் கட்டி 3-4 வெருகு இருளிலே நோக்கிஞற்போல ஒளிவிட்ட முத்தினொரு வடம் கதிர்விட்டு விளங்க என்க. 5 அணங்கு-அருந்ததி; கற்பொடு - கற்பினுல். 6 நின்னுடைய நோயிடத்தையு மல்லே; தெறுவர - அச்சம் வர; 9 ஆறன்றென்னு வேறல் காட்சி - வழியல்லவென்று சொல்லாத வேறற்ற வறிவு; என்றது, ஒன்றை அவள் நினைந்தால் தோழிக்கும் அதுவே அறிவாம். 8 நின்னெடு யானும் 11 காணவா; 10 இருவேம் படர்தீரக். 11 காணவா; ஓ - அசை.

12 அரில் - தூறு; நாகம் - யானை; 13 வயமான் - ஸிம்ஹம். 13-14 அதன் வலியையுடைய சேணுன் இதணின் மேலிருக்கிறவன். 12-13 யானைச் சாய்வு பார்க்கிற 14 சேணுன்.

15. பிடி என்று பிடிக்குமிடமாக்கி, அது கையிடத் தமைந்த கொள்ளி என்க. பிடிக்கைக்கு இடம்வைத்து அதல்லாத விடம் சுட்டுக் கொள்ளியாக்குதல் இயல்பு.

15-16. கொள்ளிதான் விடுகிற சுடர்போல மின்னி; பொறி - பொறியும்போது பறக்கும் பொறி.

17. நின்றது மழை அதனைக் 11 காணியவா எனக் கூட்டுக. 2 தைஇ 5 சாய் 8 என்னழிவுக்கு இரங்கு மென்க. 13 தப்பிற் 14 சேணுன் என்க.

பி - ம். 2. நெடுவீழகப்பட. 6. தெய்ய.

74. முல்லை

வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து
போர்வ லினையர் தாள்வலம் வாழ்த்தத்
தண்பெயல் பொழிந்த பைதறு காலைக்

மகன் பிரிவிற்குத் தோழி படர்கூர்ந்தாளெனச் சொல்லினமையின் அது பிறன்கட்டோன்றிய இழவுபற்றி அவலம் பிறந்தாம்" என்பர் பேரா. (தொல். பொருள். 253.)

குருதி யுருவி னெண்செம் மூதாய்
பெருவழி மருங்கிற் சிறுபல வரிப்பப்
பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ
வெண்கள ரரிமண னன்பல தாஅய்
வண்டுபோ தவிழ்க்குந் தண்கமழ் புறவிற்
கருங்கோட் டிரலை காமர் மடப்பிணை
மருண்டமா லேக்கங் காண்டொறு நின்னினைந்து
திண்டேர் வலவ கடவெனக் கடைஇ
யின்றே வருவ ரான்றிகம் பனியென
வன்புறை யின்சொ னன்பல பயிற்று
நின்வலித் தமைகுவன் மன்னே வல்கற்
புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்கோற்
* கல்லாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் ணிழிந்த கிழத்தி வற்புறுத் துந் தோழிக்குச் சொல்லியது.

— மதுரைக் கவுணியன் பூதத்தனார்.

வரி

1. வினைவலம் படுத்தல் - வினையை வெற்றி படுத்தல்; அந்த வென்றியொடு. பைது.....5 சிறுபல வரிப்ப - பல வரிப்படச் சிறியவாகிய பலவும் பரக்க. 6 மெத்தென்ற செவ்விப் புதிய பூ, 7 தாய் - தாவ, தாவச் செய்தே. 9-10 பிணை மானின் மருண்ட நோக்கம். 11 கடவென்று முடுக்கி 12 வருவர். ஆன்றிகம்பனி-நடுக்கத்தை அமைவேம். 14 நீ சொன்னபடியை நிச் சயித்திருப்பேன். மன் - அது மாட்டுகிலேன்.

2. தாள் வலம் வாழ்த்த 12 இன்றே வருவர் எனக் கூட்டுக 17 வருத்தாக்கால் 12 அமைவேம்.

பி - மி. மதுரைக் கவுணியன் மூத்தனார்.

---

* "'கல்லா.....காலே' என்புழி இன்பத்தை வெறுத்தன ளாயினும் புணர்ச்சிக் கேதுவாமென்பது கருத்து" என்பர். பேரா. (தொல். பொருள். 270.)

75. பாலை

அருளன் றுக வாள்வினை யாடவர்
பொருளென வலித்த பொருளல் காட்சியின்
மைந்துமலி யுள்ளமொடு துஞ்சல் செல்லா
தெரிசினந் தவழ்ந்த விருங்கடற் றடைமுதற்
கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை
யடுபுலி முன்பிற் றொடுகழன் மறவர்
தொன்றியற் சிறுகுடி மன்றுநிழற் படுக்கு
மண்ண னெடுவரை யாமறப் புலர்ந்த
கன்னெறிப் படர்குவ ராயி னன்னுதற்
செயிர்தீர் கொள்கைச் சின்மொழித் துவர்வா
யவிர்தொடி முன்கை யாயிழை மகளி
ராரந் தாங்கிய வலர்முலை யாகத்
தாராக் காதலொடு தாரிடைக் குழையாது
சென்றுபடு விறற்கவி னுள்ளி யென்று
மிரங்குந ரல்லது பெயர்தந் தியாவருந்
தருநரு முளரோ விவ்வுலகத் தானென
மாரி யீங்கை மாத்தளி ரன்ன
வம்மா மேனி யைதமை நுசுப்பிற்
பல்காசு நிரைத்த கோடேந் தல்குன்
மெல்லியற் குறுமகள் புலந்துபல கூறி
யாஞ நோயை யாக யானே
பிரியச் சூழ்தலு முண்டோ
வரிதுபெறு சிறப்பி னின்வயி னானே.

என்பது : பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைமகட்குப் பிரியாரெனத் தோழி சொல்லியது.

வரி. — மதுரைப் போத்தனார்.

I-3. ஆடவர்கள்; *பொருளன்றுக ஆள்வினையைப் பொருள் என வலித்த பொருளல்லாத காட்சியையுடைய உள்ளம் என்க. 3 உள்ளமொடு - உள்ளத்தால், துஞ்சல் செல்லாது 9 கன்னெறிப் படர்குவராயி னென்க.

---

* பேரருள் என்றும் படிக்கலாம்.

4. எரிசினம் தவழ்ந்த - எரிகிற சினம் பரந்த; சினம் ஆகு பெயர் - நெருப்பு. 4-5 கடற்றையடைந்தவிடத்து... மரம்; கரிந்த குதிர்போலும் என்றுமாம். 7 தொன் றியற் சிறு குடி - பழையதாய் வருகிற இயல்பையுடைய குடி. 13 குழையாது - துவளாது; குழையாமலெனத் திரிக்க. 18 ஐதமை நுசுப்பு ; 14 போன வழகை. நினைந்து 15 வருந்துவதல்லது மறித்துக் கொண்டு வந்து போன அழகைத் தந்து நிறுத்துவாரும் 16, உளரோ இவ்வுலகத்தென 20 மெல்லியற்குறுமகளே நீ பல புலந்து கூறி 21 நோயை யாக நின்னிடத்து நின்று அவர் பிரிய அவரொடு யான் விசாரிப்பது உண்டோ என்க.

12. மூலை யாகத்திலே 13 தங்கள் தாரை இடையே குழை வியாதே 15 இரங்குந ரல்லது என்க.

7. நிழற் படுக்கும் 8. வரையை யுடைய 9 நெறி என்க. 9 படர்வராயின் 15 இரங்குந ரல்ல தென்க.

பி - ம். 21 வவரே. பொருள்வயிற் பிரிய வேறுபட்ட தலைமகட்குப் பிரியேனெனத் தலைமகன் சொல்லியது.

76. மருதம்

* மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத்
தண்டுறை யூரனெஞ் சேரி வந்தென
வின்கடுங் கள்ளி னஃதை களிற்றொடு
நன்கல னீயு நாண்மகி ழிருக்கை
5 யவைபுகு பொருநர் பறையி னுரத
கழறுப வென்பவவன் பெண்டி ரந்திற்
கச்சினன் கழலினன் றேந்தார் மார்பினன்

---

* இப் பாட்டினைப் 'புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணும்' என்ற துறைக்கு உதாரணமாகக் கொண்டு, "இதனுள் 'எஞ்சேரி வந்தென.....கழறுப வென்ப அவன் பெண்டிர்' என முன்னே ஞான்று புல்லுதன் மயக்குதலால் தலைவி புலந்தவாறும், அது கண்டு காமக்கிழத்தி கொண்டு கைவலிப்ப லெனப் பெருமிதம் உரைத்தவாறும் காண்க" என்பர் நச். (தொல். பொருள். 151.)

வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியற்
சுரியலம் பொருநனைக் காண்டி ரோவென
வாதி மந்தி பேதுற் றினைய
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகு
மந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே.

என்பது: தலைமகனை நயப்பித்துக்கொண்டாளென்று கழறக் கேட்ட பரத்தை தலைமகட்குப் பாங்காயினர்கேட்பச் சொல்லியது.

— பரணர்.

வரி

I. மகிழ் மிகத் தூங்க - கண்டார்க்கு மிக நாங்கள் கூத்தாட என்றவாறு. 2 அது காண வந்தாளுக. 4-5 இருக்கையை யுடைய அவை. 6 கழறுதல் - வைதல்; அந்தில் - அசை. 8 வகை யமைதியோடு பொலிந்த மாலையை யுடைய 9 மயிர்; வகை - கூறுபாடு. 9 சுரியற் பொருநன்: கூத்தாடும் ஆட்டனத்தி. காண்டிரோ-கண்டீரோ, என. 11 சிறை - அணை. 13 சூட்கொண்டு; கை வலித்தல் - என்னிடத்தே கொண்டு கையாலே பற்றிக் கோடல்.

ஆடற்றகையானுதல் பாடற் குரலானுதல் பெற்றேனென்று சொல்லுவாளாயின் இப்படிச் செய்கிறேன் என்றாள்.

பி - ம். I. முழவமொடு. 9. காணீரோ. 11. சிறைபாய்ந்.

77. பாலை

நன்னுதல் பசப்பவு மாள்வினை தரீஇயர்
தன்னருங் கானந் தன்னுத னன்றெனப்
பின்னின்று சூழ்ந்தனை யாயினன் றின்னுச்
சூழ்ந்திசின் வாழிய நெஞ்சே வெய்துற
விடியுமிழ் வான நீங்கி யாங்கணுங்
குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்
கயிறுபிணிக் குழிசி யோலை கொண்மார்

பொறிகண் டழிக்கு மாவண மாக்களி
னுயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுக ணுளர் குடர்தரீஇத் தெறுவரச்
செஞ்செவி யெருவை யஞ்சுவர வீருக்குங்
கல்லதர்க் கவலை போகிற் சீறூர்ப்
புல்லரை யித்திப் புகர்படு நீழ
லெல்வளி யலைக்கு மிருள்கூர் மாலை
வானவன் மறவன் வணங்குவிற் றடக்கை
யானை நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
பொருந்தா மன்ன ரருஞ்சமத் துயர்த்த
திருந்திலை யெஃகம் போல
வருந்துயர் தருமிவள் பனிவார் கண்ணே.

என்பது : தலைமகன் பிரியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குவித்தது.

— மருதனிளநாகனார்.

வரி.

I. தரீயர் - பெறவேண்டி 3-4 மிகவும் சூழ்ந்தாய். 5. இடிப் போடு வெய்துறும்படி மழை பெய்யாது நீங்க. 6 சுட் ஓ - இப்பாழ் பலரும் கருதிச் சொல்லப் படுதல். 7 இதனிடத்து வைத்த, குழிசி - குடம். பொறி - இலச் சினை. ஆவண மாக்களின்-பிரமாணம் வாங்குகிற மாக் களைப்போல 9-10. உயிர் வேறொருநிறத்தே போக த்தெறுவர அமர் கடந்த என்க. 10-11 எருவை பட்ட வீரர் குடரை வயிற்றினின்றும் வாங்கிப் போகடுகிற. 13. புகர்-புள்ளி. 14 எல்வளி-பெருவளி; தோற்றமும் ஆம். 15. வானவன் மறவன் - சேரன் படைத்தலைவன். மறவன் 16 பிட்டன். 16-18 பிட்டன் எடுத்த இலைத் தொழிலையுடைய வேல்.

14. மாலையிலே 19 துயர்தரும் இவள் கண்ணுதலாற் 3 பின்னின்று விசாரித்தாயாயின் கொடியவை விசாரித் தாயாவை.

பி - ம். 3. விடுத்தனை, விடுத்தி. 5. நீங்க நீங்கி. 12. கல்லதர்.

78. குறிஞ்சி

நனந்தலைக் கானத் தாளி யஞ்சி
யினந்தலைத் தருஉ மெறுழ்கிளர் முன்பின்
வரிஞிமி றூர்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றெருத்த
லிரும்பிணர்த் தடக்கையி னேமுறத் தழுவக்
கடுஞ்சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரற்
றேம்பிழி நறவின் குறவர் முன்றின்
முந்தூ ழாய்மல ருதிரக் காந்த
ணீடிதழ் நெடுந்துடுப் பொசியத் தண்ணென
வாடை தூக்கும் வருபனி யற்சிர
நம்மில் புலம்பிற் றம்மூர்த் தமிய
ரென்னு குவர்கொ லளியர் தாமென
வெம்விட் டகன்ற சின்னுட் சிறிது
முள்ளியு மறிதிரோ வோங்குமலை நாட
வுலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தா ளாம்பன் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளம ருழக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
நீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறுமிவ ணுதலே.

என்பது : களவுக்காலத்துப் பிரிந்து வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

— மதுரை நக்கீரனார்.

வரி

2. இனந்தலைத்தரும் - இனத்தைத் தன்னிடத்தே குவித்துக் கொள்ளும். 1 தலை - அசை ; அழைத்துக் கூடக்கொண்டு நோக்கும் 4 ஒருத்தல் - தலைவன். 1. ஆளியஞ்சிப் 6 பிடி நடுங்குஞ் சாரல்.

7. தேம் - இனிமை; தேனுற்பிழிந்த நறவுமாம். 8. மூங்தழ் - மூங்கில். 10. வருபனி - தோன்றுகின்ற பனி; அற்சிரம் - பனிக்காலம். 11. புலம்பின் - புலம்பால்.

16. கபிலன் சூழ என்றது, பாரியை அரசர் மூவரும் வளைத் திருப்ப, அகப்பட்டிருந்து உணவில்லாமைக் கிளிகளை வளர்த்துக் கதிர்கொண்டுவர விட்ட கதை.

18. ஆம்ப லவியுணவு.

யானை காக்கவும் பிடி நடுங்கினுற்போல நீயிரிவளைப் பாதுகாக்கவேண்டு மென்னுங் கருத்துடையரா யிருக்கவும், பிரிவிற்கு அஞ்சாதின்ற ளென்றவாறு.

பி - ம். 10. தூங்கி. 18. நெடுந்தா. 20. நாளிடூ. மதுரைக்கீரனூர்.

79. பாலை

தோட்பத னமைத்த கருங்கை யாடவர்
கனைபொறி பிறப்பு நூறி வினைப்படர்ந்து
கல்லுறுத் தியற்றிய வல்லுவர்ப் படுவிற்
பாருடை மருங்கி னூறன் மண்டிய
வன்புலந் துமியப் போகிக் கொங்கர்
படுமணி யாய நீர்க்குநிமிர்ந்து செல்லுஞ்
சேதா வெடுத்த செங்கிலக் குரூஉத்துக
ளகலிரு விசும்பி னூன்றித் தோன்று
நனந்தலை யழுவ நம்மொடு துணைப்ப
வல்லாங்கு வருது மென்னு தல்குவர
வருந்தினை வாழியென் னெஞ்சே யிருஞ்சிறை
வளைவாய்ப் பருந்தின் வான்கட் பேடை
யாடுதொறு கனையு மவ்வாய்க் கடுந்துடிக்
கொடுவி லெயினர் கோட்சுரம் படர
நெடுவிளி பயிற்று நிரம்பா நீளிடைக்
கல்பிறங் கத்தம் போகி
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்த நீயே.

என்பது: பொருள்வயிற் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

— குடவாயிற் கீரத்தனர்.

வரி

1. தோட்பதம் - தோளிலே கட்டு முடி கட்டுதல்; 2. தூறி - வெட்டி: வினைப்படர்ந்து - தொழிலிலே செலுத்தி. 3. வல்லுவர் - மிக்க உவர். படு - இணறு; 4. பார் - வன்னிலம்; மண்டிய - மண்டவேண்டி.

6. ஆயமாகிய 7 சேதா.

9. அழுவம் - காடு; துணைப்ப - துணையாக. 10. வருதும் - போவோம்; அல்குவர - இங்கே தங்குதல்வர; வந்த வளவிலே; 12. வான்கண் - வெள்ளைக்கண். 13. ஆடு தொறு கனைத்தல் - எயினர் ஆட ஒலித்தல்.

12. பேடை 14 எயினர் போர்க்குப் போகிறதறிந்து I துணையை அழைக்கு மென்க.

1. தோட்பதனமைத்த என்றூர், சோறுங்கொண்டுபோய்க் 3 கல்லுதலின். 2. பொறி - வன்னில மாதலிற் கல்லு கிறபொழுது எழுந்த பொறி.

9. அவரும் நம்மொடு துணையாக 10 வல்லபடிபோவோம் என்று அங்கு நினையாது இங்குவந்து 11 வருந்தினை எனக.

8. ஊன்றித் தோன்றும் - மிக்குத் தோன்றும் 1. தோட் பயனமைத்த என்று பாடமாக்கித் தோண்டுகை முன்பே நீரைச் சொரிந்தமைத்தல் என்றுமாம்.

பி - ம். 2. பிறப்புற. 3. கல்லறுத்.

80 நெய்தல்

கொடுந்தாண் முதலியொடு கோட்டுமீன் வழங்கு
மிருங்கழி யிட்டுச்சுர நீந்தி யிரவின்
வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப
நினக்கெவ னரியமோ யாமே யெந்தை
புணர்திரைப் பரப்பகந் துழைஇத் தந்த
பன்மீ னுணங்கற் படுபுள் ளோப்புது
முண்டகங் கலித்த முதுநீ ரடைகரை
யொண்பன் மலரக் கவட்டிலை யடும்பின்
செங்கேழ் மென்கொடி யாழி யறுப்ப
வினமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ

மின்னிலைப் பொலிந்த விளங்கின ரவிழ்பொற்
றண்ணறும் பைந்தா தறைக்கும்
புன்னையங் கானற் பகல்வந் தீமே.

என்பது : இரவுக் குறிவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

— மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார்.

வரி

2. கழியாகிய இட்டிய சுரம். 4. எவன் - எப்படி. 7. அடைக் கரை - கரையடியில் 11. ஒளியையுடைய இலையோடு பொலிந்த இணர் ; அவிழ்தல் - மலர்தல். 13. பகல் வரிற் 6. புள்ளோப்புவோம் 13 புன்னையங் கான் விலே என்றுள்.

பி - ம். 5 பாக்கந். 6. ஒப்ப. நக்கீரர்.

81. பாலை

நாளுலா வெழுந்த கோள்வ ளியை
மோங்குசினை யிருப்பைத் தீம்பழ முளர்யிற்
புல்லளைப் புற்றின் பல்கிளைச் சிதலை
யொருங்குமுயன் றெடுத்த நனைவாய் நெடுங்கோ
டிரும்பூது குருகி னிடந்திரை தேரு
மண்பக வறந்த வாங்கட் கண்பொரக்
கதிர்தெறக் கவிழ்ந்த வுலறுதலை நோன்சினை
நெறியயல் மராஅ மேறிப் புலம்புகொள
வெறிபருந் துயவு மென்றூழ் நீளிடை
வெம்மூ னருஞ்சுர நீந்திச் சிறந்த
செம்ம லுள்ளந் தாஅத்தலிற் கறுத்தோ
ரொளிறுவே லழுவங் களிறுபடக் கட்க்கு
மாவண் கடலன் விளங்கி லன்னவெம்
மையெழி லுண்கண் கலுழ...
வைய சேறிரோ வகன்றுசெய் பொருட்கே.

என்பது : பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி தலைமகள் குறிப் பறிந்து வந்து சொல்லியது. இப் பாட்டினுட் குருகு என்றது கொல்லன் உலைமூக்கு.

— ஆலம்பேரி சாத்தனார்.

வரி

1. உலா - உலாவி ; எழுந்த - எழுந்திருந்த., 3. புற்றின் 4 கோடு. 5. குருகின் - குருகுபோல, கரடி அகழ்கின்ற காலத்து உயிர்த்தல். 6. கண்பொர - வெயில் வெம்மையால் பார்க்க ஒண்ணுதபடி பொர. 9. எறிதல் - இரையைப் பாய்ந்தெடுத்தல். 12. வேலழுவம் - வேற் பரப்பு.

10. நீந்திச் 15 சேறிரோ பொருட்கெனச், செலவழுங்கு வானுவது பயன்.

பி - ம். 4 இருங்கோடு.

82. குறிஞ்சி

ஆடமைக் குயின்ற வவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசைத்
தோடமை முழவின் றுதைகுர லாகக்
5 கணைக்கலி யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
வின்பல் லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து
* மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலியா டும்மயில்

---

* "மந்தி நல்லவை.....நாடன்" என்றவழிப் பண்டு ஒருகாலுங் கண்டறியாதபடி ஆடிற்று மயில் என்றமையிற் பிற பொருட்கட் டோன்றிய புதுமையாயிற்று". என்றும், "மலர்தார்.....ளேனே" என்பது தன்கட் டோன்றிய புதுமை பற்றிய வியப்புப் பிறந்தது; என்னை? தன் கருத்து வெளிப்படாது தன் மெய்க்கட் டோன்றிய புதுமையைத் தலைவி வியந்தாள்போலத் தோழிக்கு அறத்தொடு நின்றமையின்" என்றும், "புலர்குரலேனல்.....ளேனே" என்பது "கண்டுயின் மறுத்த" லென்னும் மெய்ப்பாட்டிற்கு உதாரணமாகுமென்றும் கூறுவர் பேராசிரியர். நச்சினார்க்கினியர், "அவனை ஆயத்தார் பலரும் கண்டாரென வந்தோன் முட்டியவாறும் அவருள் நெகிழ்தோளென் யானே எனத் தானே கூறியவாறும் காண்க" என்பர். (தொல். பொருள். 255, 270, 112.)

நனவுப்புகு விறலியிற் றேன்று நாட
னுருவவல் விற்பற்றி யம்பு தெரிந்து
செருச்செய் யானை சென்னெறி விலக்கி
புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றேற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோரியா னுகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணெடு நெகிழ்தோ ளேனே.

என்பது : தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது.

— கபிலர்.

வரி

1. குயின்ற - செய்யப்பட்ட; கோடை மேல்காற்று. 3. பாடின்அருவி - ஒலியினிய அருவி; அருவியாகிய குளிர்ந்த நீர்; 4. துதைவு - செறிவு; 5. இகுத்தல் - தாழ்த்தல்; கலைதாழ விடுகிற குரல்; தூம்பு - பெருவங்கியம்; குரலாகிய தூம்பு. குரல் - கலையினுரை. 8. மந்தியவை - மந்தித்திரள். மருடல் - ஆச்சரியப் படுதல். 9. இயலி - உலாவி; 12. தன்னால் செருச் செய்யப்பட்ட யானை. சென்னெறி - சென்ற நெறி; 18. நெகிழ் தோளினை யுடையேன் 17 யாலுருத்தியுமே; அதற்குக் காரண மென்னை என்றவாறு.

1-8. இவை இத்தன்மையைக் கருவிகளாக ஆடு மயிலென்க.

பிறர்க்கெல்லாம் இன்பஞ் செய்யும் நாடனைக் கண்டார் பலருள்ளும் நமக்கே துயராவா னென்னென உள்ளுறை காண்க.

பி - ம். 10. விழவுக்களவிறலி.

83. பாலை

வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ் புதுவீச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடிக்
* கறையடி மடப்பிடி கானத் தலறக்

---

*"வலஞ்சுரிமராத்து" என்னுங் களிற்றியானை நிரையுள் "கறையடி.....புல்லி" என் யானைக் கன்றைக் கவர்ந்தவாறு காண்க' என்றூர் நச். (தொல். பொருள். 60.)

களிற்றுக்கன் றெழித்த வுவகையர் கலிசிறந்து
கருங்கான் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
பெரும்பொழி வெண்ணு ரழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்
நறவுநாடை நல்லிற் புதவுமுதற் பிணிக்குங்
கல்லா வினையர் பெருமகன் புல்லி
யியன்றலை நன்னாட்டு வேங்கடங் கழியினுஞ்
சேய ரென்னு தன்புமிகக் கடைஇ
யெய்தவந் தனவாற் றுமே நெய்தற்
கூம்புவிடு நிகர்மல ரன்ன
வேந்தெழின் மழைக்கணெங் காதலி குணனே.

என்பது: தலைமகன் இடைச் சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

— கல்லாடனார்

வரி

2. உளை மயிர் - தலையாட்டம்போல நான்ற மயிர்; 6. பெரும்பொழி - பெரிதாகவுரித்தவுரி; 7. நியமம் - அங்காடி. 8. நறவு விலையாக; புதவு முதல் - வாயிலிடம். 9. இனையர் - வேட்டர்; .....13. நிகர் - ஒளி. 14. குணங்கள் 12 எய்தவந்தன என்க. 6. பூட்டிக் கொடுபோந்து 7 ஊர் 8 வாயிலிற் பிணிக்கு மென்க.

பி - ம். 12. யல்கற்.

84. முல்லை

* மலைமிசைக் குலைஇய வுருகெழு திருவிற்
பணைமுழங் கெழிலி பௌவம் வாங்கித்

---

* "இது தாது கண்டு வருந்திக் கூறியது. இக்களிற்றியானை நிரையுள் தன்னூரும் 'அருமுனையியவிற் சோழர்' என்றலின் தான் குறுநில மன்னனென்பது பெற்றும்" என்றும், "குறுநில மன்னர் போல்வார் சென்றமைதோன்றக் கூறியது" என்றும், "ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கிலும்" என்னுந் துறைக்கு உதாரண மாகுமென்றும், "'வினையயிற்.....யேமே' எனத் தலைவியை நினைவனவாகைக்கு வழுவாம்; 'அகத்திற்கு வழுவன்று" என்றும் கூறுவர் நச் (தொல். பொருள். 24., 27 , 41., 76.)

தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு வளைஇ
மாநிரம் புதைப்பப் பொழிதலிற் காண்வர
விருநிலங் கவினிய வேம்முறு காலை
நெருப்பி னன்ன சிறுகட் பன்றி
யயிர்க்கட் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாண்மல ருதிரும்
புறவடைந் திருந்த வருமுனை யியவிற்
சீறூ ரோளே யொன்னுதல் யாமே
யெரிபுரை பன்மலர் பிறழ வாங்கி
யரிஞர் யாத்த வலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ளார் வினைஞர் களந்தொறு மறுகுந்
தண்ணடை தழீஇய கொடிநுடங் காரெயி
லருந்திறை கொடுப்பவுங் கொள்ளான் சினஞ்சிறந்து
வினைவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே

என்பது : தலைமகன் பாசறையிருந்து சொல்லியது.

— மதுரை யெழுத்தாளன்

வரி

1. குலைஇய - வளைந்த; உரு - உட்கு; 3. பெருநீரைத் 4 திக்கெல்லாம் மறையப் பொழிதலால். 5. ஏமம் - ரக்ஷை. 7. அயிரிடத்துப் படாரிலே உறங்குகின்ற முதுகு.

9. புறவமடைந்த 10 சீறூர்; புறவு - சிறுகாடு. 11. எரி புரை மலர் - தாமரை, செங்கழுநீர். பிறழ என்றது, பூவோடாநின்ற நெல்லாதலால் கட்டுங் காலத்து அரி மாற வைத்துக் கட்டுதலால் பூக்கள் தம்மின் மாறுபட என்றவாறு. வாங்கி - வலித்து. 13. மறுகும் - கொடு போம் 14. எயில் - உள்ளர்.

16. வினையிடத்தே போகவிடுஞ் சேனை. 10 யாம் 17 பாசறை யேம் ; ஏமுறு காலையிடத்துச் 10 சீறூரோள் ஒண் ணுதல் எனத் தாதுபோக விடுதற்குத் தன் வருத்தந் தோன்றக் கூறியது.

பி - ம். 3. தாழ்பெயற் கெதிரி. 10 நன்னுதல்.

85. பாலை

நன்னுதல் பசப்பவும் பெருந்தோ ளனகிழவு
முண்ணு வுயக்கமொ டுயிர்செலச் சாஅ
யின்ன மாகவு மிங்குநத் துறந்தோ
ரறவ ரல்ல ரவரெனப் பலபுலந்
தாழல் வாழி தோழி சார
லின்றுநா ளுலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்று மூங்கில் முளைதரு பூட்டும்
வென்வேற் றிரையன் வேங்கட நெடுவரை
நன்னுட் பூத்த நாகிள வேங்கை
நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தி னுறுசினை யிருந்து
துணைப்பயிர்ந் தகவுந் துணைதரு தண்கார்
வருதும் யாமெனத் தேற்றிய
பருவங் காணது பாயின்றுன் மழையே.

என்பது : தலைமகன் பிரிய வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. இப் பாட்டு எதிர்கால நோக்கிற்று.

— காட்டேர்கிழார்மகனார் கண்ணனார்

வரி

3. துறந்தோர் என்பது முற்றும்..... ஆதலால் 4 அறவரல்ல ரென்று பொருளுரைக்க.

6. நாளுலந்த - நாள் முடிந்த; ஈன்றணிமை கழிந்த; பிடி 7 கன்று இவற்றினென்க. 8. கொடுத்தூட்டும். 8. ஊட்டும் 9 வேங்கடமலை. 10. நாகிள வேங்கை - மிக்க இளமையையுடைய வேங்கை. 11. ஆடிய - குடைந்த; 13. பயிர்ந்தகவும் - அழைத்துக் கூப்பிடும். 14. வருகின்றேமென்று தேற்றிய 15 பருவம் 13 துணைதரு தண்கார். அதற்கு 15 மழையும் பரவா நின்றது. அதனைப் பாராய் என்க.

13. துணையை அழைத்தல் பிரிவருமையால் கூட அழைத்தல்.

பி - ம். 11 பொறிவரை. 13 பயிர்ந்திறைஞ்சு. துனைதரு.

88. மருதம்

*.உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி
மணிவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிரு ளகன்ற் கவின்பெறு காலைக்
கோள்கா னீங்கிய கொடுவெண் டிங்கட்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
வுச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெப் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவு முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த வீரித ழுலரி
பல்லிருங் கதுப்பி னெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழந்தி யாகெனத் தமர்தர

---

* "இதனுள் வதுவைக்கு ஏற்ற காரணங்கள் நிகழ்ந்தவாறும் தமர் கொடுத்தவாறுங் காண்க. சுற்றஞ் சூழ்ந்து நிற்றலானும் தமர் அறிய மணவறைச் சேறலானும் களவாற் சுருங்கி நின்ற நாண் சிறந்தமையைப் பின்னர்த் தலைவன் வினவ அவள் மறுமொழி கொடாது நின்றமையைத் தலைவன் தோழிக்குக் கூறியவாறு காண்க. இதனானே இது களவின்வழி நிகழ்ந்த கற்பாயிற்று" என்றும் "காரணத்தின் அமைந்து முடிந்தது" என்றும் கூறுவர் நச்சினார்க்கினியர். பேராசிரியர் 'அகமலியுவ..... யோளே' என்பது 'சிதைவு பிறர்க்கின்மை' என்னும் மெய்ப் பாட்டிற்கு உதாரணமாகுமென்றும், இது "தலைமகன் அறிவு மெய்ப்பட்ட தென்பது" என்றும் கூறுவர். (தொல். பொருள். 142, 146, 261.)

வோரிற் கூடிய வுடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்த வோர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
வஞ்சின ளுயிர்த்த காலை யாழநின்
னெஞ்சம் படர்ந்த தெஞ்சா தரையென
வின்னகை யிருக்கைப் பின்யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது தபல்வர
வகமலி யுவ்கைய ளாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கி
னெடுங்கே ரோதி மாஅ யோளே.

என்பது : வாயின்மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது. தலைமகளைக்கூடி யின்புற்றிருந்த தலைமகன் பண்டுநிகழ்ந்தது சொற்று இன்புற்றிருந்தானுமாம்.

— நல்லாவூர்கிழார்.

வரி

I. களி மிதவை - குழைதலையுடைய கும்மாயம்; மிதவையொடு 2 அமலைநிற்ப; நிற்ப என்றான், உண்பார் இடையருமை பற்றி. 6. கோள்கால் - அசுபக்கிரகங்களிடம். * சகடம் திங்களையுடைய நாள், கல்யாண நாள். 7. வந்தென - வந்தவளவிலே; 8. புதிய அகன்ற மண்டை; 9. பொதி - கல்யாணம் எல்லாரும் புகுதற்கு யோக்யமாதலால், அதனைச் செய்கிற ஆசாரத்தினையுடைய செவ்விப் பெண்டிர்; கம்பலையிடத்துத் 10 தரத்தர என்றுமாம். 10. முன்னவும் பின்னவும் - முற்படக் கொடுப்பனவும் பிற்படக் கொடுப்பனவும், முறை முறையாகக் கொடுப்ப. 11-12 பிள்ளைபெற்ற மகளிர் நால்வர்கூடிக் குளிப்பாட்டுதன் மரபு.

14. உன்னைத் தனக்குப் பெற்றவனைப் பேணும் பேணுதலையுடையை யாவாய்; 15. அலரி-பூ. வதுவை நன்மணம்-

---

* "சகடமென்றது உரோகணியை" என்பர், "திங்கட், சகடம் வேண்டியதுகடீர்கூட்டத்து" என்னுமிடத்து. (அகம். 136.)

வதுவைக் கல்யாணம்; என்றது குளித்து விட்டபின் என்றவாறு ; இதுவும் ஒருகல்யாணமாதலால். 20. ஓர் இல் - * சதுர்த்தியறை; உடன் புணர்தல் - கூடப் புணர்தல். 21-22. ஒடுங்கிக்கிடத்தலாற் கோடினபுறம். ஓர் - அசை. 25. நெஞ்சம் நினைந்தது, எஞ்சா துரை - மறையாது உரை; 26. இனிய நகையொடு கூடின விருக்கையிடத்து. பின் - கல்யாணங் கழிந்தபின்.

5. கனையிருளகன்ற.....என்றது, பூர்வ பக்ஷத்தையுடைய காலை; 21. கொடும்புறம்-நாணத்தால் வளைந்த உடம்பு.

26. இன்னகை இருக்கைப் பின் 25.எஞ்சாது உரையென 26 வினவலின் எனக் கூட்டுக.

30. மதைஇய நோக்கு - செருக்கின நோக்கு; என்றது எக் காலத்து மவள் என்னளவில் அன்புடையளாயிருப்பள், அவளறிவ தொன்றுண்டோ உன்னுடைய கொடுமை யல்லவோ இந்த மாறுதலெனத் தோழியொடு புலந்து கூறினன்.

பி-ம். 10. தரீஇய. 11. பயந்த. 19. நுமர்தர. நல்லார் பூரன்கிழார்.

87. பாலை

தீந்தயிர் கடைந்த நிரள்சான் மத்தங்
கன்றுவாய் சுவைப்ப முன்றிற் றாங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை
நல்கூர் சீறா ரெல்லித் தங்கிக்
5 குடுமி நெற்றி நெடுமாச் சேவற்
றலைக்குரல் விடியற் போகி முனைஅது
கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பி
னெழுந்த தண்ணுமை யிடங்கட் பாணி
யருஞ்சுரஞ் செல்வோர் நெஞ்சந் துண்ணெனக்
10 குன்றுசேர் கவலை யிசைக்கு மத்த
நனிநீ டுழந்தனை மன்னே யதனை
யுவவினி வாழிய நெஞ்சே மையற

* "நாலாம்நாளை இரவின்கண்" உடன் புணருமறை.

வைகுசுடர் விளங்கும் வான்றோய் வியனகர்ச்
சுணங்கணி வனமுலை நலம்பா ராட்டித்
தாழிருங் கூந்தனங் காதலி
நீளமை வனப்பிற் றோளுமா ரணைந்தே.

என்பது: வினைமுற்றி மீளுந் தலைமகன் இடைச்சுரத்துத் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.

— மதுரைப் பேராலவாயார்.

வரி

2. முன்றிற்றூங்கும் 3 பந்தர். 3. படலைப் பந்தர் என்றது, மாநிழலாகிய் பந்தரை; 3. குரம்பையையுடைய 4 சீறூர். 6. தலைக்குரல் · முதற் குரல்; 11. மன் - மிகுதி; 12. மை - இருள்; 13. வைகுசுடர் - விடியுமளவும் எரி யும் விளக்கு; 14. முலையையும் பாராட்டித் 15 தோ ளையும் மணந்து 12 உவவினி எனக் கூட்டுக.

4. தங்கிப் 6 போய் 11 உழந்தனை என்க. 11. உழந்தனை - முறறு.

பி - ம். இடைச்சுரத்து மீளலுறும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

88 குறிஞ்சி

முதைச்சுவற் கலித்த மூரிச் செந்தினை
யோங்குவணர்ப் பெருங்குர லுணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிற நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்க நோக்கி வந்துநந்
நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே குன்றத்
திரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுண்மலி பிழிதருங் காமர் கடாஅ
மிருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரள யசுண மோர்க்குங்

காம்பம லிறும்பிற் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிர லுளியங் கெண்டும்
15 வடுவாழ் புற்றின வழக்கரு நெறியே.

என்பது : இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தாளைத் தோழி சொல்லியது.

இப் பாட்டினுட் புருவை என்பது இளமை

— ஈழத்துப் பூதன்றேவனார்.

வரி

2. ஓங்குதல் - மேலேக்குதல்; வணர்தல் - வளைதல்; நெறிப்புப்படுதலுமாம். 3. தன் பக்கத்துப் பல்லிப்பாட்டை விசாரித்துக் கிட்டச் செல்லும் ; நன்னிமித்தமான பல்லி; பாடு - ஓசை. 4. புருவை - இளமை; வரக் கடவ திறம். 5. கழுது - பரண். 4. நோக்கிக் 5 கொண்ட 6 விளக்கு; 6. அச்சுடரே வெளியாகப் பார்த்து வந்து; 7. கலந்த நன்னராளன் - நன்மையையுடையவன்.

5. கொளீஇய - கொளுத்தின. 10. கடாத்திடத்து; 11 தொழுதி - வண்டின் கூட்டம்; செத்து - கருதி; 15. வழங்குதற்கரிய நெறியைச் 8 சென்றனெனக் கூட்டுக. இத்தன்மையான வழியிலே வந்து போகின்றாரோவென இரங்கிக்கூறக் கேட்டுவரைவாளுவது பயன்.

தினை நுகர்தற்குப் பன்றி நிமித்தம்பார்த்து வருகையைச் செய்தேயும் கானவன் அது வருதிறமறிந்து சுடர் கொளுத்தினாற் போலத், தாமும் பேணிவந்தாரேயாயினும் வரவு வெளிப்படும் என்றவாறு.

பி - ம். 13. காம்புபுயி. ஏறத்துப் புதன்றேவன்.

39. பாலை

தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலி
னுறுபெயல் வறந்த வோடுதோ ணனந்தலை
யுருத்தெழு குரல குடிஞைச் சேவல்
புல்சாய் விடரகம் புலம்ப வரைய
5 கல்லெறி யிசையி னிரட்டு மாங்கண்

சில்வீடு கறங்குஞ் சிறியிலை வேலத்
தூழுறு விளைநெற் றுதிரக் காழியர்
கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழியக்
களரி பரந்த கன்னெடு மருங்கின்
விளரூன் றின்ற வீங்குசிலை மறவர்
மைபடு திண்டோண் மலிர வாட்டிப்
பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவ ருருந்தலை துமித்த
படுபுலாக் கமழு ஞாட்பிற் றுடியிசைத்
தருங்கலந் தெறுத்த பெரும்புகல் வலத்தர்
விலங்கெழு குறும்பிற் கொண்டிமுறை பகுக்குங்
கொல்லை யிரும்புன நெடிய வென்னுது
மெல்லென் சேவடி மெலிய வேக
வல்லுகள் கொல்லோ தானே தேம்பெய்
தளவுறு தீம்பா லலைப்பவு முண்ணா
ளிடுமணற் பந்தரு ளியலு
நெடுமென் பணைத்தோண் மாஅ யோளே.

என்பது : மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது. இப் பாட்டினுள் காழியர் என்றது வண்ணரை.

— மதுரைக் காஞ்சிப்புலவர்.

வரி

1. வேனிற் காலத்து மாத மிரண்டனுள் நடுவு என்னும் நாளிருபது. 3. வெம்மையுட னெழுகின்ற குரலையு டைய பேராந்தைச் சேவல்; 2. உறுபெயல் வறந்த நிலைநீராய் நின்ற ... எரிக்கப்பட்டான ...பெயலா லுண் டான நீர் இப்பொழுது ஒடுதோராய்ப் பரத்தல். 5. கல் லெறி இசை - மலையினின்றுங் கல்லு விழும்பொழுது எழுமோசை. 7. காழியர் - வண்ணர். 8. கவ்வைப் பரப்பு - சில்வீடு ஆரவாரத்தை யுடைய பரப்பு. 10. வீங்குசிலை - விசைதங்கு சிலை. 11. மை - கருமை; மலிர - பூரிக்க. 14. ஞாட்பு - பாக்கக்காரரும் கள்ள ரும் பொருத பூசற் களம். 15. அருங்கலந் தெறுத்த- அரிய பண்டங்களைத் திறையாகக் குவித்த.

17. புனமாகிய கொல்லை யென்க. புனமென்பது, முன்பு பயிராயதனை; கொல்லை யென்பது, பயிரின்றித் தரி சாய்க் கிடந்த காட்டினை. 2. ஓடுதோ் நனந்தலையினை யும், 5 கல்லெறியிசையின் இரட்டுமவ் விடங்களையும் 9 களரிபரந்த கன்னெடு மருங்கினையுமுடைய 17 இரும் புனக் கொல்லை எனக் காட்டிற்கு அடையாக்குக.

16. பகுக்குங் 17 கொல்லை யென்க. 13. சாத்தரும் வீரரா யிருப்பரென்று வயவரென்றாள்.

பி - ம். 3. குமிழ்சேவல். 11. திணிதோள். 21. பந்தரியலு.

20. நெய்தல்

மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
யினையோ ராடும் வரிமண லகைக்குந்
தளையவிழ் தாழைக் கானலம் பெருந்துறைச்
சில்செவித் தாகிய புணர்ச்சி யலரெழ
வில்வயிற் செறித்தமை யறியாய் பன்னாள்
வருமுலை வருத்தா வம்பகட்டு மார்பிற்
றெருமர லுள்ளமொடு வருந்து நின்வயி
னீங்கு கென்றியான் யாங்ன மொழிகோ.
வருந்திறற் கடவுட் செல்லூர்க் குணாது
பெருங்கடன் முழக்கிற் முகி யாண
ரிரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியம மாயினு
முறுமெனக் கொள்குந ரல்லர்
நறுநுத லரிவை பாசிழை விலையே. *

என்பது : பகற்குறி வந்து கண்ணுற்று நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு நின்று இற்செறிப்பறிவுறீஇயது.

— மதுரை மருதனிளநாகனார்

வரி

2. வரிமண - பண்ணின சிற்றில். 4. சிலர் செவிப்பட்ட மாத்திரமான புணர்ச்சி; அது அலரெழுகையாலே 5

---

* "இது பொருள் மிகக்கொடுத்தல்வேண்டுமென்கின்றது" என்பர் நச். (தொல். பொருள். 114.)

இல்வயிற் செறித்தமை அறிகிலை. 6 வருமுலை வருத்தா என்றது வருமுலையை யுடையாளை வருத்தி என்ற வாறு; மார்பின் வருத்தா என்க. வ்ருத்தி 7 வருந்தும் நின் என முடிக்க. வருத்தாள் என்னும் பாடத்திற்கு வருமுலை வருத்தப் பண்ணுள் வருந்தும் பகட்டு மார்பினையுடைய நின் என்று சேர்த்துரைக்க. வருமுலை தெருமர வுள்ளமொடு வருத்தப் பண்ணுள் வருந்தும் பகட்டு மார்பின் நின் என்று பிரித்துப் பொருளுரைப்பாரு முளர். 8. எங்கண் வருத்தமறிந்து வரைந்துகொள்ள நினையாதவுமக்கு நீங்குகென்றறிய யான் சொன்னலுமறியீர் என்னுங் கருத்தான் யாங்ஙனமொழிகோ என்றுள். 9 கடவுட் செல்லூர்-தெய்வங்களெல்லாம் பலிபெறுதற்கிடமாகிய செல்லூர்.

10. பெருங்கடன் முழக்கிற்றுகி 4 அலரெழுவெனக் கூட்டுக. 10. பெருங்கடல்போலு மாரவாரத்தை யுடைத்தாகக் கோசர்வாழு நியமமென்று மேலேற்றுவாரு முளர்.

10. யாணர் 12 நியமமென்க. 11. வேல் முதலாகிய இடம்படுத்தல். 14. விலை 12 நியமம் கொடுப்பினும் கொள்ளராதலால் அவர்களையும் ஆச்ரயித்துக் கொள்வ ளென்றுள்.

மூத்தோர் இளையோரை வருத்தாரன்றே, அது செய்யாது புணரி இளையோர் மனசிதைத்தாற்போலப் பெரிய அறிவுடைய நீர் சிறியேமாகியவெங்களை வருத்தாநின்றீர் என்றவாறு.

பி - ம். எதிர்ப்பட்டு இற்செறிப்பறிவுறீஇயது.

[பழையவுரை இவ்வளவே உள்ளது]

---

91. பாலை

விளங்குபக லுதவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலி
னருவி யான்ற பெருவரை மருங்கிற்
சூர்ச்சுனை தழைஇ நீர்ப்பயங் காணாது
பாசி தின்ற பைங்கண் யானை
யோய்பசிப் பிடியொ டொருதிற னெடுங்க
வேய்கண் ணுடைந்த வெயிலவிர் நனந்தலை

யரும்பொருள் வேட்கையி னகன்றன ராயினும்
பெரும்பே ரன்பினர் தோழி யிருங்கே
ழிரலை சேக்கும் பரலுயர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவுழ வெழுந்த
நெடுங்கா லாசினி யொடுங்காட் டும்பர்
விசிபிணி முழவிற் குட்டுவன் காப்பப்
பசியென வறியாப் பணைபயி லிருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியுங்
குடநாடு பெறினுந் தவிரலர்
மடமா னேக்கினின் மாணல மறந்தே.

என்பது: பிரிவிடைமெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

—மாமூலனார்.

பி-ம். 2. வயங்கெழு. 3. பெருவளமருங்கிற்.

92. குறிஞ்சி

நெடுமலை யடுக்கங் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானட் கங்குற்
குஞ்சர நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்
செங்க ணிரும்புலி குழுமுஞ் சாரல்
வாரல் வாழிய ரையர நேரிறை
நெடுமென் பணைத்தோ ளிவளும் யானுங்
காவல் கண்ணினந் தினையே நாளை
மந்தியு மறியா மரம்பயி லிறும்பி
னெண்செங் காந்த ளவிழ்ந்த வாங்கட்
டண்பல் லருவித் தாழ்நீ ரொருசிறை
யுருமுச்சிவந் தெறிந்த வுரனழி பாம்பின்
றிருமணி விளக்கிற் பெறுகுவை
யிருண்மென் கூந்த லேமுறு துயிலே.

என்பது: இரவுக்குறிச்சென்று தலைமகளைக்கண்ணுற்று நீங்குந் தலைமகனைப் பகற்குறிநேர்ந்த வாய்பாட்டாற் றோழி வரைவு கடாயது.

—மதுரைப்பாலாசிரியர் நற்றமனார்.

93. பாலை

* கேள்கே டென்றவுங் கிளைஞ ராரவுங்
கேளல் கேளிர் கெழீஇயின ரொழுகவு
மாள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்
தாரங் கண்ணி யடுபோர்ச் சோழ
ரறங்கெழு நல்லவை யுறந்தை யன்ன
பெறலரு நன்கல னெய்தி நாடுஞ்
செயலருஞ் செய்வினை முற்றின மாயி
னரண்பல கடந்த முரண்கொ டானின்
வாடா வேம்பின் வழுதி கூட
ளைங் காடி நாறு நறுநுத
னீளிருங் கூந்தன் மாஅ யோளொடு
வரைகுயின் றன்ன வான்றோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து
நலங்கே ழாகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே வரிறுத
லயந்திகழ் பிழிதரும் வாய்புகு கடாத்து
மீளி மொய்ம்பொடு நிலனெறியாக் குறுகி
யாட்கோட் பிழையா வஞ்சுவரு தடக்கைக்

---

* "வாணிகர் பொருள்வயிற் பிரிந்தவாறு உணர்க" என்றும், "'கேள்கே டென்றவும்' என்னும் அகப்பாட்டுப் புறத்திணைத் தலைவர் பலராய் அகத்திணைக்கண் அளவிவந்தது" என்றும், 'கேள்கேடென்றவுங்கிளைஞராரவும்' என்று மனமகிழ்ந்து கூறிய வாறு காண்க என்றும் கூறுவர் நச். / இனிப் போர. "இன்ன காரணத்திற் பிரிந்துபோந்து வினைமுடித்தனமாயினும், அவளை 'முயங்குகம் சென்மோ' என்றமையின் தன் ஆள்வினைக்குத் தக்க பெண்மையான் அவள் ஆற்றி யிருந்தா ளென்பதூஉம், கருதிய கருத்திறற் காமக்குறிப்புப் பிறந்தமையின் அஃது ஆண்மையாயிற்று" என்றும், "'நலங்கே.....நெஞ்சே' என்பது மலிதல்" என்றும் கூறுவர். இப் பாட்டினை இத் துறைக்கே கொள்வர் இளம்பூரணவடிகளும். (தொல். பொருள். 28, 55, 147, 273, 500; 44.)

கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீ ருயர்கரைக் குவைஇய
தண்ணன் பொருநை மணலினும் பலவே

என்பது: வினைமுற்றிமீளலுறுந் தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

— கணக்காயனார்மகனார் நக்கீரனார்.

பி-ம். 22. தெண்ணீரோர்கரைக்.

94. முல்லை

*தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய
குவையிலை முசுண்டை வெண்பூக் குழைய
வானெனப் பூத்த பாஅட் கங்குன்
மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற விடையன்
றண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணிய
னேதுபடு கொள்ளி யங்கை காயக்
குறுநரி யுளம்புங் கூரிரு ணெடுவிளி
சிறுகட் பன்றிப் பெருநிரை கடிய
முதைப்புனங் காவலர் நினைத்திருந் தூதுங்
கருங்கோட் டோசையொ டொருங்குவந் திசைக்கும்
வன்புலக் காட்டுநாட் டதுவே யன்புகலந்
தார்வஞ் சிறந்த சாய
லிரும்பல் கூந்தற் றிருந்திழை யூரே.

என்பது: வினைமுற்றிமீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. தலைமகன் பாங்கற்குச் சொற்றதூஉமாம்.

— நன்பலூர்ச் சிறுமேதாவியார்.

பி-ம். 3. வான்பூத்தன்ன. 9. கூடிய. கடியு.

---

* இது "இருத்தல் நிமித்தமாம், இக்காலம் வருந்துணையும் ஆற்றினளெனத் தான் வருந்துதலின்" என்பர் நச். (தொல். பொருள். 14.)

95. பாலை

* பைப்பயப் பசந்தது நுதலுஞ் சாஅ
யைதா கின்றென் றளிர்புரை மேனியும்
பலரு மறியத் திகழ்தரு மவலமு
முயிர்கொடு கழியி னல்லதை நினையி
னெவனே வாழி தோழி பொரிகாற்
பொகுட்டன ரியிருப்பைக் குவிகுலக் கழன்ற
வாலி யொப்பின் றாம்புடைத் திரள்வீ
யாறுசெல் வம்பலர் நீளிடை யழுங்க
வீன லெண்கி னிருங்கிளை கவருஞ்
சுரம்பல கடந்தோர்க் கிரங்குப வென்னுர்
கௌவை மேவல ராகி யிவ்வூர்
நிரையப் பெண்டி ரின்னு கூறுவ
புரைய வல்லவென் மகட்கெனப் பரைஇ
நம்முணர்ந் தாறிய கொள்கை
யன்னை முன்னர்யா மென்னிதற் படலே.

ன்பது : போக்குடன்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

— ஒரோடோகத்துக் கந்தரத்தனுர்.

பி-ம். 7. தாம்பிடைத். 10. கழிந்தோர். 14. தாற்றிய.

96. மருதம்

நறவுண் மண்டை துடக்கலி னிறவுக்கலித்துப்
பூட்டறு வில்லிற் கூட்டுமுதற் றெறிக்கும்
பழனப் பொய்கை யடைகரைப் பிரம்பி
னரவா ளன்ன வம்மு ணெடுங்கொடி
யருவி யாம்ப லகலடை துடக்கி
யசைவரல் வாடை தூக்கலி னுதுலை
யிசைவாங்கு தோலின் வீங்குபு ளுகிழுங்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர

* இப் பாட்டினை இத் துறைக்கே உதாரணமாகக் கொண்டார் நச். (தொல். பொருள். 42.)

* வொண்டொடி யாயத் துள்ளுநீ நயந்து
கொண்டனை யென்பவோர் குறுமக ளதுவே
செம்பொற் சிலம்பிற் செறிந்த குறங்கி
னங்கலுழ் மாமை யஃதை தந்தை
யண்ணல் யானை யடுபோர்ச் சோழர்
வெண்ணெல் வைப்பிற் பருவூர்ப் பறந்தலை
யிருபெரு வேந்தரு மொருகளத் தொழிய
வொளிறுவா ணல்லமர்க் கடந்த ஞான்றைக்
களிறுகவர் கம்பலை போல
வலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

என்பது : தோழிவாயின் மறுத்தது.

— மருதம்பாடிய இளங்கடுங்கோ.

பி-ம். 1. நுடக்கலின். 4. அரவாயன்ன. 8. காணூர. 12. அகுதை. 15. வேந்தரும் பொருதுகளத்.

97. பாலை

† கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுற லங்கோ டுதிர வலங்கடந்து

---

* "'ஒண்டொடி.....குறுமகள்' எனக் காமஞ் சாலா இளமையோளைக் கூறிற்று" என்று கூறுவர் நச். 'புறஞ்சொன் மாணூக் கிளவி'க்கு உதாரணமாகக் கொள்வர், 'களிறு கவர் கம்பலை போல வலராகின்றது பலர் வாய்ப்பட்டே' என்பதனைப் பேரா. (தொல். பொருள். 151, 272)

"'அஃதை தந்தை அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்' என்புழி, சோழரெல்லாம் அஃதைக்குத் தந்தையாம் முறைய ராய் நிற்றலின் தந்தை யென்னும் ஒருமை சோழ ரென்னும் பன்மையொடு தனித்தனி சென்று கூடுதலின் வழுவின்றேனும் ஈற்றுப் பன்மை பற்றி வழுவமைத்தார்" என்பர் நச். (தொல். சொல். 461.) சேனாவரையரும் 'ஒருமைச் சொல் பன்மைச் சொல்லொடு தொடர்தலுங்கொள்க' என்பர்.

† இப் பாட்டினை இத்துறைக்கே கொள்வர் நச். (தொல். பொருள். 9.)

புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
யிரவுக்குறும் பலற னூறி நிரைபகுத்
திருங்கன் முடுக்கர்த் திற்றி கெண்டுங்
கொலைவி லாடவர் போலப் பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திறுக்கு
மருஞ்சுர மிறந்த கொடியோர்க் கல்கலு
மிருங்கழை யிறும்பி னுய்ந்துகொண் டுறுத்த
நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரொ
டகவுநர்ப் புரந்த வன்பிற் கழறொடி
நறவுமகி ழிருக்கை நின்னன் வேண்மான்
வயலை வேலி வியலூ ரன்னநின்
னலர்முலை யாகம் புலம்பப் பலபுலந்
தாழே லென்றி தோழி யாழவென்
கண்பனி நிறுத்த லெளிதோ குரவுமலர்ந்
தற்சிர நீங்கிய வரும்பவிழ் வேனி
லறலவிர் வார்மண லகலியாற் றடைகரைத்
துறையணி மருதமொ டிகல்கொள வோங்கிக்
கலுழ்தளி ரணிந்த விருஞ்சினை மாஅத்
திணர்தடை புதுப்பூ நிரைத்த பொங்கர்ப்
புகைபுரை யம்மஞ் சூர
நுகர்குயி லகவுங் குரல்கேட் போர்க்கே.

என்பது : வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

— மாமூலனார்.

பி-ம். 11. பண்பிற். 14. னகமலியாகம். 20. மாத்தி னிணர் தடை. ஒளவையார். குடவுழுந்தனார்.

93. குறிஞ்சி

* பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅற்
றுனியில் கொள்கையொ டவர்நமக் குவந்த
வினிய வுள்ள மின்று வாக

---

* இப் பாட்டினை "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்,
வெறியாட் டயர்ந்த காந்தளும்" என்ற துறைக்கு உதாரண

முனிதக நிறுத்த நல்க லெவ்வஞ்
சூருறை வெற்பன் மார்புறத் தணித
லறிந்தன ளல்ல ளன்னை வார்கோற்
செறிந்திலங் கெல்வளை நெகிழ்ந்தமை நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புளர் பிரீஇ
மூருக ரணங்கென் றலி னதுசெத்
தோவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன பலராய் மாண்கவின்
பண்டையிற் சிறக்கவென் மகட்கெனப் பரைஇக்
கூடுகொ லின்னியங் கறங்கக் களனிழைத்
தாடணி யயர்ந்த வகன்பெரும் பந்தர்
வெண்போழ் கடம்பொடு சூடி யின்சீ
ரைதமை பாணி யிரீஇக்கை பெயராச்
செல்வன் பெரும்பெய ரேத்தி வேலன்
வெறியயர் வியன்களம் பொற்ப வல்லோன்
பொறியமை பாவையிற் றூங்கல் வேண்டி
னென்னுங் கொல்லோ தோழி மயங்கிய
மையற் பெண்டிர்க்கு நொவ்வ லாக
வாடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயி னிம்மறை

மாகக் காட்டி, "'இன்னுவாக.....நிறுத்த எவ்வம்' என்பது அவன் வயிற் பரத்தைமை; 'உயிர் வாழ்தல் அரிது' என்பது தன்வயினுரிமை; அவை வெறியஞ்சிய வழி நிகழ்ந்தன" என்றும், "'பனிவரைநிவந்த' என்னும் அகப்பாட்டினுள் 'பிரப்புளர் பிரீஇ' எனக் கட்டுவிச்சியைக் கேட்டவாறும், 'என் மகட்கு' எனச் செவிலிகூற்று நிகழ்ந்தவாறும் காண்க. இதனுள் 'நெடுவேள் நல்குவனெனினே' எனத் தலைவி அஞ்சவேண்டியது, இருவரும் (கட்டுவிச்சியும் வேலனும்) ஒட்டிக் கூறுமல் தெய்வந்தான் அருளுமென்று கோடலின்" என்றுங் கூறுவர் நச். இனிப் பேரா. "'பாவையன்ன பலராய் மாண்கவின்' என்புழி மகட்கண் காதல் காரணமாக உவமை பிறந்தது" என்பர். தொல். பொருள். 60, 111, 115, 279.)

25 யலரா காமையோ வரிதே யஃதான்
றறிவ ருறுவிய வல்லல்கண் டருளி
வெறிகமழ் நெடுவே ணல்குவ னெனினே
செறிதொடி யுற்ற செல்லலும் பிறிதெனக்
கான்கெழு நாடன் கேட்பின்
30 யானுயிர் வாழ்த லதனினு மரிதே

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. தோழிக்குத் தலைமகள் சொல்லியதாகுமாம்.

— வேறிபாடிய காமக்கண்ணியார்.

பி-ம். 4. முனிவுதகவந்த. 7. நெகிழ்தலேக்கி. 27. நல்குவ னேயெனிற்.

99. பாலை

வாள்வரி வயமான் கோளுகி ரன்ன
செம்முகை யவிழ்ந்த முண்முதிர் முருக்கின்
சிதரற் செம்ம ருஅய் மதரெழின்
மாணிழை மகளிர் பூணுடை முலையின்
5 முகைபிணி யவிழ்ந்த கோங்கமொ டசைஇநனை
யதிரல் பரந்த வந்தண் பாதிரி
யுதிர்வீ யஞ்சினை தாஅ யெதிர்வீ
மராஅ மலரொடு விராஅய்ப் பராஅ
மணங்குடை நகரின் மணந்த பூவி
10 னன்றே கான நயவரு மம்ம
கண்டிசின் வாழியோ குறுமக ணுங்தை
யடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பிற்
பிடிமிடை களிற்றிற் ரேன்றுங்
குறுநெடுந் தூணைய குன்றமு முடைத்தே.

என்பது : உடன் போகிய தலைமகளைத் தலைமகன் மருட்டிச் சொல்லியது. *

— பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி-ம். 7. முதிர்வீ. 12. தொடி செறி 13. பிடியிடை.

* இத்துறைக்கே இப்பாட்டினைக் கொண்டார் நச்சினார்க் கினியரும். (தொல். பொருள் 41.)

100. நெய்தல்

அரையுற் றமைந்த வார நீவிப்
புரையப் பூண்ட கோதை மார்பினை
நல்லகம் வடுக்கொள முயங்கி நீவந்
தெல்லினிற் பெயர்த லெனக்குமா ரினிதே
பெருந்திரை முழக்கமொ டியக்கவிந் திருந்த
கொண்ட லிரவி னிருங்கடன் மடுத்த
கொழுமீன் கொள்பவ ரிருணீங் கொண்சுட
ரோடாப் பூட்கை வேந்தன் பாசறை
யாடியல் யானை யணிமுகத் தசைத்த
வோடை யொண்சுட ரொப்பத் தோன்றும்
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப்
புன்னையங் கானற் புறந்தை முன்றுறை
வம்ப நாரை யினவெலித் தன்ன
வம்பல் வாய்த்த தெய்ய தண்புலர்
வைகுறு விடியற் போகிய வெருமை
நெய்தலம் புதுமலர் மாந்தும்
கைதையம் படப்பையெம் மழுங்க லூரே.

என்பது : தோழி வரைவுகடாயது.

உலோச்சனார்.

பி-ம். 1. அரையற்றமை. 18. நெய்தற் புதுமலர்.

101. பாலை

அம்ம வாழி தோழி யிம்மை
நன்றுசெய் மருங்கிற் றீதில் லென்னுந்
தொன்றுபடு பழமொழி யின்றுபொய்த் தன்றுகொ
றகர்மருப் பேய்ப்பச் சுற்றுபு புரிந்த
சுவன்மாய் பித்தைச் செங்கண் மழவர்
வாய்ப்பகை கடியும் மண்ணெடு கடுந்திறற்
றீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி

நுரைதெரி மத்தங் கொளீஇ நிரைப்புறத்
தடிபுதை தொடுதோல் பறைய வேகிக்
கடிபுலங் கவர்ந்த கன்றுடைக் கொள்ளை
ரினந்தலை பெயர்க்கு நனந்தலைப் பெருங்காட்
டகலிரு விசும்பிற் கூடம் போலப்
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிற்
நருப்பவிர் பூரிய சுழன்றுவரு கோடைப்
புன்கான் முருங்கை யூழ்கழி பன்மலர்
தண்கா ராலியிற் றுவன வுதிரும்
பனிபடு பன்மலை யிறந்தோர்க்கு
முனிதகு பண்பியாஞ் செய்தன்றே விலமே.

என்பது : பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது. தோழி கிழத்திக்குச் சொல்லியதாகுமாம். இப் பாட்டினுள் வாய்ப்பகை கடியு மருந்து என்றது இருமல் தீர்க்கும் மருந்து.

— மாமூலனார்.

பி - ம். 4. சுற்றுபு சுரிந்த. 12. கூட்டம். 15. வீகழிபன்மலர். 16. தாதின்றுதிரும். (தலைமகள்)

102. குறிஞ்சி

உளைமான் றுப்பி னெங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
வுரைத்த சந்தி னூர லிருங்கதுப்
பைதுவர லசைவளி யாற்றக் கைபெயரா
வொலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையிதும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றெய்யென
மறம்புகன் மழகளி றுறங்கு நாட
னா மார்பி னரிஞிமி ரூர்ப்பத்
தான் கண்ணிய னெஃகுடை வலத்தன்
காவல ரறித லோம்பிப் பையென
வீழாக் கதவ மசையினன் புகுதந்

துயங்குபட ரகல முயங்கித் தோண்மணந்
தின்சொ லளைஇப் பெயர்ந்தனன் ரூழி
யின்றெவன் கொல்லோ கண்டீகு மற்றவ
னல்கா மையி னம்ப லாகி
யொருங்குவந் துலக்கும் பண்பி
னிருஞ்சூ ழோதி யொண்ணுதற் பசப்பே.

என்பது : இரவுக்குறிக்கட் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

— மதுரை யிளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன்.

பி - மி. மதுரைப் பாலாசிரியன் சேனங் கூத்தன்.

103. பாலை

நிழலுறு நனந்தலை யெழிலேறு குறித்த
கதிர்த்த சென்னி நுணங்கு செந்நாவின்
விதிர்த்த போலு மந்நுண் பல்பொறிக்
காமர் சேவ லேமஞ் சேப்ப
முளியரில் புலம்பப் போகி முனைஅது
முரம்படைந் திருந்த மூரி மன்றத்
ததர்பார்த் தல்கு மாகழு சிறுகுடி
யுறையுநர் போகிய வோங்குநிலை வியன்மனை
யிறைநிழ லொருசிறை புலம்பயா வுயிர்க்கும்
வெம்மூனை யருஞ்சுர நீந்தித் தம்வயி
னீண்டுவினை மருங்கின் மீண்டோர் மன்னென
நள்ளென் யாமத் துயவுத்துணை யாக
நம்மொடு பசலை நோன்று தம்மொடு
தானே சென்ற நலனு
நல்கார் கொல்லோ நயந்திசி னோரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொற்றது.

— காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்.

பி - மி. 12. உயவுத் துணையாகிய. 13. தோன்றுக தம்மொடு.

104. முல்லை

* வேந்துவினை முடித்த காலைத் தேம்பாய்ந்
தினவண் டார்க்குந் தண்ணறும் புறவின்
வென்வே லிளைய ரின்புற வலவன்
வள்புவலித் தூரி னல்லது முள்ளுறின்
முந்நீர் மண்டில மாதி யாற்ற
நன்னல்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்
வாங்குசினை பொலிய வேறிப் புதல
பூங்கொடி யவரைப் பொய்யத ளன்ன
வுள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய
புன்றலைச் சிறுதோ டகளி மன்றுழைக்
கவையிலை யாரி னங்குழை கறிக்குஞ்
சீறார் பலபிறக் கொழிய மாலை
யினிதுசெய் தனையா லெந்தை வாழிய
பனிவார் கண்ணள் பலபுலந் துறையு
மாய்தொடி யரிவை கூந்தல்
போதுகுர லணிய வேய்தந் தோயே.

என்பது : வினைமுற்றிமீளுந் தலைமகற்குத் தோழி சொல்லியது.

— மதுரை மருதனிளநாகனார்.

பீ-மீ. 1. வேந்துவினை முடித்தனன். 3. ரன்புற. 6. நன்னன்கு 12. கொறிக்கும்.

105. பாலை

அகலறை மலர்ந்த வரும்புமுதிர் வேங்கை
யொள்ளிலைத் தொடலை தைஇ மெல்லென

---

* இப் "பாட்டினுள் சுட்டி ஒருவர்ப் பெயர்கூறு வஞ்சி பொதுவியலாய் வந்தவாறு காண்க" என்றும், "இதனுள் வினைமுடித்த காலைத் தேரினையர் செலவிற் கேற்ப ஊராது கோலூன்றின் உலகிறந்தன செலவிற்குப் பற்றுத குதிரைத்தேரேறி இடைச்சுரத்திற் றங்காது மாலைக் காலத்து வந்து பூச்சூட்டினன், இனிது செய்தனை எந்தை வாழிய எனத் தோழி கூறியவாறு காண்க" என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 60, 194.)

நல்வரை நாடன் றற்பா ராட்ட
யாங்குவல் லுநள்கொ ருனே தேம்பெய்து
மணிசெய் மண்டைத் தீப்பா லேந்தி
யீனுத் தாயர் மடுப்பவு முண்ணு
ணிழற்கயத் தன்ன நீணகர் வரைப்பி
னெம்முடைச் செல்வமு முள்ளாள் பொய்ம்மருண்டு
பந்துபுடைப் பன்ன பாணிப் பல்லடிச்
சிற்பரிக் குதிரைப் பல்வே லெழினி
கெடலருந் துப்பின் விடுதொழின் முடிமார்
கனையெரி நடந்த கல்காய் கானத்து
வினைவ லம்பின் விழுத்தொடை மறவர்
தேம்பிழி நறுங்கண் மகிழின் முனைகடந்து
வீங்குமென் சுரைய வேற்றினந் தரூஉ
முகைதலை திறந்த வேனிற்
பகைதலை மணந்த பல்லதர்ச் செலவே.

என்பது : மகட்போக்கிய தாய் சொல்லியது.

— தாயங்கண்ணனார்.

பி - ம். 1. அகவரை. 10. வல்வேலெ. 15. விலங்குமென்.

106. மருதம்

*எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரியகைந் தன்ன பொங்குபல் சிறுமீன்
வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப்
பறைதபு முதுசிர லசைபுவந் திருக்குந்
துறைகே ழூரன் பெண்டுதன் கொழுநனை
நம்மொடு புலக்கு மென்ப நாமது
செய்யா மாயினு முய்யா மையிற்
†செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவ

---

* இவ்வடியினை வினையுவமத்திற்கு உதாரணமாகக் காட்டி,
† "செறிதொடி ..... தோழி" என்றக்காற் றலைவிக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லிக் கூறல் வேண்டு மென்பது; வாயில்களும் தலைமகளை ஊடல்காப்பவல்லது சொல்லாரே

ணுலமந்து வருகஞ் சென்மோ தோழி
யொளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
வெளிறில் கற்பின் மண்டம ரடுதொறுங்
களிறுபெறு வல்சிப் பாண னெறியுந்
தண்ணுமைக் கண்ணி னலஇயர்தன் வயிறே.

என்பது : தலைமகள் தன்னைப் புறங்கூறினளாகக் கேட்ட பரத்தை யவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

— ஆலங்குடி வங்கனர்.

பி - ம். 7. உய்யாமா. 8. சிறிதிவண். (கூறினளென.)

107. பாலை

நீசெல வயரக் கேட்டொறும் பலநினைந்
தன்பி னெஞ்சத் தசாஅப்பொறை மெலிந்த
வென்னகத் திடும்பை களைமார் நின்னெடு
கருங்கல் வியலறைக் கிடப்பி வயிறுதின்
றிரும்புலி துறந்த வேற்றுமா ணுணங்க
னெறிசெல் வம்பல ருவந்தன ராங்க
ணெளிகமழ நெல்லி னரிசியொ டோராங்
கானிலைப் பள்ளி யளைபெய் தட்ட
வானிண முருக்கிய வால் அவெண்சோறு
புகரைத் தேக்கி னகலிலை மாந்துங்
கல்லர நீண்மொழிக் கதநாய் வடுகர்
வல்லா ணருமுனை நீந்தி யல்லாந்து
மன்னா நஞ்சு மொருகாற் பட்டத்
தின்ன வேற்றத் திழுக்கி முடங்கூர்ந்
தொருதனித் தொழிந்த வுரனுடைத் நோன்பக
டங்குழை யிருப்பை யறைவாய் வான்புழல்
புல்லுளைச் சிறுஅர் வில்லி னீக்கி
மரைகடிந் தூட்டும் வரையகச் சீறூர்

கலாற் தலைமகள் கேட்பாளாகச் சொல்ல வேண்டு மென்பது' என்பர் பேரா. (தொல். பொருள். 287, 712.)

மாலை யின்றுணை யாகிக் காலைப்
பசுநனை நறுவீப் பரூஉப்பர லுறைப்ப
மூணமனை கமழுங் கானந்
தணையீ ரோதியென் றோழியும் வருமே.

என்பது: தோழி தலைமகள் குறிப்பறிந்துவந்து தலைமகற்குச் சொல்லியது.

— காவிரிப்பூம்பட்டினத்துக் கார்க்கண்ணனார்.

பி-ம்.2 அன்புடை நெஞ்ச. 13. பன்னூறஞ்.

108. குறிஞ்சி

புணர்ந்தோர் புன்க ணருளலு முணர்ந்தோர்க்
கொத்தன்று மன்ற லெவன்கொன் முத்தம்
வரைமுதற் சிதறிய வைபோல் யானைப்
புகர்முகம் பொருத புதுநீ ராலி
பளிங்குசொரி வதுபோற் பாறை வரிப்பக்
கார்கதம் பட்ட கண்ணகன் விசும்பின்
விடுபொறி ஞெகிழியிற் கொடிபட மின்னிப்
படுமழை பொழிந்த பானட் கங்கு
லாருயிர்த் துப்பிற் கோண்மா வழங்கு
மிருளிடைத் தமியன் வருதல் யாவது
மருளான் வாழி தோழி. யல்கல்
விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ யரவி
னணங்குடை யருந்தலை பைஞிரிப் பவைபோற்
* காயா மென்சினை தோய நீடிப்
பஃறடுப் பெடுத்த வலங்குகுலைக் காந்த

* "காயா.....வோனே" என்புழி ஆடுதற்றொழில் பற்றியும் வடிவு பற்றியும் வண்ணம் பற்றியும் உவமை வந்தது என்பர் பேரா. (தொல். பொருள். 277.) நச்சினார்க்கினியரும் சுரும்பெழுந் திருந்துணுந் தொங்கல்' என்னுமிடத்து "'நறுங் கா தாதுந்தும்பி கையாடு வட்டிற்றோன்றும்' என்றார் பிறரும்" என்பர். (சிந். 661.)

ளணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
கையாடு வட்டிற் றேன்று
மையாடு சென்னிய மலைகிழ வோனே..

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானுகத் தலைமகட்குச் சொல் லுவாளாய்த் தோழி சொல்லியது.

— தங்காற் போற்கொல்லனுர்.

பி - ம். 3. வரைமிசைச்சித. 5. சொரிபவைபோற். 12. விரவுப் பொறை. தங்கால் பூட்கோவனுர்.

109. பாலை

* பல்லிதழ் மென்மல ருண்க ணைல்யாழ்
நரம்பிசைத் தன்ன வின்றீங் கிளவி
நலநல் கொருத்தி யிருந்த வூரே
கோடுழு களிற்றின் றெழுதி யீண்டிக்
காடுகால் யாத்த நீடுமரச் சோலை
விழைவெளி லாடுங் கழைவளர் நனந்தலை
வெண்ணுனை யம்பின் விசையிட வீழ்ந்தோ
ரெண்ணுவரம் பறியா வுவலிடு பதுக்கைச்
சுரங்கெழு கவலைக் கோட்பாற் பட்டென
வழங்குநர் மடிந்த வத்த மிறந்தோர்
கைப்பொரு ளில்லை யாயினு மெய்க்கொண்
டின்னுயிர் செகாவிட் டகன்ற பல்சூர்ப்
பெருங்களிற் றுரு மருப்பொடு வரியத ளிறுக்கு
மறனில் வேந்த ளுளும்
வறனுறு குன்றம் பலவிலங் கினவே.

என்பது : இடைச் சுரத்துத் தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.

— கடுந்தோடைக் காவினுர்

பி - ம். 6. கழைவிரி. 7. வெண்ணுனை. 11. மெய்க்கட்.

---

* இப்பாட்டினுள் ' "அறனில்வேந்த.....கினவே" எனக் காட்டுத் தலைவனை நாட்டுத்தலைவன் பெயராற் கூறினுர்" என் பர் நச். (தொல். பொருள். 60.)

110. நெய்தல்

அன்னை யறியினு மறிக வலர்வா
யிம்மென் சேரி கேட்பினுங் கேட்க
பிறிதொன் றின்மை யறியக் கூறிக்
*.கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கிக்
5 கடுஞ்சூ டருகுவ னினக்கே கானற்
றொடலை யாயமொடு கடலுட னுடியுஞ்
சிற்றி லிழைத்துஞ் சிறுசோ றுவையியும்
வருந்திய வருத்தந் தீர யாஞ்சிறி
திருந்தன மாக வெய்த வந்து
10 தடமென் பணைத்தோண் மடநல் லீரே
யெல்லு மெல்லின் றசைவுமிக வுடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனே
வெனமொழிந் தனனே யொருவ னவற்சுன்
15 டிறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
யிலைநுமக் குரிய வல்ல விழிந்த
கொழுமீன் வல்சி யென்றன மிழுமென
நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ

---

* "நெய்தல் நிலத்து நுளையர்க்கு உலவவளந் தப்பின் அம் மகளிர் நுளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நட்டு பரவுக்கட்டன் கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும்" என்று கூறி, அதற்கு இவ்வடியினை உதாரணமாக்கியும், "மெய்தொட்டுப் பயிறல்....." என்ற சூத்திரத்துப் 'பிறவும்' என்றதனாற் கொள்க' என்று "மெல்லிலை.....றெவனே" என்ற வடிகளை உதாரணமாக்கியும், அச் சூத்திரத்தே 'தலைவன் இரவுக்குறி வேண்டியதனைத் தோழி கூறியவாறு காண்க' என்றும், இது 'எளித்தல்' என்றும், '"பிறி தொன்.....றினைக்கே" இது தலைப்பாடு' என்றுங்கூறுவர், நச் சினார்க்கினியர். (தொல். பொருள். 5, 102, 207.) இனிச் சேனாவரையர் "'கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கிக் கடுஞ்சூடருகுவ னினக்கே' என முன்தேற்று உணர்த்தியவாறு கண்டு கொள்க; முன்தேற்று - புறத்தின்றித் தெய்வ முதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல்" என்பர். (தொல். சொல். 383.)

காணு மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளு *
மென்னே குறித்த நோக்கமொடு நன்னுத
லொழிகோ யானென வழிதகக் கூறி
யாம்பெயர் கென்ன நோக்கித் தான்ற
னெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலு மென்றுமென் மகட்கே.

என்பது : தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றது.

— போந்தைப் பசலையார்.

பி - ம். 5. நினக்கெனக். 8. வருந்திய வருஞ்சுரந். 25. மின்று மென்கட்கே 19. காவிற்சிதை.

111. பாலை

உள்ளாங் குவத்தல் செல்லார் சுறுத்தோ
ரெள்ள னெஞ்சத் தேதஞ்சொ ணினை
வருவர் வாழி தோழி யரசர்
யானைக் கொண்ட துகிற்கொடி போல
வலந்தலை யெமயத்து வலந்த சிலம்பி
யோடைக் குன்றத்துக் கோடையொடு துயல்வர
மழையென மருண்ட மம்மர் பலவுட
னெய்களி நெடுத்த நோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பி னுயிர்க்கு
மத்தக் கேழ லட்ட நற்கோட்
செந்நா யேற்றை கம்மென வீர்ப்பக்

---

* ''நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்' என்புழி முன்னர் எல்லாரும் உளப்பாடாகக் கூறிய தோழி ஈண்டும் பல்லோருள்ளும் என்றது தன்னை நீக்கிக்கூறிய தென்னை எனின் : தலைமகன் தன்னை நோக்கி அழிவுதகக்கூறி ஆற்றுளுகி நின்ற நிலைமையைக் கண்டு அருள்பிறவாது ஆயமும் தலைவியும் போய வாறும், அதற்குத்தான் அழிவுதக்குநிற்றலின், அவரொடு போதலாற்றாது பின்னர்ப்போயவாறுந்தோன்றக் கூறுகின்றனாதலிற் பல்லோருள்ளுமெனக் கூறினள்'' நச். (தொல். சொல். 463.)

குருதி யாரு மெருவைச் செஞ்செவி
மண்டமர் முழுவத் தெல்லிக் கொண்ட
புண்டோர் விளக்கிற் றோன்றும்
விண்டோய் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகளை யாற்றுவித்தது. — பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி - மி. 1. உள்ளாங்குறுத்தல். 2. ரல்லனெஞ். 14. புண்டோய்.

112. குறிஞ்சி

* கூன லெண்கின் குறுநடைத் தொழுதி
சிதலை செய்த செந்நிலைப் புற்றின்
மண்புனை நெடுங்கோ டுடைய வாங்கி
யிரைநசைஇப் பரிக்கு மரைநாட் கங்கு
லீன்றணி வயவுப்பிணைப் பசித்தென மறப்புலி
யொளிறேந்து மருப்பிற் களிறட்டுக் குழுமும்
பனியிருஞ் சோலை யெமிய மென்னுய்
தீங்குசெய் தனையே யீங்குவந் தோயே
'நாளிடைப் படினென் றோழி வாழா
டோளிடை முயக்க நீயும் வெய்யை
கழியாக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்
வரையி னெவனே வான்றோய் வெற்ப
கணைக்கலை யிகுக்குங் கறியிவர் சிலம்பின்
மனைப்பருங் காமம் புணர்ந்தமை யறியார்

---

* "ஆற்றதுதீமை அறிவுறு கலக்கமும்" என்னுந் துறைக்கு இதனை உதாரணமாகக் கொண்டும், '"கழியக்.....வெஃகார்" எனப் பிறர்மேல் வைத்துத் தலைவனை அறிவு கொளுத்தினமையின் வழுவாயமைந்தது" என்றும், '"பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்" எனவே, புகழொடு வரூஉம் இன்பம் வெஃகுவரெனக் கொள்ள வைத்தலின் நன்மையும் தீமையும் பிறிதின்மேல் வைத்துக் கூறிற்றும்' என்றும் கூறுவர் நச். பேரா. புகழ்பற்றிய பெருமிதம் என்பர். (தொல். பொருள். 114, 210, 257.)

தொன்றியன் மரபின் மன்ற லயரப்
பெண்கோ ளொழுக்கங் கண்கொள வோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநா ணெஞ்சுக்கமும் காண்குவம் யாமே.

என்பது : இரவுக்குறி வந்த தலைமகனை யெதிர்ப்பட்டு நின்று ம்தாழி சொல்லி வரைவுகடாயது.

— நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர்கிழார்.

பி-ம். 1. கானலெண்கின். கூரலெண்கின். கூருகிரெண்கின். 10. முயங்கமதி. 11. கழியக் காதல. 15. மணப்பெருங்.

113. பாலை

நன்றல் காலையு நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉந் திரிபில் சூழ்ச்சியிற்
புன்றலை மடப்பிடி யகவுநர் பெருமகன்
மாவீசு வண்மகி ழஃஃதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோச
ரிளங்கட் கமழு நெய்தலுஞ் செறுவின்
வளங்கெழு நன்ன டுன்னவென் றேண்மனந்
தழுங்கன் மூதூ ரலரெடுத் தரற்ற
நல்காது துறந்த காதல ரென்றுங்
கல்பொரூஉ மெலியாப் பரட்டி னேனடி
யகன்சூ லஞ்சுரைப் பெய்த வல்சிய
ரிகழ்ந்தன வாயினு மிடம்பார்த்துப் பகைவ
ரோம்பின ருறையுங் கூழ்கெழு குறும்பிற்
குவையிமில் விடைய வேற்ற வொய்யுங்
கனையிருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்
விழவயர்ந் தன்ன கொழும்பஃ றிற்றி
யெழாஅப் பாண னன்னுட் டும்பர்
நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வ
ரெறிபடை கழீஇய சேயரிச் சின்னீ
ரறுதுறை யயிர்மணற் படுகரைப் போகிச்
சேய ரென்றலிற் சிறுமை யுற்றவென்

கையறு நெஞ்சத் தெவ்வ நீங்க
வழாஅ முறைதலு முரியம் பராரை
யுலங்க லஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவ ணெழியப் போகியவர்
செய்வினை மருங்கிற் செலீஇயரென் னுயிரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

— கல்லாடனார்

பி - ம். 2. திருவில் சூழ்ச்சி. 4. னன்மாவீசு. பொற்றி. 10. கால்பொருஉ. 11. யகனல்சூ. 16. றித்தி.

114. முல்லை

கேளா யெல்ல தோழி வேலன்
வெறியய்யர் களத்துச் சிறுபல தாஅய
விரவுவீ யுறைத்த வீர்நறும் புறவி
னுரவுக்கதிர் மழுங்கிய கல்சேர் ஞாயி
றரவுநுங்கு மதியி னெயென மறையுஞ்
சிறுபுன் மாலையு முள்ளா ரவரென
நப்புலந் துறையு மெவ்வ நீங்க
நூலறி வலவ கடவுமதி யுவக்கா
ணெடுங்கொடி நுடங்கும் வான்றேர்ப் புரிசை
யாமங் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்று
மருங்கடிக் காப்பி னஞ்சுவரு மூதூர்த்
திருநக ரடங்கிய மாசில் கற்பி
னரிமதர் மழைக்க ணமைபுரை பணைத்தோ
ளணங்குசா லரிவையைக் காண்குவம்
பொலம்படைக் கலிமாப் பூண்ட தேரே.

என்பது : வினைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

பி - ம். 2. களந்தோ றுறுபல. 11. வானமீனின். (வருகின்ற.)

115. பாலை

அழியா விழவி னஞ்சுவரு மூதூர்ப்
பழியில ராயினும் பலர்புறங் கூறு
மம்ப லொழுக்கமு மாகிய வெஞ்சொற்
சேரியம் பெண்டி ரெள்ளினு மெள்ளுக
நுண்பூ ணெருமை குடநாட் டன்னவென்
னுய்நலந் தொலையினுந் தொலைக வென்று
*நோயில ராகநங் காதலர் வாய்வா
ளெவ்வி வீழ்ந்த செருவிற் பாணர்
கைதொழு மரபின்முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயர் வணர்மருப் பன்ன வொள்ளிணர்ச்
சுடர்ப்பூங் கொன்றை யூழுறு விளைநெற்
றுறைமிசைத் தாஅ மத்த நீளிடைப்
பிறைமருள் வான்கோட் டண்ணல் யானை
சினமிகு முன்பின் வயமா னஞ்சி
யினங்கொண் டொளிக்கு மஞ்சுவரு கவலை
நன்ன ராய்கவின் றொலையச் சேய்நாட்டு
நந்நீத் துறையும் பொருட்பிணிக்
கூடா மையி னீடி யோரே..

என்பது : பிரிவிடை வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

— மாமூலனார்

116. மருதம்

எரியகைந் தன்ன தாமரை யிடையிடை
யரிந்துகால் குவித்த செந்நெல் வினைஞர்
கட்கொண்டு மறுகுஞ் சாகா டளற்றுறி
னுய்கரும் படுக்கும் பாய்புன லூர
பெரிய நாணிலை மன்ற பொரியெனப்
புன்கவி ழகன்றுறைப் பொலிய வொண்ணுத

---

* "நோயிலராக நங்காதலர்" என்பது "நம்மை அறனன்றித் துறத்தலின் நீங்கு வருமென் றஞ்சி வாழ்த்தியது. நம் பொருட்டுத் நீங்கு வருமென்று நினைத்தலின் வழுவா யமைந்தது" என்றூர் நச். (தொல். பொருள். 244.)

னறுமலர்க் காண்வருங் குறும்பல் கூந்தன்
மாமழை நோக்கிற் காழின் வனமுலை
யெஃகுடை யெழினலத் தொருத்தியொடு நெருநை
வைகுபுன லயர்ந்தனை யென்ப வதுவே
பொய்புறம் பொதிந்தியாங் கரப்பவுங் கையிகந்
தலரா கின்றுற் றனே மலர்தார்
மையணி யானை மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவிற் கூடற் பறந்தலை
யுடனியைந் தெழுந்த விருபெரு வேந்தர்
கடன்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
யிரங்கிசை முரச மொழியப் பரந்தவ
ரோடுபுறங் கண்ட ஞான்றை
யாடுகொள் வியன்களத் தார்ப்பினும் பெரிதே.*

என்பது : தோழி தலைமகனை வாயின் மறுத்தது. — பரணர்

பி · மீ. 7. கூழை. 9. நெருநல். 11. யான்கரப்பவுங் கைகடந். 13. க்கடுந்தேர்ப்.

117. பாலை

மௌவலொடு மலர்ந்த மாக்குர னெய்சியு
மவ்வரி யல்கு லாயமு முள்ளா
ளேதிலன் பொய்ம்மொழி நம்பி யேர்வினை
வளங்கெழு திருநகர் புலம்பப் போகி
வெருவரு கவலை யாங்க ணருள்வரக்
கருங்கா லோமை யேறி வெண்டலைப்
பருந்துபெடை பயிரும் பாழ்நாட் டாங்கட்
பொலந்தொடி தெளிர்ப்ப வீசிச் சேவடிச்
சிலம்புக ளியலிச் சென்றவென் மகட்கே
சாந்துளர் வணர்குரல் வாரி வகைவகுத்

* "இதனுள் 'நாணிலை மன்ற' எனத் தோழி கூறி 'அல ராகின்றால்' என வெளிப்படக் கிளத்தலின் வழுவா யமைந்தது" என்றும், "எஃகுடை.....றனே எனத் தலைவி பிறர் அலர் கூறியவழிக் காமஞ் சிறந்து புலந்தவாறு காண்க" என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 241, 164.)

தியான்போது துணைப்பத் தகர. மண்ணு
டன்மே ரன்ன தகைவெங் காதலன்
வெறிகமழ் பன்மலர் பூணயப் பின்னுவிடச்
சிறுபுறம் புதைய நெறிபுதாழ்ந் தனகொ
னெடுங்கான் மாஅத் தூழுறு வெண்பழங்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும்
பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர்
வாணன் சிறுகுடி வடாஅது
தீநீர்க் கான்யாற் றவிரறல் போன்றே.

என்பது : மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

பி - மீ. 10. வண்குயல். 18. ப்பண்ணன்.

118. குறிஞ்சி

சுறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅற்
றேங்கம ழினைர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ
மறுகிற் றுங்குஞ் சிறுகுடிப் பாக்கத்
தியன்முரு கொப்பினை வயநாய் பிற்படப்
* பகல்வரிற் கவ்வை யஞ்சுது மிகல்கொள
விரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்
பெருங்கை யானைக் கோட்பிழைத் திரீஇய
வடுபுலி வழங்கு மாரிரு ணடுநாட்
டனியை வருத லதனினு மஞ்சுது
மென்னு குவள்கொ ருனே பன்னுட்
புணர்குறி செய்த புலர்குர லேனற்
கிளிகடி பாடலு மொழிந்தன
ளளிய டானின் னளியல திலளே.

என்பது : செறிப்பறிவுறீஇ யிரவும்பகலும் வாரலென்று வரை வுக்டாயது †

— கபிலர்.

பி - மீ. 5. திகண்முருகு. 6. யஞ்சுது.

---

* "இது பகல்வார லென்றது. (தொல். பொருள். 210.)
† இத்துறைக்கே கொள்வர் நக்கீரர். (இறை. களவி. 30.)

119 பாலை.

நுதலுந் தோளுந் திதலை யல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும் வாட
வருந்துவ ளிவளெனத் திருந்துபு நோக்கி
வரைவுநன் றென்ற தகலினு மவர்வறி
தாறுசென் மாக்க ளறுத்த பிண்டை
யேறுபெறு பாம்பின் பைந்துணி கடுப்ப
நெறியயற் றிரங்கு மத்தம் வெறிகொள
வுமண்சாத் திறந்த வொழுகை யடுப்பி
னெண்சிலை மழவ ருண்புழுக் கயருஞ்
சுரன்வழக் கற்ற தென்ற தரஞ்சிறந்து
நெய்த வுருவி னெதிலங் ககலிலைத்
தொடையமை பீலிப் பொலிந்த கடிகை
மடையமை திண்சுரை மரக்காழ் வேலொடு
தனியம ரழுவந் தம்மொடு துணைப்பத்
துணிகுவர் கொல்லோ தாமே துனிகொள
மறப்புலி யுழந்த வசிபடு சென்னி
யுறுநோய் வருத்தமொ டுணீஇய மண்டிப்
படிமுழ மூன்றிய நெடுநல் யானை
கைதோய்த் துயிர்க்கும் வறுஞ்சுனை
மைதோய் சிமைய மலைமுத லாறே.

என்பது : செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொற்றது. தோழி தலைமகட்குச் சொற்றதூஉமாம்.

— குடவாயிற் கீரத்தனார்.

பி - ம். 6. வேறு பெறு. 7. நெறியவற். 8. உமண்சாக்கொண்ட. 11. நெய்யுலுருவி. 15. துனிகொள்பு. 16. வரிபடு.

120. நெய்தல்

நெடுவேண் மார்பி னரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீ னருந்தும்
பைங்காற் கொக்கி னிரைபறை யுகப்ப

வெல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயிற்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழின் மழைக்கண் கலுழ விவளே
பெருநா ணணிந்த சிறுமென் சாயன்
மாணலஞ் சிதைய வேங்கி யாஞ
தழலுறுடங் கினளே பெரும வதனற்
கழிச்சுரு வெறிந்த புட்டா ளத்திரி
நெடுநீ ரிருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் லிளையரோ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை யோங்கிய வெண்மணற் படப்பை
யன்றி லகவு மாங்கட்
சிறுகுர னெய்தலெம் பெருங்கழி நாட்டே. *

என்பது: தோழி பகற்குறிக்கட் டலைமகளை யிடத்துய்த்து வந்து தலைமகனை யெதிர்ப்பட்டு நின்று சொல்லியது.

பி-ம். 11. கடுநீ.

— நக்கீரனார்.

களிற்றியாணைநிரை முற்றும்

---

* இப் "பாட்டுப் பகற்குறிக்கண் இடத்துய்த்துத் தலைவனை எதிர்ப்பட்டு உரைத்தது" என்றும், "நெய்தற்கு ஏற்பாடு வந்தது" என்றும், "வல்வில்.....நாட்டே" என்பது களவு அறிவுறு மென்றஞ்சாது வருகவென்றலின் வழுவேனும் தலைவி வருத்தம்பற்றிக் கூறலின் அமைத்தார் என்றும், "இளையரோடு வந்து தனித்துக் கூடுதலும் கொள்க" என்றுங் கூறி, அதற்கு "வல்வில்.....துண்டோ" என்ற அடிகளை உதாரணங் காட்டியும், தலைவன்பிறவும் ஊர்தற்குக், "கழிச்சுரு வெறிந்த புட்டாளத்திரி.....தசைஇ" என்றதனைச் சான்று காட்டியுஞ் செல்வர். நச். (தொல். பொருள். 8., 210., 212.)

ஸ்ரீ:

இரண்டாவது

மணிமிடைபவளம்

---

121. பாலை

* நாணகை யுடைய நெஞ்சே கடுந்திறல்
வேனி னீடிய வானுயர் வழிநாள்
வறுமை கூறிய மண்ணீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கிற் றுவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு
செங்கோல் வாலினர் தயங்கத் தீண்டிச்
சொரிபுற முரிஞ்சிய நெறியயன் மராஅத்
தல்குறு வரிநிழ லசைஇ நம்மொடு
தான்வரு மென்ப தடமென் றோளி
யூறுகணை மழவ ருள்கீண் டிட்ட
வாறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்
கன்மிசைக் கடுவளி யெடுத்தலிற் றுணைசெத்து

---

* "உடன்சேறல் செய்கையொ டன்னவை பிறவு, மடம் பட வந்த தோழிக் கண்ணும்" என்ற துறையில் நெஞ்சிற்குக் கூறியதாக இப் பாட்டினைக் கொள்வர் நச். இனிப் போ. "பிறர் மடம் பொருளாக நகை தோன்றிற்று" என்பர். (தொல். பொருள். 146. 252.)

*வெருளேறு பயிரு மாங்கட்
15 கருமுக முசுவின் கானத் தானே.

என்பது : தோழியாற் றலைமகளை யுடன்வரு மெனக் கேட்ட தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது.

— மதுரை மருதனிளநாக்கன்.

பி - ம். 1. நாநகை. கடுந்தெறல். 4. கோடுகுழி. றாவற்கல. 5. மடப்பிடி கயந்தலை. 8. சொரிபுற முரிஞ்சிய. 11. யுறுகண். 13. கனைவிசை.

122. குறிஞ்சி

†இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் முயினுந் துஞ்சா தாகு
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
5 பிணிகோ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணார் காவலர் கடுகுவ
ரிலங்குவே லிளையர் துஞ்சின் வையெயிற்று

---

*"பன்றி புல்வாயுழையே.....எறெனற்குரிய" என்ற சூத்திரத்துப் புல்வாய் எறெனப்பட்டதற்கு இவ்வடியை உதாரணமாகக் காட்டுவர். பேரா. (தொல். பொருள். 594.)

†இப்பாட்டுச் 'சிறைகாவலெல்லாம் வந்த செய்யுள்' எனக் கொள்வர் நக்கீரனார். (இறை. களவு. 30.) தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல். நாய் துஞ்சாமைபோல்வனவற்றுள் தலைவன் குறியின்கண் தலைவியரப் பெருமல் நீட்டித்தலுக்கு இப்பாட்டினை உதாரணமாகக் காட்டியும், 'களவலராயினும்' என்ற சூத்திரத்து, 'அன்னபிறவும் செவிலிமேன' என்றதனுள் 'வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்' என்பதனுங் கொள்க என்றும், "நொச்சியாவது, காவல்; இதற்கு நொச்சி ஆண்டுச் சூடுதலும் கொள்க. அது மதிலைக் காத்தலும் உள்ளத்தைக் காத்தலுமென இருவர்க்குமாயிற்று. இக் கருத்தானே 'நொச்சி வேலித் திதன் னுறைந்தை' என்றுர் சான்றோரும்" என்றும் கூறுவர் நச். "முட்டுவயிற் கழற"லுக்கு உதாரணமாகக் கொண்டு, "இது தலைமகன் கேட்பக் கழறியுரைத்தது" என்பர் பேரா. (தொல். பொருள். 107., 115., 271.)

வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழு
மரவவாய் ஞமலி மகிழாது மடியிற்
பதலுரு வுறழ்நிலாக் கான்று விசும்பி
ன்கல்வாய் மண்டில நின்றுவிரி யுமிழ்மே
திங்கள்கல் சேர்பு கனையிருண் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலை யொருநா
ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, யதனு
லிரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றூற் றோழிநங் களவே.

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழிக்குச் சொல் லுவாளாய்த் தலைமகள் சொற்றது. தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியதாமாம். இப்பாட்டு இரவுக்குறி.

— பரணர்.

பி - ம். 8. மருளும். 9. குரையாது.

123. பாலை

* உண்ணை மையி னுயங்கிய மருங்கி
னுடாப் படிவத் தான்றேர் போல
வரைசேர் சிறுநெறி நிரைபுடன் செல்லுங்

---

* "இது போவேமோ தவிர்வேமோ என்றது" என்றும், "'உண்ணைமையின்' என்னும் அகப் பாட்டினுள், 'இறவொடு வந்து.....பொருட்கே' என்றவழி 'அழிதக வுடைமதி வாழிய நெஞ்சே' என்றதனன் நிலையின்றுகுதி என நெஞ்சினை உறுப்பு டையது போலக் கழறி நன்குரைத்தவாறும் ஓதத்தையும் நெஞ் சையும் உயர்திணையாக்கி உவமவாயிற்படுத்தவாறுங் காண்க" என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 146, 196.)

கான யானை கவினழி குன்ற
மிறந்துபொரு டருதலு மாற்றுய். சிறந்த
சில்லிலங் கூந்த னல்லகம் பொருந்தி
யொழியின் வறுமை யஞ்சுதி யழிதக
வுடைட்மதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவே லெஃகி னிமைக்கு
மழைமருள் பஃறோன் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடன்மண்டு பெருந்துறை
யிறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல
வொன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே.

என்பது : தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. இப் பாட்டினுட் படிவமென்பது விரதம்.

— காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

பி ம். 8. உடையைவாழியெ னெஞ்சே. 9. லெஃகிலை யிமைக்கும்.

124. முல்லை

* நன்கலங் களிற்றொடு நன்னு நேர்ந்தி
வந்துதிறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து
சென்றீ கென்ப வாயின் வேந்தனு
நிலம்வருத் துறுஅ வீண்டிய தானையொ
டின்றே புகுதல் வாய்வது நன்றே
மாட மாநகர்ப் பாடமை சேக்கைத்
தனிதீர் கொள்கைநங் காதலி யினிதுறப்
பாசறை வருத்தம் வீட நீயு
மின்னுநிமிர்ந் தன்ன பொன்னியற் புனைபடைக்
கொய்சுவற் புரவிக் கைகவர் வயங்குபரி

* "நன்கலங்.....வழிமொழிந்து' என்புழி நன்கலந் திறை கொடுத்தோ ரென்றலின், 'பகைவயிற் பிரிவே பொருள் வருவாயாயிற்று" என்பர் நச். (தொல். பொருள். 29.)

வண்பெயற் கவிழ்ந்த பைங்கொடி முல்லை
வீகமழ் நெடுவழி யூதுவண் டிரியக்
கூலி யெய்தக் கடவுமதி மாலை
யந்தி காவ லம்பணை யிமிழிசை
யரமிய வியலகத் தியம்பு
நிரைநிலை ஞாயி னெடுமதி லூரே.

என்பது : தலைமகன் தேர்ப்பாகற் குரைத்தது.

— மதுரை அறுவைவாணிக னிளவேட்டனார்.

பி-ம். 6. மாடமாண்கர். 9. பொன்னயிற். 11. வன்பெயற். 12. நெடுவளி.

125. பாலை

அரம்போ முவ்வளை தோணிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை நோற்றல் வேண்டி
யீர்ங்கா முன்ன வரும்புமுதி ரீங்கை
யாலி யன்ன வால்வீ தாஅய்
வைவா லோதி மையணை லேய்ப்பக்
கோலுறு குவளைப் போதுபிணி யவிழப்
பாடாஅப் பைங்கட் பாவடிக் கயவாய்க்
கடாஅ மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய வோங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத் துழிதரப்
*பனியடூஉ நின்ற பானுட் கங்குற்
றமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய வலைத்தி முரணில் காலைக்

---

* 'பனியடூஉ நின்ற.....காலை' என முன்பனியாமங் குறிஞ்சிக்கண் வந்தது" என்றும், "பலருங் கைதொழும் மரபினையுடைய கடவுட்டன்மை யமைந்த செய்வினை யெனவே ஒத்பிரிதலென்பது பெற்றும்; 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்பதனாற் கிழவனும் கிழத்தியும் இல்லறத்திற் சிறந்தது பயிற்றுக்கால் இறந்ததனாற் பயனின்றுதலின், இல்லறம்

கைதொழு மரபிற் கடவுட் சான்ற
செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகான் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
வொன்பது குடைஇ நன்பக லொழித்த
பீடின் மன்னர் போல,
வோடுவை மன்னுல். வாடைநீ யெமக்கே.

என்பது: தலைமகன் வினைமுற்றி மீண்டமை தோழி. யுணரத் தலைமகள் சொல்லியது.

— பரணர்.

பி-ம். 5. வைவரலோதி 6. தாதுறு. 9. பொங்குசெலற். 10. திழிதர. 11. பனியடுநி. தலைமகன் வினைமுற்றி மீண்டமை யுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

126. மருதம்

* நின்வாய் செத்து நீபல வுள்ளிப்
பெரும்புன் பைதலை வருந்த லன்றியு
மலைமிசைத் தொடுத்த மலிந்துசெல னீத்தந்
தலைநாண் மாமலர் தண்டுறைத் தயங்கக்
கடல்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்
றறல்வார் நெடுங்கயத் தருநிலை கலங்க

நிரம்பாதென்றற்கு 'நிரம்பா வாழ்க்கை' என்றார்" என்றும், "'பாணட் கங்குலின்.....முனிய அலைத்தி.....கடவுட் சான்ற செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்.....ஓடுவை' என்றது இராப் பொழுது அகலாது நீட்டித்ததற்கு ஆற்றாளாய்க் கூறினளென்று உணர்க" என்றும் கூறுவர் நச். தேவர் காரணமாகப் பிரியும் பிரிவுக்கு இதனை உதாரணமாகக் கொள்வர் இளம்பூரணவடிகள். (தொல். பொருள். 7, 26, 188. 30.)

* தன்னெஞ்சினை இரவு விலக்கியது இப்பாட்டு எனக் கொள்வர் நச். (தொல். பொருள். 102.)

மாலிரு ணடுநாட் போகித் தன்னெயர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்
கவ்வாங் குந்தி யஞ்சொற் பாண்மக
ணெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகிற்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பிற் பல்வே லெவ்வி
நயம்புரி நன்மொழி யடக்கவு மடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனெடு பொருத வன்னி போல
விளிகுவை கொல்லோ நீயே கிளியெனச்
சிறிய மிழற்றுஞ் செவ்வாய்ப் பெரிய
கயலென வமர்த்த வுண்கட் புயலெனப்
புறந்தாழ் பிருளிய பிறங்குகுர லெம்பான்
மின்னேர் மருங்குற் குறுமகள்
பின்னிலை விடாஅ மடங்கெழு நெஞ்சே.

என்பது : 1. உணர்ப்புவயின்வாரா வூடற்கண் தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது. 2. அல்லகுறிப்பட் டழிந்த தலை மகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம். 3. தோழியைப் பின்னின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்.

—நக்கீரர்.

பி - ம். 4. பரப்பின். 7. போகிய தன்னை. 12. கலந்தருஉம் 17, சொன்மோ.

127. பாலை

இலங்குவளை நெகிழச் சாஅ யல்கலுங்
கலங்களு ருழந்து நாமிவ ணெழிய
வலம்படு மூரசிற் சேர லாதன்
மூன்நீ ரோட்டிக் கடம்பெறிந் நிமயத்து
முன்னேர் மருள வணங்குவிற் பொறித்த
நன்னகர் மாந்தை முற்றத் தொன்னர்

பணிதிறை தந்த பாடுசா னன்கலம்
பொன்செய் பாவை வயிரமொ டாம்ப
லொன்முவாய் நிறையக் குவைஇ யின்றவ
ணிலந்தினத் துறந்த நிதியத் தன்ன
வொருநா ளொருபகற் பெறினும் வழிநாட்
டங்கலர் வாழி தோழி செங்கோற்
கருங்கால் மராத்து வாஅல் மெல்லிணர்
சுரிந்துவணர் பித்தை பொலியச் சூடிக்
கல்லா மழவர் வில்லிடந் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழிபெயர் தேஎத்த ராயினும்
பழிதீர் காதலர் சென்ற நாட்டே.

என்பது : பிரிவிடை ஆற்றுளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

—மாமுலனார்.

பி.- ம். 4. முன்னீரோட்டி. கடம்பறுத். 9. யன்றவண்.

128. குறிஞ்சி

மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்ஞ ரன்ன கொடுமையொ டின்றே
யாமங் கொளவரிற் கனைஇக் காமங்
கடலினு முரைஇக் கரைபொழி யும்மே
யெவன்கொல் வாழி தோழி மயங்கி
யின்ன மாகவு நன்னர் நெஞ்ச
மென்னெடு நின்னெடுஞ் சூழாது கைம்மிக்
*கிறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்

---

* "இறும்புபட்...கன்மிசைச் சிறுநெறி" என்பது குறிஞ்சி ஒழுக்கத்திற்குக் குறிஞ்சி நிலம் உரியதாயிற்று என்றும், "காமம் கரை பொழியா நிற்கவும் என்ன நன்றிகருதி இருவரொடுஞ் சூழாது

கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுதெறி
மூரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியலி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே.

என்பது : இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானுகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

—கபிலர்.

பி - ம். 3. கொள்வரிற். 6. இன்னண. 13. படுஞ்சூழியவின்.

129. பாலை

உள்ளல் வேண்டு மொழிந்த பின்னென
நள்ளென் கங்கு னடுங்குதுணை யாயவர்
நின்மறந் துறைதல் யாவது புன்மறந்

சென்றது நெஞ்சு என இரண்டும் கூறினுள். மனமடிந்தன்றென்பது பொழுது. சிறுநெறியென்பது ஆற்றின்னுமை. இதனைப் பொருளியலுட்கூறுது, தன்வயினுரிமையும் அவன்வயிற்பாரத்தைமையும் பற்றி ஈண்டுக்கூறினன் " என்றும், 'மன்றுபாடவிந்து' என்பது, பொழுதுவழுவுதலிற் குற்றங்காட்டியது என்றும், 'நெஞ்சம் தளரடிதாங்கிய சென்றதின்றே' என்பது உறுப்புடையதுபோல அழுகைபற்றிக் கூறியது என்றும்கூறி, அத்துறைக்கே உதாரணமாகக் கொள்வர் நச். (தொல். பொருள். 5; 111, 210, 196, 6.)இனிப்பேரா. 'அச்சத்தினகறல்'என்னும் மெய்ப்பாட்டிற்கு இதனை உதாரணமாகக்காட்டி 'அதன்கருத்தாவது: நாம் அவர்இருளிடைவருதலே தமஞ்சி அகன்று வலித்திருப்பவும், என்னையும் நின்னையுங் கேளாது என்னெஞ்சு போவானேன் என்றவாறுயிற்று' என்பர். (ஷ - ஷ. 271.)"செல்வர் மனத்திசைங்கி"என்னும் சிந்தாமணிச் செய்யுளுரையில் 'யானைக் கயிற்றுப்புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி" என்பது வழியின் ஒக்கத்தைக் கூறியதாகக் கொள்வர் நச். (சிந். 1416.)

தலங்கல் வான்கழை யுதிர்நென் னேக்கிக்
கலிபிணை விளிக்குங் கானத் தாங்கட்
கல்சேர் பிருந்த கதுவாய்க் குரம்பைத்
தாழிமுதற் கலித்த கோழிலைப் பருத்திப்
பொதிவயிற் றிளங்காய் பேடை யூட்டிப்
போகில்பிளந் திட்ட பொங்கர் வெண்காழ்
நல்கூர் பெண்டி ரல்குற் கூட்டுங்
கலங்குமுனைச் சீறூர் கைதலை வைப்பக்
கொழுப்பா தின்ற கூர்ம்படை மழவர்
செருப்புடை யடியர் தெண்சுனை மண்டு
மருஞ்சுர மரிய வல்ல வார்கோற்
றிருந்திழைப் பணைத்தோட் டேஞறு கதுப்பிற்
குவளை யுண்க ணிவளொடு செலற்கென
நெஞ்சுவா யவிழ்ந்தனர் காதல
ரஞ்சி லோதி யாயிழை நமக்கே.

என்பது : பிரிவிடை வேறுபட்டதலைமகட்குத் தோழிசொல்லியது.

—குடவாயிற் கீரத்தனார்.

பி - ம். 3. முன்மறைந் 4. முதிர்நெல். 10. ரல்கத்கூட்டும்.

130. நெய்தல்

*அம்ம வாழி கேளிர் முன்னின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னே
நுண்டாது பொதிந்த செங்காற் கொழுமுகை
முண்டகங் கெழீஇய மோட்டுமண லடைகரைப்
பேஎய்த் தலைய பிணரரைத் தாழை
யெயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன்
வயிறுடைப் போது வாலிதின் விரீஇப்

* பாங்கன் கழறத்தலைமகன் கழற்றெதிர் மறுத்ததற்கே உதாரணமாகக் கொண்டார் நக்கீரரும் (இறை. களவு. 3.)

புலவுப்பொரு தழிந்த பூநாறு பரட்பி
னீவர்திரை தந்த வீர்ங்கதிர் முத்தங்
*கவர்நடைப் புரவிக் கால்வடித் தபுக்கு
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்
போதுபுறங் கொடுத்த வுண்கண்
மாதர் வாண்முக †மதைஇய நோக்கே.

என்பது : கழறிய பாங்கற்குத் தலைமகன் கழற்றெதிர்மறுத்தது.

—வேண்கண்ணனார்.

பி - ம். 3. குறு முகை. 6: நெடுங்கோடு. 8. பொருதிழிந்த 10, கவர்பரி. கவர்காற். 12. திறக்கும் 13. புறக்கொடுத்த. (சொல்லியது. கழற்றெதிர்மறை.)

131. பாலை

‡ விசும்புற நிவந்த மாத்தா ளீகைப்
பசுங்கேழ் மெல்லிலை யருகுநெறித் தன்ன
வண்டுபடு பிருளிய தாழிருங் கூந்தற்
சுரும்புண விரிந்த பெருந்தண் கோதை
யிவளினுஞ் சிறந்தன் றீத னமக்கென
வீளை யம்பின் விழுத்தொடை மழவர்

---

* 'கவர்விருப்பாகும்' என்றசூத்திரத்திற்கு இவ்வடியை உதாரணமாகக் காட்டினர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

† 'மத' வென்பது ஈண்டு வனப்பினை உணர்த்திற்று. (தொல் சொல். 362, 378.) 'அம்மவாழி தோழி' என்பது பன்மை யுணர்த்திற்று. (சிந். 2300 உரை.)

‡ ஆபெயர்த்துத்தருதலும் என்னுந்துறைக்கு இப்பாட்டினை உதாரணமாகக் காட்டி., "இதனுள் 'மறவர் நாளாவுய்த்த' எனவேந் தறுதொழில் அல்லாத வெட்சித்திணையும் பொதுவியற் கரந்தைக் கண்ணே கொள்க' என்றும். 'பெயரும் பீடுமெழுதி யூதர்தொறும்

நாளா வுய்த்த நாம வெஞ்சுரத்து
நடைமெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி யுகுநீர் துடைத்த வாடவர்
பெயரும் பீடு மெழுதி யதர்தொறும் *
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலுன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
வெருவரு தகுந் கான நம்மொடு
வருக வென்னுதி யாயின்
வாரே னெஞ்சம் வாய்க்கநின் வினையே.

என்பது : பொருள்கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 6. வீவாயம்பின். 15. வாரேநெஞ்சம்.

132. குறிஞ்சி

ஏனலு மிறங்குகுர லிறுத்தன நோய்மலிந்
தாய்கவின் றொலைந்தவிவ ணுதலு நோக்கி
யேதில மொழியுமிவ் வூரு மாகலிற்
களிற்றுமுகந் திறந்த கவுளுடைப் பகழி
வானிணப் புகவிற் கானவர் தங்கை
யம்பணை மென்றோ ளாயிதழ் மழைக்க
ணெல்கியற் கொடிச்சியை நல்கினே யாயிற்
கொண்டனை சென்மோ நுண்பூண் மார்ப
துளிதலைத் தலைஇய சார னளிசூனைக்
கூம்புமுகை யவிழ்த்த குறுஞ்சிறைப் பறவை

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' என அகத்திற்கும் வருதலிற்பொ வியலாயிற்று" என்னும் 'வருக வென்னுதி யாயின், வாரே னெஞ்ச வாய்க்கநின் வினையே' என்பது மறுத்துரைப்பதுபோலத் தறுகண் மைபற்றிய பெருமிதங் கூறிற்று" என்றுங் கூறுவர் நச். (தொல். பொருள். 60,196.) * இம்மூன்றடிகளும் 67 ம்பாட்டினும் வந்தன.

வேங்கை விரியிண ரூதிக் காந்தட்
டேனுடைக் குவிகுலத் தஞ்சி யானை
யிருங்கவுட் கடாஅங் கனவும்
பெருங்கல் வேலிறும் முறைவி னூர்க்கே.

எளிப்பு : தோழி தலைமகனை இடத்துய்த்துவந்து தலைமகனெதிர்ப்பட்டு நின்று வரைவுகடாயது.

—தாயங்கண்ணனார்.

பி - ம். 6. ளாயிழைமழைக்கண். 9. துளிதலைக்கலைஇய 11. விரியிண ருதிரக்காந்தட். (தையங் கண்ணனார். கையங்கண்ணனார். தகையங் கண்ணனார். கதையங் கண்ணனார்.)

133. பாலை

*குன்றி யன்ன கண்ண குரூஉமயிர்ப்
புன்ருள் வெள்ளெலி மோவா யேற்றை
செம்பரன் முரம்பிற் சிதர்ந்த பூழி
நன்னுள் வேங்கைவீ நன்களம் வரிப்பக்
5 கார்தலை மணந்த பைம்புதற் புறவின்
வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழுங்
கொல்லை யிதைய குறும்பொறை மருங்கிற்
கரிபரந் தன்ன காயாஞ் செம்மலொ
டெரிபரந் தன்ன விலமலர் விரைஇப்
10 பூங்கலுழ் சுமந்த தீம்புனற் கான்யாற்று
வான்கொ டேவல் வளிதர வுண்கு
மெம்மொடு வருதல் வல்லியோ மற்றெனக்
கொன்னென்று வினவினர் மன்னே தோழி
யிதன்முள் ளொப்பின முகைமுதிர் வெட்சி
15 கொல்புனக் குருந்தொடு கல்லறைத் தாஅ
மிளாநாட் டத்தத் தீர்ஞ்சுவற் கலித்த

---

* இது பாலைக்கண் இரங்கல் நிகழ்ந்தது என்பர் கச். (தொல். பொருள். 15.)

வரிமரற் கறிக்கு மடப்பிணைத்
திரிமருப் பிரலேய காடிறந் தோரே.

என்பது : பிரிவிடை யாற்றாளாயினளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

—உறையூர் மருத்துவன்றாமோதரனார்.

பி - ம். 6. பஞ்சினிளமழை. 10. பூங்கலுழ்சிறந்த. 11. வள்ளர.

134. முல்லை

வானம் வாய்ப்பக் கவினிக் கானங்
கமஞ்சூன் மாமழை கார்பயந் திறுத்தென
மணிமருள் பூவை யணிமல ரிடையிடைச்
செம்புற மூதாய் பாத்தலி னன்பல
முல்லை வீகழ றூஅய் வல்லோன்
செய்கை யன்ன செங்நிலப் புறவின்
வாஅப் பாணி வயங்குதொழிற் கலிமாத்
தாஅத் தாளிணை மெல்ல வொதுங்க
விடிமறந் தேமதி வலவ குவிமுகை
வாழை வான்பூ வூழுறு புதிர்ந்த
வொழிகுலை யன்ன திரிமருப் பேற்றெடு
கணைக்கா லம்பிணைக் காமர் புணர்நிலை
கடுமான் றேரொலி கேட்பி
னடுநாட் கூட்ட மாகலு முண்டே?

என்பது : வினைமுற்றி மீண்ட தலைமகன் பாகற்குரைத்தது.

—சீத்தலைச் சாத்தனார்.

உண்டே என்பதன் கண் ணுள்ள ஏகாரம் விண.

பி - ம். 3. மணிமலர்ப்பூவை. 9. தேதுமதி. 14. ஆகலு முண்டோ. வினைமுற்றி மறுத்தாராகின்ற; பாகற்குச் சொல்லியது.

135. பாலை

திதலை மாமை தளிர்வனப் பழுங்கப்
புதலிவர் பீரி னெதிர்மலர் கடுப்பப்
பசலை பாய்ந்த நுதலே னுகி
யெழுதெழின் மழைக்கண் கலுழ நோய்கூர்ந்
தாதி மந்தியி னறிவுபிறி தாகிப்
பேதுற் றிசினே காதலந் தோழி
காய்கதிர் திருகலிற் கனைந்துகால் கடுகி
யாடுதளி நிருப்பைக் கூடுகுவி வான்பூக்
கோடுகடை கழங்கி னறைமிசைத் தாஅங்
காடிறந் தனரே காதல ரடுபோர்
வீயா விழுப்புகழ் விண்டோய் வியன்குடை
யீரெழு வேளி னியைந்தொருங் கெறிந்த
கழுவுள் காழூர் போலக்
விளிந்தன்று * மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொற்றது.

—பரணர்.

பி - ம். 13. காழூர். 14. கலங்கின்று.

136 மருதம்

மைப்பறப் புழுக்கி நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
யங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் வேண்டிய துகடீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படிமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணு மிமையார் நோக்குபு மறைய

* 'மாது' அசைநிலை. (தொல். சொல். 279.)

மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறிக்கும் பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் றலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்த
ரிழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீந்த தலைநா ளிரவி
னுவர்நீங்கு கற்பினெம் முயிருடம் படுவி
முருங்காக் கலிங்க முழுவதும் வளைஇப்
பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவிய
ருறுவளி யாற்றச் சிறுவரை நிறவென்
வார்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலி
னுறைகழி வாளி னுருவுபெயர்ந் திமைப்ப
மறைதிற னறியா ளாகிப் பையென
நாணின ளிறைஞ்சி யோளே பேணிப்
பரூஉப்பகை யாம்பற் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பிமி ராய்மலர் வேய்ந்த
விரும்பல் கூந்த லிருண்மறை யொளித்தே.

என்பது: உணர்ப்புவமின்வாரா வூடற்கண் தலைமகன் தன் நெஞ் சிற்குச் சொல்லியது.

—விற்றூற்று மூதெயினனார்.

இப்பாட்டிற் சகடமென்றது உரோகணியை.

பி-ம்: 1. புழுக்கி னெய்க்கனி. 5. சகடமண்டிய. 8. விருப் புற்று. 11. பழங்கன்று கறித்த. 15. தோன்றி. 18. ஈத்த. 21. தற்குறுவியர். 29. இருண்மழை.

---

* இப்பாட்டினைக் களவின்வழி நிகழ்ந்த கற்புக்கு உதாரண மாகக் காட்டினர் நச். "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணமென்ப" என்ற சூத்திரவுரையில், "பெரும்

137. பாலை

ஆறுசெல் வம்பலர் சேறுகிளைத் துண்ட
சிறுபல் கேணிப் பிடியடி நசைஇக்
களிறுதொடூஉக் கடக்குங் கான்யாற் றத்தஞ்
சென்றுசேர் பொல்லா ராயினு நினக்கே
வென்றெறி மூரசின் விறற்போர்ச் சோழ
ரின்கடுங் கள்ளி னுறந்தை யாங்கண்
வருபுன னெரிதரு மிகுகரைப் பேர்யாற்
றுருவ வெண்மணன் மூருகுநாறு தண்பொழிற்
பங்குனி முயக்கங் கழிந்த வழிநாள்
வியிலை யமன்ற மரம்பயி லிறும்பிற்
றீயி லடுப்பி னரங்கம் போலப்
பெரும்பாழ் கொண்டன்று நுதலே தோளுந்
தோளா முத்திற் றெண்கடற் பொருநன்
றிண்டேர்ச் செழியன் பொருப்பிற் கவாஅ
னல்லெழி னெடுவேய் புரையுந்
தொல்கவின் றொலைந்தன நோகோ யானே.

என்பது : தலைமகன் பிரியுமெனக்கருதி வேறுபட்டதலை மகட்குத் தோழி சொல்லியது.

—உறையூர் முதுகூத்தனர்.

பி ம். சேர்பொல்வாரா. 10. மாபயிலிறும்பின்.

138. குறிஞ்சி

*இகுளை கேட்டிசிற் காதலந் தோழி
குவளை யுண்கண் டெண்பனி மல்க

புழுக்குற்றனின்.....திறவென என்பது 'பொறிறுதல் வியர்த்தல்' என்னும் மெய்ப்பாடாகு மென்றும், "இம்மெய்ப் பாடுதலைமகற்கு உரித்தன்று, உட்கும் நாணும் அவற்கு இன்மையின்" என்றும் கூறுவர் போரா. (தொல். பொருள். 261.) மைப்பு - ஒளிமழுக்கம்.

* இப்பாட்டினைக் "கட்டினுங்கழங்கினும் வெறியென இரு வரு, மொட்டியதிறத்தாற் செய்தி' என்றதனைக்கு உதாரணமா

வறிதியான் வருந்திய செல்லற் கன்னை
பிறிதொன்று கடுத்தன ளாகி வேம்பின்
வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி
யுடலுநர்க் கடந்த கடலங் தானைத்
திருந்திலை நெடுவேற் றென்னவன் பொதியி
லருஞ்சிமை யிழிதரு மார்த்துவர லருவியிற்
றதும்புசீ ரின்னியங் கறங்கக் கைதொழு
துருகெழு சிறப்பின் முருகுமனைத் தரீஇக்
கடம்புங் களிறும் பாடித் தொடங்குபு
தோடுந் தொடலையுங் கைக்கொண் டல்கலு
மாடி னளாத னன்றே நீடு
நின்னெடு தெளித்த நன்மலை நாடன்
குறிவர லரைநாட் குன்றத் துச்சி
நெறிகெட வீழ்ந்த துன்னருங் கூரிருட்
டிருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட்
கொழுமடற் புதுப்பூ வுதுங் தும்பி
நன்னிற மருளு மருவிட
நின்னு நீளிடை நினையுமென் னெஞ்சே

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லு வாளாய்த் தலைமகள் சொல்லியது.

— எழுஉப்பன்றி நாகன்குமரனார்.

பி - ம். 11. நுடங்குபு. 12. டல்கலும் பாடின னுத னன்றே நீடு.
(தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)

139. பாலை

துஞ்சுவது போல விருளி விண்பக
விமைப்பது போலக் மின்னி யுறை கொண்

க்கொண்டு, இதன்கண் " விதந்துகூறுமையின் இரண்டும் ஒருங்கு வந்தது" என்றும், "கடம்புங்களிறும்.....நன்றே" என்பதுதலை வற்கு வெறியாட்டுணர்த்தியது என்றுங் கூறுவர் நச். (தொல். பொருள். 115, 210.)

டேறுவது போலப் பாடுசிறந் துரைஇ
நிலநெஞ் சுட்க வோவாது சிலைத்தாங்
கூர்தளி பொழிந்த வார்பெயற் கடைநா
ளீன்றுநா ளுலந்த வாலா வெண்மழை
வான்றோ யுயர்வரை யாடும் வைகறைப்
புதலொளி சிறந்த காண்பின் காலைத்
தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
வெண்புறக் குடைய திரிமருப் பிரலை
வார்மண லொருசிறைப் பிடவவிழ் கொழுநிழற்
காமர் துணையொ டேமுற வதிய
வரக்குநிற் வுருவி னீயன் மூதாய்
பரப்பி யவைபோற் பாஅய்ப் பல்வுட
னீர்வார் மருங்கி னீரணி திகழ
வின்னும் வாரா ராயி னன்னுதல்
யாதுகொன் மற்றவர் நிலையே காதலர்
கருவிக் காரிடி யிரீஇய
பருவ மன்றவர் வருதுமென் றதுவே.

என்பது : பிரிவிடைமெலிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—இடைக்காடனார்.

இப்பாட்டுத் தொழிலாற் பாலையாயிற்று.

பி - ம். 6. ளீன்றுவரலுழந்த. 8. புதலோணிந்த. 12. துணையோடமர்துயில். 18. இரீஇப் பருவ மன்னவர்.

---

* இப்பாட்டினை இத்துறைக்கேகொண்டு, "இம்மணிமிடைபவளத்துப் பாலைக்கண் மூன்பனியும் வைகறையும் ஒருங்குவந்தன" என்றும், "கருவிக்காரிடியிரீஇய பருவமன்றவர் வருதுமென்றது வே" என்றது கார்குறித்து வருவலென்றலின், அறுதிங்கள் இடையிட்டது என்றும் கூறுவர். நச். (தொல். பொருள். 12, 189.)

140. நெய்தல்

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவ
ரிருங்கழிச் செறுவி னுழாஅது செய்த
வெண்க லுப்பின் கொள்ளை சாற்றி
யென்றூழ் விடர குன்றம் போகுந்
கதழ்கோ லுமணர் காதன் மடமகள்
சில்கோ லெல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லி னேரே வெண்க லுப்பெனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய
விளியறி ளுமலி குரைப்ப வெரீஇய
மதர்கயன் மலைப்பி னன்ன கண்ணெமக்
கிதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கு
மாமூ தள்ள லழுந்திய சாகாட்
டெவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய வுயிர்க்கு நோயா கின்றே.

என்பது : இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்து நீங்குந் தலைமகன் பாங்கற்குரைத்தது.

—அம்மூவனார்.

பி - ம். 4. என்றூழ் விடாஅக். 5, கதர்கோலுமணர். 8. கூறி நுவறலின் மனைய். 14. நையூண் பகட்டின்.

141. பாலை

அம்ம வாழி தோழி கைம்மிகக்
கனவுங் கங்குலு நினைய நனவும்
புனைவினை நல்லிற் புள்ளும் பாங்கின
நெஞ்சு நனிபுகன் றுறையு மெஞ்சா
துலகுதொழி லுலந்து நாஞ்சி றுஞ்சி
மழைகா னீங்கிய மாக விசும்பிற்
குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைந்

142. குறிஞ்சி

இலமல ரன்ன வஞ்செங் நாவிற்
புலமீக் கூறும் புரையோ ரேத்தப்
பலர்மேங் தோன்றிய கவிகை வள்ள
னிறையருங் தானை வெல்போர் மாந்தரன்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல நன்று
முவவினி வாழிய நெஞ்சே காதலி
முறையியல் வழாஅ தாற்றிப் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி
யூட்டரு மரபி னஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி ஞிமிலி
புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை யதிகற் கொன்றுவந்
தொள்வா ளமலை யாடிய ஞாட்பிற்
பலரறி வுறுத லஞ்சிப் பைப்பய
நீர்த்திரள் கடுக்கு மாசில் வெள்ளிச்
சூர்ப்புறு கோல்வளை செறித்த முன்கைக்
குறையற வன்ன விரும்பல் கூந்த
லிடனில் சிறுபுறத் திழையொடு துயல்வரக்
கடன்மீன் றுஞ்சு நள்ளென் யாமத்
*துருவுகிள ரோ்வினைப் பொலிந்த பாவை
யியல்கற் றன்ன வொதுக்கினள் வந்து

---

* "உருவுகிளரோர்.....வொதுக்கினள்" என்றக்கால் வடிவுபற்றி உவமங்கொள்ளவே, உயிரில்லாதாள்போலஅச்சமின்றிஇரவிடை வந்தாளென்னும் பொருள்தோன்றும். "தொடிக்கண்வடுக்கொள... மொழிந்தே" என்பது புணர்ச்சிபற்றிய உவகை; என்னை! இவள் இவ்வாறு முயங்கினமையான் 'உவவினிவாழிய நெஞ்சே' என்றமையின்" என்றுங் கூறுவர் போா. உருவு - வடிவழகு (தொல். பொருள். 276, 259.)

144. முல்லை

வருது மென்ற நாளும் பொய்த்தன
வரியே ருண்க ணீரு நில்லா
தன்காக்கீன்ற பைங்கொடி முல்லை
வைவாய் வான்முகை யவிழ்ந்த கோதை
பெய்வனப் பிழந்த கதுப்பு முள்ளா
ரருள்கண் மாறலோ மாறுக வந்தி
லறனஞ் சலரே யாயிழை நமரெனச்
சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும்
பனிபடு நறுந்தார் குழைய நம்மொடு
துனிதீர் முயக்கம் பெற்றோள் போல
வுவக்குவள் வாழிய நெஞ்சே விசும்பி
னேறெழுந்து முழங்கி னு மாறெழுந்து சிலைக்குங்
கடாஅ யானை கொட்கும் பாசறைப்
போர்வேட் டெழுந்த மள்ளர் கையதை
கூர்வாட் குவிமுகஞ் சிதையப் நூறி
மானடி மருங்கிற் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயி னிமைப்ப
வமரோர்த் தட்ட செல்வந்
தமர்விரைந் துரைப்பக் கேட்கு ஞான்றே.

எ-ப்பது : வினைமுற்றிய தலைமக-ன் தன்னெஞ்சிற்குரைப்பானுய்ப் பாகற்குச் சொல்லியது.

—மதுரை அளக்கர்ஞாழார்மகனர் மள்ளனர்.

பி - ம். 2. வரியேயுண்கணீ. 14. கைய. 17. வானகமீனின். 18. வமரொறுத்.

145. பாலை

வேர்முழு துலறி நின்ற புழற்காற்
றேர்மணி யிசையிற் சில்வீ டார்க்கும்
வற்றன் மரத்த பொற்றலை யோதி
வெயிற்கவி னிழந்த வைப்பிற் பையுள்கொள

கலிமகி ழூர னெலிமணி நெடுந்தே
ரொள்ளிழை மகளிர் சேரிப் பன்னு
ளியங்க லானு தாயின் வயங்கிழை
யார்கொ லளிய டானே யெம்போன்
மாயப் பரத்தன் வாய்மொழி நம்பி
வளிபோர்த் துயல்வரு தளிபொழி மலரிற்
றண்பனி யாகத் தூறைப்பக் கண்பசந்
தாயமு மயலு மருளத்
தாயோம் பாய்நலம் வேண்டா தோளே.

என்பது: வாயில் வேண்டிச்சென்ற பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது.

—உவாக்கண்ணூர்ப் புல்லங்கீரனார்.

பி-ம். 2. பகைசெல. 3. மடநாகு. 4. படப்பைநண்ணிய. 5. கலிகேழ்ஞான். 8. யார்கொல ளியர் தாமே 9. டாதகை.

147. பாலை

* ஓங்குமலைச் சிலம்பிற் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன
வூன்பொதி யவிழாக் கோட்டுகிர்க் குருளை
மூன்றுட னீன்ற முடங்கர் நிழத்தத்
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிள ருழுவைப் பேழ்வா யேற்றை
யறுகோட் டுழைமா ணுண்குரா லோர்க்கு

* இதனுள் வெள்ளிவீதியைப் போலச் செல்லத்துணிந்து, யான் பலவற்றிற்கும் புலந்திருந்து ...பிரிந்தோர் பெயர்வுக்குத் தோணலந் தொலைய உயிர்செலச் சாஅய் இரங்கிப், பிறிதுமருந் தின்மையின், செயலற்றேன் என மிகவும் இரங்கியவாறு மெய்ப் பாடுபட்டி உணர்க. 'மக்கணுதலிய வகனெஞ்திணையுஞ் சுட்டி யொருவர் பெயர் கொளப் பெறூர்' என்றசூத்திரத்துள் 'வெள்ளி வீதியைப்போல.....யானே' என்ற அடிகளைக்காட்டி, இதன்கட் பெயர் கெண்டது அகத்திணைக் கண்சார்த்துவகையான் வந்த தன்றித் தலைமைவகையால் வந்திலது. (தொல். பொருள். 15, 54.)

149. பாலை

சிறுபுன் சிதலை சேண்முயன் றெடுத்த
நெடுஞ்செம் புற்றத் தொடுங்கிரை மூஞையிற்
புல்லரை யிருப்பைத் தொள்ளை வான்பூப்
பெருங்கை யெண்கி னிருங்கிளை கவரு
மத்த நீளிடைப் போகி நன்று;
மரிதுசெய் விழுப்பொரு ளெளிதினிற் பெறினும்
வாரேன் வாழியெ னெஞ்சே சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னெடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி யார்ப்பெழ வளைஇ
யருஞ்சமங் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை யடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
* வொடியா விழவி னெடியோன் குன்றத்து
வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்
தெதிர்மலர்ப் பிணைய லன்னவிவ
ளரிமதர் மழைக்கண் டெண்பனி கொளவே.

என்பது : தலைமகள் றன்னெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

பி - ம். 12. பெருஞ்சமம். (ஏர்க்காட்டூர்)

150. நெய்தல்

பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
வாகத் தரும்பிய சுணங்கும் வம்புடைக்
கண்ணுருத் தெழுதரு முலையு நோக்கி

---

* ஒடியாவிழவு—தவிராவிழவு (சிக். 76.)

கள்ளி முள்ளரைப் பொருந்திச் செல்லுநர்க்
குறுவது கூறுஞ் சிறுசெங் நாவின்
மணியோர்த் தன்ன தெண்குரற்
கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே.

என்பது : தலைமகன்பிரிவின்கண்வேறுபட்டதலைமகள் சொல்லியது.
—காவன்முல்லைப் பூதனர்.

பி-ம் 14. மணிபெயர்த். திண்குரல். காவன்முல்லை மழுக்காத்தனர்.

152. குறிஞ்சி

நெஞ்சுநடுங் கரும்படர் தீர வந்து
குன்றுழை நண்ணிய சீறூ ராங்கட்
செலீஇய பெயர்வோள் வணர்சுரி யைம்பா
லுண்கோ லகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினங்கெழு தானைத் தித்தன் வெளிய
னிரங்குநீர்ப் பரப்பிற் கானலம் பெருந்துறைத்
தனந்தரு நன்கலஞ் சிதையத் தாக்குஞ்
சிறுவெள் ளிறவின் குப்பை யன்ன
வுறுபகை தருஉம் மொய்ம்முசு பிண்ட
னுண்மூர ணுடையக் கடந்த வென்வே
லிசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவ ரூர நன்ன
னேழி னெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயிற் கலாவத் தன்ன தோளே
வல்வி லிளையர் பெருமக னள்ளி
சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்த ளுள்ளும் பலவுட
னிறும்பூது களுலிய வாய்மலர் நாறி
வல்லினும் வல்லா ராயினுஞ் சென்மோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசு

மைபடு மாமலை விலங்கிய சுரனே.

என்பது : மகட்போக்கிய செவிலித்தாய் சொற்றது.

—சேரமா னிளங்குட்டுவன்.

பி - ம். 17. தண்கமழ் : புதுமலர்.

154. முல்லை

படுமழை பொழிந்த பயமிகு புறவி
னெடுநீ ரவல பகுவாய்த் தேரை
சிறுபல் லியத்தி னெடுநெறிக் கறங்கக்
குறும்புதற் பிடவி னெடுங்கா லலரி
செந்நில மருங்கி னுண்ணயிர் வரிப்ப
வெஞ்சின வரவின் பையணங் தன்ன
தண்கமழ் கோட ருதுபிணி யவிழத்
திரிமருப் பிரலே தெள்ளறல் பருகிக்
காமர் துணையொ டேமுற வதியக்
காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி
யோடுபரி மெலியாக் கொய்சுவற் புரவித்
தாடாழ் தார்மணி தயங்குபு வியம்ப
வூர்மதி வலவ தேரே சீர்மிகுபு
நம்வயிற் புரிந்த கொள்கை
யம்மா வரிவையைத் துன்னுகம் விரைந்தே.

என்பது : வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—போதும்பிற் புல்லாளங் கண்ணியார்.

பி - ம். 9. காமர்பிணையோ. 12. தோட்டார்மணி; தயங்குபியம்ப 14. பரிந்த கொள்கை. (புல்லங்கண்ணியார்.)

155. பாலை

அறன்கடைப் படாஅ வாழ்க்கையு மென்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமு மிரண்டும்
பொருளி னுகும் புனையிழை யென்றுநம்
மிருளே ரைம்பா னீவி யோரே

15 நிலைத்துறைக் கடவுட் குளப்பட வோச்சித்
தணிமருந் தறியாள் யாயழ
மணிமருண்ட மேனி பொன்னிறங் கொளலே.

என்பது : தலைமகனை இடத்துய்த்துவந்த தோழி தலைமகனை வரைவுகடாயது. *

—ஆவூர் மூலங்கிழார்.

இப்பாட்டு மருதத்துக்களவு. இப்பாட்டின் கருத்து ஒன்றுசிதைய ஒன்றுசெய்வான் என்றவாறு.

பி - ம். 9. கழனியாம்ப. 12. நின்னெதிர்ப்பட்டதவறே. 15. யுலைத்துறைக்கடவுட். 16. தருமருந்தறி; தணிமருங்கறி.

157. பாலை

அரியற் பெண்டி ரல்கிற் கொண்ட
பகுவாய்ப் பாளைக் குவிகுலை சுரந்த
வரிநிறக் கலுழி யார மாந்திச்
செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க ணுடவர்
5 வில்லிட வீழ்ந்தோர் பதுக்கைக் கோங்கி
னெல்லி மலர்ந்த பைங்கொடி யதிரல்
பெரும்புலர் வைகறை யரும்பொடு வாங்கிக்
கான யானை கவளங் கொள்ளூ
மஞ்சுவரு நெறியிடைத் தமியர் சென்மார்
10 நெஞ்சுண் மொழிப மன்னே தோழி
மூனைபுலம் பெயர்த்த புல்லென் மன்றத்துப்
பெயலுற நெகிழ்ந்து வெயிலுறச் சாஅய்
வினையழி பாவையி னுலறி
மனையொழிந் திருத்த லாற்று வோர்க்கே.

என்பது : பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—வேம்பற்றூர்க்குமரனார்.

பி - ம். பெண்டிரல்குர். 2 குறுகுலைதந்த. 14 தல்வலுவோர்க்கே.

* இப்பாட்டினை இத்துறைக்கேகொள்வர் நச். (தொல். பொருள். 12.) 'சிலைக்கோட்டு வெள்ளை காய்செவிக்கடாஅய்' என்பது பாடம்

159. பாலை

தெண்கழி விளைந்த வெண்க லுப்பின்
கொள்ளை சாற்றிய கொடுநுக வொழுகைக்
யுரனுடைச் சுவல பகடுபல பரப்பி
யுமணுயிர்த் திறந்த வொழிக லடுப்பின்
வடியுறு பகழிக் கொடுவி லாடவ
ரணங்குடை நோன்சிலை வணங்க வாங்கிப்
பல்லா னெடுநிரை தழீஇக் கல்லென
வருமுனை யலைத்த பெரும்புகல் வலத்தர்
கனைகுரற் கடுந்துடிப் பாணி தூங்கி
யுவலைக் கண்ணிய ருன்புழுக் கயருங்
கவலை காதல ரிறந்தன ரெனநனி
யவலங் கொள்ளன்மா காதலந் தோழி
விசும்பி னல்லேறு சிலைக்குஞ் சேட்சிமை
நறும்பூஞ் சாரற் குறும்பொறைக் குணஅது
வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்
மிஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப் பொடிய நூறிக்
கொடுமுடி காக்குங் குரூஉக்க ணெடுமதிற்
சேண்விளங்கு சிறப்பி னழு ரெய்திஇ
மாண்டமைந் துறைஞ ரல்லர்ஈன்
பூண்டாங் காகம் பொருந்துதன் மறந்தே.

என்பது: பிரிவிடை வேறுபட்டதலைமகனைத்தோழிவற்புறுத்தியது.

—ஆமூர்க்கவுதமன் சாதேவனார்.

பீ - ம். 20. துறையுரல்லர்; ஆஆர்க்கவுதமன்சாதேவனார்.

றும், கூறுவர் நச். 'உருமுரறு கருவிய பெருமழை தலைஇய' என்ற அடியினை உருட்டுவண்ணத்திற்கு உதாரணமாக் கொள்வர் போரா. (தொல். பொருள். 114., 115, 544.)

யெருவைச் சேவ லீண்டுகிளை பயிரும்
வெருவரு கான நீந்திப் பொருள்புரிந்
திறப்ப வெண்ணின ரென்பது சிறப்பக்
கேட்டனள் கொல்லோ தானே தோட்டாழுபு
சுரும்புண வொலிவரு மிரும்பல் கூந்த
லம்மா மேனி யாயிழைக் குறுமகள்
சுணங்குசூ ழாகத் தணங்கென வுருத்த
நல்வர லிளமூலை நனையப்
பல்லித ழுண்கண் பரந்தன பனியே.

என்பது. பிரிவுணர்த்திய தோழி தலைமகளதுவேறுபாடுகண்டு முன்னமே யுணர்ந்தா ணம்பெருமாட்டியென்று தலைமகனைச் செலவு விலக்கியது.

—மதுரைப் புல்லங்கண்ணனார்.

பி - ம். 8. எண்ணினி. 13. நனைப்ப. 14. பல்லிதழ்மழைக்கண்.

162. குறிஞ்சி

கொளக்குறை படாஅக் கோடுவளர் குட்டத்
தளப்பரி தாகிய குவையிருந் தோன்றல
கடல்கண் டன்ன மாக விசும்பி
னழற்கொடி யன்ன மின்னுவசிபு நுடங்க
கடிதிடி யுருமொடு கதழுறை சிதறி
விளிவிட னறியா வானுமிழ் நடுநா
ளருங்கடிக் காவல ரிகழ்பத நோக்கிப்
பனிமயங் கசைவளி யலைப்பத் தந்தை
நெடுநக ரொருசிறை நின்றனெ னுக
வறலென வவிர்வருங் கூந்தன் மலரென
வாண்முகத் தலமரு மாயிதழ் மழைக்கண்
முகைநிரைத் தன்ன மாவீழ் வெண்ப
னகைமாண் டிலங்கு நலங்கெழு நுவர்வாய்க்
கோலனை விழுத்தொடி விளங்க வீசிக்

தினையை யாகிச் சென்மதி
வினைவிதுப் புறுந ருள்ளலு முண்டே.

என்பது: பிரிவின்கண் வற்புறுக்குந்தோழிக்குத் தலைமகள் ஆற்றுமை மீதூரச் சொல்லியது.

—கழார்க்கீரனெயிற்றியார்.

பி-ம்: 6. விளியா.

164. முல்லை

* கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதறத் தெறுதலிற் பயங்கரந்து மாறி
விடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலங்
காடுகவி னெதிரக் கனைபெயல் பொழிதலிற்
பொறிவரி யினவண் டார்ப்பப் பலவுட
னறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற
வெறியேன் றன்றே வீகமழ் கான
மெவன்கொன் மற்றவர் நிலையென மயங்கி
யிகுபனி யுறைக்குங். கண்ணெ டினைபாங்
கின்னு துறைவி தொன்னலம் பெறூஉ
மிதுநற் காலங் காண்டிசிற் பகைவர்
மதின்முக முருக்கிய தொடிசிதை மருப்பிற்
கந்துகா லொசிக்கும் யானை
வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே.

என்பது: பாசறைக்கணிருந்த தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன்றேவனார்.

பி-ம்: 9—10. டினையா வின்னுது, 12. மதின்மூடு கதவ முருக்கிய.

---

* இதுபிரிதற் பகுதியாகிய பாசறைப்புலம்பல் எனினும் சிலம் பற்றி முல்லையாயிற்று" (தொல். பொருள். 24. இளம்பூ.)

பொறிவரி யினவண் டேதல் கழியு
முயர்பலி பெறூஉ முருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பி னீவெய் யோள்வயி
னனையே னுயி னணங்குக வென்னென
மனையோட் டேற்று மகிழ்ஞ ஞயின்
யார்கொல் வாழி தோழி நெருநற்
றூர்பூண் களிற்றிற் றலைப்புணை தழீஇ
வதுவை யீரணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரிக்
கோடுதோய் மலிர்நிறை யாடியோரே.

என்பது : பரத்தையொடு புனலாடிய தலைமகன் தலைமகளிடைப் புக்கு, யானுடற்றில னென்று சூளுற்றுழென்பதுகேட்ட பரத்தை தன்பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

—இடையனேடுங்கீரனார்.

பி - ம் : 2. கோதுடை வைப்பின். 4. பேரூர். 8 நீகடுத்தோள். 15. தோடுதோய். (பாங்கிக்குச்சொற்றது.)

167. பாலை

* வயங்குமணி பொருத வகையமை வனப்பிற்
பசுங்கா ழல்குன் மாஅ யோளொடு
வினைவனப் பெய்திய புனைபூஞ் சேக்கை
விண்பொரு நெடுநகர்த் தங்கி யின்றே
யினிதுடன் கழிந்தன்று மன்னே நாளைப்
பொருந்தாக் கண்ணேம் புலம்புவங் துறுதரச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்
ததர்கூட் டெண்ணுஞ் மணங்குடைப் பகழிக்

கூறியவழிக்காமஞ்சிறந்து புலந்தவாறு என்பர் நச். (தொல். பொருள். 151, 164.)

* இதனூரமர்ஓட்டல் என்னுந்துறையில் சாத்தெறிதலும் வந்ததற்கு உதாரணமாகு மென்றும், நெஞ்சினைப் பிரியக்கருதி வருந்திக்கூறியது என்றும் கூறுவர் நச். (தொல். பொருள் 60. 146.)

ஞாங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப
வொடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்
வாள்வரி வயப்புலி கன்முழை யுரறக்
கானவர் மடிந்த கங்குன்
மானதர்ச் சிறுநெறி வருத னீயே.

என்பது : இரவுக்குறி வந்ததலைமகனை இரவுக்குறிவிலக்கி வரைவு கடாயது.

—கோட்டம்பலத்துத்துஞ்சிய சேரமான்.

பி - ம். 4. வல்லான் குன்றிற்.

169. பாலை

மரந்தலை கரிந்து நிலம்பயம் வாட
வலங்குகதிர் வேய்ந்த வழறிகழ் நனந்தலைப்
புலிதொலைத் தண்ட பெருங்களிற் றெழியூன்
கலிகெழு மறவர் காழ்க்கோத் தொழிந்ததை
ஞெலிகோற் சிறுதீ மாட்டி யொலிதிரைக்
கடல்விழை யமிழ்தின் கணஞ்சா லுமணர்
சுனைகொ டூநீர்ச் சோற்றுலைக் கூட்டுஞ்
சுரம்பல கடந்த நம்வயிற் படர்ந்துநனி
பசலை பாய்ந்த மேனிய ணெடிதுநினைந்து
செல்கதிர் மழுகிய புலம்புகொண் மாலை
மெல்விரல் சேர்த்திய நுதல்ணம் மல்கிக்
கயலுமிழ் நீரிற் கண்பனி வாரப்
பெருந்தோ ணெகிழ்ந்த செல்லலொடு
வருந்துமா லளிய டிருந்திழை தானே.

என்பது : தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—தொண்டியாமூர்ச்சாத்தனர்.

பி - ம். 2. வயங்கு. 10. செல்சுடர்மழுங்கிய. (தொண்டிமாமூர்.)

170. நெய்தல்

* கானலுங் கழறுது கழியுங் கூறுது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையு மொழியா
தொருநின் னல்லது பிறிதியாது மிலனே
யிருங்கழி மலர்ந்த கண்போ னெய்தற்
கமழிதழ் நாற்ற மமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறவை தளருந் துறைவனே நீயே
சொல்லல் வேண்டுமா லலவ பல்காற்
கைதையம் படுசினை யெவ்வமொ டசாஅங்
கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்ளிருக் கனவு நள்ளென் யாமத்து
நின்னுறு விழுமங் களைந்தோ
டன்னுறு விழும நீந்துமோ வெனவே.

என்பது : தலையுகள் காமமிக்க கழிபடர் இளவியாற் சொற்றது.

—மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்.

பி - ம்: 3. தொருநீய 7. இளருங். 8. வேண்டுமா ரலவ.

171. பாலை

நுதலு நுண்பசப் பிவருந் தோளு
மகன்மலை யிறும்பி னுய்ந்துகொண் டுறுத்த

---

* இது நெய்தல் ஒழுக்கத்திற்கு நெய்தல்நிலம் உரியதாயிற்று என்றும், இவ்வகப்பாட்டு இரங்கலுரிப்பொருட்டாயிற்று என்றும், இதுசொல்லாமாபின் சொல்லுவனவாக அழுகை பற்றிக் கூறியது என்றும், இவை உயர்திணையுமாயிற்று என்றும் கூறுவர் நச். இனிப் போரா "நின்னுறுவிழுங்...வெனவே" என்பது 'துன்பத்துப் புலம்பல்' என்னுந்துறைக்கு உதாரணமாகு மென்றும், "கானலுங்கழறுது... ரலவ" என்புழிக்கூறப்பட்டனவெல்லாம் தலைவிகலின் தலைவிடதலை வெறுத்தன்மை கூறியதாம் இப்பாட்டு என்றும் கூறுவர். (தொல்.

பணையெழி லழிய வாடு நாளு
நினைவன் மாதவர் பண்பென் றேவா
தினையல் வாழி தோழி புணர்வ
நிலங்குகோ லாய்தொடி நெகிழப் பொருள்புரிந்
தலந்தலை ஞெமையத் ததரடைந் திருந்த
மால்வரைச் சீறூர் மருள்பன் மாக்கள்
கோள்வ லேற்றை யோசை யோர்மார்
திருத்திக் கொண்ட வம்பினர் நோன்சிலை
யெருத்தத் தீஇ யிடந்தொறும் படர்தலிற்
கீழ்ப்படு தார முண்ணு மேற்சினைப்
பழம்போற் செற்ற தீம்புழ லுணீஇயக்
கருங்கோட் டிருப்பை யூரும்
பெருங்கை யெண்கின் சுரனிறந் தோரே.

என்பது: தலைமகன்பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

—கல்லாடனார்.

பி-ம்: 4. நினையுமாத.

172. குறிஞ்சி

வாரண மூரறு நீர்திகழ் சிலம்பிற்
பிரசமொடு விரைஇய வயங்கு வெள்ளருவி
யின்னிசை யிமிழியங் கடுப்ப விம்மெனக்
கன்முகை விடரகஞ் சிலம்ப வீழுங்
காம்புதலை மணந்த வோங்குமலைச் சார
லிரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்திக் கோறெரிந்து
வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி
யிகலடு முன்பின் வெண்கோடு கொண்டுதன்

பொருள். 5; 14, 196., 270., 271.) "தாது முனிவின்மை" என்னுந்தொடைக்கு இப்பாட்டு உதாரணமாகும் எனபர் நச். சிந். 996.

புல்வேய் குரம்பை புலர வுன்றி
மூன்றி னீடிய முழவுறழ் பலவிற்
பிழிமகி ழுவகையன் கிளையொடு கலிசிறந்து
சாந்த ஞெகிழியி னுண்புழுக் கயருங்
குன்ற நாடநீ யன்பிலை யாகுத
லறியேன் யானஃ தறிந்தனெ னுயி
னணியிழை யுண்க ணுயிதழ்க் குறுமகன்
மணியேர் மாணலஞ் சிதையப்
பொன்னேர் பசலை பாவின்று மன்னே

என்பது: தோழி தலைமகளை இடத்துய்த்துவந்து தலைமகனை வரைவு கடாயது.

—மதுரைப்பாலாசிரியர் நப்பாலனார்.

பி-ம்: 8. அணிநுதல். 10. புதல்போற் குரம்பை. 11. முழவு முதற் பலவி. 17. யாயின்று.

173. பாலை

* அறந்தலைப் பிரியா தொழுகலுஞ் சிறந்த
கேளிர் கேடுபல வுன்றலு நாளும்
வருந்தா வுள்ளமொ டிருந்தோர்க் கில்லெனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர் நறுநுதல்
மையீ ரோதி யரும்படர் முழுத்தல்
சின்னுட் டாங்கல் வேண்டு மென்றுநின்
னன்மா ணெல்வளை திருத்தின ராயின்
வருவர் வாழி தோழி பலபுரி
வார்கயிற் றொழுகை நோன்சுவற் கொளீஇப்
பகடுதுறை யேற்றத் துமண்விளி வெரீஇ
யுழைமா னம்பிணை யினனிரிந் தோடக்
காடுகவி னழிய வுரைஇக் கோடை
நின்றுதின விளிந்த வம்பணை நெடுவேய்க்
கண்விடத் தெறிக்கு மண்ணு முத்தங்

15 கழங்குறழ் தோன்றல பழங்குழித் தாஅ
மின்களி நறவி னியமேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅற்
பொன்படு மருங்கின் மலையிறந் தோரே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளுத்தோழி வற்புறுத்தியது.

—முள்ளியூர்ப் பூதியார்.

பி - ம். (முன்னியூர் வழுதியார்.)

174. முல்லை

* இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்
தொருபடை கொண்டு வருபடை பெயர்க்குஞ்
செல்வ முடையோர்க்கு நின்றன்று விறலெனப்
பூக்கோ ளேய தண்ணுமை விலக்கிச்
5 செல்மே மாத லறியான் முல்லை
நேர்கான் முதுகொடி குழைப்ப நீர்சொரிந்து
காலை வானத்துக் கடுங்குரற் கொண்மூ
முழங்குதொறுங் கையற் றொடுங்கிநப் புலந்து
பழங்கண் கொண்ட பசலை மேனியள்
10 யாங்கா குவள்கொ லுனே வேங்கை
யூழுறு நறுவீ கடுப்பக் கேழ்கொள
வாகத் தரும்பிய மாசறு சுணங்கின /
ணன்மணல் வியலிடை நடந்த
சின்மெல் லொதுக்கின் மாஅ யோளே.

என்பது : பாசறைக்கட் டலைமகன் றன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரை அளக்கர்ஞாழார்மகனார் மள்ளனார்.

பி - ம். 8. கையற்றொங்கி. 11. யூழுறுகிளர்வீ.

---

* இது மீள்வான் நெஞ்சிற் குரைத்தது என்றும், "ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்" என்னும் பகுதிக்கு உதாரணம்மாம் என்றுங் கூறுவர் கச். (தொல். பொருள், 24, 41.)

175. பாலை

வீங்குவிளிம் புரீஇய விசையமை நோன்சிலை
வாங்குதொடை பிழையா வன்க ணுடவர்
விடுதொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி
யாறுசெல் வம்பல ருயிர்செலப் பெயர்ப்பிற்
பாறுகிளை பயிர்ந்து படுமுடை கவரும்
வெஞ்சுர மிறந்த காதலர் நெஞ்சுணர
வரிய வஞ்சினஞ் சொல்லியும் பன்மாண்
டெரிவளை முன்கை பற்றியும் வினைமுடித்து
வருது மென்றன ரன்றே தோழி
காலிய னெடுந்தேர்க் கைவண் செழிய
னுலங் கானத் தமர்கடந் துயர்த்த
வேலினும் பல்லூழ் மின்னி முரசென
மாயிரு விசும்பிற் கடியிடி பயிற்றி
நேர்கதிர் நிரைத்த நேமியஞ் செல்வன்
போரடங் ககலம் பொருந்திய தார்போற்
றிருவி நேளத்துக் குலஇ யுருகெழு
மண்பயம் பூப்பப் பாஅய்த்
தண்பெய லெழிலி தாழ்ந்த போழ்தே.

என்பது : பிரிவின்கண் வற்புறுக்குந்தோழிக்குத் தலைமகள்சொல்லியது. (தோழிக்குத் தலைமகள் சொல்லியதாவுமாம்?) பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொற்றதாவுமாம்.

—ஆலம்பேரி சாத்தனார்.

பி-ம்: 14. நிறைந்த நெடியன் செல்வன். 16. உருகெழு.

176. மருதம்

* கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பி
னிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்

---

* இப்பாட்டு "புகன்றவுள்ளமொடு.....ஈரத்து மருங்கினும்" என்னும் பகுதிக்கு உதாரணமாம் என்பர் நச். இனிப் பேரா, "எழு

கழைகண் டன்ன தூம்புடைத் திரள்காற்
களிற்றுச்செவி யன்ன பாசடை மருங்கிற்
கழுநிவந் தன்ன கொழுமுகை யிடையிடை
முறுவன் முகத்திற் பன்மலர் தயங்கப்
பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து
வேப்புநனை யன்ன நெடுங்க ணீர்ஞெண்
டிரைதேர் வெண்குரு கஞ்சி யயல
தொலித்த பகன்றை யிருஞ்சேற் றள்ளற்
றிதலையின் வரிப்ப வோடி விரைந்துதன்
னீர்மலி மண்ணளைச் செறியு மூர
மனைநகு வயலை மரனிவர் கொழுங்கொடி
யரிமல ராம்பலொ டார்தழை தைஇ
விழவாடு மகளிரொடு தழுவணிப் பொலிந்து
மலரே ருண்கண் மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்த
துடன்றனள் போலுநின் காதலி யெம்போற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறைய
வென்ன கடத்தளோ மற்றே தன்முகத்
தெழுதெழில் சிதைய வழுதன ளேங்கி

தெழில்.....சென்மே" என்பது பரத்தையை நீ எள்ளினை யென்று அழுது வருகின்றாள் என்று தலைமகற்குச் சொல்லியதாகலின் இது தன்கட்டோன்றிய இளிவரல்பொருளாக அவலச்சுவை பிறந்தது என்றும், "வேப்புநனை.....மூர" என்புழித் தலைமகன்வாயில் வேண்டிச்சென்றுனைப் பிறர்கூறும்பழிக்கு வந்தாயென்றமையின் இஃது உள்ளது உவர்த்தலாயிற்று என்றும், "எம்போற், புல்லுளை ...மற்றே" என்புழிப் புதல்வற்பயந்து நின்னின்றுறையும் கடத்தினம்யாம் என்றமையின், இஃது அன்புதொக நிற்றலாயிற்று என்றும், "உயர்ந்ததன்மேற்றே யுள்ளுங்காலே" என்ற சூத்திரத்திற்குக் "கடல்கண்டன்னகண்ணகன்பரப்பின்" என்ற அடியை உதாரணங் காட்டியுஞ் செல்வர். (தொல். பொருள். 147., 253., 272., 278.)

வடித்தென வுருத்த நித்திப் பல்லூழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரற் றிருகுபு
கூர்நுனை மழுகிய வெயிற்ற
ளூர்முழுது நுவலுநிற் காணிய சென்மே.

எம்பது: தோழி கலைமகனை வாயில்மறுத்தது.

—மருத்தம்பாடிய இளங்கடுங்கோ.

இப்பாட்டின்கருத்துப் பிறர்சொல்லும் பழிக்கு வருவான் என்ற வாறு.

பி-ம். 10. தொலிந்த. 13. மனைநடு. 20. நின்னின்றுடையா ளென்ன. 21. மற்பிற. (நெடுங்கோ.)

177. பாலை

தொன்னலஞ் சிதையச் சாஅ யல்கலு
மின்னும் வாரா நினியெவன் செய்கெனப்
பெரும்புலம் புறுத லோம்புமதி சிறுகண்
ணிரும்பிடித் தடக்கை மான நெய்யருந்
தொருங்குபிணித் தியன்ற வெறிகொ ளம்பாற்
நேங்கமழ் வெறிமலர் பெய்ம்மார் காண்பின்
கழையமல் சிலம்பின் வழைதலை வாடக்
கதிர்கதங் கற்ற வேக னெறியிடைப்
பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக்
கான மஞ்ஞைக் கமஞ்சூன் மாப்பெடை
யயிரியாற் றடைகரை வயிரி னரலுங்
காடிறந் தகன்றோர் நீடின ராயினும்
வல்லே வருவர் போலும் வென்வே
லிலைநிறம் பெயர வோச்சி மாற்றோர்
மலைமருள் யானை மண்டம ரொழித்த
கழற்காற் பண்ணன் காவிரி வடவயி
னிழற்கயந் தழீஇய நெடுங்கான் மாவின்
றளிரே ராகந் தகைபெற முகைந்த

வணங்குடை வன்மூலத் தாயநின்
சுணங்கடை வரித்த றெய்யிலே நினைந்தே.

என்பது: பிரிவிடைவேறுபட்டதலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

—செயலூர் இளம்பொன்சாத்தன் கொற்றனார்.

பி-ம். 6. காம்பின். 8. னெடியிடை. 19—20. தாஅய சுணங்கிடை விரிந்த நின்றெய்யிலே நினைந்தே. (செல்லூர் இளம்பொன் சாத்தன் கொற்றன்; உறையூர் இளம்பொன்வாணிகன் சாத்தன்கொற்றன்.)

178. குறிஞ்சி

வயிரத் தன்ன வையேந்து மருப்பின்
வெதிர்வே ரன்ன பரூஉமயிர்ப் பன்றி
பறைக்க ணன்ன நிறைச்சுனை பருகி
நீலத் தன்ன வகலிலைச் சேம்பின்
பிண்ட மன்ன கொழுங்கிழங்கு மாந்திப்
பிடிமடிந் தன்ன கன்மிசை யூழிழி
பியாறுசேர்ந் தன்ன வூறுநீர்ப் படாஅர்ப்
பைம்புத னளிசினைக் குருகிருந் தன்ன
வண்பிணி யவிழ்ந்த வெண்கூ தாளத்
தலங்குகுலை யலரி தீண்டித் தாதுகப்
பொன்னுரை கட்டளை கடுப்பக் காண்வரக்
கிளையமல் சிறுதினை விளைகுரன் மேய்ந்து
கண்ணினிது படுக்கு நன்மலை நாடனெ
நினைர்ந்தனை புணர்ந்த நீயு நின்றேரூட்
பிணைக்கவி னழியாது துணைப்புணர்ந் தென்றுந்
தவலி லுலகத் துறைதியரோ தோழி
யெல்லையு மிரவு மென்னது கல்லெனக்
கொண்டல் வான்மழை பொழிந்த வைகறைத்
தண்பனி யற்சிரந் தமியோர்க் கரிதெனக்
கனவினும் பிரிவறி யலனே யதன்றலை

மூற்றுன் கண்ட ஞான்றினும்
பிற்பெரி தளிக்குந்தன் பண்பி னூனே.

என்பது : தோழி வரைவுமலிந்து சொல்லியது.

—பரணர்.

இப்பாட்டின்கருத்துக் கருதிற்றினை முடிக்கும் நாடன் என்றவாறு.

பி - ம். 8. களிசிமை. 10. தின்டிவினைகர். 20. பிரிபதியலரே. 18. கொண்டல்வளம் பொழிந்த குளிர்கொள் வைகறை.

179. பாலை

விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
வெண்டே ரோடுங் கடங்காய் மருங்கிற்
றுனையெரி பரந்த தன்னரும் வியன்காட்டுச்
சிறுகண் யானை கெடுங்கை நீட்டி
வான்வாய் திறந்தும் வண்புனல் பெறுஅது
கான்புலந்து. கழியுங் கண்ணகன் பரப்பின்
விடுவாய்ச் செங்கணைக் கொடுவி லாடவர்
நன்னிலை பொறித்த கன்னிலை யதர
வரம்புகொள் பூசல் களியுநர்க் காணூச்
சுரஞ்செல விரும்பினி ராயி னின்னகை [வாய்க்
முருந்தெனத் திரண்ட முள்ளெயிற்றுத் துவர்
குவளை காண்மலர் புரையு முண்கணிம்
மதியேர் வாண்முகம் புலம்பப்
பதிபெயர்ந் துறைத லொல்லுமோ நுமக்கே.

என்பது : பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி செலவழுங்கச் சொல்லியது.

—கோடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனூர்.

பி - ம். 5. வறள்வாய் 9. விரும்புகொள். 12. புனையுமுண்க. 13. வாணுதல் புலம்ப. 14. பதிபெயர்த்துறை.

180. நெய்தல்

நகைநனி யுடைத்தாற் றோழி தகைமிகக்
கோதை யாயமொடு குவவுமண லேறி
வீததை கானல் வண்ட லயரக்
கதழ்பரித் திண்டேர் கடைஇ வந்து
தண்கயத் தமன்ற வொண்பூங் குவளை
யரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி
பின்னுப்புறந் தாழக் கொன்னே சூட்டி
நல்வர லிளமுலை நோக்கி நெடிதுநினைந்து
நில்லாது பெயர்ந்தன னெருவ னதற்கே
புலவுநா றிருங்கழி துழைஇப் பலவுடன்
புள்ளிறை கொண்ட முள்ளுடை நெடுந்தோட்டுத்
தாழை மணந்து ஞாழலொடு கெழீஇப்
படப்பை நின்ற மூடத்தாட் புன்னைப்
பொன்னேர் நுண்டாது நோக்கி
யென்னு நோக்குமிவ் வழுங்க லூரே.

என்பது : இரந்து பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறைநயப்பக்கூறியது. தலைமகன்சிறைப்புறத்தானாக த்தோழிக்குச் சொல்லியதூஉமாம்.

—கருவூர்க் கண்ணம்பாளனார்.

பி-ம். 11. முள்ளிடை. கருவூர்க்கண்ணம்பரணனார்; கண்ணன் பாணனார்.

181. பாலை

துன்னருங் கானமுந் துணித லாற்றாய்
பின்னின்று பெயரச் சூழ்ந்தனை யாயி
னென்னிலை யுரைமோ நெஞ்சே யொன்னார்
சோம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
யடுபோர் மிஞிலி செருவிற் குடைஇ
மூருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
வன்மை யெயினன் வீழ்ந்தென ஞாயிற்

மெருண்கதி ருருப்பம் புதைய வோராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர வாடி மொசிந்துடன்
பூவிரி யகன்றுறைக் கானவிசைக் கடுநீர்க்
காவிரிப் பேரியாற் றயிர்கொண் டூண்டி
யெக்க ரிட்ட குப்பை வெண்மணல்
வைப்பின் யாணர் வளங்கெழு வேந்தர்
ஞால நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வ
னல முற்றங் கவின்பெறத் தைஇப்
பொய்கை சூழ்ந்த பொழின்மண மகளிர்
கைசெய் பாவை துறைக்க ணிறுக்கு
மகர நெற்றி வான்மருப் புரிசைச்
சிகரந் தோன்றுச் சேணுயர் நல்லிற்
புகாஅர் நன்னுட் டதுவே பகாஅர்
பண்ட நாறும் வண்டட ரைம்பாற்
பிணைத்தகைத் தடைஇய காண்பின் மென்மரு
ளணங்குசா லரிவை யிருந்த
மணங்கமழ் மறுகின் மணற்பெருங் குன்றே.

எள்பது : இடைச்சுரத்து ஒழியக்கருதிய நெஞ்சிற்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 5. செருவேல்கடைஇ, 7. ஆஅயெயினன். 12. அயிர் கொடூண்டி. 14. வெற்பின். 16. நால்வகை 18. பொழின்மனை மகளிர். 22. பகர்வர். 23. வண்டாடைம்பா.

182. குறிஞ்சி

பூங்கண் வேங்கைப் பொன்னினர் மிலைந்து
வாங்கமை நோன்சிலை யெருத்தத் திரீஇக்
கீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்

வீளை யம்பி னிளையரொடு மாந்தி
யோட்டியல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட
குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர
முளவுமாத் தொலைச்சுங் குன்ற நாட
வரவெறி யுருமோ டொன்றிக் கால்வீழ்த்
தரவுமழை பொழிந்த பானட் கங்குற்
றனியை வந்த வாறுநினைந் தல்கலும்
பனியொடு கலுழுமிவள் கண்ணே யதனற்
கடும்பகல் வருதல் வேண்டுந் தெய்ய
வதிர்குரன் முதுகலை கறிமுறி முனை
யுயர்சிமை நெடுங்கோட் டகள வுக்க
கமழித ழலரி தாஅய் வேலன்
வெறியயர் வியன்களங் கடிக்கும்
பெருவரை நண்ணிய சார லானே.

என்பது : தோழி இராவருவானைப் பகல்வர வென்றது.

—கபிலர்.

பி - ம். 1. மலர்ந்து. 4. வினையாநாவி. 10. இரவு மழை.

183. பாலை

குவளை யுண்கண் கலுழவுந் திருந்திழைத்
திதலை யல்கு லவ்வரி வாடவு
மத்தம ழுழுவ நத்துறந் தருளார்
சென்றுசே ணிடைய ராயினு நன்று
நீடல ரென்றி தோழி பாடான்று
பனித்துறைப் பெருங்கட லிறந்துநீர் பருகி
குவவுத்திரை யருந்து கொள்ளைய குடக்கோர்பு
வயவுப்பிடி யினத்தின் வயின்வயிற் றேன்றி
யிருங்கிளைக் கொண்மூ வொருங்குடன் றுவன்றிக்

காலை வந்தன்ருற் காரே மாலைக்
குளிர்கொள் பிடவின் கூர்முகை யலரி
வுண்டுவாய் திறக்குந் தண்டா ஈற்றங்
கூதி ரற்சிரத் தூதை தூற்றப்
பனியலைக் கலங்கிய நெஞ்சமொடு
வருந்துவ மல்லமோ பிரிந்திசினோர் திறத்தே.

என்பது: தலைமகன் குறித்த பருவவரவு கண்டு தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—கருவூர்க் கலிங்கத்தார்.

பி - ம். 6. பெருங்கடலிரைத்தநீர்.

184. முல்லை

கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பி
னன்ன ராட்டிக் கன்றியு, மெனக்கு
மினிதா கின்ருற் சிறக்கநின் ஞயு
ளருந்தொழின் முடித்த செம்ம லுள்ளமொடு
சுரும்பிமிர் மலர கானம் பிற்பட
வெண்பிட வவிழ்ந்த வீகமழ் புறவிற்
குண்டைக் கோட்ட குறுமுட் கள்ளிப்
புன்றலை புதைத்த கொழுங்கொடி முல்லை
யார்கழல் புதுப்பூ வுயிர்ப்பி னீக்கித்
தெள்ளறல் பருகிய திரிமருப் பெழிற்கலை
புள்ளியம் பினையொடு வதியு மாங்கட்
சோடுடைக் கையர் துளரெறி வினைஞ
ரரிய லார்கையர் வினைமகிழ் தூங்கச்
செல்கதிர் மழுகிய வுருவ ஞாயிற்றுச்
செக்கர் வானஞ் சென்ற பொழுதிற்
கற்பா லருவியி னெலிக்கு நற்றேர்த்

தார்மணி பலவுட னியம்பச்
சீர்மிகு குரிசினீ வந்துநின் றதுவே.

என்பது : தலைமகன் வினைவயிற்பிரிந்துவந்து எய்திய்விடத்துத் தோழி புல்லுமகிழ்வுரைத்தது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 2. புதல்வர்ப்படயத்த. 13. கோடுடைத்தலை.

185. டாலை

எல்வளை ஞெகிழச் சாஅ யாயிழை
நல்லெழிற் பணைத்தோ ளிருங்கவி னழியப்
பெருங்கை யற்ற நெஞ்சமொடு நத்துறக்
திரும்பி னின்னுயி ருடையோர் போல
வலித்து வவ்வினர் காதலர் வாட
லொலிகழை நிவந்த நெல்லுடை நெடுவெதிர்
கலிகொண் மள்ளர்வில் விசையி னுடையப்
பைதற வெம்பிய கல்பொரு பரப்பின்
வேனி லத்தத் தாங்கண் வானுலந்
தருவி யான்ற வுயர்சிமை மருங்கிற்
பெருவிழா விளக்கம் போலப் பலவுட
னிலையில மலர்ந்த விலவமொடு
நிலையுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது : பிரிவிடைவேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி - ம். 5. வலித்துவல்லினர். 8. கல்பொரி பாம்பின்.

186. மருதம்

வானம் வேண்டர வறனில் வாழ்க்கை
நோன்ஞாண் வினைஞர் கோளறிந் தீர்க்கு

மீன்முதி ரிலஞ்சிக் கலித்த தாமரை
நீர்மிசை நிவந்த நெடுந்தா ளகலிலை
யிருங்கயந் துளங்கக் காலுறு தோறும்
பெருங்களிற்றுச் செவியி னலைக்கு மூரனெ
டெழுந்த கௌவையோ பெரிதே நட்பே
கொழுங்கோல் வேழத்துப் புனைதுணை யாகப்
புனலாடு கேண்மை யனைத்தே யவனே
யொண்டொடி மகளிர் மண்டை பாழ்பட
வீர்ந்தண் முழவி னெறிகுணில் விதிர்ப்பத்
தண்ணறுஞ் சாந்தங் கமழுந் தோண்முணந்
தின்னும் பிறள்வயி னனே மனையோ
ளெம்மொடு புலக்கு மென்ப வெம்வேன்
மாரி யம்பின் மழைத்தோற் பழையன்
காவிரி வைப்பிற் போழ் ரன்னவென்
செறிவளை யுடைத்தலோ விலனே யுரிதினின்
யாந்தன் பகையே மல்லெஞ் சேர்ந்தோர்
திருநுதல் பசப்ப நீங்குங்
கொழுநனுஞ் சாலுந்தன் னுடனுறை பகையே.

என்பது : தலைமகட்குப்பாங்காயினர் கேட்ப இல்லிடைப்பாத்தை சொல்லிநெருங்கியது.

—பரனர்.

பி - ம். 5. இருங்கயந்தயங்க. 7. டெழுந்த கேண்மை. 14. வெல்பரி.

187. பாலை

தோள்புலம் பகலத் துஞ்சி நம்மொடு
நாள்பல நீடிய கரந்துறை புணர்ச்சி
நாணுடை மையி னீங்கிச் சேய்நாட்
டருஞ்பொருள் வலித்த நெஞ்சமொ டேகி
நம்முயர் வுள்ளினர் காதலர் கறுத்தோர்

தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் றலைநா ளன்ன
தருமணன் * ஞெமிரிய திருநகர் முற்றம்
புலம்புறுங் கொல்லோ தோழி சேணுஞ்
கலந்தலை ஞெமையத் தாளி லாங்கட்
கலைசேர் பிருந்த சில்குடிப் பாக்கத்
தெல்விருந் தயர வேம்த் தல்கி
மனையுறை கோழி யணற்முழ் பன்ன
கவையொண் டளிர கருங்கால் யாஅத்து
மேனில் வெற்பிற் காணிலங் காய
முனையெழுந் தோடிய கெடுநாட் டாரிடைப்
பனைவெளி றருந்து பைங்கண் யானை
யொன்சுடர் முதிரா விளங்கதி ரமையத்துக்
கண்படு பாயற் கையொடுங் கசைநிலை
வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி
நாள்வேட் டெழுந்த நயனில் பரதவர்
வைகுகட லம்பியிற் றோன்று
மைபடு மாமலை விலங்கிய சுரனே.

என்பது : பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. தலைமகட் பிரிவின்கண் தலைமகட்குத் தோழி சொல்லியதூஉமாம்.

—மாமூலனார்.

பி - ம். 10 - 11. சேய்நாட்டலந்தலை. 16. வேனில் வைப்பிற் கானங் காய. 17. நெடுநாட்டாரி.

188. குறிஞ்சி

† பெருங்கடன் முகந்த விருங்கிளைக் கொண்மூ
விருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்

---

* ஞெமிர்தல் - பரத்தல் (தொல். சொல். 361.]

† இதனுள் "கொன்னே செய்திறோ அரவம்" என்பதனால் உயனின்றி அலர் விளைத்தியோ எனவுங்கூறி, ஏனைப்புறமும் தழுவி

போர்ப்புறு முரசி னிரங்கி முறைபுரிந்
தறனெறி பிழையாத் திறனறி மன்ன
ருருஞ்சமத் தெதிர்ந்த பெருஞ்சே யாடவர்
கழித்தெறி வாளி னளிப்பன விளங்கு
மின்னுடைக் கருவியை யாகி நாளுங்
கொன்னே செய்தியோ வரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொட ரடைச்சிப்
பொலிந்த வாயமொடு காண்டக வியலித்
தழலே வாங்கியுந் தட்டை யோப்பியு
மழலேர் செயலை யந்தழை யசைஇயுங்
குறமகள் காக்கு மேனற்
புறமுந் தருதியோ வாழிய மழையே.

எண்டது : இரவிற் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

—வீரைவெளியன் தித்தனார்.

பி - ம். 1. பல்கிளைக்கொண்மூ 5. பெருஞ்செய் 11. யோச்சியு. 12. தையுங்.

189. பாலை

பசும்பழப் பலவின் கானம் வெம்பி
விசும்புகண் ணழிய வேனி னீடிக்
கயங்கண் ணற்ற கல்லோங்கு வைப்பி
னுறுயிர் மடப்பிடி தழீஇ வேறுகாட்டு
விழவுப்படர் மள்ளரின் முழவெடுத் துயிரிக்
களிறதர்ப் படுத்த கல்லுயர் கவாஅன்
வெவ்வரை யத்தஞ் சுட்டிப் பையென
வயலெயம் பிணையல் வார்ந்த கவாஅற்
றிதலை யல்குற் குறுமக ளவணெடு
சென்று பிறளாகிய வளவை யென்றும்

யோ என்பதனால், வரைந்துகொள்வையோ எனவுங்கூறித் தலை வனை மழைமேல்வைத்துக் கூறலின் சுட்டாயிற்று. கொல்லோ செய் தியோ என்றதனால் வழுவாயினும் வரைதல் வேட்கையாற் கூறின மையின், அமைந்தது என்பர் நச். (தொல். பொருள். 242.)

படர்மலி யெவ்வமொடு மாதிரந் துழைஇ
மனைமருண் டிருந்த வென்னினு நனைமகிழ்
நன்ன ராளர் கூடுகொ ளின்னியங்
தேரூர் தெருவிற் றதும்பு
15 மூரிழந் தன்றுதன் வீழ்வுறு பொருளே.

என்பது: மகட்போக்கிய செவிலி சொல்லியது.

—கயமனார்.

பி-ம். 11. யுள்ளமொடு.

190. நெய்தல்

திரையுழந் தசைஇய நிரைவளை யாயமொ
டுப்பின் குப்பை யேறி யெற்பட
வருதிமி லெண்ணுந் துறைவனெ டூரே
யொருதன் கொடுமையி னலர்பா டும்மே
5 யலமரன் மழைக்க ணமர்ந்து நோக்கா
னலையல் வாழிவேண் டுன்னை யுயர்சிமைப்
பொதும்பிற் புன்னைச் சினைசேர் பிருந்த
வம்ப நாரை யிரிய வொருநாட்
பொங்குவர வூதையொடு புணரி யலைப்பவு
10 முழைக்கடல் வழங்கலு முரிய னதன்றலை
யிருங்கழிப் புகாஅர் பொருந்தத் தாக்கி
வயச்சுறு வெறிந்தென வலவ னழிப்ப
வெழில்பயங் குன்றிய சிறையழி தொழில
நிரைமணிப் புரவி விரைநடை தவிர
15 விழுமென் கானல் விழுமண லசைஇ
யாய்ந்த பரியன் வந்திவண்
டான்ற மாலைச் சேர்ந்தன்றே விலனே.

என்பது. தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடுநின்றது.

—உலோச்சனார்.

பி-ம். 10. வெய்யனதன்றலை. 12. வைச்சுறு. 14. நிரைநடை.

191. பாலை

அத்தப் பாதிரி துய்த்தலைப் புதுவீ
யெரியித ழுலரியொ டிடைபட விரைஇ
வண்டோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணித்
தோல்புதை சிரற்றடிக் கோலுடை யுமண
ரூர்கண் டன்ன வாரம் வாங்கி
யருஞ்சுர மிவர்ந்த வசையி னேன்முட்
டிருந்துபகட் டியம்புங் கொடுமணி புரிந்தவர்
மடிவிடு வீளையொடு கடிதெதிர் ரோடி
யோமையம் பெருங்காட்டு வரூஉம் வம்பலர்க்
கேமஞ் செப்பு மென்றூழ் நீளிடை
யரும்பொரு ணசைஇப் பிரிந்துறை வவ்விச்
சென்றுவினை யெண்ணுதி யாயி னன்று
முரைத்திசின் வாழியென் னெஞ்சே நிரைமுகை
முல்லை யருந்து மெல்லிய வாகி
யறலென் விரிந்த வுறலின் சாய
லொலியிருங் கூந்த றேறுமென
வலிய கூறவும் வல்லையோ மற்றே.

என்பது: தலைமகள் தன்னெஞ்சிற்குச்சொல்லிச் செலவழுங்கியது.

—ஓரோடோகத்துக் கந்தரத்தனார்.

இப்பாட்டிற் சிரற்றடி என்றது பொல்லா அடியை.

பி - ம். 3. வெண்டோட்டு. 6. நோன்சுவல் வம்முட். 11. வல்லி 13. உரையினி. 14. மெல்லியல்வாங்க. (ஓரோடோகக் கவுணியன் சேந்தன்.)

192. குறிஞ்சி

மதியிருப் பன்ன மாசறு திருநுதல்
பொன்னேர் வண்ணங் கொண்டன் றன்னே
யாங்காகு வள்கொ றானே விசும்பி

னெய்யா வரிவி லன்ன பைந்தார்ச்
செவ்வாய்ச் சிறுகிளி சிதைய வாங்கிப்
பொறைமெலிந் திட்ட புன்புறப் பெருங்குரல்
வளைசிறை வாரணங் கிளையொடு கவர
வேனலு மிறங்குபொறை யுயிர்த்தன பாலு
ணீவந் தளிக்குவை யெனினே மால்வரை
மைபடு விடரகந் துழைஇ யொய்யென
வருவி தந்த வரவுமிழ் திருமணி
பெருவரைச் சிறுகுடி மறுகுவிளக் குறுத்தலி
னிரவு மிழந்தன ளளிய ளூரவுப்பெய
லுருமிறை கொண்ட வுயர்சிமைப்
பெருமலை நாடனின் மலர்ந்த மார்பே.

என்பது : தோழி தலைமகனைச் செறிப்பறிவுறீஇ இரவுக்குறிமறுத்தது.

—போதும்பில்கிழான் வெண்கண்ணனார்.

பி - ம். 1. மதியரும் பன்ன மாசறு சுடர்நுதல். 8. இறங்குகு ரலிறுத்தன; இறங்குபொறையிறுத்தன. 10. வியலகம். 11. கருமணி. (செறிப்பறிவுறீஇவரைவுகடாயது.)

193. பாலை

கானுயர் மருங்கிற் கவலை யல்லது
வானம் வேண்டா வில்லே ருழவர்
பெருநாள் வேட்டங் கிளையெழ வாய்த்த
பொருகளத் தொழிந்த குருதிச் செவ்வாய்ப்
பொறித்த போலும் வானிற வெருத்தி
னணிந்த போலுஞ் செஞ்செவி யெருவை
குறும்பொறை யெழுந்த நெடுந்தாள் யாஅத்
தருங்கவட் டியர்சினைப் பிள்ளை யூட்ட
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்க ணூன்றடி

10 கொல்பசி முதுநரி வல்சி யாருஞ்
சூரனமக் கெளிய மன்னே நன்மனைப்
பன்மாண் டங்கிய சாய லின்மொழி
முருந்தேர் முறுவ லினையோள்
பெருந்தோ ளின்றுயில் கைவிடு கலனே.

என்பது : பொருள்வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தலைமகன் செலவழுங்கியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 4. பொருகளத்துழந்த. 6. செஞ்செவிச் சேவல். 7. பொறையடைந் தெழுந்த, 7-8 யாஅக் கருங்கவட். 10. தொல்பசி முதுநரிவல்சியாகும். 12. டன்மாண்டடங்கிய.

194. முல்லை

பேருறை தலைஇய பெரும்புலர் வைகறை
யேரிடம் படுத்த விருமறுப் பூழிப்
புறமாறு பெற்ற பூவ லீரத்
தூன்கிழித் தன்ன செஞ்சுவ னெடுஞ்சால்
5 வித்திய மருங்கின் விதைபல நாறி
யிரலை நன்மா னினம்பரந் தவைபோற்
கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்
கறங்குபறைச் சீரி னிரங்க வாங்கிக்
களைகால் கழீஇய பெரும்புன வரகின்
10 கவைக்கதி ரிரும்புறங் கதூஉ வுண்ட
குடுமி நெற்றி நெடுமாத் தோகை
காமர் கலவம் பரப்பி யேமுறக்
கொல்லை யுழவர் காடுழ வொழித்த
வல்லிலைக் குருந்தின் வாங்குசினை யிருந்து
15 கிளிகடி மகளிரின் விளிபடப் பயிருங்
கார்ம னிதுவாற் றோழி போர்மிகக்
கொடுஞ்சி நெடுந்தேர் பூண்ட கடும்பரி

விரியுளை நன்மான் கடைஇ
வருது மென்றவர் தெளித்த போழ்தே.

என்பது: பருவங்கண்டு ஆற்றுமைமீதூரத் தலைமகள் சொல்லியது.

—இடைக்காடனார்.

இப்பாட்டின் பயன் தோழிகேட்பின் தூதுவிடுவது; அன்றெனின் சொல்லியாற்றுவது.

பி-ம். 9. கணைக்கால் கழீஇய, 13. கூழ்சிழலொழித்த, 14. பல்லிலைக்குருந்தின். 16. கார்மனிகுளை தோழி.

195. பாலை

* அருஞ்சுர மிறந்தவென் பெருந்தோட் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
பூணமா ணிஞ்சி பூவ லூட்டி
மனைமண லடுத்து மாலை நாற்றி
யுவந்தினி தயரு மென்ப யானு
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
யீன்ற நட்பிற் கருளா ளுயினு
மின்னகை முறுவ லேழையைப் பன்னுட்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
நலம்புனை யுதவியோ வுடையன் மன்னே

---

* இது தெய்வத்தொடுபடத்துப் புலம்பியது என்றும், "எம்மனை.....குறிப்பே" என்றுற்போல்வன கற்பினுக்கத்துக் கருத்து நிகழ்தல் என்றும், வெளிப்படுவதன்முன்னர்க் கொண்டதலைக்கழிந்துழிக் கொடுப்போரின்றியும் காரணம் நிகழ்ந்தமையின், அதுவும் வெளிப்படாமல் வரைந்ததாம் என்றும் கூறுவர் நச். இனிப்பேரா: இதனை மறைவெளிப்பாடு என்பர். இனி நக்கீரர், "மகள் வருகின்றுளெனக் கேட்ட தாய் நம் நெடுநகர்க்கே வருமோ தன் கடிமனைக்கே கொண்டுபோமோ வென அவன் குறிப்பறிதற்கு வேலனைவினவும்" என்பர் (தொல். பொருள். 36., 116., 140., 143., 499.) (இறை. களவு. 23.)

யஃதறி கிற்பிலே னன்றுமற் றில்ல
வறுவை தோயு மொருபெருங் குடுமிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கொடுங்கோ
லாகுவ தறியு முதுவாய் வேல
கூறுக மாதோநின் கழங்கின் றிட்ப
மாரு வருபனி கலுழுங் கங்குலி
லானுது துயருமெங் கண்ணினித் படீஇய
ரெம்மனே முந்துறத் தருமோ
தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே.

என்பது : மகட் போக்கிய நற்றாய் சொல்லியது.

—கயமனார்.

இப்பாட்டிற் பூவலூட்டி என்றது சுவரைப் புதுக்கோலஞ் செய்து என்றவாறு. பூவல் - சிவப்பு.

பி - ம். 10. கலம்புனை யுதவியு முடையன். 11. அஃதறி கற்பி னன்றுமற் றில்ல.

196. மருதம்

நெடுங்கொடி நுடங்கு நறவுமலி பாக்கத்து
நாட்டுறைப் பட்ட மோட்டிரு வராஅற்
றுடிக்கட் கொழுங்குறை கொடுத்துண் டாடி
வேட்டமறந்து துஞ்சுங் கொழுநர்க்குப் பாட்டி
யாம்ப லகலிலை யமலிவெஞ் சோறு
தீம்புளிப் பிரம்பின் றிரள்கணி பெய்து
* விடியல் வைகறை யிடூஉ மூர
தொடுகலங் குறுக வார றந்தை
கண்கவி னழித்ததன் றப்பற் றெறுவர [கிய
வொன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போ
கடுந்தேர்த் திதிய னழுந்தைக் கொடுங்குழை

* "விடியல்வைகறை யிடூஉ மூர", என்றது விடியற்கு முன்னர்த்தாகிய வைகறையென உருபுதொக்கு முன்மொழிநிலையலாயிற்று என்பர் நச். (தொல். பொருள். 8.)

யன்னி மிஞிலியி னியலு
நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே.

என்பது : பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குக் கிழத்தி சொல்லியது.

—பரணர்.

பி - ம். 7. யிடுமூதா. 9. னழித்ததன்றவற் றெறுவா. 11. அறந்தை.

197. பாலை

மாமலர் வண்ண மிழந்த கண்ணும்
பூநெகி ழுணையிற் சாஅய தோளு
நன்னர் மாக்கள் விழைவன ராய்ந்த
தொன்னல மிழந்த துயரமொ டென்னதூஉ
மினையல் வாழி தோழி முனையெழ
முன்னுவ ரோட்டிய முரண்மிகு திருவின்
மறமிகு தானைக் கண்ண னெழினி
தேமுது குன்ற மிறந்தன ராயினு
நீடலர் யாழநின் னிரைவளை நெகிழத்
தோடாழ் பிருளிய குவையிருங் கூந்தன்
மடவோட் டழீஇய விறலோன் மார்பிற்
புன்றலைப் புதல்வ னூர்பிழிந் தாங்குக்
கடுஞ்சூன் மடப்பிடி தழீஇய வெண்கோட்
டினஞ்சால் வேழங் கன்றார் பிழிதரப்
பள்ளி கொள்ளும் பனிச்சுர நீந்தி
யொள்ளிணர்க் கொன்றை யோங்குமலை யத்தம்
வினைவலி யுறூஉ. நெஞ்சமொ
டினைய ராகுநப் பிரிந்துசி னோரே.

என்பது : பிரிவிடைவேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

—மாமூலனார்.

பி - ம். 6, முன்னுநர். 8. தேமுதிர்குன்ற. 14 கன்றார் பிழியும்.

198. குறிஞ்சி

*கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லெனக்
கரந்த காமங் கைந்நிறுக் கல்லாது
நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி
யரைநாள் யாமத்து விழுமழை காந்து
கார்விரை கமழுங் கூந்தற் றூவினை
நுண்ணூ லாகம் பொருந்தினள்! வெற்பி
னிளமழை சூழ்ந்த மடமயில் போல
வண்டுவழிப் படரத் தண்மலர் வேய்ந்து
வில்வகுப் புற்ற நல்வாங்கு குடச்சூ
லஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோ
ளான்ற கற்பிற் சான்ற பெரிய
வம்மா வரிவையோ வல்ல டெனஅ
தாஅய் நன்னுட் டணங்குடைச் சிலம்பிற்
கவிரம் பேரிய வுருகெழு கவாஅ
னேர்மலர் நிறைசுனை யுறையுஞ்
சூர்மகண் மாதோ வென்னுமென் னெஞ்சே.

என்பது : புணர்ந்து நீங்கிய தலைமகளது போக்குநோக்கியதலை மகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 5. கார்மலர்கமழுங். 7. இளமழை. 15. கவுரியம் பெய ரிய. 16. நிறைச்சுனை.

199. பாலை

கரைபாய் வெண்டிரை கடுப்பப் பலவுட
னிரைகா லொற்றலிற் கல்சேர் புதிரும்

---

* இஃது இரவுக்குறிக்கண் அவட்பெற்று மலிந்தது என் றும், "அஞ்சிலம் பொடுக்கி.....பெயர்வோள்" என்றது "மனை யோர் கிளவிகேட்கும் வழியது" என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 103. 131.) பேரிய - பேர் பெற்ற (தொல். சொல். நச். 72.)

வரைசேர் மராஅத் தூழ்மலர் பெயல்செத்
துயங்கல் யானை நீர்நசைக் கலமரச்
சிலம்பி வலந்த வறுஞ்சினை வற்ற
லலங்க லுலவை யரிநிழ லசைஇத்
திரங்குமரற் கவ்விய கையறு தொகுநிலை
யரந்தி னூசித் திரணுதி யன்ன
திண்ணிலை யெயிற்ற செந்நா யெடுத்தலின்
வளிமுனைப் பூளையி னெய்யென் றலறிய
கெடுமா னினநிரை தரீஇய கலியே
கதிர்மாய் மாலை யாண்குரல் விளிக்குங்
கடல்போற் கானம் பிற்பிடப் பிறர்போற்
செல்வே மாயினெஞ் செலவுநன் றென்னு
மாசை யுள்ள மசைவின்று தூரப்ப
நீசெலற் குரியை நெஞ்சே வேய்போற்
றடையின மன்னுந் தண்ணிய திரண்ட
பெருந்தோ ளரிவை யொழியக் குடாஅ
திரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூ ணன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
* களங்காய்க் கண்ணி நார்முடிச் சேர
லிழந்த நாடுதந் தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலெ னியானே.

என்பது : பொருள்கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

—கல்லாடனார்.

பி - ம். 7. தொகைநிலை. 10. னெய்யெனவலறிய. 11. தேரிய 20. பொருகளத்தொழி. 22. நாண்முடிச் சேரல்.

---

* "களங்காய்க்கண்ணி.....யானே" என்பது வன்புறை குறித்துச் செலவழுங்குதலின் பாலையாயிற்று என்பர் நச். (தொல். பொருள். 185.)

200. நெய்தல்

* நிலாவி னீலங்கு மணன்மலி மறுகிற்
புலாலுஞ் சேரிப் † புல்வேய் குரம்பை
யூரென வுணராச் சிறுமையொடு நீருடுத்
தின்ஞ வுறையுட் டாயினு மின்ப
மொருநா ளுறைந்திசி னோர்க்கும் வழிநாட்
டம்பதி மறக்கும் பண்பி னெம்பதி
வந்தனை சென்மோ வஃமேய் பரப்ப
பொம்மற் படுதிரை கம்மென வுடைகரு
மரனெங் கொருசிறைப் பலபா ராட்டி
யெல்லை யெம்மொடு கழிப்பி யெல்லுற
நற்றேர் பூட்டலு முரியீ ரற்றன்று
சேர்ந்தனிர் செல்குவி ராயின் யாமு
மெம்வரை யளவையிற் பெட்குவ
நும்மொப் பதுவோ வுரைத்திசி னெமக்கே.

என்பது: தலைமகள்குறிப்பறிந்த தோழி தலைமகற்குக் குறை நயப்பக் கூறியது.

—உலோச்சனார்.

பி-ம். 4. இன்ஞவரையுட்டா. 13. பெட்குவோம்து; பெட்கு வெநும் மொப்பது. 14. விரித்திசி. (நக்கீரர்.)

201. பாலை

அம்ம வாழி தோழி பொன்னி
னவிரெழி லுடங்கு மணிகிள ரோடை
வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுறை
யவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து

---

* இப்பாட்டினை "நன்னயம் பெற்றுழி நயம்புரி யிடத்தினும்" என்ற பகுதிக்கு உதாரணமாகக் காட்டுவர் நச். (தொல். பொருள். 114.) † இங்குப் புல் என்பது பனையோலை.

தழையணிப் பொலிந்த கோடேந் தல்குற்
பழையர் மகளிர் பனித்துறை பரவப்
பகலோன் மறைந்த வந்தி யாரிடை
யுருகெழு பெருங்கட. லுவவுக் கிளர்ந்தாங்
கலரு மன்றுபட் டன்றே யன்னையும்
பொருந்தாக் கண்ணள் வெய்ய வுயிர்க்குமென்
றெவன்கை யற்றனை யிகுளை சோழர்
வெண்ணெல் வைப்பி னன்னாடு பெறினு
மாண்டமைந் துறைந ரல்லர் முனாஅது
வான்புகு தலைய குன்றத்துக் கவாஅற்
பெருங்கை யெண்கின் பேழ்வா யேற்றை
யிருடணிந் தன்ன குவவுமயிர்க் குருளை
தோன்மூலைப் பிணவொடு திளைக்கும்
வேனி னீடிய சுரனிறந் தோரே.

என்பது: பிரிவிடைவேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

—மாமூலனர்.

இப்பாட்டிற் பழையர் மகளிர் என்பார் * பரத்தியர்.

பி - ம். 17. இருடணிந்தன்ன. 18. பிணையொடு.

202. குறிஞ்சி

வயங்குவெள் ளருவிய குன்றத்துக் கவாஅற்
கயந்தலை மடப்பிடி யினனே மார்ப்பப்
புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பிற் கையெடுத் துயிர்ப்பி
னல்லிணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகூது மிதியுலைப் பிதிர்விற் பொங்கிச்
சிறுபன் மின்மினி போலப் பலவுடன்
மணிநிற விரும்புதற் ருவு நாட

* மூத்தியா ரென்றும் பாடம்.

யாமே யன்றியு முளர்கொல் பானு
ஞத்தி யரவின் பைத்தலை துமிய
வூரவுரு மூரறு முட்குவரு நனந்தலைத்
தவிர்வி லுள்ளமொ டெஃகுதுணை யாகக்
கனையிருள் பரந்த கல்லதர்ச் சிறுநெறி
தேராது வரூஉ நின்வயி
ஞரஞ ரரும்படர் நீந்து வோரே.

என்பது : இரவுக்குறிக்கண் வந்துநீங்குந் தலைமகற்குத் தோழி சொல்லி வரைவுகடாயது.

—ஆவூர்கிழார்மகனார் கண்ணனார்.

பி - ம். 2. இனனோரார்ப்ப. 13. கல்லகச் 14. நும்வயி. (ஆவூர் கிழார் மள்ளனகனார்)

203. பாலை

உவக்குந ளாயினு முடலுந ளாயினும்
யாயறிந் துணர வென்னுர் தீவா
யலர்வினை மேவ லம்பற் பெண்டி
ரின்ன ளினையணின் மகளெனப் பன்னு
ளெனக்குவந் துரைப்பவுந் தனக்குரைப் பறியே
ஞணுவ ளிவளென நனிகரந் துறையும்
யானிவ் வறுமனை யொழியத் தானே
யன்னை யறியி னிவணுறை வாழ்க்கை
யெனக்கெளி தாக லில்லெனக் கழற்கால்
மின்னெளிர் நெடுவே லினையோன் முன்னுறப்
பன்மலை யருஞ்சுரம் போகிய தனக்கியா
னன்னே னன்மை நன்வா யாக
மானதர் மயங்கிய மலமுதற் சிறுநெறி
வெய்துடை யுருஅ தெய்தி முன்னர்ப்
புல்லென் மாமலைப் புலம்புகொள் சீறூர்ப்
செல்விருந் தாற்றித் துச்சி லிருக்க



நுனைகுழைத் தலமரு நொச்சி
மனைகெழு பெண்டியா னுகுக மன்னே.

என்பது : மகட்போக்கிய தாய்சொல்லியது.

—கபிலர்.

பி - ம். 2. யாப்பறிந்; தாயறிந் 16. துச்சிலிருந்த. 17. தலமரு நோக்கி. (செவிலி)

204. முல்லை

உலகுட னிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போற் றுனைக் கலிமா வழுதி
வென்றமை குழந்த வியன்பெரும் பாசறைச்
சென்றுவினை முடித்தன மாயி னின்றே
5 கார்ப்பெயற் கெதிரிய காண்டகு புறவிற்
கணங்கொள் வண்டி னஞ்சிறைத் தொழுதி
மணங்கமழ் முல்லை மாலை யார்ப்ப
வுதுக்காண் வந்தன்று பொழுதே வல்விரைந்து
செல்க பாகநின் னல்வினை நெடுந்தேர்
10 வெண்ணெ லரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ளோப்புங்
காய்நெற் படப்பை வாணன் சிறுகுடித்
தண்டலை கமழுங் கூந்த
லொண்டொடி மடந்தை தோளினை பெறவே.

என்பது : வினைமுற்றியதலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்.

பி - ம். 3, வேத்தமருழந்த. 12. பண்ணைள். .

205. பாலை

உயிர்கலந் தொன்றிய தொன்றுபடு நட்பிற்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போலத்
தையல் நின்வயிற் பிரியலம் யாமெனப்

பொய்வ ளுள்ளமொடு புரிவுணக் கூறித்
துணிவில் கொள்கைய ராகி யினியே
நோய்மலி வருத்தமொடு நுதல்பசப் பூர
நாமழத் துறந்தன ராயினுந் தாமே
வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பட் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன
செழுநகர் நல்விருந் தயர்மா ரேமுற
விழுநிதி யெளிதினி னெய்துக தில்ல
மழைகா லற்சிரத் து மாலிரு ணீங்கி
நீடமை நிவந்த நிழல்படு சிலம்பிற்
கடாஅ யானைக் கவுண்மருங் குறழ
வாழூர் பிழிதரு காமர் சென்னிப்
புலியுரி வரியதள் கடுப்பக் கலிசிறந்து
காட்பூ வேங்கை நறுமல ருதிர
மேக்கெழு பெருஞ்சினை யேறிக் கணைக்கலை
கூப்பிடூஉ வுகளுங் குன்றகச் சிறுநெறிக்
கற்பிறங் காரிடை விலங்கிய
சொற்பெயர் தேஎத்த சுரனிறந் தோரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் வேறுபட்டதலைவி வற்புறுக்குந் தோழிக்குச் சொல்லியது.

—நக்கீரர்.

பி - ம். 5. துணிவுள். 18. வாழூர்பிழியுங். 22. குன்றச்சிறு நெறி.

206. மருதம்

* என்னெனப் படுங்கொ றோழி நன்மகிழ்ப்
பேடிப் பெண்கொண் டாடுகை கடுப்ப

---

* இவ்வடியின்கண்ணுள்ள "என்" என்பது என்ன தீவினை கொல் என்னும் பொருட்டு. (சிந். 1632. உரை)

நகுவரப் பிணைத்த நிரிமருப் பெருமை.
மயிர்க்கவின் கொண்ட மாத்தோ லிரும்புறஞ்
சிறுதொழின் மகாஅ ரேறிச் சேணோர்க்குத்
துறுகன் மந்தியிற் றோன்று மூரன்
மாரி யீங்கை மாத்தளி ரன்ன
வம்மா மேனி யாயிழை மகளிர்
ராரந் தாங்கிய வலர்மூலை யாகத்
தாராக் காதலொடு தாரிடைக் குழைய
முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்
வதுவை மேவல ஞகலி னதுபுலந்
தடுபோர் வேளிர் வீரை மூன்றுறை
நெடுவெள் ளூப்பின் னிரம்பாக் குப்பை
பெரும்பெயற் குருகி யாஅங்குத்
திருந்திழை நெகிழ்ந்தன தடமென் றோளே.

என்பது : வாயில்வேண்டிச்சென்ற விறலிக்குத் தலைமகள் வாயின் மறுத்தது.

—மதுரை மருத்தனிளநாகனார்.

பி - ம். 3. நகுவரப்படைத்த. 5 சேணர்க்குந்.

207. பாலை

அணங்குடை முந்நீர் பரந்த செறுவி
னுணங்குதிறம் பெயர்ந்த வெண்க லமிழ்தங்
குடபுல மருங்கி னுய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்சே யாடவர்
நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம் புதைத்த கற்பிற ழியவின்
வெஞ்சுரம் போழ்ந்த வஞ்சுவரு கவலை
மிஞிறுர் கடாஅங் கரந்துவிடு கவுள
வெயிறின வருந்திய நீடுமருப் பொருத்தல்

பிணரழி பெருங்கை புரண்ட கூவற்
றெண்க ணுவரிக் குறைக்குட முகவை
யுறணி லாளன் மேரண்ட வெய்துயிர்த்துப்
பிறைநுதல் வியர்ப்ப வுண்டனள் கொல்லோ
தேங்கலந் தளைஇய தீம்பா லேந்திக்
கூழை யுளர்ந்து மொழிமை கூறவு
மறுத்த சொல்ல ளாகி
வெறுத்த வுள்ளமொ டுண்ணு தோளே.

என்பது : மகட் போக்கிய தாய்சொல்லியது.

—மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனர்.

பி - ம். (செவிலி)

208. குறிஞ்சி

யாம விரவி னெடுங்கடை நின்று
தேமுதிர் சிமையக் குன்றம் பாடு
நுண்கோ லகவுநர் வேண்டுன் வெண்கோட்
டண்ணல் யானை யீயும் வண்மகிழ்
வெளியன் வேண்மா ணஅ யெயின
ன்னளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
யிழையணி யானை யியறேர் மிஞிலியொடு
கண்பக லுற்ற செருவிற் புண்கூர்ந்
தொள்வாண் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்
கங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்
றுன்னகதிர் தெறுமைச் சிறகரிற் கோலி
நிழல்செய் துழறல் காணேன் யானெனப்
படுகளங் காண்டல் செல்லான் சினஞ்சிறந்
தருவினை நன்ன னருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேண் மகளிர்
குரூஉப்பூம் பைந்தா ரருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை

யகுதை களைதந் தாங்கு மிகுபெய
லுப்புச்சிறை நில்லா வெள்ளம் போல
நாணுவரை நில்லாக் காம நண்ணி
நல்கினள் வாழியர் வந்தே யோரி
பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லிக்
கார்மலர் கடுப்ப நாறு
மேர்நுண் ணூதி மாஅ யோளே.

என்பது : புணர்ந்துநீங்கும் தலைமகள் றன்னெஞ்சிற்குச் சொல் லியது.

—பரணர்.

பி - ம். 11. தெறுமற்சிறக. 12. காண்ணைச்சிலை இ. 16. தாராக் கிய. 17. வரைவிட. 20. நாணுவரையில்லா.

209. பாலை

* தோளுந் தொல்கவின் றொலைந்தன நாளு
மன்னையு மருந்துய ருற்றன ளலரே
பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமா
னெழுவுறழ் திணிதோ ளியறேர்ச் செழிய
னேரா வெழுவ ரடிப்படக் கடந்த
வாலங் கானத் தார்ப்பினும் பெரிதென
வ்வாழல் வாழி தோழி யவரே
மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத் தும்ப
ரறையிறந் தகன்றன ராயினு நிறையிறந்
துள்ளா ராதலோ வரிதே செவ்வேல்
முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்

---

* "என்புநெகப் பிரிந்தோள்.....வன்புறைக் கண்ணும்" என்னும் பகுதிக்கு இப்பாட்டினை உதாரணமாகக் காட்டுவர் நச். (தொல். பொருள். 114.)

லோரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேற் பலவின் டயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவு ளாக்கிய
பலர்புகழ் பாவை யன்னநின் னலனே.

என்பது : பிரிவிடைவேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

—கல்லாடனார்.

பி - ம். (வற்புறுத்துந் தோழி சொல்லியது.)

210. நெய்தல்

குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவ
ரெறியுளி பொருத வேமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடன் மறுப்பட
விசும்பணி வில்லிற் போகிப் பசும்பிசிர்த்
திரைபயி லழுவ முழக்கி யுரனழிந்து
நிரைதிமின் மருங்கிற் படர்தரும் துறைவன்
பானு ளிரவினம் பிணைத்தோ ளுள்ளித்
தானிவண் வந்த காலை நம்மூர்க்
கானலம் பெருந்துறைக் கவின்பா ராட்டி
யானது புகழ்ந்திசி னோனே யினித்தன்
சாயன் மார்பிற் பாயன் மாற்றிக்
கைதையம் படுசினைக் கடுந்தேர் விலங்கச்
செல்வரி தென்னு மென்பது
பலகேட் டனமாற் றோழி நாமே.

என்பது: தோழி தலைமகன்சிறைப்புறமாகத் தலைமகட்குச்சொல்லு வாளாய்ச் சொல்லியது.

—உலோச்சனார்.

இப்பாட்டின்கருத்து எம்மை இரந்துபடுத்துக்கூடனென்பது

பி - ம். 4. பசும்பிதிர். 6 படருந்துறைவன்.

211. பாலை

கேளா யெல்ல தோழி வாலிய
சுதைவிரிந் தன்ன பல்பூ மராஅம்
பறைகண் டன்ன பாவடி நோன்குரட்
டிண்ணிலை மருப்பின் வயக்களி றுரிஞுதொறும்
தண்மழை யாலியிற் ருஅ யுழவர்
வெண்ணெல் வித்தி னறைமிசை யுணங்கும்
பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினு நல்குவர்
குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரைப்
பிடிபடு பூசலி னெய்தா தொழியக்
கடுஞ்சின வேந்த னேவலி னெய்தி
நெடுஞ்சே ணுட்டிற் றலைத்தார்ப் பட்ட
கல்லா வெழினி பல்லெறிந் தழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயின்
மத்தி நாட்டிய கல்கெழு பணித்துறை
நீரொலித் தன்ன பேஎ
ரலர்நமக் கொழிய வழப்பிரிந் தோரே.

என்பது : பிரிவின்கண்வேறுபட்டதலைமகளது வேறுபாடுகண்டு தோழி சொல்லியது.

—மாமூலனார்.

பி - ம். 2. சுரை. 8. தேஎத்த என்பவல்கலுங். 16-17. பாஅலர்.

212. குறிஞ்சி

* தாவி னன்பொன் றைஇய பாவை
விண்டவ ழிளவெயிற் கொண்டுநின் றன்ன
மிகுகவி னெய்திய தொகுகுரு ஹம்பாற்

---

* தா - வலி. 4. மணற்கீன்ற - மணலுள் ஈன்ற (தொல். சொல். 344, 106.) இப்பாட்டினை இத்துறைக்கே உதாரணமாகக் காட்டினர் நச். (தொல். பொருள். 134.)

கிளையரி ணுணற் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்
நயவன் றைவருஞ் செவ்வழி நல்யா
ழிசையோர்த் தன்ன வின்றீங் கிளவி
யணங்குசா லரிவையை நசைஇப் பெருங்களிற்
றினம்படி நீரிற் கலங்கிய பொழுதிற்
பெறலருங் குரைய வென்னுய் வைகலு
மின்னு வருஞ்சுர நீந்தி நீயே
யென்னை யின்னற் படுத்தனை மின்னுவசிப்
பூவுக்கால் கடுப்ப மறலி மைந்துற்று
விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇப்
படைநிலா விலங்குங் கடன்மரு டானை
மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெரூஅது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
யோங்குதிரைப் பௌவ நீங்க வோட்டிய
நீர்மா ணெஃகை நிறத்துச்சென் றழுந்தக்
கூர்மத னழியரோ நெஞ்சே யாஞ
தெளிய ளல்லோட் கருதி
விளியா வெவ்வங் தலைத்தந் தோயே.

என்பது : அல்லகுறிப்பட்டுநீங்குந் தலைமகள் தன்னெஞ்சினை நொருங்கிச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 14 மொழித்தகட்டூர். 17. விலங்கியசினஞ். 18. முன்னர் முற்றி. 22. ளல்லோட்கு வருந்தி. (கோக்கி.)

213. பாலை

வினைநவில் யானை விறற்போர்த் தொண்டைய
ரினமழை தவழு மேற்றரு நெடுங்கோட்
டோங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்க்

கொய்குழை யதிரல் வைகுபுல ரலரி
சுரிவிரும் பித்தை சுரும்புபடச் சூடி
யிகன்முனைத் தழீஇய வேறுடைப் பெருநிரை
நனைமுதிர் நறவி னுட்பலி கொடுக்கும்
வானிணப் புகவின் வடுகர் தேஎத்து
நிழற்கவி னிழந்த நீரி னீளிடை
யழலவி ரருஞ்சுர நெடிய வென்னு
தகற லாய்ந்தன ராயினும் பகல்செலப்
பல்கதிர் வாங்கிய படுசுட ரமையத்துப்
பெருமரங் கொன்ற கால்புகு வியன்புனத்
தெரிமருள் கதிர திருமணி யிமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை
வேயொழுக் கன்ன சாயிறைப் பணைத்தோட்
பெருங்கவின் சிதைய நீங்கி யான்றே
ரரும்பெற லுலக மமிழ்தொடு பெறினுஞ்
சென்றுதா நீடலோ விலமே யென்றுங்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கை
வலம்படு வென்றி வாய்வாட் சோழ
ரிலங்குநீர்க் காவிரி யிழிபுனல் வரித்த
வறலென நெறிந்த கூந்த
லுறவில் சாயலொ டொன்றுதன் மறந்தே.

என்பது: பிரிவிடைவேறுபட்டதலைமகளைத் தோழி வற்புறீஇயது.

—தாயங்கண்ணனார்.

பி-ம். 1. விளைநல், 13. சால்புகுவியன், 14. தெரிமருள் கதிர் மணியிமைக்குமத்தம், (தையங்கண்ணனார். இதையங்கண்ணனார்.)

214. முல்லை

அகலிரு விசும்பகம் புதையப் பாஅய்ப்
பகலுடன் கரந்த பல்கதிர் வான

மிருங்களிற் றினநிரை குளிர்ப்ப வீசிப்
பெரும்பெய லழிதுளி பொழித லானது
வேந்தனும் வெம்பகை மூரணி யேந்திலை
யிடுகதிர் நெடுவே லிமைக்கும் *பாசறை
யடுபுகழ் மேவலொடு கண்படை யிலனே
யமருந் தம்வயி னதுவே நமரென
நம்மறிவு தெளிந்த பொம்ம லோதி
யாங்காகு வள்கொ ருனே யோங்குவிடைப்
படிசுவற் கொண்ட பகுவாய்த் தெண்மணி
யாபெயர் கோவல ராம்பலொ டூளிப்
பையு னல்யாழ் செவ்வழி வகுப்ப
வாருயி ரணங்குந் தெள்ளிசை
மாரி மாலையுந் தமியள் கேட்டே. †

என்பது: பாசறைக்கட் டலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்.

பி - ம். 7. அடுபுகழ்வேலொடு. 9. நம்மறிவுதெளித்த.

215. பாலை

‡ விலங்கிருஞ் சிமையக் குன்றத் தும்பர்
வேறுபன் மொழிய தேள முன்னி
வினைநசைஇப் பரிக்கு மூரன்மிகு நெஞ்சமொடு

---

* "பாடி.....மண்டமர் கசையொடு கண்பனட் பெறுஅது" என முல்லைப்பாட்டிலுள்ளும் வந்தது காண்க. (அடிகள் 28-67)

† இப்பாட்டுப் பொருள்நோக்கினுல் தானுகண்டு வருந்திக் கூறியது என்பர் நச். (தொல். பொருள். 24)

‡ "விலங்கிருஞ்.....செலன்மாண்புற்ற" என்புழி வேறுபன் மொழிய தேளத்தைக் கொள்ளக்கருதிப் போர்த்தொழிலைச் செலுத்தும் உரன்மிக்க நெஞ்சமென்றலின், இது குறுநிலமன்னன் தன் பகைவயின் நாடுகொள்ளச் சென்றதாம், வேந்தனெனப்பெயர் கூறுமையின் என்பர் நச். (தொல். பொருள். 32.)

புனைமா ணெஃகம் வலவயி னேந்திச்
செலன்மாண் புற்ற நும்வயின் வல்லே
வலனு கென்றலு நன்றுமற் றில்ல
கடுத்தது பிழைக்குவ தாயிற் றொடுத்த
கைவிரற் கவ்வுங் கல்லாக் காட்சிக்
கொடுமரம் பிடித்த கோடா வன்கண்
வடிகவி லம்பி னேவ லாடவ
ராளழித் துயர்த்த வஞ்சுவரு பதுக்கைக்
கூர்நுதிச் செவ்வா யெருவைச் சேவல்
படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ
மல்லன் மொசிவிர லொற்றி மணிகொண்டு
வல்வாய்ப் பேடைக்குச் சொரியு மாங்கட்
கழிந்தோர்க் கிரங்கு நெஞ்சமொ
டொழிந்திவ ணுறைத லாற்று வோர்க்கே.

என்பது: செலவுணர்த்தியதோழி தலைமகள்குறிப்பறிந்து தலைமகனைச் செலவழுங்குவித்தது.

—இறங்குகுடிக் குன்றநாடன்.

பி-ம். 2. தேய முன்னி. 3. முரண்மலி; முரன்மலி.

216. மருதம்

நாண்கொளுவுண் கோலின் மீன்கொள் பாண்மகள்
தான்புன லடைகரைப் படுத்த வராஅ
ஞரி நறவுண் டிருந்த தந்தைக்கு
வஞ்சி விறகிற் சுட்டுவா யுறுக்குந்
தண்டுறை யூரன் பெண்டி ரெம்மைப்
பெட்டாங்கு மொழிப வென்ப வவ்வலர்ப்
பட்டன மாயி னினியெவ ணுகியர்
கடலாடு மகளிர் கொய்த ஞாழலுங்
கழனி யுழவர் குற்ற குவளையுங்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு

பல்லிளங் கோசர் கண்ணி யயரு
மல்லல் யாணர்ச் * செல்லிக் கோமா
னெறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வே
லாத னெழினி யருநிறத் தழுத்திய
பெருங்களிற் றெவ்வம் போல
வருந்துவர் மாதவர் சேரியாஞ் செலினே.

என்பது : தலைமகட்குப்பாங்காயினர் கேட்பத் தனக்குப்பாங்காயினர்க்குப் பாத்தை சொல்லியது.

—ஐயூர் முடவனார்.

இப்பாட்டின் கருத்துப் பிறராலும் இன்பம் பெறுவான் என்றவாறு.

பி-ம். 1. ஞாண்கொணண் கோனன் மீன்கொள். 2. தண்புன.

217. பாலை

பெய்துபுலந் திறந்த பொங்கல் வெண்மழை
யெஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன
துவலை தூவல் கழிய வகல்வய
னீடுகழைக் கரும்பின் கணைக்கால் வான்பூக்
கோடைப் பூளையின் வாடையொடு துயல்வரப்
பாசிலைப் பொதுளிய புதலுறும் பகன்றை
நீலுண் பச்சை நிறமறைத் தடைச்சிய
தோலெறி பாண்டிலின் வாலிய மலரக்
கோழிலை யவரைக் கொழுமுகை யவிழ
வூழுறு தோன்றி யொண்பூத் தளிவிடப்
புலந்தொறுங் குயிலு நரலக் கல்லென
வகன்றுறை மகளி ரணிதுறந்து நடுங்க
வற்சிரம் வந்தன் றமைந்தன் றிதுவென
வெப்பொருள் பெறினும் பிரியன்மி னேவெனச்
செப்புவல் வாழியோ துணையுடை யீர்க்கென
நல்காக் காதலர் நலனுண்டு துறந்த

* செல்லி என்றது செல்லூர்.

பாழ்படு மேனி நோக்கி நோய்பொர
வினரிறு புடையு நெஞ்சமொடு புணர்வுவேட்
டெயிறுதீப் பிறப்பத் திருகி
20 நடுங்குதும் பிரியின்யாங் கடும்பனி யுழந்தே.

என்பது: பிரிவுணர்த்தியதோழிக்குத் தலைமகள் ஆற்றுமைமீதூரச் சொல்லியது.

—கழார்க் கீரனெயிற்றியார்.

இப்பாட்டு எதிர்காலம் நோக்கிற்று.

பி.-ம் 1. பெய்துபுறந்தந்த. 2. பஞ்சின்றுய் 8. வாலிதின் 9. கொழுமுகையுடைய 11. குருகினூரல ; குருகினரல. 18. நிறு புடைபு. 19. பரப்ப.

218. குறிஞ்சி

* இளபா ராட்டுங் கடுநடை வயக்களிறு
முளைதரு பூட்டி வேண்டுகுள கருத்த
வாணிற வுருவி னெளிறுபு மின்னிப்
பரூஉவுறைப் பம்ருளி சிதறிவா னவின்று
5 பெருவரை நளிர்சிமை யதிர வட்டித்துப்
புயலே றுரைஇய வியலிரு ணடுநாள்
விறலிழைப் பொலிந்த காண்பின் சாயற்
றடைஇத் திரண்டநின் மேரள்சேர் பல்லதைப்
படாஅ வாகுமெங் கண்ணென நீயு
10 மிருண்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி
வரிவயங் கிரும்புலி வழங்குரர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவரி தென்னுய்
வரவெளி தாக வெண்ணுதி யதனு
ணுண்ணிதிற் கூட்டிய படுமா ணுரந்
15 தண்ணிது கழ்மு நின்மார் பொருநா
ளடைய முயங்கே மாயின் யாமும்

* இப்பாட்டினை இத்துறைக்கே கொண்டார் நச். (தொல். பொருள். 3.)

விறலிழை நெகிழச் சாஅய்த மதுவே
யன்னை யறியினு மறிக வலர்வா
யம்பன் மூதூர் கேட்பினுங் கேட்க
வண்டிறை கொண்ட வெரிமரு டோன்றியொ
டொண்பூ வேங்கை கமழுந்
தண்பெருஞ் சாரற் பகல்வந் தீமே.

என்பது : தோழி தலைமகனை இடத்துய்த்துவந்து பகற்குறி கோர்த வாய்பாட்டாற் றலைமகனை வரைவுகடாயது.

—கபிலர்.

பி - ம். 2. குளகருந்த. 5. நளிச்சிமை. 12. வரலரிதென். 20-21. டோன்றல பொன்பூ; டோன்ற லொண்பூ.

219. பாலை

சீர்கெழு வியனகர்ச் சிலம்புக வியவி
யோரை யாயமொடு பந்துசிறி தெறியினும்
வாரா யோவென் றேத்திப் பேரிலைப்
பகன்றை வான்மலர் பனிநிறைந் ததுபோற்
பால்பெய் வள்ளஞ் சால்கை பற்றி,
யென்பா லுண்டனை யாயி னொருகா
லுந்தை பாடு முண்ணென், றூட்டப்
பிறந்ததற் கொன்றுஞ் சிறந்தவை செய்தியா
னலம்புனைந் தெடுத்தவென் பொலந்தொடிக்
ளறனி லாளனெ டிறந்தன ளினியென [குறுமக
மறந்தமைந் தராஅ நெஞ்ச நோவென்
பொன்வார்ந் தன்ன வைவா லெயிற்றுச்
செந்நாய் வெரீஇய புகருழை யொருத்தல்
பொறியரை விளவின் புன்புற விளைபுழ
லழலெறி கோடை தூக்கலிற் கோவலர்
குழலென நினையு நீரி னீளிடை
மடத்தகை மெலியச் சாஅய்
நடக்குங் கொல்லென நோவல் யானே.

என்பது : மகட்போக்கிய தாய் சொல்லியது.

—கயமனார்.

பி - ம். 8. பிரந்ததற்கொண்டுஞ் சிறந்தவை செய்கியா.

220. நெய்தல்

ஊருஞ் சேரியு முடனியைந் தலழெழுத்
தேரொடு மறுகியும், பணிமொழி பயிற்றியுங்
கெடாஅத் தீயி னுருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய
மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்
முன்முயன் றரிதனின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பி
னருங்கடி நெடுந்தூண் போல யாவருங்
காண லாகா மாணெழி லாக
முள்ளுதொறும் பனிக்கு நெஞ்சினை நீயே
நெடும்புற நிலையினை வருந்தினை யாயின்
முழங்குகட லோதங் காலைக் கொட்கும்
பழம்ப னெல்லி னூணூ ராங்க
ணேலா விருபுட் போல நெஞ்சமர்ந்து
காதன் மாரூக் காமர் புணர்ச்சியி
னிருங்கழி முகந்த செங்கொ லவ்வலை
முடங்குபுற விறவோ டினமீன் செறிக்கு
நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானத்து
யாணர்த் தண்பணை யுறுமெனக் கான
லாய மாய்ந்த சாயிறைப் பணைத்தோ
ணல்லெழில் சிதையா வேமஞ்
சொல்லினித் தெய்யயாங் தெளியு மாறே.

என்பது : இரவுக்குறிவந்துநீங்கும் தலைமகனை யெதிர்ப்பட்டுத் தோழி சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 4. குரூஉச்சமம். 11. நிலையின் வருந்தினை. 14. இரும்புள்.

221. பாலை

நனைவினை நறவின் றேறன் மாந்திப்
புனைவினை நல்லிற் றருமணற் குவைஇப்
பொம்ம லோதி யெம்மகண் மணனென
வதுவை யயர்ந்தனர் நமரே யதனற்
புதுவது புனைந்த செயலை வெள்வேன்
மதியுடம் பட்ட மையணற் காளை
வாங்குசினை மலிந்த நிரளரை மராஅத்துத்
தேம்பாய் மெல்லினர் தளிரொடு கொண்டுநின்
றண்ணறு முச்சி புனைய வவனெடு
கழைகவின் போகிய மழையுயர் நனந்தலைக்
களிற்றிரை பிழைத்தலிற் கயவாய் வேங்கை
காய்சினஞ் சிறந்து குழுமலின் வெரீஇ
யிரும்பிடி யிரியுஞ் சோலை
யருஞ்சுரஞ் சேற லயர்ந்தனென் யானே.

என்பது : தலைமகற்குப் போக்குடன்பட்டதோழி தலைமகட்குப் போக்குடன்படச் சொல்லியது.

—கயமனார்.

பி – ம். 3. யென்மகண். 7. வாங்குசினைக்கொய்த. 8. தேம் பாய்தளிரொடு மெல்லினர் கொண்டு.

222. குறிஞ்சி

வானுற நிவந்த நீனிறப் பெருமலைக்
கான நாட னுறீஇய நோய்க்கென்
மேனி யாய்நலந் தொலைதலின் மொழிவென்
முழவுமுகம் புலராக் கலிகொ ளாங்கட்
கழாஅர்ப் பெருந்துறை விழவி னூடு
மீட்டெழிற் பொலிந்த வேந்துகுவவு மொய்ம்பி
னுட்ட னத்தி நலனயங் துறைஇத்
தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின்

மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
வாதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்
சென்மோ வாழி தோழி பன்னூ
ரூரவுரு மேறூடு மயங்கி
யிரவுப்பெயல் பொழிந்த வீர்ந்த ணூறே.

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 9. மருண் டிடருழந்த. 10. காதலிற்காட்டி. 11. பாடு சால். 12. மந்தியன்ன.

223. பாலை

பிரிதல் வல்லிய ரிதுநத் துறந்தோர்
மறந்து மமைகுவர் கொல்லென் றெண்ணி
யாழல் வாழி தோழி கேழல்
வளமருப் புறழூ முளைநெடும் பெருங்காய்
நளைமுதிர் முருக்கின் சினைசேர் பெருங்கற்
காய்சினக் கடுவளி யெடுத்தலின் வெங்கட்
டழல்பொழி யானையி னெயெனத் தோன்று
நிழலி லோமை நீரி னீளிடை
யிறந்தன ராயினுங் காதலர் நம்வயின்
மறந்துகண் படுதல் யாவது புறந்தா
ழும்பணை நெடுந்தோட் டங்கித் தும்பி
யரியினங் கடிக்குஞ் சுரிவண ரைம்பா
லுண்கே ழுடங்க வாரிப் பையுள்கெட
நன்முகை யதிரற் போதொடு குவளைத்
தண்ணரு ங்கமழ்தொடை வேய்ந்தநின்
மன்னூர் கூந்தன் மரீஇய தயிலே.

என்பது : பிரிவிடை வேறுப்பட்ட தலைமகளைத் தேர்ழி வற்புறுத்தி யது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி-ம். 1. வல்லியரதுகத். 4. நெடும் பொங்கர். 6. வெங்காட். 13. ஞண்டுகளடங்க. பையுள்கெடு. 15. சமழ்தொடர்.

224. முல்லை

செல்க பாக வெல்லின்று பொழுதே
வல்லோ னடங்குகயி றமைப்பக் கொல்லன்
விசைத்துவாங்கு துருத்தியின் வெய்ய வுயிராக்
கொடுநுகத் தியாத்த தலைய கடுநடைக்
காற்கடிப் பன்ன கடுஞ்செல லிவுளி
பால்கடை நுரைபின் பரூஉமிதப் பன்ன
வால்வெண் டெவிட்டல் வழிவார் நுணக்கஞ்
சிலம்பி நூலி னுணங்குவன பாறிச்
சாந்துபுல ராகல மறுப்பக் காண்டகப்
புதுநலம் பெற்ற வெய்துநீங்கு புறவிற்
றெறிநடை மரைக்கண மிரிய மனையோ
ளுதுணங்கு வல்சி பெய்துமுறுக் குறுத்த
திரிமரக் குரலிசை கடிப்ப வரிமண
லலங்குகதிர்த் திகிரி யாழி போழ
வருங்கொ ரேழிநம் மின்னுயிர்த் துணையெனச்
சில்கோ லெல்வளை யொடுக்கிப் பல்கா
லருங்கடி வியனகர் நோக்கி
வருந்துமா லளிய டிருந்திழை தானே.

என்பது : வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—ஆவூர்மூலங்கிழார்மகனார் பெருந்தலைச்சாத்தனார்.

பி.ம். 7. வால்வெண் டோட்டல். (ஆவூர்க்கிழார்மகன் பெருஞ் சாத்தன்.)

225. பாலை

* அன்பு மடனுஞ் சாயலு மியல்பு
மென்பு நெகிழ்க்குங் கிளவியும் பிறவு
மொன்றுபடு கொள்கையொ டோராங்கு முயங்கி
யின்றே யிவண மாகி நாளைப்
புதலிவ ராடமைத் தும்பி குயின்ற
வகலா வந்துளை கோடை முகத்தலி
னீர்க்நியங் கினநிரைப் பின்றை வார்கோ
லாய்க்குழற் பாணியி னேதுவந் திசைக்குந்
தேக்கமல் சோலைக் கடறூங் கருஞ்சுரத்
தியாத்த தூணித் தலைதிறந் தவைபோற்
பூத்த விருப்பைக் குழைபொதி குவியினர்
கழறுளை முத்திற் செந்நிலத் துதிர
மழைதுளி மறந்த வங்குடிச் சீறூர்ச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே பூப்புனை
புயலென வொலிவருந் தாழிருங் கூந்தற்
செறிதொடி முன்கைநங் காதலி
யறிவளுர் நோக்கமும் புலவியு நினைந்தே.

என்பது : பொருள்கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்.

இப்பாட்டினுள் தூணித்தலை திறந்த வென்பது உறைகழித்த வென்றவாறு.

226. மருதம்

உணர்குவ னல்லெ னுரையாளின் மாய
நாணிலை மன்ற யாண ரூர
வகலு ளாங்க ணம்பகை மடிவைக்

---

* இது நெஞ்சினைப் பிரியக்கருதி வருந்திக்கூறியது' என்பர் நச். (தொல். பொருள். 146.)

குறுந்தொடி மகளிர் குரூஉப்புனன் முனையிற்
பழனப் பைஞ்சாய் கொழுதிக் கழனிக்
கூர்ந்தையஞ் செறுவின் வெண்குரு கோப்பும்
வல்வி லெறுழ்த்தோட் பாதவர் கோமான்
பல்வேன் மத்தி கழாஅர் முன்றுறை
நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய
விடியல் வந்த பெருநீர்க் காவிரித்
தொடியணி முன்கை நீவெய் யோளொடு
முன்னு ளாடிய கவ்வை யிங்ஙாள்
வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளிய னுறந்தை நாளவைப்
பாடின் றெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய வார்ப்பினும் பெரிதே.

என்பது : தலைமகற்குத் தோழி வாயின்மறுத்தது.

—பரணர்.

இப்பாட்டினுள் மடிவையென்றது தழையை.

227. பாலை

நுதல்பசந் தன்றே தோள்சா யினவே
திதலை யல்குல் வரியும் வாடின
வென்னு குவள்கொ லிவளெனப் பன்மா
ணீர்மலி கண்ணொடு நெடிதுநினைந் தொற்றி
யினையல் வாழி தோழி நனைகவுட்
காய்சினஞ் சிறந்த வாய்புகு கடாத்தொடு
முன்னிலை பொருஅது மூரணிப் பொன்னிணர்ப்
புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப
முதல்பாய்ந் திட்ட முழுவலி யொருத்தல்
செந்நிலப் படிநீ ருடிச் செருமலைந்து
களங்கொண் மள்ளரின் முழங்கு மத்தம்
பலவிறந் தகன்றன ராயினு நிலனி

நோயில ராகநங் காதலர் வாய்வாட்
டமிழ்கப் படுத்த விமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநா ளிருக்கைத்
தூங்கல் பாடிய வோங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பி னாஅ ரும்பர்
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநக
ரிருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்
தெல்லுமி ழாவணத் தன்ன
கல்லென் கம்பலை செய்தகன் மூரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழிசொல்லியது. பிரிவின்கண் வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

—நக்கீரர்.

பி - ம். 3.-4. பன்னுணீர்மலி. 17. பிடிமதி முறுதுணைப். 19. விழுவுறு திருநகர்; வீழ்வுறு. 21. தெல்லிமிழ்

228. குறிஞ்சி

பிரசப் பல்கிளை யார்ப்பக் கல்லென
வரையிழி யருவி யாரந் தீண்டித்
தண்ணென நனைக்கு ளிமலைச் சிலம்பிற்
கன்னென மலர்ந்த மாயிதழ்க் குவளைக்
கன்முகை நெடுஞ்சுனை நம்மொ டாடிப்
பகலே யினிதுட்ன் கழிப்பி யிரவே
செல்வ ராயினு நன்றுமற் றில்ல
வான்கண் விரிந்த பகன்மரு ணிலவிற்
சூரன் மிளைஇய சார லாராற்
சேந்தன் மிசைஇய வேங்கை யொள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலிற் கயவா
யிரும்பிடி யிரியுஞ் சோலைப்
பெருங்கல் யாணர்த்தஞ் சிறுகுடி யானே.

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

—அண்டர்மகன் குறுவழுதியார்.

இப்பாட்டு, பகலே சிறைப்புறம்.

229. பாலை

பகல்செய் பல்கதிர்ப் பருதியஞ் செல்வ
னகல்வாய் வானத் தாழி போழ்ந்தென
நீரற வறந்த நிரம்பா நீளிடைக்
கயந்தலைக் குழவிக் கவியுகிர் மடப்பிடி
குளகுமறுத் துயங்கிய மருங்குல் பலவுடன்
பாழூர்க் குரம்பையிற் றீரூன்று மாங்க
ணெடுஞ்சே ணிடைய குன்றம் போகிய
பொய்வ லாளர் முயன்றுசெய் பெரும்பொரு
ணம்மின் முயினு முடிக வல்லெனப்
பெருந்துனி மேவ னல்கூர் குறுமக
ணேய்மலிர் துகுத்த நொசிவரற் சின்னீர்
பல்லிதழ் மழைக்கட் பாவை மாய்ப்பப்
பொன்னேர் பசலை யூர்தரப் பொறிவரி
நன்மா மேனி தொலைத லஞ்சி
யினைய லென்றி தோழி சினைய
பாசரும் பீன்ற செம்மூகை முருக்கினப்
போதவி ழலரி கொழுதித் தாதருந்
தந்தளிர் மாஅத் தலங்கன் மீமிசைச்
செங்க ணிருங்குயி னயவரக் கூஉ
மின்னிள வேனிலும் வாரா
ரின்னே வருது மெனத்தெளித் தோரே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்டதலைமகளை வற்புறுத்தற்தோழிக்குத் தலைமகள் வன்புறையெதிரழிந்து சொல்லியது.

—மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.

பி - ம். 10. மேவநல்கூர்.

230. நெய்தல்

*உறுகழி மருங்கி னேதமொடு மலர்ந்த
சிறுகரு நெய்தற் கண்போன் மாமலர்ப்
பெருந்தண் மாத்தழை யிருந்த வல்கு
லைய வரும்பிய சுணங்கின் வையெயிற்று
மையீ ரோதி வாணுதற் குறுமகள்
விளையாட் டாயமொடு வெண்மண லுதிர்த்த
புன்னை நுண்டாது பொன்னி னெண்டே
மனைபுறந் தருதி யாயி னெனையதூஉ
மிம்மனைக் கிழமை யெம்மொடு புணரிற்
றீது முண்டோ மாத ராயெனக்
கடும்பரி நன்மான் கொடிஞ்சி நெடுந்தேர்
கைவல் பர்கன் பையென வியக்க
யாந்தற் குறுகின மாக வேந்தெழி
லரிவே யுண்கண் பனிவர லொடுக்கிச்
சிறிய விறைஞ்சின டலையே
பெரிய வெவ்வம் யாமிவ ணுறவே.

என்பது : தலைமகளைக் கண்ணுற்றுநீங்குந்தலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது.

—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

பி - ம். 3.—4. தழையருந்த வல்குலை யவரும்பிய ; வல்குலை யரும்பிய சுணங்கி னைய வையெற்று 14. லரிவையுண்.

231. பாலை

செறுவோர் செம்மல் வாட்டலுஞ் சேர்ந்தோர்க்
குறுமிடத் துலக்கு முதவி யாண்மையு
மில்லிருந் தமைவோர்க் கில்லென் றெண்ணி

---

* "கைப்பட்டுக்கலங்கினும்" என்னுந்துறைக்குஇப்பாட்டினை உதாரணம்மாகக் கொண்டு, இதனைத்தலைவன் கூறியது என்பர் நச். (தொல். பொருள். 111.)

கல்லிசை வலித்த நாணுடை மனத்தர்
கொடுவிற் கானவர் கணையிடத் தொலிந்தோர்
படுகளத் துயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை
கள்ளியம் பறந்தலைக் களர்தொறுங் குழீஇ
யுள்ளூர்ப் பனிக்கு மூக்கருங் கடத்திடை
வெஞ்சுர மிறந்தன ராயினு நெஞ்சுருக
வருவர் வாழி தோழி பொருவர்
செல்சமங் கடந்த செல்லா நல்லிசை
விசும்பிவர் வெண்குடைப் பசும்பூட் பாண்டியன்
பாடுபெறு சிறப்பிற் கூட லன்னகின்
னுடிவண் டாற்று முச்சித்
தோடார் கூந்தன் மரீஇ யோரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் வேறுபட்டதலைமகட்குத் தோழி சொல்லியது.

—மதுரை ஈழத்துப் பூதன்றேவனார்.

பி - ம். 3. கில்லென வெண்ணி. 15. தோடார் மென்றோன் மரீஇ.

232. குறிஞ்சி

காணினி வாழி தோழி பாணன்
மழைமுழங் கரவங் கேட்ட கழைதின்
மாஅல் யானை புலிசெத்து வெரீஇ
யிருங்கல் விடரகஞ் சிலம்பப் பெயரும்
பெருங்க ணுடன்றே கேண்மை யிணியே
குன்ற வேலிச் சிறுகுடி யாங்கண்
மன்ற வேங்கை மணநாட் பூத்த
மணியே ரரும்பின் பொன்வீ தாஅய்
வியலறை வரிக்கு முன்றிற் குறவர்
மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கு
மார்கலி விழவுக்களங் கடுப்ப நாளும்
விரவுப்பூம் பலியொடு விரைஇ யன்னை

கடியுடை வியனகர்க் காவல் கண்ணி
முருகென வேலற் றரூஉம்
பருவ மாகப் பயந்தன்று னமக்கே.

என்பது: தோழி தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

—கோடிமங்கலத்து வாணுளி நற்சேந்தனார்.

பி - ம். 2. மழைமுழங்கோலங்.

233. பாலை

அலமரன் மழைக்கண் மல்குபனி வார்நின்
னலர்முலை நனைய வழாஅ ரேழி
யெரிகவர், புன்ட கரிபுறப் பெருநிலம்
பீடுகெழு மருங்கி னேடுமழை துறந்தென
வூனில் யானை யுயங்கும் வேனின்
மறப்படைக் குதிரை மாரு மைந்திற்
றுறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய வுதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை யிரும்பல்
கூளிச் சுற்றங் குழீஇயிருந் தாங்குக்
குறியவு நெடியவுங் குன்றுதலை மணந்த
சுரனிறந் தகன்றன ராயினு மிகநனி
மடங்கா வுள்ளமொடு மதிமயக் குரூஅப்
பொருள்வயி னீடலோ விலர்நின்
னிருணெங் கூந்த லின்றுயின் மறந்தே.

என்பது : பிரிவின்கண்வேறுபட்டதலைமகட்குத் தோழி சொல்லியது.

—மாமூலனார்.

இப்பாட்டில் தொய்யா வென்றது கெடாத வென்றவாறு.

234. முல்லை

கார்பயம் பொழிந்த நீர்திகழ் காலை
நுண்ணயிர் பரந்த தண்ணய மருங்கி
ன்னிரைபறை யன்னத் தன்ன விரைபரிப்
புல்லுளைக் கலிமா மெல்லிதிற் கொளீஇய
வள்பொருங் கமையப் பற்றி மூழ்கிய
பல்கதி ராழி மெல்வழி யறுப்பக்
காலென மருள வேறி நூலியற்
கண்ணேணைக் கொழிக்கும் பண்ணமை நெடுந்தேர்
வல்விரைந் தூர்தி நல்வலம் பெறுந
ததர்தழை மூனெஇய தெறிநடை மடப்பிணை
யேறுபுண ருவகைய வூறில வுகள
வஞ்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி
முல்லை நறுமலர்த் தாதுநயந் தூத
வெல்லை போகிய புல்லென் மாலைப்
புறவடைந் திருந்த வுறைவி னல்லூர்க்
கழிபட ருழந்த பனிவா ருண்க
ணன்னிறம் பரந்த பசலையண்
மின்னே ரோதிப் பின்னுப்பிணி விடவே.

என்பது: தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—பேயனார்.

பி-ம். 1. கார்பயன். 10. ததர்நனை. (கழார்க் கீரனெயிற்றியார்.)

235. பாலை

அம்ம வாழி தோழி பொருள்புரிந்
தள்ளார் கொல்லோ காதல ருள்ளியுஞ்
சிறந்த செய்தியின் மறந்தனர் கொல்லோ
பயனிலங் குழைய வீசிப் பெயன்மூனிந்து
விண்டு முன்னிய கொண்டன் மாமழை

மங்கு லற்கமொடு பொங்குபு துளிப்ப
வாடையொடு நிவந்த வாயிதழ்த் தோன்றி
சுடர்கொ ளகலிற் சுருங்குபிணி யவிழச்
சுரிமுகிழ் முசுண்டைப் பொதியவிழ் வான்பூ
விசும்பணி மீனிற் பசும்புத லணியக்
கள்வன் மண்ணளைச் செறிய வகல்வயற்
இளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ
மாரியங் குருகி னீரிய குரங்க
நனிகடுஞ் சிவப்பொடு நாமந் தோற்றிப்
பனிகடி கொண்ட பண்பில் வாடை
மருளின் மாலையொ டருளின்றி நலிய
நுதலிறை கொண்ட வயலறி பசலையொடு
தொன்னலஞ் சிதையச் சாஅ
யென்னள்கொ லளிய ளென்னு தோரே.

என்பது: தலைமகன்பிரிவின்கண் வேறுபட்டதலைமகள் ஆற்றுமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது.

—கழார்க் கீரனெயிற்றியார்.

பி - ம். 11. வகல்வயிற். 14. காமந்தோன்றி. 16. டருளின்று.

236. மருதம்

மணிமருண் மலர முள்ளி யமன்ற
துணிநீ ரிலஞ்சிக் கொண்ட பெருமீ
னரிநிறக் கொழுங்குறை வெளவினர் மாந்தி
வெண்ணெ லரிநர் பெயர்நிலைப் பின்றை
யிடனில நெரிதரு நெடுங்கதிர்ப் பல்சூட்டுப்
பனிபடு சாய்ப்புறம் பரிப்பக் கழனிக்
கருங்கோட்டு மாஅத் தலங்குசினைப் புதுப்பூ
மயங்குமழைத் துவலையிற் றுஅ மூரன்
காமம் * பெருமை யறியே னன்று
மூய்ந்தனென் வாழி தோழி யல்க

* பெறுமை என்றும் படிக்கலாம்.

* லணிகிளர் சாந்தி னம்பட் டிமைப்பக்
கொடுங்குழை மகளிரி லெடுங்கிய விருக்கை
யறியா மையி னழிந்த நெஞ்சி
னேற்றிய லெழினடைப் பொலிந்த மொய்ம்பிற்
றோட்டிருஞ் சுரியன் மணந்த பித்தை
யாட்ட னத்தியைக் காணீ ரோவென
நாட்டி லுட்டி னூரி னூரிற் [னக்
கடல்கொண்ட டன்றெனப் புனலொழிந் தன்றெ
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
வாதி மந்தி போல †
வேதஞ் சொல்லிப் பேதுபெரி துறலே.

என்பது : ஆற்றுமைவாயிலாகப் புக்க தலைமகனீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—பரணர்.

இப்பாட்டின் கருத்து, ஒன்று ஒன்றுய்த்தோன்று மூன்று தலால், கல்லார்போலத் துக்கத்தினைச் செய்வான் என்றவாறு.

பி - ம். 3. வெவ்விளர். 5. யிடைநில. 7. மாஅத்த வஞ்சினைப்.

237. பாலை

புன்காற் பாதிரி யரிநிறத் திரள்வீ
நுண்கொடி யதிரலொடு நுணங்கறல் வரிப்ப
வாலெயிற் றன்ன வரும்புமுதிர் குரவின்
றேனிமிர் நறுஞ்சினைத் தென்றல் போழக்
குயில்குரல் கற்ற வேனிலுந் துயிறுறக்
தின்ன கழியுங் கங்கு லென்றுநின்

---

* இது புலவிப் பொருளாக அச்சம்பிறந்தது என்பர் போர். (தொல். பொருள். 256.)

† ஆதிமந்தி தன்பெயராலும், காதலனுகியவூட்டனத்தி பெயராலும் கூறிற் காஞ்சிப்பாற்படும். "ஆதி மந்தி போல.....தறலே" எனவகத்திணைக்கண் சார்த்துவகையான் வந்தன என்பர் நச். (தொல். பொருள். 54.)

னன்மா மேனி யணிநலம் புலம்ப
வினைத லான்றிசி னுயிழை கனைதிறற்
செந்தீ யணங்கிய செழுநிணக் கொழுங்குறை
மென்றினைப் புன்க முதிர்த்த மண்டையொ
டிருங்கதி ரலமருங் கழனிக் கரும்பின்
வினைகழை பிழிந்த வந்தீஞ் சேற்றெடு
பால்பெய் செந்நெற் பாசவற் பகுக்கும்
புனல்பொரு புதவி னுறந்தை யெய்திலும்
வினைபொரு ளாகத் தவிர்விலர் கடைசிவந்
தைய வமர்த்த வுண்கணின்
வையோர் வாலெயி னூறிய நீரே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்டதலைமகளைத் தோழி வற்புறீஇயது.

—தாயங்கண்ணனார்.

பி-ம். 10. புன்கமுயர்த்த.

238. குறிஞ்சி

மான்றமை யறியா மரம்பயி லிறும்பி
னீன்றிளைப் பட்ட வயவுப்பிணப் பசித்தென
மடமான் வல்சி தரீஇய நடுநா
ளிருண்முகைச் சிலம்பி னிரைவேட் டெழுந்த
பணைமரு ளெருத்திற் பல்வரி யிரும்போத்து
மடக்க ணுமான் மாநிரத் தலறத்
தடக்கோட் டாமா னண்ண லேறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
யிருங்கல் வியலறை சிவப்ப வீர்க்கும்
பெருங்க ணுட பிரிந்தி யாயின்
மருந்து முடையையோ மற்றே யிரப்போர்க்
கிழையணி நெடுந்தேர் களிறெ டென்று
மழைசுரந் தன்ன வீகை வண்மகிழ்க்
கழறொடித் தடக்கைக் கலிமா னள்ளி

களிமுகை யுடைந்த நறுங்கா ரடுக்கத்துப்
போந்தை முழுமுத னிலைஇய காந்தண்
மென்பிணி முகையவிழ்ந் தலர்ந்த
தண்கமழ் புதுமலர் நாறுநறு நுதற்கே.

என்பது : இரவுக்குறிவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

—கபிலர்.

இப்பாட்டின் கருத்து, யாதனுஞ்சிறும் நச்சப்படும் நாடன் என்றவாறு.

பி - ம். 9. வசிப்ப. 14. கடுமானள்ளி. 15. களிமுகை யுடைத்த்.

239. பாலை

அளிதோ தானே யெவனு வதுகொன்
மன்றுந் தோன்றுது மரனு மாயும்
புலியென வுலம்புஞ் செங்க ணுடவர்
ளெலியொடு பிடித்த வார்கோ லம்பின
5 ரெல்லு ரெறிந்து பல்லாத் தழீஇய
விளிபடு பூசல் வெஞ்சுரத் திரட்டும்
வேறுபஃ றேளத் தாறுபல நீந்திப்
புள்ளித் தொய்யிற் பொறிபடு சுணங்கி
ளெள்ளிழை மகளி ருயர்பிறை தொழூஉம்
10 புல்லென் மாலை யாமிவ ணெழிய
வீட்டருங் குரைய பொருள்வயிற் செலினே
நீட்டுவி ரல்லிரோ நெடுந்தகை யீரெனக்
குறுநெடும் புலவி கூறி நம்மொடு
நெருநலுந் தீம்பல மொழிந்த
15 சிறுகல் லொருத்தி பெருநல் லூரே.

என்பது : பொருள்வயிற் பிரிந்துபோகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

—எயினந்தைமக னிளங்கீரனர்.

பி - ம். 1. அணிதோதானே எவனுகுவங்கொன். 14. நெருநையு.

240. நெய்தல்

*செவ்வீ ஞாழற் கருங்கோட் டிருஞ்சினைத்
தனிப்பார்ப் புள்ளிய தண்பறை நாரை
மணிப்பூ நெய்தன் மாக்கழி நிவப்ப
வினிப்புலம் பின்றே கானலு நளிகடற்
நிரைச்சுர முழந்த திண்டிமில் விளக்கிற்
பன்மீன் கூட்ட மென்னையர்க் காட்டிய
வெந்தையுஞ் செல்லுமா நிரவே யந்தி
†லணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி
யாயு மாயமோ டயரு நீயுந்
தேம்பா யோதி திருநுத னீவிக்
கோங்குமுகைத் தன்ன குவிமுலை யாகத்
தின்றுயி லமர்ந்தனை யாயின் வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணன் முடுக்கர்ப்
‡பூவேய் புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே.

என்பது: தோழி இரவுக்குறிவந்ததலைமகற்குப் பகற்குறிநேர்ந்தது.

—எழுஉப்பன்றி நாகன்குமரனார்.

பி - ம். 1. கோட்டஞ்சினை.

241. பாலை.

துனியின் நிலைந்த துவரா நட்பி
னீய ரம்ம வவரென முனியாது
கல்குவர் கல்ல கூறினு மல்கலும்

---

* இப்பாட்டு, தோழி களஞ்சுட்டியது என்றும், † தலையர்க்கு வலிவளந்தப்பின் அம்மகளிர் இனையுடன் குழீஇச் சுரவுக்கோடு நட்டுப் பரவுக்கடன்கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும் என்று கொண்டும், ‡ "பகற்புணர் களனே புறனென மொழிப" என்ற சூத்திரத்திற்கு இவ்வடிகளை உதாரணங்காட்டியுஞ்செல்வர் நச். (தொல். பொருள். 5, 121, 132.)

பிரியாக் காதலொ டுழைய ராகிய
நமர்மன் வாழி தோழி யுயர்மிசை
மூங்கி லிளமுளை திரங்கக் காம்பின்
கழைநரல் வியலகம் வெம்ப மழைமறந்
தருவி யான்ற வெருவரு நனந்தலைப்
பேஎய் வெண்டேர்ப் பெயல்செத் தோடித்
தாஅம் பட்ட தனிமுதிர் பெருங்கலை
புலம்பெயர்ந் துறைதல் செல்லா தலங்குதலை
விருந்தின் வெங்காட்டு வருந்தி வைகு
மத்த நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்
வட்டக் கழங்கிற் றுஅய்த் துய்த்தலைச்
செம்முக மந்தி யாடு
நீண்மர மருங்கின் மலையிறந் தோரே.

என்பது : பிரிவிடை வேறுபட்டதலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.

—காவன்முல்லைப் பூதனார்.

பி - ம். 2. னீயாரம்ம; னினியரம்ம. 11. தலங்கு நிலை. 16. நன்மர.

242. குறிஞ்சி

அரும்புமுதிர் வேங்கை யலங்கன் மென்சினைச்
சுரும்புவாய் திறந்த பொன்புரை நுண்டாது
மணிமருள் கலவத் துறைப்ப வணிமிக்
கவிர்பொறி மஞ்ஞை யாடுஞ் சோலைப்
பைந்தாட் செந்தினைக் கொடுங்குரல் வியன்புனஞ்
செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்
பண்புதர வந்தமை யறியா னுண்கேழ்
முறிபுரை யெழினலத் தென்மக டெயர்மருங்
கறிதல் வேண்டுமெனப் பல்பிரப் பிரீஇ
யறியா வேலற் றரீஇ யன்னை

வெறியயர் வியன்களம் பொலிய வேத்தி
மறியுயிர் வழங்கா வளவைச் சென்றியாஞ்
செலவரத் துணிந்த சேண்விளங் கெல்வளை
நெகிழ்ந்த முன்கை நேரிறைப் பணைத்தோ
ணல்லெழி லழிவிற் றொல்கவின் பெறீஇய
முகிழ்த்துவர லிளமுலை முழுக்கப் பல்லூழ்
முயங்க லியைவது மன்னே தோழி
நறைகால் யாத்த நளிர்முகைச் சிலம்பிற்
பெருமலை விடரக நீடிய சிறியிலைச்
சாந்த மென்சினை தீண்டி மேலது
பிரசந் தூங்கு சேட்சிமை
வரையக வெற்பன் மணந்த மார்பே.

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

—பேரிசாத்தனார்.

பி - ம். 10. தரீஇயென்னை. 18. களிமுகை. 22. மலர்ந்தமார்பே.

243. பாலை

அவரை யாய்மல ருதிரத் துவரிள
வாங்குதுளைத் துகிரி னீங்கை பூப்ப
விறங்குபோ தவிழ்ந்த வீர்ம்புதற் பகன்றைக்
கறங்குநுண் டுவலி னூருழை யணியப்
பெயனீர் புதுவர றவிரச் சினைநோர்பு
பீள்விரிந் திறைஞ்சிய பிறங்குகதிர்க் கழனி
நெல்லொலி பாசவ றுழைஇக் கல்லெனக்
கடிதுவந் திறுத்த கண்ணில் வாடை
நெடிதுவந் தனையென நில்லா தேங்கிப்
பலபுலந் துறையுந் தனையில் வாழ்க்கை
நம்வலத் தன்மை கூறி யவர்நிலை

யறியுங மாயி னன்றுமற் றில்ல
பனிவார் கண்ணே மாகி யினியது
நமக்கே யெவ்வ மாகின்
15 றனைத்தாற் றோழிநந் தொல்வினைப் பயனே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் ஆற்றேனென்பதுபடச் சொல்லியது.

—கோடியூர்கிழார்மகனார் நெய்தற்றத்தனார்.

பி - ம். 1 - 2. தவரின், வாங்கு தினைத் துகளினீங்கை. 3. வீங்கு போதவிழ். 4. னூருனை. 8. கன்னிவாடை. 11. வலித்தன்மை. 15. தொழில் வினைப்பயனே. (குடிக்கிழார்மகனார் நெய்தற்றத்தனார்)

244. முல்லை

* பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன
சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை
பகலுறை முதுமரம் புலம்பப் போகி
முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
5 கடிமகள் கதுப்பி னூறிக் கொடிமிசை
வண்டினந் தவிர்க்குந் தண்பதக் காலை
வரினும் வாரா ராயினு மாண்டவர்க்
கினிதுகொல் வாழி தோழி யெனத்தன்
புல்லிதழ் மழைக்க ணல்லகஞ் சிவப்ப
10 வருந்துய ருடைய ளிவளென விரும்பிப்
பாணன் வந்தனன் றூதே நீயும்
புல்லார் புரவி வல்விரைந் தூட்டி
நெடுந்தே ரூர்மதி வலவ
முடிந்தன் றம்மநா முன்னிய வினையே.

---

* இப்பாட்டினுள் "முடிந்தன்றம்ம நாம் முன்னியவினையே" என்றலின், தானே குறுநிலமன்னன் சென்றதாம் என்பர் நச். (தொல். பொருள். 32.)

என்பது : வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—மதுரை...மள்ளனார்.

பி - ம். 1. பகைபடுபச்சைசெய்தோற்றெழிந்தன்ன. 10. வருந்துவளவனென. 13. நெடுந்தே ரேவுமதி.

245. பாலை

உயிரினுஞ் சிறந்த வொண்பொரு டருமார்
நன்றுபுரி காட்சியர் சென்றன ரவரென
மனைவலித் தொழியு மதுகைய ளாத
னீநற் கறிந்தனை யாயி னீங்கி
மழைபெயன் மறந்த கழைதிரங் கியவிற்
செல்சாத் தெறியும் பண்பில் வாழ்க்கை
வல்வி லிளையர் தலைவ ரெல்லுற
வரிகிளர் பணைத்தோள் வயிறணி திதலை
யரிய லாட்டிய ரல்குமனை வரைப்பின்
மிழ்நொடை பெறுஅ ராகி நனைகவுட்
கான யானை வெண்கோடு சுட்டி
மன்றெறு புதல்வன் புன்றலை நீவு
மருமுனைப் பாக்கத் தல்கி வைகுற
நிழல்படக் கவின்ற நீளரை யிலவத்
தழலகைந் தன்ன வலங்குசினை யொண்பூக்
குழலிசைத் தும்பி யார்க்கு மாங்கட்
குறும்பொறை யுணங்குந் ததர்வெள் ளென்பு
கடுங்கா லொட்டகத் தல்குபசி தீர்க்குங்
கன்னெடுங் கவலைய கான நீந்தி
யம்மா வரிவை யொழியச்
சென்மோ நெஞ்சம் வாரலென் யானே.

என்பது : பொருள்கடைக்கூட்டியநெஞ்சினைக் கழறித் தலைமகள் சொல்லிச் செலவழுங்கியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 6. செல்சமத் தெறியு மன்பில். 11. கோடுகட்டி. 18. கடுங்கால் வேட்டத்தல்குபசி.

246. மருதம்

* பிணர்மோட்டு நந்தின் பேழ்வா யேற்றை
கதிர்மூக் காரல் கள்வ னுக
நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரு
மலிநீ ரகல்வயல் யாண ரூர
போதார் கூந்தல் நீவெய் யோளொடு
தாதார் காஞ்சித் தண்பொழி லகல்யா
றுடினை யென்ப நெருநை யலரே
காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகா
லார்கலி நறவின் வெண்ணி வாயிற்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பி
னிமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினெரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா வழுந்தூ ரார்ப்பினும் பெரிதே.

என்பது : தோழி தலைமகற்கு வரையின்மறுத்தது.

—பரணர்.

இப்பாட்டினுள் கள்வனென்றது சுரிவளை.

பி - ம். 5. கூந்தனல்லவளோடு 8. சினமுன்பிற்.

247. பாலை

மண்ணு முத்த மொழுக்கிய வனமுலை
நன்மா ணுகம் புலம்பத் துறந்தோ

---

* "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப" என்றசூத்திரக்கருத்தினானே 'பிணர் மோட்டு நந்தின் பேழ்வாயேற்றை' என்று கூறினார் என்பர் போ. (தொல்,பொருள். 604.)

ரருளிலர் வாழி தோழி பொருள்புரிந்
திருங்கிளை யெண்கி னழல்வா யேற்றை
கருங்கோட் டிருப்பை வெண்பூ முனையிற்
பெருஞ்செம் புற்றி னிருந்தலை யிடக்கு
மரிய' கான மென்னுர் பகைபட /
முனைபாழ் பட்ட வாங்கணுட் பார்த்துக்
கொலைவல் யானை சுரங்கடி கொள்ளு
மூறுபடு கவலைய வாறுபல நீந்திப்
படுமுடை நசைஇய பறைநெடுங் கழுத்திற்
பாறுகிளை சேக்குஞ் சேட்சிமைக்
கோடுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறு பாடுகண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—மதுரை மருதங்கிழார்மகனுர் பெருங்கண்ணனுர்.

பி - ம். 2. புலம்பத்துறந்தவ. 6. யிடிக்கு (வெண்ணுகனுர்.)

248. குறிஞ்சி

* நகைநீ கேளாய் தோழி யல்கல்
வயநா யெறிந்து வன்பறழ் தழீஇ
யிளைய ரெய்துதன் மடக்கிளை யோடு

---

* இது, வன்தோன் செவிலியை எதிர்ந்துழிக் கூறியது என்பர் நச். இனிப்பேரா. "நகை நீ கேளாய் தோழி" என்பது தன் பேதைமை பொருளாக நகைபிறந்தது; என்னை? "தான் செய்த தவற்றிற்குத் தாய் தன்னை வெகுண்டது தனக்கு நகையாகக் கொண்டமையின்" என்றும், "நல்லமன்னென நகூஉப்பெயர்ந் தோளே" என்பது பிறர் எள்ளியது பொருளாகத் தன்கண் நகை பிறந்தது; என்னை? தன் மகள் தன்னை மதியாது இகழ்ந்தாளென நக்கவாறு; இது வெகுளிப் பொருளாக நக்கதன்றே வெனின் அது வீரர்க்கே உரித்தாகல்வேண்டும். இவள் அவளை வெகுண்டு தண்டஞ் செய்வாளல்லள், அதற்கே உவப்பினல்லது: என்றுங் கூறுர். (தொல். பொருள். 112, 251.)

நான்முலைப் பிணவல் சொலியக் காணெழிந்
தரும்புழை முடுக்க ராட்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் றெடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலன் முன்பிற்றன் படைசெலச் செல்லா
தருவழி விலக்குமெம் பெருவிறல் போன்மென
வெய்யாது பெயருங் குன்ற நாடன்
செறியரி றுடக்கலிற் பரீஇப் புரியவிழ்ந்
தேந்துகுவவு மொய்ம்பிற் பூச்சேர் மாலை
யேற்றிமில் கயிற்றி னெழில்வந்து தயல்வர
வில்வந்து நின்றேற் கண்டன ளன்னை துy
வல்லே யென்முக நோக்கி
நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே.

என்பது : இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லு வாளாய்த் தலைமகன் கேட்பத் தோழி சொல்லியது.

—கபிலர்.

பி - ம். 2. வலநாயெறி. 8-9. செலாஅ தருவழி. 16. நல்லன் மன்றந் கூய்ப்பெயர்த் தோளே; நல்லோன்ன் மன்ற நகூஉப்பெயர்.

249. பாலை

அம்ம வாழி தோழி பன்னு
ளிவ்வூ ரம்ப லெவனே வள்வார்
விசிபிணித் நியாத்த வரிகோற் றெண்கிணை
யின்குர லகவுந ரிரப்பி னுடொறும்
பொன்கோட்டுச் செறித்துப் பொலந்தார் பூட்டி
சாந்தம் புதைத்த வேந்துதுளங் கெழிலிமி
லேறுமுந் துறுத்துச் சால்பதங் குவைஇ
நெடுந்தேர் களிறெடு சுரக்குங் கொடும்பூட்
பல்வேன் முசுண்டை வேம்பி யன்னவென்
னல்லெழி விளநலந் தொலையினு நல்கார்

பல்பூங் கானத் தல்குநிழ லசைஇத்
தோகைத் தூவித் தொடைத்தார் மழவர்
நாகா வீழ்த்துத் திற்றி தின்ற
புலவுக்களந் துழைஇய துகள்வாய்க் கோடை
நீள்வரைச் சிலம்பி னிரைவேட் டெழுந்த
வாள்வரி வயப்புலி தீண்டிய விளிசெத்து
வேறுவேறு கவலைய வாறுபரிந் தலறி
யுழைமா னினநிரை யோடுங்
கழைமாய் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறு பாடுகண்டு ஆற்றுளாய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—நக்கீரனார்.

பி - ம். 6. வேந்துதுளங்கிமிலெழில். 14. துகள்வாய்க் கொண்டை.

250. நெய்தல்

எவன்கொல் வாழி தோழி மயங்குபிசிர்
மல்குதிரை யுழந்த வொல்குநிலைப் புன்னை
வண்டிமி ரிணர நுண்டாது வரிப்ப
மணங்கம ழிளமண லெக்கர்க் காண்வர
கணங்கொ ளாயமொடு புணர்ந்துவிளை யாடக்
கொடுஞ்சி நெடுந்தே ரிளையரொடு நீக்கித்
தாரன் கண்ணியன் சேரலங் தொருவன்
வரிமனை புகழ்ந்த கிளவியன் யாவது
மறுமொழி பெறுஅன் பெயர்ந்தன னதற்கொண்
டரும்பட ரெவ்வமொடு பெருந்தோள் சாஅ
யவ்வலைப் பரதவர் கான்னலஞ் சிறுகுடி
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையிற் கலங்கி
யிறைவளை நெகிழ்ந்த நம்மொடு
துறையுந் துஞ்சாது கங்கு லானே.

என்பது : தலைமகற்குக்குறைநேர்ந்ததோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

—செல்லூர்கிழார்மகனார் பெரும்பூதங்கோற்றனார்.

பி - ம். 1. பிதிர்.

251. பாலை

தூதுஞ் சென்றன தோளுஞ் செற்று
மோதி யொண்ணுதற் பசலையு மாயும்
வீங்கிழை நெகிழச் சாஅய்ச் செல்லலொடு
நாம்படர் கூரு மருந்துயர் கேட்பி
னந்தன் வெறுக்கை யெய்திலு மற்றவட்
டங்கலர் வாழி தோழி வெல்கொடித்
தூணெகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியி
லின்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
விலங்குவெள் ளருவிய வறைவா யும்பர்
மாசில் வெண்கோட் டண்ணல் யானை
வாயுட் டப்பிய வருங்கேழ் வயப்புலி
மாநில நெளியக் குத்திப் புகலொடு
காப்பில் வைகுந் தேங்கமல் சோலை
நிரம்பா நீளிடைப் போகி
யரம்போ முவ்வளை நிலைநெகிழ்த் தோரே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு தோழி சொல்லியது.

—மாமூலனார்.

பி - ம். 4. கூருந்துயர் கேட்டின்று. 8. தரும்பிணை. 9-10. கடிப்பிகுத் தியம்பொரத் தெம்முனை. 14. வரைவாயும்பர். 17. குத் தியபுகலொடு. 18. காம்பில்.

252. குறிஞ்சி

இடம்படு பறியா வலம்படு வேட்டத்து
வாள்வரி நடுங்கப் புகல்வந் தாளி
யுயர்நுதல் யானைப் புகர்முகத் தொற்றி
வெண்கோடு புய்க்குந் தண்கமழ் சோலைப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்தித்
தனியன் வருத லவனு மஞ்சான்
பனிவார் கண்ணே ஞெகி நோயட
யெமியே னிருத்தலை யானு மாற்றேன்
யாங்குச் செய்வாங்கொ ரோழி யீங்கைத்
தெய்யவிழ் பனிமல ருதிர வீசித்
தொழின்மழை பொழிந்த பானுட் கங்கு
லெரிதிரைத் திவலை தூஉங் சிறுகோட்டுப்
பெருங்குளங் காவலன் போல
வருங்கடி யன்னையுந் துயின்மறந் தனளே.

என்பது : தலைமகன்சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லு வாளாய்த் தலைமகள் சொல்லியது.

—நக்கண்ணையார்.

பி - ம். 6. தலியயன். 8. எளியே. 11. தெழின் மழை. (தின் பொற் கோழிக்காவிதிமகன் கல்லனார். நக்கணன்.)

253. பாலை

வைக ரோறும் பசலை பாயவென்
மெய்யும் பெரும்பிறி தாகின் ரெய்யென
வன்னையு மமரா முகத்தின ளலரே
வாடாப் பூவிற் கொங்க ரோட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்

பொன்மலி நெடுநகர்க் கூட லாடிய
வின்னிசை யார்ப்பினும் பெரிதே யிங்கியான்
சிலநா ளுய்யலென் போன்மெனப் பலநினைந்
தாழல் வாழி தோழி வாடா
தாரிரு ணடுநா ளேரா வுய்யப்
பகைமுனை யறுத்துப் பல்லினஞ் சாஅய்க்
கணஞ்சால் கோவலர் நெடுவிளிப் பயிரறிந்
தினந்தலைத் தருஉந் துளங்கிமி னல்லேற்றுத்
தழூஉப்பிண ரொருத்தந் தாழப் பூட்டிய
வந்தாம் பகலமைக் கமஞ்செலப் பெய்த
துறுதாழ் வல்சியர் தொழுவறை வெளவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தருஉ
நேரா வன்றோள் வடுகர் பெருமகன்
பேரிசை யெருமை நன்னாட் டுள்ளதை
யயிரியா றிறந்தன ராயினு மயரிறந்
துள்ளுப தில்ல தாமே பணைத்தோட்
குரும்பை மென்முலை யரும்பிய சுணங்கி
னுசுப்பழித் தொலிவருந் தாழிருங் கூந்தன்
மாக விசும்பிற் றிலகமொடு பதித்த
திங்க ளன்னநின் றிருமுகத்
தொண்சூட் டவிர்குழை மலைந்த நோக்கே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்டதலைமகட்குத் தோழி சொல்லியது.

—நக்கீரர்.

பி - ம். 6. நெடுமதிற்கூடல். 10. ளோராயு.

254. முல்லை

நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முது செவிலியர் பலபா ராட்டப்
பொலன்செய் கிண்கிணி நலம்பெறு சேவடி

மணன்மலி முற்றத்து நிலம்வடுக் கொளாஅ
மனையுறை புறவின் செங்காற் சேவ
றுணையொடு குறும்பறை பயிற்றி மேற்செல
விளையா டாயத் திளையோர்க் காண்டொறு
நம்வயி னினையு நன்னுத லரிவை
புலம்பொடு வதியுங் கலங்கஞ ரகல
வேந்துறு தொழிலொடு வேறுபுலத் தல்கி
வந்துவினை முடித்தன மாயி னீயும்
பிணைநிலை முனைஇய வினைநவில் புரவி
யிழையணி நெடுந்தே ராழி யுறுப்ப
நுண்கொடி மின்னிற் பைம்பயிர் துமியத்
தளவ முல்லையொடு தலைஇத் தண்ணென
வெறிகமழ் கொண்ட வீததை புறவி
னெடியிடை பின்படக் கடவுமதி யென்றியான்
சொல்லிய வளவை நீடாது வல்லெனத்
தார்மணி மாவறி வுறுஅ
வூர்நணித் தந்தனை யுவகையாம் பெறவே.

என்பது : வினைமுற்றிவந்தெய்திய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—மதுரை அறுவைவாணிக னிளவேட்டனார்.

பி-ம். 2. பலர்பாராட்ட. 11. மாயினினியு. 15. முல்லையொடு தோன்றி தோன்ற. 18. சொல்லிய வளவையினீடாது. (கபிலர்.)

255. பாலை

* உலகுகிளர்ந் தன்ன வுருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கட னீரிடை போழ
விரவு மெல்லையு மசைவின் றுகி
விரைசெல லியற்கை வங்கூ ழாட்டக்

---

* கலத்திற்பிரிவு தலைமகளையப் பிரிந்தமைக்கு உதாரண மாகஇப்பாட்டினைக் கொண்டார் இளம்பூரண வடிகள். இது தோழி தனது விடுவது காரணமாக உரைத்தது; இம்மணிமிடைவளத்துப்

கோடுயர் திணிமண லகன்றுறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
வாள்வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையே யழிபட ரகல
வருவர் மன்னுற் றோழி தண்பணைப்
பொருபுனல் வைப்பி னம்மூ ராங்கட்
கருவிளை மூரணிய தண்புதற் பகன்றை
பெருவன மலர வல்லி தீண்டிப்
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடிநிறை தூங்க
வறனின் றலைக்கு மானு வாடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீசித்
திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய
நிரைவளை யூருந் தோளென
வுரையொடு செல்லு மன்பினர்ப் பெறினே.

என்பது : பிரிவிடைவேறுபட்டதலைமகள் ஆற்றுமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது.

—மதுரைமருதனிள நாகனார்.

இப்பாட்டு தொழிலாற் பாலை.

பி - ம். 7. வினைப்புரிந்த 8. கழியாமையினழிபட. 12. பெருவள 14. கூழை. 16. கங்குல் வீச.

256. மருதம்

பிணங்கரில் வள்ளை நீடிலைப் பொதும்பின்
மடிதுயின் முனைஇய வள்ளுகிர் யாமை
நொடிவிடு கல்லிற் போகி யகன்றுறைப்

பின்பனி வந்தவாறும், நண்பகல் கூறுமையும், அவர் குறித்த காலம் இஃதென்பது தோன்றியவாறுங் காண்க என்றும், "உலகுகிளர்ந் தன்ன" என்னும் அகப்பாட்டுள் வணிகன் தலைவனுகவும் கொள்ளக் கிடத்தலின், தலைவியும் அவ்வருணத் தலைவியாமென்றுணர்க என்றுங் கூறுவர் நச். (தொல், பொருள், 36, 11, 24.)

பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளி
ஞகுவா ரருந்து மகிழ்பியங்கு நடையொடு
தீம்பெரும் பழன முழக்கி யயல
தாம்பன் மெல்லடை யொடுங்கு மூர
பொய்யா லறிவெனின் மாய மதுவே
கையகப் பட்டமை யறியாய் நெருநை
மையெழி லுண்கண் மடந்தையொடு வையை
யேர்தரு புதுப்புன லுரிதினி னுகர்ந்து
பரத்தை யாயங் கரப்பவு மொல்லாது
கவ்வையா கின்றூற் பெரிதே காண்டகத்
தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய
வறனி லாள னறியே னென்ற
திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்
மூறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசா லவையத் தார்ப்பினும் பெரிதே.

என்பது: தோழி தலைமகற்கு வாயின்மறுத்தது.

—மதுரைத் தமிழ்க்கூத்தனர் கடுவன்மள்ளனர்.

இப்பாட்டின்.....யவனென்றவாறு.

பி-ம். 5. னுகர்வாரருந். 8. பொய்யான றிவ. 15. கரும்பயல்.

257. பாலை

* வேனிற் பாதிரி கூனி மாமலர்
நறைவாய் வாட னூறு நாட்சுர
மரியார் சிலம்பிற் சீறடி சிவப்ப
வெம்மொடொ ராறு படூஇயர் யாழநின்

---

* இதுகொண்டு தலைக்கழிதற்கண் தலைவன் நடையை வியந்தது என்பர் நச். (தொல். பொருள். 15.)

பொம்ம லோதி பொதுள வாரி
யரும்பற மலர்ந்த் வாய்பூ மராஅத்துச்
சுரும்புசூ ழலரி தைஇ வேய்ந்தநின்
றேம்பாய் கூந்தற் குறும்பல மொசிக்கும்
வண்டுக்டிந் தோம்ப றேற்ரு யணிகொள
நுண்கோ லெல்வளை தெளிர்க்கு முன்கை
மெல்லிறைப் பணைத்தோள் விளங்க வீசி
வல்லுவை மன்னு னடையே கள்வர்
பகைமிகு கவலைச் சென்னெறி காண்மார்
மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கி னீர்வரப் பொழித்துக்
களிறுசுவைத் திட்ட கோதுடைத் ததரல்
கல்லா வுமணர்க்குத் தீமூட் டாகுந்
துன்புறு தகுந வாங்கட் புன்கோட்
டரிலிவர் புற்றத் தல்கிரை நசைஇ
வெள்ளரா மிளிர வாங்குஞ்
பிள்ளை யெண்கின் மலைவயி னுனே.

என்பது : உடன்போகா நின்றதலைமகட்குத் தலைமகன்சொல்லியது.

—உறையூர்மருத்துவன்முமோதரனார்.

பி - ம். 8. குறும்பலோதிக்கும்.

258. குறிஞ்சி

* நன்ன னுதிய னருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளி ரோம்பினர் வைத்த
பொன்னினு மருமைநற் கறிந்து மன்னுட்
டுன்னல மாதோ வெனினுமஃ தொல்லாய்
தண்மழை தவழுந் தாழ்நீர் நனந்தலைக்
கடுங்காற் றெடுக்கு நெடும்பெருங் குன்றத்து

* இப்பாட்டு நெஞ்சினை இரவுவிலக்கியது'என்பர்நச் (தொல். பொருள். 102.)

மாய விருளளை மாய்கற் போல
மாய்கதில் வாழிய நெஞ்சே நாளு
மெல்லியற் குறுமக ணல்லக நசைஇ
யாவிரை தேரு மஞ்சுவரு சிறுநெறி
யிரவி னெய்தியும் பெரூஅ யருள்வரப்
புல்லென் கண்ணை புலம்புகொண் டுலகத்
துள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாகக்
காமங் கைம்மிக வுறுதர
வாளு வநம்படர் தலைத்தந் தோயே.

என்பது : அல்லகுறிப்பட்டுப் பதிப்பெயர்ந்ததலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 8. வாழியென்னெஞ்சே. (அல்லகுறிப்பட்டதலைமகன்.)

259. பாலை

* வேலும் விளங்கின விளையரு மியன்றனர்
தாருந் தையின தழையுந் தொடுத்தன
நிலநீ ரற்ற வெம்மை நீங்கப்
பெயனீர் தலைஇ வுலவையிலை நீத்துக்
குறுமுறி யின்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன்
றேம்படப் பொதுளின பொழிலே கானமு
நனிநன் முகிய பனிநீங்கு வழிநாட்
பாலெனப் பரத்தரு நிலவின் மாலைப்
போதுவந் தன்று தூதே நீயுங்
கலங்கா மனத்தை யாகி யென்சொ
னயந்தனை கொண்மோ நெஞ்சமர் தகுவி
தெற்றி யுலறினும் வயலை வாடினு

* இவ்வகப்பாட்டிப் போக்குதற்கண் முயங்கிக் கூறியது என்பர் நச். (தொல். பொருள், 39.)

நொச்சி மென்சினை வணர்குரல் சாயினு
நின்னினு மடவ ணனிநின் னயந்த
வுன்னை யல்ல ருங்கி நின்னையர்
புலிமருள் செம்ம லேக்கி
வலியா யின்னுந் தோய்கநின் முலையே.

என்பது : உடன்போக்குநேர்ந்ததோழி தலைமகட்குச்சொல்லியது.

—கயமனார்.

பி - ம். 12. கயத்தனைகேண்மோ 15. மடவணன்னின்னையந்த.
(தலைமகட்கு உடன்போக்குச் சொல்லியது. (கையனார்)

260. நெய்தல்

* மண்டில மழுக மலிநிறங் கிளர
வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக்
கண்டற் கானற் குருகின மொலிப்பத்
திரைபா டவியத் திமிரொழின் மறப்பத்
தகைபா டலவ னளைவயிற் செறியச்
செக்கர் தோன்றத் துணைபுண ரன்றி
லெக்கர்ப் பெண்ணை யகமடல் சேரக்
கழிமலர் கமழ்முகங் கரப்பப் பொழின்மனைப்
புன்னை நறுவீ பொன்னிறங் கொளாஅ
வெல்லை பைப்பயக் கழிப்பி யெல்லுற
யாங்காகு வள்கொ ருனே நீங்காது
மூதுமரத் துறையு முரவுவாய் முதுபுட்
கதுமெனக் குழறுங் கழுதுவழங் கரைநா

---

* "எழுத்து முதலா வீண்டிய அடியிற், குறித்த பொருளை முடிய காட்டில், யாப்பென மொழிப" என்ற சூத்திரத்துள் இருசீரானும் மூச்சீரானும் நாற்சீரானும் குறித்தபொருளை முடிய காட்டியதற்கு "மண்டில.....மொலிப்ப" என்ற மூன்றடியினையும் உதாரணமாகக் காட்டுவர் பேரா. நச்சினார்க்கினியர் சிறிது வேறுபடக் கூறுவர். (தொல். பொருள். 390.) "திரைபாடவிய" (4) என்னுமிடத்து 'அவிதல்' குறைதலை உணர்த்திற்று. (சிந். 289.)

ணெஞ்சுநெகிழ் பருவரல் செய்த
வன்பி லாள னறிவுநயந் தேனே.

என்பது: இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத்தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியது.

—மோசிக்கரையனார்.

பி - ம்: 2. மலர்பரந்நூதமிசைய. 11. யாங்காகுவன் கொல்யானே, 15. வன்பிலாளரறிவு. (மோனகர்க்கற்றையனார்.)

261. பாலை

* கானப் பாதிரி கருந்தகட் டொள்வீ
வேனி லதிரலொடு விரைஇக் காண்வரச்
சில்லெங் கூந்த லழுத்தி மெல்லிணர்த்
தேம்பாய் மராஅ மடைச்சி வான்கோ
லிலங்குவளை தெளிர்ப்ப வீசிச் சிலப்புநகச்
சின்மெல் லொதுக்கமொடு மென்மெல வியலினின்
னணிமான் சிறுபுறங் காண்கஞ் சிறுநனி
யேகென வேக ணணி யொய்யென
மாகொ ணோக்கமொடு மடங்கொளச் சாஅய்
நின்றுதலை யிறைஞ்சி யோளே யதுகண்
டியாமுந் துறுதல் செல்லே மாயிடை
யருஞ்சுரத் தல்கி யேமே யிரும்புலி
களிறட்டுக் குழுமு மோசையுங் களிபட்டு
வில்லோர் குறும்பிற் றதும்பும்
வல்வாய்க் கடுந்துடிப் பாணியுங் கேட்டே.

என்பது: புணர்ந்துடன் போயினகாலை இடைச்சுரத்துப்பட்ட தனை மீண்டுவந்தகாலத்துத் தோழிக்குத் தலைமகன்சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி - ம். 7. சிறுபுறங்காண்குதுஞ்.

---

* இது மீண்டுவந்தோன் தோழிக்குரைத்தது என்பர் நச். (தொல். பொருள். 45.)

262. குறிஞ்சி

முதைபடு பசுங்காட் டரிற்பவர் ம்யக்கிப்
பகடுபல பூண்ட வுழுவுறு செஞ்செ
யிடுமுறை நிரம்பி யாகுவினைக் கலித்துப்
பாசிலை யமன்ற பயரு புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களிந் தருளா
தூர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
கலத்து முண்ணுள் வாலிது மூடாஅள்
சினத்திற் கொண்ட படிவ மாரூள்
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவிய னன்மான் றிதியற் குரைத்தவ
ரின்னுயிர் செகுப்பக் கண்டுசின மாறிய
வன்னி மிஞிலி போல மெய்ம்மலிந்
தானு வுவகையே மாயினேம் பூமலிந்
தருவி யார்க்கு மயந்திகழ் சிலம்பி
னுண்பஂ றுவலை புதன்மிசை நனைக்கும்
வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன்
கொண்டகன் மாமலை நாறி
யந்தீங் கிளவி வந்த மாறே.

என்பது : இரவுக்குறிக்கட் டலைமகளைப்புணர்ந்துநீங்குந் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 1. பயநுழ்புக். 16. வரைமகிழ்ப். 18. வந்தவாறே.

263. பாலை

தயங்குதிரைப் பெருங்கட லுலகுதொழத் தோன்றி
வயங்குகதிர் விரிந்த வுருவுகெழு மண்டிலங்
கயங்கண் வறப்பப் பாஅய் நன்னிலம்
பயங்கெடத் திருகிய பைதறு காலை
வேறுபல் கவலைய வெருவரு வியன்காட்

டாறுசெல் வம்பலர் வருதிறங் காண்மார்
வில்வ லாடவர் மேலா ளொற்றி
நீடுநிலை யாஅத்துக் கோடுகொ ளருஞ்சுரங்
கொண்டனன் கழிந்த வன்கட் காளைக்
கவடிணி வறிந்தனெ னுயி னன்னே
வொளிறுவேற் கோதை யோம்பிக் காக்கும்
வஞ்சி யன்னவென் வளநகர் விளங்க
வினிதினிற் புணர்க்குவென் மன்னே தனியின்று
திருநுதற் பொலிந்தவென் பேதை
வருமுலை முற்றத் தேமுறு துயிலே.

என்பது : மகட்போக்கிய தாய் சொல்லியது.

—கருவூர்க் கண்ணம்பாளனார்.

பி - ம். 1. நயங்குதிரை. 8. மராஅத். 15. முற்றத் தெளிதுறு துயிலே.

246. முல்லை

* மழையில் வான மீனணிந் தன்ன
குழையமன் முசுண்டை வாலிய மலர
வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோற் கோவல
ரெல்லுப்பெய லுழந்த பல்லா னிரையொடு
நீர்திகழ் கண்ணிய சூர்வயிற் பெயர்தர
நனிசேட் பட்ட மாரி தளிசிறந்
தேர்தரு கடுநீர் தெருவுதொ றொழுகப்
பேரிசை முழக்கமொடு சிறந்துநனி மயங்கிக்
கூதிர் நின்றன்றுற் பொழுதே காதலர்

* இது தோழிக்குத் தலைவிகூறியது என்றும், இம்மணி மிடை பவளத்துள் முல்லையுட் கூதிர்வந்தது என்றும், இதுதலை வன் பாசறைப்புலம்பினமை கூறக் கேட்ட தலைவி "நங்நிலையறியா ராயினும்" எனக் கூறினள் என்றுங் கூறுவர் நச். (தொல். பொருள். 12, 44.)

நன்னிலை யறியா ராயினுந் தன்னிலை
யறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானை கங்குற் சூழ
வஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே.

என்பது : பருவங்கண்டு வன்புறை யெதிரழிந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.

—உம்பர்க்காட் டிளங்கண்ணனார்.

பி-ம். 3. விரிவெண்கோடல். 6. கண்ணிபர் காவயிற். (உம்பற் காட்டு.)

265. பாலை

புகையிற் பொங்கி வியல்விசும் புகந்து
பனியூ ரழற்கொடி கடுப்பத் தோன்று
மிமயச் செவ்வரை மானுங் கொல்லோ
பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ
வெவன்கொல் வாழி தோழி வயங்கொளி
நிழற்பா லறலி னெறித்த கூந்தற்
குழற்குரற் பாவை யிரங்க நத்துறந்
தொண்டொடி நெகிழச் சாஅய்ச் செல்லலொடு
கண்பனி கலுழ்ந்தியா மொழியப் பொறையடைந்
தின்னிலை யெழிலேறு கெண்டிப் புரைய
நிணம்பொதி விழுத்தடி நெருப்பின் வைத்தெடுத்
தணங்கரு மரபிற் பேஎய் போல
விளரூன் றின்ற வேட்கை நீங்கத்
தகளற விளைந்த தோப்பி பருகிக்
குலாஅ வல்விற் கொடுநோக் காடவர்
புலாஅற் கையர் பூசா வாய

ரொராஅ வுருட்டுங் குடுமிக் குராலொடு
மராஅஞ் சீறூர் மருங்கிற் றூங்குஞ்.
செந்நுதல் யானை வேங்கடந் தழீஇ
வெம்முனை யருஞ்சுர மிறந்தோர்
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே.

என்பது : பிரிவிடைவேறுபட்டதலைமகள் ஆற்றுமைமீதூரத் தோழிக்குச் சொல்லியது.

மாமூலனார்.

பி-ம். 1. விசும்புகுந்து. 5. பாடலிற் குழீஇ. 12, கெண்டிப் பரைய. 16. தகளற விரைந்த. 13. புலராக்கையர், 20. பாஅஞ்சீறூர்.

266. மருதம்

* கோடுற நிவந்த நீடிரும் பரப்பி
னந்தீம் பராய்ப் புதுப்புன னெருங்கை
மைந்துமலி களிற்றிற் றலைப்புணை தழீஇ
நரந்தை நாறுங் குவையிருங் கூந்த
5 விளந்துணை மகளிரொ டூரணிக் கலஇ
நீர்பெயர்ந் தாடிய வேந்தெழின் மழைக்க
ணேக்குதொறு நோக்குதொந் தவிர்விலை யாகிக்
காமங் கைம்மிகச் சிறத்தலி ஞணிழந்
தாடினை யென்ப மகிழ்நனை யதுவே
10 யாழிசை மறுகி னீடூர் கிழவோன்
வாய்வா ளெவ்வி யேவன் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தில
ரரிமண வாயி லுறத்து ராங்கட்
கள்ளுடைப் பெருஞ்சோற் றெல்லிமி ழன்ன

---

* "சூள்கயத் திறத்தாற் சோர்வுகண் டழியினும்" என்பம் பகுதிக்கு இப்பாட்டினை உதாரமாகக் கொண்டு, இதனை தோழி கூற்றாகக் காட்டுவாருமுளர் என்பர்கச். (தொல். பொருள். 150.

15 கவ்வை யாகின்ரூற் பெரிதே யினியஃ
தவல மன்றும னெமக்கே யயல
கழனி யுழவர் கலிசிறந் தெடுத்த
கறங்கிசை வெரீஇப் பறந்த தோகை
யணங்குடை வரைப்பகம் பொலியவந் திறுக்குந்
20 திருமணி விளக்கி னலைவாய்ச்
செருமிகு சேஎயொ டுற்ற சூளே.

என்பது : பரத்தையிற் பிரிந்துவந்து கூடிய தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

பரணர்.

பீ - ம். 3. மைந்துமலைகளிற். 6. நீள்பெயர். 9. மகிழ்வதற்வே. 12. பெரும்பூட் பொருந்தல. 16. வயவர். 19. திருக்குந்.

267. பாலை

நெஞ்சு நெகிழ்தகுந கூறி யன்புகலந்
தரூஅ வஞ்சினஞ் செய்தோர் வினைபுரிந்து
திறம்வே ரூக லெற்றென் ரூற்றி
யினைத லான்றசி னீயே சினைபாய்ந்
5 ததிர்த்த கோடை யுட்குவரு கடத்திடை
வெருக்கடி யன்ன குவிமுகி ழிருப்பை
மருப்புக் கடைந்தன்ன கொள்ளை வான்பூ
மயிர்க்கா லெண்கி னீரினங் கவர
* மைபட் டன்ன மாமுக முசுவினம்
10 பைதறு நெடுங்கழை 'பாய்தலி னஞ்சென
வெதிர்படு வெண்ணெல் வெவ்வறைத் தாஅ
யுகிர்நெரி யோசையிற் பொங்குவன பொரியு
மோங்கல் வெற்பிற் சுரம்பல விறந்தோர்
தாம்பழி யுடைய ரல்லர் நாளு
15 நயந்தோர்ப் பிணித்த நேற்ரு வயங்குவினை

---

* "நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்" என்ற சூத்திரமேற்கோள் இவ்வடி. (தொல். பொருள். 601.)

வாளே ரெல்வளை நெகிழ்த்த
தோளே தோழி தவறுடை யவ்வே.

என்பது : பிரிவிடைவேறுபட்ட தலைமகளது ஆற்றுமைகண்டு ஆற்றுளாகிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி - ம். 1. நெஞ்சுநெகிழ்க்குநை. 4. யுளைதலான்றிசி; 7. கொள்ளை வாட்பூ. 9. முசுக்கலை. 12. யுதிர்வனவோசை. யுதிர்நெறி. 16. நெகிழ்ந்த.

268. குறிஞ்சி

அறியாய் வாழி தோழி பொறிவரிப்
பூதுதல் யானையொடு புலிபொரக் குழைந்த
குருதிச் செங்களம் புலவற வேங்கை
யுருகெழு நாற்றங் குளவியொடு விலங்கு
மாமலை நாடனெ டுமறுவின் றுகிய
காமங் கலந்த காத லுண்டெனி
னன்றுமன் னதுநீ நாடாய் கூறுதி
* நாணு நட்பு மில்லோர்த் தேரின்
யானல தில்லையிவ் வுலகத் தானே
யின்னுயி ரன்ன நின்னெடுஞ் சூழாது
மூளையணி மூங்கிலிற் கிளையொடு பொலிந்த
பெரும்பெய ரெந்தை யருங்கடி நீவிச்
செய்துபின் னிரங்கா வினையொடு
மெய்பல் பெரும்பழி யெய்தி னேனே.

என்பது : குறை வேண்டிப் பின்னின்ற தலைமகனுக்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.

—வடமவண்ணக்கன் பேரிசாத்தனர்.

பி - ம். 2. பகைதுதல்யானை. 3. பொலிவற. 7. னதுநீ.

---

* எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனி, னப்பொரு ளல்லாப் பிறிது பெரிருள்கூறல்'' என்ற சூத்திரவுரையில் இவ்வடிகளை உதாரணமாகக் காட்டுவர் நச். (தொல். சொல். 35.)

269. பாலை

தொடிதோ ளிவர்க வெவ்வமூங் தீர்க
நெறியிருங் கதுப்பிற் கோதையும் புனைக
வேறுடை யினநிரை பெயரப் பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுக ணுளர் நல்லிசை நிறுமார்
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கி
னட்ட போலு நாடா நெடுங்க
ணகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி
நறுவிரை மஞ்ச ளீர்ம்புறம் பொலிய
வம்புகொண் டுறுத்த வார்நா ருரிவையிற்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண் டார்ப்பச் சூட்டிக் கழற்கா
லிளையர்பதிப் பெயரு மருஞ்சுர மிறந்தோர்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாட்
பொலங்காசு நிரைத்த கோடேந் தல்கு
னலங்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வரப்
பாடூர் பெழுதரும் பருவாய் மண்டிலத்து
வயிரிடைப் பட்ட நெள்விளி யியம்ப
வண்டற் பாவை யுண்டுறைத் தரீஇத்
திருநுதன் மகளிர் குரவை யயரும்
பெருநீர்க் கான நறழீஇய விருக்கை
வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணைப் போதுலா யவிழ்ந்த
வொண்செங் கழுநீ ரன்னநின்
கண்பனி துடைமார் வந்தனர் விரைந்தே.

என்பது : பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

—மதுரை மருதனிளநாகனார்.

இப்பாட்டு எதிர் காலம் நோக்கிற்று.

பீ - ம். 9. மஞ்சணீர்ப்பு. 13. இலைபதிப் பெயரு. 21. பெருஞ்சுழற் கானலழீஇய.

270. நெய்தல்

இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீல
புலாஅன் மறுக்கற் சிறுகுடிப் பாக்கத்
தினமீன் வேட்டுவர் ஞாழலொடு மிலைஇ
மெல்லம் புலம்ப நெகிழ்ந்த தோளே
சேயிறுத் தழந்த நுரைபிதிர்ப் படுதிரைப்
பராஅரைப் புன்னை வாங்குசினை தோயுங்
கானலம் பெருந்துறை நோக்கி யிவளே
கொய்சுவற் புரவிக் கைவண் கோமா
னற்றேர்க் குட்டுவன் கழுமலத் தன்ன
வம்மா மேனி தொன்னலங் தொலையத்
துஞ்சாக் கண்ண ளலமரு நீயே
கடவுண் மரத்த மூண்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறுகரும் பேடை
யின்னு துயங்குங் கங்குலு
நம்மூ ருள்ளுதிர் நோகோ யானே.

என்பது : பகற்குறிக்கண் வந்துநீக்குந் தலைமகனைத்தோழி வரைவுகடாயது.

—சாகலாசனார்.

இப்பாட்டிற் பேடையென்பது அன்றில்.

பி - ம். 2. புகாஅர் மறுகிற். 5. சேயிறுமுகத்த. 10. தொன்னலஞ் சிதைய. 15. நும்மூருள்ளுவை.

271. பாலை

பொறிவரிப் புறவின் செங்காற் சேவல்
சிறுபுன் பெடையொடு சேட்புலம் போகி
யரிமண லியவிற் பரதேர்ந் துண்டு

வரிமரல் வாடிய வானீங்கு நனந்தலைக்
குறும்பொறை மருங்கிற் கோட்சுர நீந்தி
நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்கா யஞ்சினை யகவு மத்தஞ்
சென்றுநீர் வணிக ராகி நின்றுதரு
நிலையரும் பொருட்பிணி நினைந்தனி ரெனினே
வல்வ தாகநுஞ் செய்வினை யிவட்கே
களிமலி கள்ளி னற்றே ரவிய
ஞடிய வினமழை சூடித் தோன்றும்
பழந்தூங்கு விடரகத் தெழுந்த காம்பின்
கண்ணிடை புரையு நெடுமென் பணைத்தோட்
டிருந்துகோ லாய்தொடி னெகிழின்
மருந்து முண்டோ பிரிந்துறை நாட்டே.

என்பது : செல்வுணர்த்தியதோழி தலைமகளதுகுறிப்பறிந்து தலைமகனைச் செலவழுங்கச் சொல்லியது.

—காவிரிப்பூம்பட்டினத்துச் சேங்கண்ணனார்.

பி - ம். 11. lவாய்வதாக. 12. அவையன். (பிரிவுணர்த்திய.)

272. குறிஞ்சி

* இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்கு
லருவி தந்த வணங்குடை நெடுங்கோட்
டஞ்சுவரு விடர்முகை யாரிரு ளகற்றிய
மின்னெளி ரெஃகஞ் சென்னெறி விளக்கத்
தனியன் வந்து பணியலை முனியா
னீரிழி மருங்கி னரிட்ட தமன்ற

---

* இம் மணிமிடைபவளத்துத் தலைவனைச் செவிலிகண்டு முருகெனப் பராவினமை தோழி கொண்டுகூறினள் என்பர் நச். (தொல். பொருள். 115.)

குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி
யசையா நாற்ற மசைவுளி பகரத்
துறுக னண்ணிய கறியிவர் படப்பைக்
குறியிறைக் குரம்பைநம் மனைவயிற் புகுதரு
மெய்ம்மலி யுவகைய னங்நிலை கண்டு
முருகென வுணர்ந்து முகமன் கூறி
யுருவச் செந்தினை நீரொடு தூஉய்
நெடுவேட் பரவு மன்னை யன்னே
வென்ற வதுகொ ருனே பொன்னென
மலர்ந்த வேங்கை யலங்குசினை பொலிய
மணிநிற மஞ்ஞை யகவு
மணிமலை நாடனெ டமைந்தநந் தொடர்பே.

என்பது : இரவுக்குறிவந்த தலைமகன் சிறைப்புறத்தானுகத் தலை மகட்குச் சொல்லுவாளாய்த் தோழிசொல்லியது.

—மதுரை அறுவைவாணிக னிளவேட்டனர்.

பி - ம். 6. பனிபலை.

273. பாலை

விசும்பு விசைத்தெழுந்த கூதளங் கோதையிற்
பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ
யார்கலி வளவயிற் போதொடு பரப்பப்
புலம்புனிறு தீர்ந்த புதுவர லற்சிர
நலங்கவர் பசலை நலியவு நந்துய
ரறியார் கொல்லோ தாமே யறியினு
நம்மனத் தன்ன மென்மை யின்மையி
னம்முடை யுலக முள்ளார் கொல்லோ
யாங்கென வுணர்கோ யானே வீங்குபு
தலைவரம் பறியாத் தகைவரல் வாடையொடு
மூலையிடைத் தோன்றிய நோய்வள ரிளமுலை
யசைவுடை நெஞ்சத் துயவுத்திர ணீடி
யூரோ ரெடுத்த வம்ப லஞ்சினை

யாராக் காத லவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நாரில் பெருமர
நிலவரை யெல்லா நிழற்றி
யல்லரும் பூழ்ப்பவும் வாரா தோரே.

என்பது : பிரிவின்கண் தலைமகள் அறிவுமயங்கிச் சொல்லியது.

—ஔவையார்.

பி-ம் 1. விசைத்தெறிந்த. 7. தன்மையன்மையி. 10. நிலை வரம்பறியா. 11. தோய்வரலிளமுலை. 12. உயவுத்திரணீடி.

274. முல்லை

இருவிசும் பதிர முழங்கி யரஃலிற்
திகுபெய லழிதுளி தலைஇ வானம்
பருவஞ் செய்த பானட் கங்கு
லாடுதலைத் துருவின் மேருே மார்ப்பக்
கடைகோற் சிறுதீ யடைய மாட்டித்
திண்கா லுறியன் பானெய் னகல
னுண்பஂ றுவலை யொருதிற நனைப்பத்
தண்டுகா லூன்றிய தனிநிலை யிடையன்
மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்பத்
தெறிமறி பார்க்குங் குறுநரி வெரீஇ
மூள்ளுடைக் குறுந்தூ றிரியப் போகுந்
தண்ணறும் புறவி னதுவே நறுமலர்
மூல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமக ளுறைவி னூரே.

என்பது : தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—இடைக்காடனார்.

பி-ம் 1. வானவின்று. 3. பெருவளஞ். 6. னதள். 8. தண் கோலூன்றிய. 11 பெயருந். (கல்லாடனார்.)

275. பாலை

ஓங்குநிலைத் தாழி மல்கச் சார்த்திக்
குடையடை நீரின் மடையின னெடுத்த
பந்தர் வயலைப் பந்தெறிந் தாடி
யிளமைத் தங்கைமையை வளமனைக் கிழத்தி
பிதிர்வை நீரை வெண்ணீ ருகென
யாந்தற் கழறுங் காலைத் தான்றன்
மழலை யின்சொற் கழற லின்றி
யின்னுயிர் கலப்பக் கூறி நன்னுதல்
பெருஞ்சோற் றில்லத் தொருங்கிவ ணிராஅ
ளேதி லாளன் காத னம்பித்
திரளரை யிருப்பைத் தொள்ளை வான்பூக்
குருளை யெண்கி னீரினங் கவரும்
* வெம்மலை யருஞ்சுர நம்மிவ ணெழிய
விருநில னுயிர்க்கு மின்னுக் கான
நெருநைப் போகிய பெருமடத் தகுவி
யைதக லல்குற் றணைமயணிக் கூட்டுங்
கூழை கொச்சிக் கீழ தெவ்மகள்
செம்புடைச் சிறுவிரல் வரித்த
வண்டலுங் காண்டிரோ கண்ணுடை யீரே.

என்பது : மகட்போக்கியதாய் சொல்லியது.

—கயமனார்.

பி - ம் 3. பரந்தவயலைப்பந்தெறிந்தாடி. 4. வளமனைகழிப்பி. 7. கழறலையின்றி. 12. யெண்கினிருங்கிளை. 13. வெம்முனையருஞ். (செவிலிசொல்.)

---

* "வெம்மலை யருஞ்சுர...காண்டிரோ கண்ணுடையீரே" என்பது வண்டலைக் காண்டற்கெளத்துநின்று காணில் ஆற்றீரெனக் கூறினமையின், ஆயத்தினை அகன்று இற்புறஞ்சென்று சேரியோர்க்குத்தாய் உரைத்ததாயிற்று என்பர் நச். (தொல். பொருள். 37.)

276. மருதம்

* நீளிரும் பொய்கை யிரைவேட் டெழுந்த
வாளை வெண்போத் துணீஇய நாரைதன்
னடியறி வுறுத லஞ்சிப் பைப்பயக்
கடியிலன் புகூஉங் கள்வன் போலச்
சாஅ யொதுங்குந் துறைகே ழூரனை
டாவ தாக வினிநா ணுண்டோ
† வருகதில் லம்மவெஞ் சேரி சேர
வரிவே யுண்கணவன் பெண்டிர் காணத்
தாருந் தானையும் பற்றி யாரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போலத்
தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்தவன்
மார்புகடி கொள்ளே ஞமி னூர்வுற்
றிரந்தோர்க் கீயா தீட்டியோன் பொருள்போற்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்லயா யோம்பிய நலனே.

என்பது : தலைமகட்குப்பாங்காயினர்கேட்பப் பரத்தைசொல்லியது.

—பரணர்.

இப்பாட்டின் கருத்து, ஒளித்துப் பிறரை நாடுவான் என்றவாறு.

பி - ம். 3. பையென, 4. கடியில் புகூஉம்; கடியிலம்புகூஉம்.

277. பாலை

தண்கதிர் மண்டில மவிரறச் சாஅய்ப்
பகலழி தோற்றம் போலப் பையென

---

* இப்பாட்டினுட் "பரந்து வெளிப்படா தாகி வருந்துக" என்றலன் என்றமையிற் சேரிப்பரத்தையைப் புலந்து கூறுதன் முதலியனவுங் கொள்க என்பர் நச். (தொல். பொருள். 151.) † "விழைவே கால மொழியிசைக் கிளவியென், றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே" என்ற சூத்திரத்து ஒழியிசைப் பொருளில் 'தில்' வந்ததற்கு இவ்வடியினை உதாரணங் காட்டி, "வந்தக்கால் இன்னது செய்வல்" என்பது பொருள் என்பர் எல்லா ஆசிரியரும். (253)

நுதலொளி கரப்பவு மாள்வினை தருமார்
தவலி லுள்ளமொ டெம்குதுணை யாகக்
கடையலங் குரல வாள்வரி யுழுவை
பேழ்வாய்ப் பிணவின் விழுப்பசி நோனு
திரும்பனஞ் செறும்பி னன்ன பரூஉமயிர்ச்
சிறுகட் பன்றி வருதிறம் பார்க்கு
மத்தம ரழுவத் தாங்க ணனந்தலைப்
பொத்துடை மரத்த புகர்படு நீழ
லாறுசெல் வம்பல ரசைவினை நிருக்கு
மீரமில் வெஞ்சுர மிறந்தோர் நம்வயின்
வாரா வளவை யாயிழை கூர்வா
யழலகைந் தன்ன காமர் துதைமயிர்
மனையுறை கோழி மறனுடைச் சேவற்
போர்புரி யெருத்தம் போலக் களுலிய
பொங்கழல் முருக்கி னெண்குரன் மாந்திச்
சிதர்சிதர்ந் துகுத்த செவ்வி வேனில்
வந்தன் றம்ம தானே
வாரார் தோழிநங் காத லோரே.

என்பது : தலைமகன்பிரிவிற்கண் தலைமகள் தோழிக்குப் பருவங் கண்டழிந்து சொல்லியது.

—கருவூர் நன்மார்பன்.

பி - ம். 7. செறும்பினனைய. 11. ரசையுரரிருக்கும். 17. புன்கான் முருக்கின்.

278. குறிஞ்சி

குணகடன் முகந்த கொள்ளை வானம்
பணைகெழு * வேந்தர் பல்படைத் தானைத்
தோனிரைத் தனைய வாகி வலனேர்பு

---

* "ஒளிறுவாட் பொருப்ப னுடல்சமத் திறுத்த களிறு நிரைத் தவைபோற் கொண்மூ" எனப் பரிபாட்டினுள்ளும் வந்தது காண்க 22.

கோணிமிர் கொடியின் வசிபட மின்னி
யுருமுர றதிர்குர றலைஇப் பாஞட்
பெருமலை மீமிசை முற்றின வாயின
வாளிலங் கருவி தாஅய் நாளை
யிருவெதி ரங்கழை யொசியத் தீண்டி
வருவது மாதோ வண்பரி யுந்தி
நனிபெரும் பரப்பி னம்மூர் முன்றுறைப்
பனிபொரு மழைக்கண் சிவப்பப் பாஞண்
முனிபட ரகல மூழ்குவங் கொல்லோ
மணிமருண் மேனி யாய்நலந் தொலையத்
தணிவருந் துயரஞ் செய்தோ
னணிகிளர் நெடுவரை யாடிய நீரே.

என்பது : இரவுக்குறிக்கட் டலைமகன்சிறைப்புறமாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

—கபிலர்.

பி - ம், 6. பெருவரை. 11, சிவப்பப் பண்ணுண்.

279. பாலை

நட்டோ ரின்மையுங் கேளிர் துன்பமு
மொட்டா துறையுநர் பெருக்கமுங் காணூஉ
வொருபதி வாழ்த லாற்றுப தில்ல
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றங் கடவா தோரென
நள்ளென் கங்குலும் பகலு மியைந்தியைந்
துள்ளம் பொத்திய வுரஞ்சுடு கூரெரி
யாள்வினை மாரியி னவியா நாளுங்
கடறுழந் திவண மாகப் படருழந்
தியாங்கா குவள்கொ ருனே தீந்தொடை
விளரி நரம்பி னயவரு சீறியாழ்
மலிபூம் பொங்கர் மகிழ்குரற் குயிலொடு
புணர்துயி லெடுப்பும் புனறெளி காலையு

நம்மூடை மதுகைய ளாகி யணிநடை
யன்னமாண் பெடையின் மென்மெல வியலிக்
கையறு நெஞ்சின ளடைதரு
மையீ ரோதி மாஅ யோளே.

என்பது : பொருள்வயிற்பிரிந்துபோகாநின்ற தலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது.

—இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்.

பி - ம். 8. மாரியின்வீயா. 12. நறைமலி பொங்கர். 13. புன்றெளி காலை (இருங்கோக்கண்ணனார்.)

280. நெய்தல்

* பொன்னடர்ந் தன்ன வொள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதைய
டிணிமண லடைகரை யலவ னுட்டி
யசையின ளிருந்த வாய்தொடிக் குறுமக [பினும்
ணலஞ்சால் விழுப்பொருள் கலநிறை கொடுப்
பெறலருங் குரைய ளாயி னறந்தெரிந்து
நாமுறை தேஎ மரூஉப்பெயர்ந் தவணெ
டிருநீர்ச் சேர்ப்பி னுப்புட னுழுதும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம் பணிந்தன மடுத்தன மிருப்பிற்
றருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்
கண்டிரண் முத்தங் கொண்டு ஞாங்கர்த்
தேனிமி ரகன்கரைப் பகுக்குங்
கானலம் பெருந்துறைப் பரதவ னமக்கே.

என்பது : தலைமகளைக் கண்ணுற்றுநீங்குந் தலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது. அல்லகுறிப்பட்டுப் போகாநின்றவன் சொல் லியதூஉமாம்.

—அம்மூவனார்.

---

* இதனுள் ஈண்டுள்ள பொருள் கொடுத்தால் பெறலரிய ளாயின் தன்னை வழிபட்டால் தந்தை தருவானேனு, அது நமக்கு அரி தாகலின் இன்னும் பொருள் நாம் மிகத்தேடிவந்து வரைதுமெனப்

பி - ம். 4. 5. குறுமக ளஞ்சொல்விழுப்பொருள். 6. ளாயினக்தில் 10. மடித்தனம் விரும்பிற் 13. தேனிமிர் தண்கரை.

281. பாலை

செய்வது தெரிந்திசிற் றேழி யல்கலு
மகலு ளாண்மை யச்சறக் கூறிய
சொற்பழு தாகு மென்று மஞ்சா
தொல்கியன் மடமயி லொழித்த பீலி
வான்போழ் வல்விற் சுற்றி நோன்சிலை
யவ்வார் விளிம்பிற் கமைந்த நொவ்வியற்
கணைகுர லிசைக்கும் விசைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
வறையிறந் தவரோ சென்றனர்
பறையறைந் தன்ன வலர்நமக் கொழித்தே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறு பாடு கண்டு ஆற்றுளாய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—மாமூலனார்.

பி - ம். 1. செல்வது. 2. மகலுநாணமை 5. விற்கட்டி. 6. யவ் வாவிளிம்பிற். 8. மோழியர்.

282. குறிஞ்சி

*பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய
செறிமடை யம்பின் வல்விற் கானவன்

பொருள்வயிற்பிரியக் கருதியவாறு காண்க என்பர் நச். (தொல். பொருள். 141.)

* இதனுள் "தோள் பாராட்டி யாயுமவளை என்னும்" என்று யாய்தெய்வம்! பராயினளென்பதுபடக்கூறி, யாம் அத்தெய்வத்திரு குப் பலிகொடுக்குதும் என்றவாறு காண்க என்பர் நச். (தொல். பொருள். 115.)

பொருதுதொலை யானை வெண்கோடு கொண்டு
நீர்திகழ் சிலம்பி னன்பொன் னகழ்வோன்
கண்பொரு திமைக்குந் தின்மணி கிளர்ப்ப
வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க
தெண்ணீ ராலி கடுக்கு மூத்தமொடு
மூவேறு தாரமு மொருங்குடன் சாற்றிச்
சாந்தம் பொறைமர மாக நறைகார்
வேங்கைக் கண்ணிய னிழிதரு நாடற்
கின்றீம் பலவி னேர்கெழு செல்வத்
தெந்தையு மெதிர்ந்தனன் கொடையே யல்லா
யம்ப லூரு மவனெடு மொழியுஞ்
சாயிறைத் திரண்ட தோள்பா ராட்டி
யாயு மவனே யென்னும் யாமும்
வல்லே வருக வரைந்த நாளென
நல்லிறை மெல்விரல் கூப்பி
யில்லுறை கடவுட் காக்குதும் பலியே.

என்பது : இரவுக்குறிக்கண் தலைமகட்கு சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. தலைமகன்பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

—தொல்கபிலன்.

பி-ம். 5. திருமணிகிளர. 8. மொருங்குடன் கொண்டு.

183. பாலை

நன்னெடுங் கதுப்பொடு பெருந்தோ ணீவி
நின்னிவ ணெழுதி லஞ்சிய வென்னினுஞ்
செலவுதலைக் கொண்டி பெருவிதுப் புறுவி
டல்கவர் மருப்பின் முதுமான் போக்கிச்
சில்லுணுத் தந்த சீறூர்ப் பெண்டிர்
திரிவயிற் றெவுட்டுஞ் சேட்புலக் குடிஞைப்

பைதன் மென்குர லெதுவந் திசைத்தொறும்
போகுநர் புலம்பு மாறே யேகுதற்
கரிய வாகுமென் ஞமைக் கரிமரங்
கண்ணகை யிளங்குழை கான்மூதற் கவினி
விசும்புட னிருண்டு வெம்மை நீங்கப்
பசுங்கண் வானம் பாய்தலி பொழிந்தெனப்
புன்னுகும் பெடுத்த நன்னெடுங் கானத்
தூட்டு பஞ்சிப் பிசிர்பரந், தன்ன
வுண்ணு மூதாய் தண்ணிலம் வரிப்ப
வினிய வாகுக தணிந்தே
யின்னு நீப்பி னின்னெடு செலற்கே.

என்பது : உடன்போக்குவலித்ததோழி தலைமகற்குச் சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம் 8. யேகு ஈர்க்கு. 15. பரிட்ப.

284. முல்லை

சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன
குறுவிழிக் கண்ண கூரலங் குறுமுயல்
முடந்தை வரகின் வீங்குபீ ளருந்துபு
குடந்தையஞ் செவிய கோட்பவ ரொடுங்கி
யின்றுயி லெழுந்த துணையொடு போகி
முன்றிற் சிறுநிறை நீர்கண் டுண்ணும்
புன்புலந் தழீஇய பொறைமுதற் சிறுகுடித்
தினைக்கள் ளுண்ட தெறிகோன் மறவர்
விசைத்த வில்லர் வேட்டம் போகி
முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டுங்
காமர் புறவி னதுவே காம
நம்மி னுந் தான்றலை மயங்கிய
வம்மா வரிவை யுறைவி னூரே.

என்பது : விளைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது; தன்னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்.

—இடைக்காடனார்.

பி - ம். 8. தெறிகொண்மதவர்.

285. பாலை

ஒழியச் சென்மார் செல்ப வென்றுநா
மழிபட ருழக்கு மவ்ல நெஞ்சத்.
தெவ்வ மிகந்துசே ணகல வையெயிற்
றானசைப் பிணவி னுறுபசி களைஇயர்
காடுதேர் மடப்பிணை யலறக் கலையி
னேடுகுறங் கறுத்த செந்நா யேற்றை
வெயில்புலந் திளைக்கும் வெம்மைய பயில்வரி
யிரும்புலி வேங்கைக் கருந்தோ லன்ன
கல்லெடுத் தெறிந்த பல்கிழி யுடுக்கை
யுலறுகுடை வம்பல ருயர்மர மேறி
யேறுவேட் டெழுந்த வினந்தீ ரெருவை
யாடுசெவி நோக்கு மத்தம் பிணைத்தோட்
குவளை யுண்க ணிவளு நம்மொடு
வருது மென்றனரே காதலர்
வாராய் தோழி முயங்குகம் பலவே.

என்பது : உடன்போக்குடன்படுவித்ததோழி தலைமகட்குச் சொல்லியது.

—காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

பி - ம். 3, தெவ்வமிகுந்து, தெவ்வமிகழ்ந்து. (உடன் போக் கமைந்த,)

286. மருதம்

*வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயி னுடங்க

---

* "கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்" என்றபகுதிக்கு 'விழையாவுள்ளம்...தெரியுங்காலே" என்றஅடிகளை உதாரணமா

மீன்சினை யன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழற் றமர்வளம் பாடி
யூர்க்குறு மகளிர் குறுவழி விறந்த
வராஅ லருந்திய சிறுசிரன் மருதின்
ரூழ்சினை யுறங்குந் தண்டுறை யூர
விழையா வுள்ளம் விழையு மாயினும்
என்றுங், கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னு கும்மே முன்னியது முடித்த
லனைய பெரியோ ரொழுக்க மதனை

கக்காட்டியும், இப்பாட்டினுள் அறனென்றது இல்லறத்தை;' 'தற்றகவுடைமை நோக்கி" என்றது தன்னால் அவ்வறனும் பொருளும் தகுதிப்பாடுடையவாம் தன்மையை நோக்கி என்றவாறும். "முன்னியது" என்றது, புறத்தொழுக்கத்தை; "பெரியோர் ஒழுக்கம் அனைய"-பெரியோர் ஒழுக்கம் பெரிய என்றவாறு; இது முன்னர் நிகழ்ந்த பொய்ச்சூள்பற்றி நும்மனோர் மாட்டும் இன்ன பொய்ச்சூள் பிறக்குமாயின் இவ்வுலகத்து மெய்ச்சூள் இனி இன்றும் ; அதனற் பெரியோரைத்தமது ஒழுக்கத்தைத் தேருங்காலை அரியவாயிருந்தனவெனத் தலைவனை நோக்கித் தோழிகூறலின், அவனை வழிபாடுதப்பினளாயிற்றுஎன்றும் கூறினர் நச். (தொல். பொருள்.76. 150.)இனி நக்கீரனார் "செறிப்பறிவுறுக்கப்பட்ட தலைமகன் தெருள்வானுயின் இந்நாள் வரைவல், அத்துணையும் இவளை ஆற்றுவித்துக்கொண்டிரு; நினக்கு அடைக்கலமெனக் கைப்பற்றும். கைப்பற்றியதனைத் தோழி சூளுறவாகக் கருதினள். உலகத்துச் சூளுறுவார் பசுவையும் பார்ப்பாரையும் பெண்டிரையும் தொட்டுச் சூளுறுவராகலாற், சூளுறவாற்றுரென்பது நினைந்து, 'நீவரைவல் என்றதே அமையாதோ ! சூளுறல்வேண்டுமோ ? பொய்த்தலும் வாய்த்தலும் உடையாரன்றே சூளுறுவர்; மெய்யல்லது சொல்லாதார்க்குச் சூளுறவு வேண்டுமோ? நின்கண்ணும் பொய்யுண்டாகில் மெய்யென்பது இவ்வுலகத்து நிலைபெற்றவழி இல்லையாகாதே' என்னும்; அதற்குச் செய்யுள்" என்று உரைத்து, இப்பாட்டினை உதாரணங் காட்டுவர். (இறை. களவ். 18.)

லரிய பெரியோர்த் தெரியுங் காலை
நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன
பொய்யொடு மிடைந்தலை தோன்றின்
மெய்யாண் டுளதோவிவ் வுலகத் தானே.

என்பது : வரைந்தெய்துவலென்று நீங்குந்தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டிருத்தல்வேண்டுமென்று தோழியைக் கைப்பட்டற்றுக்குக் கைப்பற்றியது தன்னைத் தொட்டுச் சூளுறுவானுகக்கருதித் தோழி சொல்லியது.

—ஓரம்போகியார்.

இப்பாட்டின் கருத்து ஒன்றுபிழைப்பினும் ஒன்று பிழையாதென்றவாறு.

பி - ம். 5. ஊர்க்கோமகளிர். 8. விழையாவுள்ளம் விழைவதாயினும். 9. தோட்டியாக வேட்டாங்.

287. பாலை

தொடியணி முன்கைத் தொகுவிரற் குவைஇப்
படிவ நெஞ்சமொடு பகறுணை யாக
நோங்கொ லளிய டானே தூங்குநிலை
மரையேறு சொறிந்த மாத்தாட் சந்தின்
சுரைபிவர் பொதியி லங்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்க ணிட்டிகைப்
புரிசை மூழ்கிய பொரியரை யாலத்
தொருதனி நெடுவீ மூதைத்த கோடை
துணைப்புறு விரிக்குந் தூய்மழை நனந்தலைக்
கணைக்கா லம்பிணை யேறுபுற நக்க
வொல்குநிலை யாஅத் தோங்குசினை பயந்த
வல்குறு வரிநிழ லசையின நோக்க
வரம்புவந் தலைக்கு மாலை
நிரம்பா நீளிடை வருந்துதும் யாமே.

என்பது : பிரிந்துபோகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துநின்று தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

—குடவாயிற் கீரத்தனார்.

இப்பாட்டிலுள் ளரைக்கணிட்டிகை என்பது பலிபீடம்.

பி - ம். 9. துணைப்புறுவிகுக்கும் (அரைக்கணிட்டிகை.)

288. குறிஞ்சி

சென்மதி சிறக்கநின் னுள்ள நின்மலை
யார நீவிய வம்பகட்டு மார்பினை
சாரல் வேங்கைப் பதிசினைப் புதுப்பூ
முருகுமுரண் கொள்ளு முருவக் கண்ணியை
யெரிதின் கொல்லை யிறைஞ்சிய வேன
லெவ்வங் கூறிய வைகலும் வருவோய்
கனிமுதி ரடுக்கத்தெந் தனிமை காண்டலி
னெண்ணமை செய்தனை யாகுவை நண்ணிக்
கொடியோர் குறுகு நெடியிருங் குன்றத்
திட்டா நிரங்கும் விட்டொளி ரருவி
யிருவரை யிழிதரும் வெருவரு படாஅர்க்
கயந்தலை மந்தி யுயங்குபசி களைஇயர்
* பார்ப்பின் றந்தை பழச்சுளை தொடினு
நனிநோ யேய்க்கும் பனிகூ ரடுக்கத்து
மகளிர் மாங்காட் டற்றே துகளறக்
கொன்தோ டுதிர்த்த கதுப்பி
னன்தீங் கிளவித் தந்தை காப்பே.

என்பது: பகற்குறிக்கட்டோழி செறிப்பறிவுறீஇவரைவுகடாயது.

—விற்றூற்று மூதெயினனார்.

பி - ம். 14 நனிநோயெய்க் 15. மகளிரரங்காட. 16. கொங்கோடுதிர்த் தகதுப்பின். (முத்தூற்றுமூதெயினனார்.)

289. பாலை

சிலையே றட்ட கணைவீழ் வம்பல
ருயர்பதுக் கிவர்ந்த ததர்கொடி யதிரல்
நெடுநிலை நடுக னுட்பலிக் கூட்டுஞ்

---

* "மாவும்...பார்ப்பும்—அப்பாலான" என்ற விதிப்படி மந்திப்பார்ப்பு எனப்பட்டது. (தொல். பொருள். 569.)

சுரனிடை விலங்கிய மரமேங் கியவின்
வந்துவினை வலித்த நம்வயி னென்றுந்
தெருமர வுள்ளமொடு வருந்த லானாது
நெகிழா மென்பிணி வீங்கிய கைசிறி
தவிழினு முயவு மாய்மடத் தகுவி
சேணுறை புலம்பி னுண்முறை யிழைத்த
திண்சுவர் நோக்கி நினைந்து கண்பனி
நெகிழ்நான் முத்தின் முகிழ்முலைத் தெறிப்ப
மையற விரிந்த படையமை சேக்கை
யைமென் றூவி யணைசேர் பசைஇ
மையல் கொண்ட மதனழி யிருக்கையள்
பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி
நல்ல கூறென நடுங்கிப்
புல்லென் மாலையொடு பொருங்கொ ருனே.

என்பது : பிரிந்துபோகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச்சொல்லியது.

—எயினந்தைமக னிளங்கீரனார்.

பி - ம். 3. நிரைநிலைநடுகல்.

290. நெய்தல்

குடுமிக் கொக்கின் பைங்காற் பேடை
யிருஞ்சேற் றள்ள ளுட்புலம் போகிய
கொழுமீன் வல்சிப் புன்றலைச் சிறுஅர்
நுண்ணூ ணவ்வலைச் சேவல் பட்டென
வல்குபு பொழுதின் மெல்கிரை மிசையாது
பைதற் பிள்ளை தழீஇ யொய்யென
வாங்கட் பெண்ணை யன்புற நரலுஞ்
சிறுபஃ றெல்குடிப் பெருநீர்ச் சேர்ப்பன்
கழிசேர் புன்னை யழிபூங் கானற்
றணவா நெஞ்சமொடு தமியன் வந்துநம்
மணவா முன்னு மெவனே தோழி

வெண்கோட் டியானை விறற்போர்க் குட்டுவன்
றெண்டிரைப் பரப்பிற் றெண்டி முன்றுறைச்
சுரும்புண மலர்ந்த பெருந்த ணெய்தன்
மணியேர் மாணல மொரீஇப்
பொன்னேர் வண்ணங் கொண்டவென் கண்ணே.

என்பது : இரவுக்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழிக்குச்சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

—நக்கீரர்.

பி - ம். 1. பெட்டை. 4 துண்ஞாண்வய்லைச் 10 தண்வரனெஞ்ச. 11. மன்னவர்தோழி. 15. மலரோர்மாணல.

291. பாலை

வானம் பெயல்வளங் கரப்பக் கான
முலறி யிலையில வாகப் பலவுட
னேறுடை யாயத் தினம்பசி தெறுப்பக்
கயனற வறந்த கோடையொடு நயனறப்
பெருவரை நிவந்த மருங்கிற் கொடுவரிப்
புலியொடு பொருது சினஞ்சிறந்து வலியோ
டுரவுக்களி றெருதுங்கிய மருங்கிற் பரூஉப்பரல்
சிறுபன் மின்மினி கடுப்ப வெவ்வாயு
நிறைவன விமைக்கு நிரம்பா நீளிடை
யெருவை யிருஞ்சிறை யிரீஇய விரியிணர்
தாதுண் டும்பி மூரலிசை கடுப்பப்
பரியின துயிர்க்கு மம்பினர் வெருவர
வுவலை சூடிய தலையர் கவலை
யார்த்துட னரும்பொருள் வவ்வலின் யாவதுஞ்
சாத்திடை வழங்காச் சேட்சிமை யதர
சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்கா
யுதிர்வன தாஅ மத்தந் தவிர்வின்று
புள்ளி யம்பிணை யுணீஇய வுள்ளி
யறுமருப் பொழித்த தலைய தோல்பொதி

மறுமருப் பிளங்கோ டதிரக் கூஉஞ்
சுடர்தெற வருந்திய வுருஞ்சுர மிறந்தாங்
குள்ளினை வாழிய நெஞ்சே போதெனப்,
புலங்கமழ் நாற்றத் திரும்பல் கூந்த
னல்லெழின் மழைக்கணங் காதலி
மெல்லிறைப் பணைத்தோள் விளங்குமான் கவினே.

என்பது : பொருள்வயிற்போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி - ம். 4. நயன்றகப் 6. சினந்தணிந். 7. களிறுடுங்கு. 10. வரியினர். 15. சாத்திடை விலங்கா. 16. செறியிலை. 19. மருப் பொழிந்த. 20. மறுமருப்பினங்.

292. குறிஞ்சி

கூருய் செய்வது தோழி வேறுணர்ந்
தன்னையும் பொருளுகுத் தலமரு மென்முறிச்
சிறுகுள கருந்து தாய்முலை பெறூஅ
மறிகொலைப் படுத்தல் வேண்டி வெறிபுரி
யேதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கு மாயி னதூஉ நாணுவ
லிலங்குவளை நெகிழ்ந்த செல்லல் புலம்படர்ந்
திரவின் மேய மரூஉம் யானைக்
கால்வ லியக்க மொற்றி நடுநாள்
வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணி னெறிந்த சிறுக
ணுடுவுறு கணையிற் போகிச் சாரல்
வேங்கை விரியினர் சிதறித்தேன் சிதையூஉப்
பலவின் பழத்துட் டங்கு
மலைகெழு நாடன் மணவாக் காலே.

என்பது : வெறியச்சுறீஇத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—கபிலர்.

இதன்கருத்துஇன்பத்தலைமகன் என்றவாறு.

பி - ம். 8. மேயன்மரூஉ மேயலமரூஉ மோங்கல்; 9. காவலரியக்கமொற்றி. காவலியக்க 10. வன்கட்கானவன். 14. டலவிளம் பழத்துட்.

293. பாலை

இலையொழித் தல்றியற் புன்றலை யுலவை
வலைவலந் தனைய வாகப் பலவுடன்
சிலம்பி சூழ்ந்த புலங்கெடு வைப்பிற்
றுகிலாய் செய்கைப் பாவிரிந் தன்ன
வெயிலஞ் நுடங்கும் வேல்வெங் களரிக்
குயிற்கண் ணன்ன குரூஉக்காய் மூற்றி
மணிக்கா சன்ன மானிற விருங்கனி
யுகாஅ மென்சினை யுதிர்வன கழியும்
வேனில் வெஞ்சுரம் தமியர் தாமே
செல்ப வென்ப தோழி யாமே
பண்பில் கோவலர் தாய்பிரித் தியாத்த
நெஞ்சமர் குழவி போல நொந்துநொந்
தின்னு மொழிது மென்ப
வென்மையங் கினர்கொனங் காத லோரே.

என்பது : பொருள்வயிற் பிரியக்கருதிய தலைமகன்குறிப்பறிந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைமகனுற் பிரிவுணர்த்தப் பட்ட தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.

—காவன்முல்லைப் பூதனார்

பி - ம். 1. இலையொழிந்தலறிய புன்றலை. 4. தகிலானெய்கை. 10. செல்ப வென்னு நர். 14. வென்மையங்கினர்நங்.

294. முல்லை

மங்குன் மாமழை விண்ணதிர்பு முழங்கித்
துள்ளுப்பெயல் கழிந்த பின்றைப் புகையுறப்
புள்ளிறுண் டுவலை பூவகை நிறையக்
காதலர்ப் பிரிந்த கையறு மகளிர்

நீர்வார் கண்ணிற் கருவிளை மலரத்
துய்த்தலைப் பூவின் புதலிவ ரீங்கை
நெய்த்தோய்த் தன்ன நீர்நனை யந்தளி
ரிருவகி ரீருளி னீரிய துயல்வர
வவரைப் பைம்பூப் பயில வகல்வயற்
கதிர்வார் காய்நெல் கட்கினி திறைஞ்சச்
சிதர்சினை தூங்கு மற்சிர வரைநாட்
காய்சின வேந்தன் பாசறை நீடி
நங்நோ யறியா வறனி லாள
ரிங்நிலை களைய வருகுவர் கொல்லென
வானு தெறித்தரும் வாடையொடு
நோனேன் மேழியென் றனிமை யானே.

என்பது : பருவவரவின்கண் வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.*

—கழார்க் கீரனெயிற்றியார்.

பி - ம். 2. பொழிந்தபின்னை. 9. வகல்வயிற் 16. றனிமையினானே.

295. பாலை

நிலநீ ரற்று நீள்சுனை வறப்பக்
குன்றுகோ டகையக் கடுங்கதிர் தெறுதலி
னென்றூழ் நீடிய வேய்படு நனந்தலை
நிலவுநிற மருப்பிற் பெருங்கை சேர்த்தி
வேங்கை வென்ற வெருவரு பணைத்தோ
ளோங்கல் யானை யுயங்கிமதந் தேம்பிப்
பன்மர வொருசிறைப் பிடியொடு வதியுங்
கல்லுடை யதர கான நீந்திக்
கடனீ ருப்பின் கணஞ்சா லுமண

* இப்பாட்டினை இத்துறைக்கே கொண்டு, இம்மணிமிடை பவளத்து முல்லையுள் முன்பனிவந்தது, நிலமுங்கருவு மயங்கிற்று என்பார்ச். (தொல். பொருள். 12).

10 ருயங்குபக டியிர்ப்ப வசைஇ முரம்பிடித்.
தகலிடங் குழித்த வகல்வாய்க் கூவ
லாறுசெல் வம்பல ரசைவிட வூறும்
புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
15 தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழ்ர், கலிசிறந் தார்க்கு
மொழிபெயர் தேஎய மிறந்தன ராயினும்
பழிதீர் மாணலந் தருகுவர் மாதோ
மாரிப் பித்திகத் தீரிதழ் புரையு
20 மங்கலுழ் கொண்ட செங்கடை, மழைக்கண்
மணங்கம ழைம்பான் மடந்தைநின்
னணங்குநிலை பெற்ற தடமென் ரோளே:

என்பது: பிரிவிடைவேறுபட்டதலைமகட்குத் தோழிசொல்லியது.

—மாமூலனர்.

பி-ம். 16. உலையாமகிழ்.

296. மருதம்

கோதை யிணர குறுங்காற் காஞ்சிப்
போதவிழ் நறுந்தா தணிந்த கூந்த
லரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு
நெருநையுங் கமழ்பொழிற் றுஞ்சி யின்றும்
5 பெருநீர் வையை யவளொ டாடிப்
புலரா மார்பினை வந்துநின் றெம்வயிற்
கரத்தல் கூடுமோ மற்றே பரப்பிற்
பன்மீன் கொள்பவர் முகந்த விப்பி
நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
10 பேரிசைக் கொற்கைப் பொருநன் வெண்மேவற்
கடும்பகட்டி யானை நெடுந்தேர்ச் செழியன்
மலைபுரை நெடுநகர்க் கூட னீடிய

மலிதரு கம்பலை போல
வல்லா கின்றது பலர்வாய்ப் பட்டே.

என்பது : வாயிலவேண்டிச்சென்ற தலைமகற்கு வாயில்மறுக்கும் தோழி சொல்லியது.

—மதுரைப் பேராலவாயார்.

பி-ம். 4. நுஞ்சினையின்றும். 12. கூடலாடிய. (தலைமகற்குத் தோழி வாயின்மறுத்தது)

297. பாலை

பானுட் கங்குலும் பெரும்புன் மாலையு
மானு நோயொ டழிபடாக் கலங்கி
நம்வயி னினையு மிடும்பை கைம்மிக
வென்னை யாகுமோ நெஞ்சே நம்வயி
னிருங்கவி னில்லாப் பெரும்புன் முடிக்
கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்கு னுணுகிய பேஎமுதிர் நடுகற்
பெயர்பயம் படரத் தோன்று குயிலெழுத்
தியைபுட னேக்கல் செல்லா தசைவுட
னுறுசெல் வம்பலர் விட்டனர் கழியுஞ்
சூர்முத லிருந்த வோமையம் புறவி
னீர்முள் வேலிப் புலவுநாறு முன்றி
லெழுதி யன்ன கொடிபடு வெருகின்
பூவை யன்ன பொங்குமயிர்ப் பிள்ளை
மதிசூழ் மீனிற் ரூய்வழிப் படூஉஞ்
சிறுகுடி மறவர் சேக்கோட் டண்ணுமைக்
கெருவைச் சேவ லிருஞ்சிறை பெயர்க்கும்
வெருவரு கான நம்மொடு
வருவ லென்றேண் மகிழ்மட நோக்கே.

என்பது : பொருள்வயிற்போகாநின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 6. கடுக்கணை மழவர். 7. மருங்கினுணுகிய. 9. ஞெ ழுக்கல் செல்லாசையுட. ஞெக்கல்செல்லா சையுட. 11. சுர முதலிருந்த. 13. கொடிபடு வெரிய.

298. குறிஞ்சி.

பயங்கெழு திருவிற் பல்கதிர் ஞாயிறு
வயங்குதொழி றரீஇயர் வலனேர்பு விளங்கி
மல்குகடற் றோன்றி யாங்கு மல்குபட
மணிமருண் மாலை மலர்ந்த வேங்கை .
யொண்டளி ரவிர்வரு மொலிகெழு பெருஞ்சினைத்
தண்டுளி யசைவளி தைவரு நாட
கொன்றுசினந் தணியாது வென்றுமுரண் சாம்பா
திரும்பிடித் தொழுதியி னினந்தலை மயங்காது
பெரும்பெயற் கடாஞ் செருக்கி வளமலை
யிருங்களி றியல்வரும் பெருங்காட் டியவி
ஞிருடு மிய வெள்வே லேந்தி
மென்பிணி யவிழ்ந்த தாழ்பூங் கோதை
யூதுவண் டிரிய வழிப்பணை முயங்கிய
நீவந் ததனினு மினிதா கின்றே
தூவற் கள்ளிற் றுணைதே ரெந்தை
கடியுடை வியனக ரோம்பின ளுறையும்
யாயறி வுறுத லஞ்சிப் பானுட்
காவ னெஞ்சமொடு காமஞ் செப்பேன்
யானின் கொடுமை கூற நினைபாங்
கினையல் வாழி தோழிநத் துறந்தவர்
நீடல ராகி வருவர் வல்லெனக்
கங்கு லுயவுத்துணை யாகிய
துஞ்சா துறைவி யிவளுவந் ததுவே.

என்பது : இரவுக்குறிக்கட் டலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

—மதுரைப் பண்டவாணிக னிளந்தேவனார்.

பி- ம். 9. பெரும்புகற்கடாஅஞ்.

299. பாலை

எல்லையு மிரவும் வினைவயிற் பிரிந்த
முன்ன முன்னுறு படைய வுள்ளிய
பதிமறந் துறைதல் வல்லுந மாயினு
மதுமறந் துறைத லரிதா கின்றே
கடுவளி யெடுத்த கால்கழி தேக்கிலை
நெடுவிளிப் பருந்தினம் வெறியெழுந் தாங்கு
விசும்புகண் புதையப் பாஅய்ப் பலவுட
னகலிடஞ் செல்லுந ரறிவுகெடத் தாஅய்க்
கவலை காக்குங் காடக லத்தஞ்
செய்பொருண் மருங்கிற் செலவுதனக் குரைத்
வைகுநிலை மதியம் போலப் பையெனப் [தென
புலம்புகொ ளவலமொடு புதுக்கவி னிழந்த
நலங்கெழு திருமுக மிறைஞ்சி நிலங்கிளையா
நீரொடு பொருத வீரிதழ் மழைக்க
ணிகுதரு தெண்பனி யாகத் துறைப்பக்
கானிலை செல்லாது கழிபடர்க் கலங்கி
நாநடுக் குற்ற நவிலாக் கிளவியொ
டறன்மருள் கூந்தலின் மறையின டிறன்மாண்டு
திருந்துக மாதோநுஞ் செலவென வெய்துயிராப்
பருவர லெவ்வமொ டழிந்த
பெருவிதுப் புறுவி பேதுறு நிலையே.

என்பது: இடைச்சுரத்துப்போகா நின்றதலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—எயினந்தைமகன் இளங்கீரனார்.

பி-ம். 1. எல்லியுமிரவும். முள்ள முள்ளுறுபுடைய முள்ளி. 3. வல்லின மாயினும், 6. பருந்தின். 7 பாஅய்ப்பகலுட; பாஅய்ப்பரந்து. 8.* னகலிடைச்செல்லுந. 9. காய்கல. 19, நின் செலவென.

---

* இதனுள் "தான்பெரிது கலுழ்ந்து நீக்காயினள்" எனவே அக்குறிப்புத் தலைவன் போகாமல் தடுப்பக் கூறிய தென்று உணர்

300. நெய்தல்

* நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்
தூணங்குமண லாங்க ணுணங்கப் பெய்ம்மார்
பறிகொள் கொள்ளையர் மறுக வுக்க
மீனுர் குருகின் கானலம் பெருந்துறை
யெல்லை தண்பொழிற் சென்றெனச் செலீஇயர்
தேர்பூட் டயர வேளய் வார்கோற்
செறிதொடி திருத்திப் பாறுமயிர் நீவிச்
செல்லினி மடந்தைதன் சூழ்நியொடு மனையெனச்
சொல்லிய வளளை தான்பெரிது கலுழ்ந்து
நீங்கா யினளிவ ளாயிற் ருங்காது
நொதுமலர் போலப் பிரியிற் கதுமெனப்
பிறிதொன் ருகலு மஞ்சுவ லதனுற்
சேணின் வருநர் போலப் பேணு
யிருங்கலி யாணரெஞ் சிறுகுடித் தோன்றிய
வல்லெதிர் கொண்டு மெல்லிதின் வினைஇத்
துறையு மான்றின்று பொழுதே சுறவு
மோத மல்கலின் மாரு யினவே
யெல்லின்று தோன்றல் செல்லா தீமென
வெமர்குறை கூறத் தங்கி யேழுற
விளையருங் புரவியு மின்புற நீயு
மில்லுறை நல்விருந் தயர்த
லொல்லுதும் பெருமநீ நல்குதல் பெறினே.

என்பது : பகற்குறிவந்துநீங்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

—உலோச்சனர்.

பி - ம். 9. கலிழ்ந்து. பேணுப் 14, பெருங்கலியாணர். 17. மோத மலி கடலின். 21. விருந்தாகுத.

இவைநூற்றெண்பதும் மணிமிடைபவளம் முற்றும்.

ந்து தோழிகூற்றினுள் என்றும், "வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்" என்ற பகுதிக்கு இப்பாட்டு உதாரண மாகுமென்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 107, 114.)

ஸ்ரீ :

மூன்றாவது

நித்திலக்கோவை

---

301. பாலை

வறனுறு செய்தியின் வாடுபு வருந்திப்
படர்மிகப் பிரிந்தோ ருள்ளுபு நினைதல்
சிறுநனி யான்றிக மென்றி தோழி
நல்குந ரொழித்த கூலிச் சில்பத
மொடிவை யின்றி யோம்பா துண்டு
நீர்வாழ் முதலை யாவித் தன்ன
* வாரை வேய்ந்த வறைவாய்ச் சகடத்
தூரிஃ தென்னு வூறில் வாழ்க்கைச்
சுரமுதல் வருத்த மரமுதல் வீட்டிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்வரக்
குவியின ரெருக்கின் றதர்பூங் கண்ணி
யாடூஉச் சென்னி தகைப்ப மகடூஉ
முளரித் தியின் முழங்கழல் விளக்கத்துக்
களரி யாவிரைக் கிளர்பூங் கோதை
வண்ண மார்பின் வனமுலை துயல்வரச்

---

* இவ்வடி முழுவதும் பெரும்டாணிலும் வந்தது. (அடி 50.) ஆண்டு நச்சினார்க்கினியர் "தொத்துளிப் பாயாலே வேய்ந்த ஒலிக்கின்ற வாயையுடைய சகடம்" என்று உரை கூறுவர்.

செறிதடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்ன
குறுகெடுந் தூம்பொடு முழவுபுணர்ந் திசைப்பக்
கார்வான் முழக்கி னீர்மிசைத் தெவுட்டுந்
தேரை யொலியின் மானச் சீரமைத்துச்
சில்லரி கறங்குஞ் சிறுபல் லியத்தொடு
பல்லூர் பெயர்வன ராடி யொல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பஃறொகைக் கலப்பைய
ரிரும்பே ரொக்கற் கோடிய ரிறந்த
புன்றலை மன்றங் காணின் வழிஇ
ளழுங்கன் மூதூர்க் கின்னு தாகு
மதுவே மருவின மாலை யதனற்
காதலர் செய்த காத
னீடின்று மறத்தல் கூடுமோ மற்றே.

என்பது : பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.

—அதியன் விண்ணத்தனார்.

பி-ம். 11. தகர்பெருங்கண்ணி. 18. தெவிட்டுந். (பிரிவின்கண்; அதியவன் வண்ணத்தினார்.)

302. குறிஞ்சி

சிலம்பிற் போகிய செம்முக வாழை
யலங்க லந்தோ டசைவளி யுறுதொறும்
பள்ளி யானைப் பரூஉப்புறந் தைவரு
நல்வரை நாடனை டருவி யாடியும்
பல்லிதழ் நீலம் படுசுனைக் குற்று
நறுவீ வேங்கை யினவண் டார்க்கும்
வெறிகமழ் சோலை நயந்துவிளை யாடலு
மரிய போலுங் காதலந் தோழி
யிருங்க லடுக்கத் தென்னைய ருழுத
கரும்பெனக் கவிணிய பெருங்குர லேனல்
கிளிபட விளைந்தமை யறிந்துஞ் செல்கென

நம்மவண் விடுநள் போலாள் கைம்மிகச்
சில்சுணங் கணிந்த செறிந்துவீங் கிளமுலை
மெல்லிய லொலிவருங் கதுப்பொடு
பல்கா னேக்கு மறனில் யாயே.

என்பது : பகலேசிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லு வாளாய்ச் சொல்லியது.

—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

இப்பாட்டின் கருத்து இன்பத்தலைமகன் என்றவாறு.

303. பாலை

இடைபிற ழறித லஞ்சி மறைகாந்து
பேஎய் கண்ட கனவிற் பன்மா
ணுண்ணிதி னினையந்த காமம் வென்வேன்
மறமிகு தானைப் பசும்பூட் பொறையன்
கார்புகன் றெடுத்த சூர்புக ணனந்தலை
மாயிருங் கொல்லி யுச்சித் தாஅய்த்
ததைந்துசெல் லருவியி னலரெழப் பிரிந்தோர்
புலங்கந் தாக விரவலர் செலினே
வரைபுரை களிற்றெடு நன்கல னீயு
முரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செங்கேற் றரீஇய ரோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு
வருவரென் றுணர்ந்த மடங்கெழு நெஞ்ச
மமையந் தெளியரோ நீயே பலவுடன்
வறன்மரம் பொருந்திய சிள்வீ டுமணர்
கணநிரை மணியி னூர்க்குஞ் சுரனிறந்
தழிநீர் மீன்பெயர்ந் தாங்கவர்
வழிநடைச் சேறல் வலித்திசின் யானே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் வேட்கைமீதூர்ந்த தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—ஔவையார்.

பி - ம். 2. பொய்கண்ட. 4. மாமிகுதானை. 19. திழிநீர்.

304. முல்லை

இருவிசும் பிவர்ந்த கருவி மாமழை
நீர்செறி நுங்கின் கன்சிதர்ந் தவைபோற்
சூர்பனிப் பன்ன தண்வர லாலியொடு
பரூஉப்பெய லழிதுளி தலைஇ வானவின்று
குரூஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை
* செய்துவிட் டன்ன செங்நில மருங்கிற்
செறித்துநிறுத் தன்ன தெள்ளறல் பருகிச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பி னண்ண லிரலையொ
டலங்குசினைக் குருந்தி னல்நிழல் வதியச்
சுரும்பிமிர் பூதப் பிடவுத்தளை யவிழ
யரும்பொறி மஞ்ஞை யால வரிமணன்
† மணிமிடை பவளம் போல வணிமிகக்
காயாஞ் செம்ம ருஅய்ப் பலவுட
னீயன் மூதா யீர்ம்புறம் வரிப்பப்
புலனணி கொண்ட காரெதிர் காலை
யேந்துகோட் டியானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத் தல்கி னன்று
மறவ ரல்லர்நம் மருளா தோரென
நன்னோய் தன்வயி னின்றியா
ளெந்நொந்து புலக்குங்கொன் மாஅ யோளே.

என்பது : பாசறைக்கட் டலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—இடைக்காடனார்.

---

* "வல்லோன் செய்கையன்ன செந்நிலம்" 134-ம் பாட்டு.

† இம்மூன்றடிகளின்கருத்து 14-ம் பாட்டிலும் வந்தது.

பி - ம். 2. சிதர்த்தவைபோல். 12. விரும்பொறி ; விரிமணன். 13. மணிபிடை. 19. கங்கோய் தன்மையி. (பாசறைப்பிரிந்த.)

305. பாலை

பகலினு மகலா தாகி யாமந்
தவலி னீத்தமொ டையெனக் கழியத்
தளிமழை பொழிந்த தண்வரல் வாடையொடு
பனிமீக் கூறும் பைதற் பானுட்
பல்படை நிவந்த வறுமையில் சேக்கைப்
பருகு வன்ன காதலொடு திருகி
*மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்
தோருயிர் மாக்களும் புலம்புவர் மாதோ
வருளி லாளர் பொருள்வயி னகல
வெவ்வந் தாங்கிய விடும்பை நெஞ்சத்
தியானெவ னுளனே தோழி தானே
பராரைப் †பெண்ணைச் சேக்குங் கூர்வா
யொருதனி யன்றி லுயவுக்குரல் கடைஇய
வுள்ளே கனலு முள்ள மெல்லெனக்
கனையெரி பிறப்ப வூது
நினையா மாக்க டூங்குழல் கேட்டே.

என்பது : பிரிவுணர்த்தப்பட்டதோழிக்குத் தலைமகள் சொல்லியது. தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.

—வடமவண்ணக்கன் பேரிச்சாத்தனார்.

பி - ம். 1. பிரவன். (பெருஞ்சாத்தன்.)

306. மருதம்

பெரும்பெயர் மகிழ்ந பேணு தகன்மோ
பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்கொம் பீங்கைத் துய்த்தலைப் புதவீ

---

* இவ்வடி 11; 379-ம் பாடல்களிலும் வந்தது.
† பனையில் அன்றில் வாழ்தல் (50; 120.)

யீன்ற மாத்தி னிளந்தளிர் வருட
வார்குரு குறங்கு நீர்சூழ் வளவயற்
கழனிக் கரும்பின் சாய்ப்புற மூர்ந்து
டழன யாமை பசுவெயிற் கொள்ளு
நெல்லுடை மறுகி னன்ன ரூர /
விதுவோ மற்றுநின் செம்மன் மாண்ட
மதியே ரொண்ணுதல் வயங்கிழை யொருத்தி
யிகழ்ந்த சொல்லுஞ் சொல்லிச் சிவந்த
வாயிதழ் மழைக்கண் ணீயுற நோக்கி
தண்ணறுங் கமழ்த்தார் பரீஇயின ணும்மொ
டேடினள் சிறுதுனி செய்தெம்
மணன்மலி மறுகி னிறந்திசி னேளே.

என்பது : தோழி தலைமகற்கு வாயின்மறுத்தது.

—மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனர்.

இதன்கருத்துக் * குறியாவின்பத்தினைப் பெறுவான் என்றவாறு.

பி - ம். 5. நீர்சூழகல்வயல். 10—11 யொத்தநிகந்த. 13. பரீஇயின ணம்மொ. 14. டெடலி. (மதுரைக் கந்தரருகன்.)

307. பாலை

சிறுநுதல் பசந்து பெருந்தோள் சாஅ
யகலெழி லல்கு லவ்வரி வாடப்
பகலுங் கங்குலு மயங்கிப் பையெனப்
பெயலுறு மலரிற் கண்பனி வார
வீங்கிவ ளுழக்கு மென்னுத வினைஞயந்து
நீங்க லொல்லுமோ வைய வேங்கை
யடுமுரண் டொலைத்த நெடுநல் யானை
மையலங் கடாஅஞ் செருக்கி மதஞ்சிறந்
தியங்குநர்ச் செகுக்கு †மெய்படு ஈனந்தலைப்
பெருங்கை யெண்கினங் குரும்பி தேரும்

* "குறியாவின்ப.....மெய்துநாடன்" (2.) † (295.)

புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
*கடவுள் போகிய கருந்தாட் கந்தத்
துடனுறை பழைமையிற் றுறத்தல் செல்லா
திரும்புரூப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமூத லாறே.

என்பது : பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகனைச் செலவு விலக்கியது.

—மதுரை ஈழத்துப் பூதன்றேவனார்.

308. குறிஞ்சி

உழுவையொ டிழந்த வுயங்குநடை யொருத்த
னெடுவெகிர் விழுப்புண் கழாஅக் கங்கு
லாவி யழிதுளி பொழிந்த வைகறை
வால்வெள் ளருவிப் புனன்மலிந் தொழுகலி
னிலங்குமலை புதைய †வெண்மழை கலைஇக்
கலஞ்சுடு புகையிற் றோன்று நாட
விரவின் வருத லெவனோ பகல்வரிற்
றெரிலையா வேலின் வண்மகி ழெந்தை
களிறணங் தெய்தாக் கன்முகை யிதணத்துச்
சிறுதினைப் படுகிளி யெம்மொ டோப்பி
மல்ல லறைய மலிர்சுனைக் குவளைத்
தேம்பா யொண்பூ நறும்பல வடைச்சிய
கூந்தன் மெல்லணைத் துஞ்சிப் பொழுதுபடக்
காவலர்க் கரந்து கடிபுனந் துழைஇய
பெருங்களிற் றெருத்தலிற் பெயர்குவை
கருங்கோற் குறிஞ்சிநும் முறைவி னூர்க்கே.

என்பது : இரவு வருவானைப் பகல் வருகென்றது.

—பிசிராந்தையார்.

பி ம். 15. போகுவை. 16. மிறையி னூர்.

---

* "மாடக், செழுதணிகடவுள் போகலின்" என வந்தது. (167.)

† "புகை புரை அம்மஞ்சு" (97)

309. பாலை

வயவா ளெறிந்து வில்லி னீக்கிப்
*பயநிரை தழீஇய கடுங்கண் மழவ
ழம்புசேட் படுத்து வன்புலத் துய்த்தெனத்
தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்
†கொழுப்பா வெறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வான்க ணகலறைக்
களிறுபுற மூரிஞ்சிய கருங்கா லிலவத்
தரலை வெண்கா ழாலியிற் ரூஅங்
காடுமிக நெடிய வென்னுர் கோடியர்
பெரும்படைக் குதிரை நற்போர் வானவன்
றிருந்துகழற் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு
நாஞ்செலி னெவனே தோழி காம்பின்
வனைகழை யடைந்த கவண்விசைக் கடியிடிக்
‡கனைசுட ரமையத்து வழங்கல் செல்லா
திரவுப்புன மேய்ந்த வுரவுச்சின வேழந்
தண்பெரும் படாஅர் வெரூஉம்
குன்றுவிலங் கியவினவர் சென்ற நாட்டே.

என்பது : பிரிவிடை வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனர்.

பி - ம். 2. மறவர். 10. பசும்படை. 11. னிருங்கழற். 13. விளைகழை யுடைந்தகனை. 14. சுடர்வைபத்து. 15. விரவுப்புன.(கதட்பிள்ளை.)

310. நெய்தல்

கடுந்தே ரிளையரொடு நீக்கு நின்ற
நெடுந்தகை நீர்மையை யன்றி நீயுந்
தொழுதகு மெய்யை யழிவுமுந் துறுத்துப்

---

* "கடிபுலங் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்." (101.)
† "கொழுப்பா தின்ற கூர்ம்படை மழவர்." (129)
‡ "யானைப், பகல்நிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்கல்" மலை.205-6.

பன்னுள் வந்து பணிமொழி பயிற்றலிற்
குவளை யுண்கண் கலுழ நின்மாட்
டிவளும் பெரும்பே துற்றன ளோருந்
தாயுடை நெடுநகர்த் தமர்பா ராட்டக்
காதலின் வளர்ந்த மாத ராகலிற்
பெருமட மூடையரோ சிறிதே யதனுற்
குன்றிற் றோன்றுங் குவவுமணற் சேர்ப்ப
வின்றிவண் வீரும்பா தீமோ சென்றப்
பூவிரி புன்னை மீதுதோன்று பெண்ணைக்
கூஉங்க ணஃதே தெய்ய வாங்க
ணுப்பொய் யுமண ரொழுகையொடு வந்த
விளைப்படு * பேடை யிரியக் குரைத்தெழுந்
தருமிசைப் புணரி யுடைதரும்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே.

என்பது : தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி சொல்லியது.
—நக்கீரனார்.

பி - ம் 7. தாயுறைவியனகர். 9. முடையள் சிறிதே. 11. சென்றிப்.

311. பாலை

இரும்பிடிப் பரிசிலர் போலக் கடைநின்
றருங்கடிக் காப்பி னகனக ரொருசிறை
யெழுதி யன்ன திண்ணிலைக் கதவங்
†கழுதுவழங் கரைநாட் காவலர் மடியத்
திறந்துநப் புணர்ந்து நம்மிற் சிறந்தோ
ரிம்மை யுலகத் தில்லெனப் பன்னுட்
பொம்ம லோதி நீவிய காதலொடு
பயந்தலை பெயர்ந்து மாதிரம் வெம்ப
வருவழி வம்பலர்ப் பேணிக் கோவலர்
மழவிடைப் பூட்டிய ‡குழாஅய்த் தீம்புளி

* ஈண்டுப் பேடையென்றது மந்தியை. (சிறுபாண் அடி. 56.)
† கழுதுவழங்குபாமம் (122). ‡ சுரைப்பெய்த வல்சி. (113.)

செவியடை நீரத் *தேக்கிலை பகுக்கும்
புல்லி நன்னுட் டும்பர்ச் செலவருஞ்
சுரமிறந் தேகினு நீடல
ரருண்மொழித் தேற்றிநம் மகன்றிசி னேரே.

என்பது : பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழிசொல்லியது.

—மாமூலனார்.

பி - ம். 4. மடிந்தெனத். 5. தும்மிற். 8. மழைதலை,

312. குறிஞ்சி

நெஞ்சுடம் படுதலி னென்றுபுரிந் தடங்கி
யிரவின் வரூஉ மிடும்பை நீங்க
வரையக் கருது மாயிற் பெரிதுவந்
தோங்குவரை யிழிதரும் வீங்குபெய னீத்தங்
காந்தளஞ் சிறுகுடிக் கௌவை பேணு
தரிமதர் மழைக்கண் சிவப்ப நாளைப்
பெருமலை நாடன் மார்புபுனை யாக
வாடுகம் வம்மோ காதலந் தோழி
வேய்பயி லடுக்கம் புதையக் கால்வீழ்த்
தின்னிசை முரசி னிரங்கி யொன்னு
ரோடுபுறங் கண்ட தாடோய் தடக்கை
வெல்போர் வழுதி செல்சமத் துயர்த்த
வடுபுக ழெஃகம் போலக்
கொடிபட மின்னிப் பாயின்ரூன் மழையே.

என்பது . தலைமகன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. தலைமகள் சொல்லியதூஉமாம்.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 2. நீர. 4. வீங்கிய. 6. சேப்ப. 8. வாடுவமன்னே.

313. பாலை

இனிப்பிறி தன்டோ வஞ்ச லோம்பென
வணிக்கவின் கவான்வர முயங்கி நெஞ்சம்

---

* தேக்கிலையில் உண்டலை (107.) ம் பாட்டினும் காண்க.

பிணித்தோர் சென்ற வாறு நினைத்தலுங்
குளித்துப்பொரு கயலிற் கண்பனி மல்க
வையவாக வெய்ய வுயிரா
விரவு மெல்லையும் படரட வருந்தி
* யரவநுங்கு மதியி னுதலொளி காரப்பத்
தம்மல தில்லா நம்மிவ ணெழியப்
பொருள்புரிந் தகன்றன ராயினு மருள்புரிந்து
வருவர் வாழி தோழி பெரிய
நிதியஞ் சொரிந்த நீவி போலப்
பாம்பூன் றேம்பும் வறங்கூர் கடத்திடை
நீங்கா வம்பலர் கணையிடத் தொலைந்தோர்
வசிபடு புண்ணின் குருதி மாந்தி
யொற்றுச்சென் மாக்களி னெடுங்கிய குரல
வில்வழிப் படூஉங் காக்கைக்
கல்லுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது : பிரிவிடைவேறுபட்டதலைமகளைத்தோழிவற்புறுத்தியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

இப்பாட்டினுள் நீவி என்பது பை.

பி - ம். 2. வணிக்கவின் வளர. 15. கால. 16. வில்வழிப்படருங்.

314. முல்லை

† நீலத் தன்ன நீர்பொதி கருவின
மாவிசும் பதிர முழங்கி யாலியி
னிலந்தண் ணென்று கானங் குழைப்ப
‡ வினந்தை குழவ ரின்குர லியம்ப

---

* "அரவு நுங்குமதியின" (114.)

† இது, முன்பு தலைவிக்கு நிகழ்ந்த ஆற்றுமையும் அதுகண்டு தான் கலங்கிய வாறும் தலைவற்குக் கூறியது என்பர் நச். (தொல். பொருள், 150.)

‡ ஓதைக் கலிமகிழ் உழவர்" என்றும் "உழவர் ஓதைத் தெள் விளி" என்றும் வந்தன. (37, 41.)

மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற்
றிரிமருப் பிரலை பைம்பயி ருகள
வர்ர்பெய லுதவிய கார்செய் காலை
நனைறி நுணங்கிய கானவில் புரவிக்
கல்லெனக் கறங்குமணி யியம்ப வல்லோன்
*வாச்செல வணக்கிய தாப்பரி நெடுந்தே
ரீர்ம்புற வியங்குவழி யறுப்பத் தீந்தொடைப்
பையு ணல்லியாழ் செவ்வழி பிறப்ப
விந்நிலை வாரா ராயிற் றந்நிலை
யெவன்கொல் பாண வுரைத்திசிற் சிறிதெனக்
கடவுட் கற்பின் மடவோள் கூறச்
செய்வினை யழிந்த மைய னெஞ்சிற்
றுனிகொள் பருவர நீர வந்தோ
யினிதுசெய் தனையால் வாழ்கநின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லைப்
பெருந்தார் கமழும் விருந்தொலி கதுப்பி
னின்னகை யிளையோள் கவவ
மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே.

என்பது: வினைமுற்றிப் புகுந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

12. மறப்ப.

—மதுரை அளக்கர்ஞாழார்மகனார் அம்மள்ளனார்.

பி - ம். 4. வினத்தே; விணைத்தே. 7. கார்பெய். 11. யிமைப்ப.

315. பாலை

†கூழையுங் குறுநெறிக் கொண்டன முலையுஞ்
சூழி மென்முகஞ் செப்புட னெதிரின
பெண்டுணை சான்றன னிவளெனப் பன்மான்
கண்டுணை யாக நோக்கி நெருநையு

---

* "வாஅப் பாணி வயங்குதொழிற் கலிமாத், தா அத்தாளிணை மெல்ல ஓதுங்க" (134.)

† இம் மூன்றடிகளின் கருத்து 7ம் பாட்டிலும் வந்தது.

மயிர்த்தன்று மன்னே நெஞ்சம் பெயர்த்து
மறியா மையிற் செறியேன் யானே
பெரும்பெயர் வழுதி கூட லன்னதன்
னருங்கடி வியனகர்ச் சிலம்புங் கழியாள்
சேணுறச் சென்று வறுஞ்சுனைக் கொல்கிப்
புறவுக் குயின்றுண்ட புன்காய் நெல்லிக்
கோடை யுதிர்த்த குவிகட் பசுங்கா
யறுநூற் பளிங்கின் றுளைக்காசு கடுப்ப.
வறுநிலத் துதிரு மத்தங் கதுமெனக்
கூர்வேல் விடலை பொய்ப்பப் போகிச்
சேக்குவள் கொல்லோ தானே தேக்கி
னகலிலை கவித்த புதல்போல் குரம்பை
யூன்புழுக் கயரு மூன்றிற்
கான்கெழு வாழ்நர் சிறுகுடி யானே.

என்பது : மகட்போக்கிய தாய் சொல்லியது.

—குடவாயிற்கீரத்தனர்.

பி - ம். 9. சுனைக்கோங்கி, 12. துணைக்காசு 13. வறனிலத். 16. குவித்த.

316. மருதம்

* துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
யரிமல ராம்பன் மேய்ந்த †நெறிமருப்
பீர்ந்த ணெருமைச் சுவல்படு முதுபோத்துத்
துங்குசேற் றள்ளற் றுஞ்சிப் பொழுதுபடப்
பைங்ணை வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்செறி மள்ளரிற் புகுதரு மூரன்

---

* இது தோழி தலைவியை வெகுண்டு ஆக்கியவாறு காண்க என்றும், "அது புலந்துறைதல் வல்லியோரே ...துடலுமோரே" எனப்புலவியால் நின் இல்வாழ்க்கை குறைவுபடுமெனத் தோழி கூறியவாறு காண்க என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 150, 226) † "தடமருப் பெருமை". (91.)

றேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோ
ளூர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தைமை தாங்கலோ விலனென வறிதுநீ
புலத்த லொல்லுமோ மனைகெழு மடந்தை
யதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோ ணீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமூலை சுவைப்ப
வைகுந ராகுத லறிந்து
மறியா ரம்மவஃ தடலு மோரே.

என்பது: தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகளை நெருங்கிச் சொல்லியது.

—ஓரம்போகியார்.

பி - ம்: 5. போதந்து. 6. பரூஉக்கொடி. 7. போர்ச் செறி. 8 .நெகிழ்த்தோள்.

317. பாலை

மாக விசும்பின் மழைதொழி லுலந்தெனப்
பாஅ யன்ன பகலிருள் பரப்பிப்
* புகைநிற வுருவி னற்சிர நீங்கக்
குவிமுகை முருக்கின் கூர்நனை வையெயிற்று
நகைமுக மகளி ரூட்டுகிர் கடுக்கு
முதிராப் பல்லித ழுதிரப் பாய்ந்துடன்
மலருண் வேட்கையின் சிதர்சிதர்ந் துகுப்பப்
பொன்செய் கன்னம் பொலிய வெள்ளி
நுண்கோ லறைகுறைந் துதிர்வன போல
வரவ வண்டின மூதுதொறுங் குரவத்
தோங்குசினை நறுவீ கோங்கல ருறைப்பத்
துவைத்தெழு தும்பித் தவிரிசை விளரி
புதைத்துவிடு நரம்பி னிம்மென விமிரு

* "புகையிற்பொங்கி வியல்விசும்புகந்து பனியூரழற் கொடி கடுப்பத் தோன்றும்" (265.)

மானே முற்ற காமர் வேனில்
வெயிலவிர் புரையும் வீததை மராஅத்துக்
குயிலிடு பூச லெம்மொடு கேட்ப
வருவே மென்ற பருவ மாண்டை
யில்லை கொல்லென மெல்ல நோக்கி
நினைந்தன மிருந்தன மாக நயந்தாங்
குள்ளிய மருங்கி னுள்ளம் போல
வந்துநின் றனரே காதலர் நத்துறந்
தென்னுழி யதுகொ ருனே பன்னு
ளன்னையு மறிவுற வணங்கி
நன்னுதற் பாஅய பசலை நோயே.

என்பது : தலைமகன்வரவுணர்ந்ததோழிதலைமகட்குச்சொல்லியது.

—வடமோதங்கிழார்.

இப்பாட்டினுட்கன்னெமென்றது தட்டார் சின்னத்தட்டை.

பி - ம். 12. தவரிசை. 14. மானேமுற்ற. 16. எம்மொடு கொட்ப. 21. நத்துறந்.

318. குறிஞ்சி

* கான மானதர் யானையும் வழங்கும்
வான மீமிசை யுருமுரனி யுரறு
மரவும் புலியு மஞ்சுதக வுடைய
விரவழங்கு சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாட்டொடு பிரச
முழவுசேர் நரம்பி னிம்மென விமிரும்
பழவிற னனந்தலைப் டாயமலை நாட

* "ஆற்றதுதீமை அறிவுறுகலக்கம்" என்றபகுதியினுட்கலக்கம் எனப் பொதுப்படக்கூறியவதனால், ஆற்றிடை ஏதமின்றிச் சென்றமைதோன்ற ஆண்டு ஓர்குறி செய்க எனக் கூறுவனவுங் கொள்க எனக்கூறி, "வரிமே, யெம்முறுதுயரமொடி யாமிவணெழிய நின்னுய்ப்பயிர் குறிலை கொண்டகோட்டை ஊதல் வேண்டுமாற் சிறிது' என்றவாறுகாண்க என்பர் நச். (தொல். பொருள். 114)

மன்றல் வேண்டினும் பெறுகுவை யொன்றே
வின்றுதலை யாக வாரல் வரினே
யெம்மூறு துயரமொ டியாமிவ ணெழிய
வெற்கண்டு பெயருங் காலை யாழநின்
* கற்கெழு சிறுகுடி யெய்திய பின்றை
யூதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயி லழுவத்துப் பிரிந்தனின்
ஞெய்பயிர் குறிநிலை கொண்ட கோடே.

என்பது: இரவுக்குறிவந்ததலைமகனை வரவுவிலக்கவரைவு கடாயது.

—கபிலர்.

இதன்கருத்து வேண்டியது முடிக்கும் என்பது.

பி - ம். 10. யேமுறுதுயரம் யாமிவணெழிய.

319. பாலை

மணிவாய்க் காக்கை மாநிறப் பெருங்கிளை
பிணிவீ ழாலத் தலங்குசினை யேறிக்
கொடுவி லெயினர் குறும்பிற் கூக்குங்
கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
படுபிணங் கவரும் பாழ்படு நனந்தலை
யணங்கென வுருத்த நோக்கி னையென
நுணங்கிய நுசும்பி னுண்கேழ் மாமைப்
பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய
நன்னிறத் தெழுந்த சுணங்கணி வனமுலைச்
சுரும்பார் கூந்தற் பெருந்தோ ளிவள்வயிற்
பிரிந்தனி ரகறல்: சூழி னரும்பொரு
ளெய்துக மாதோ நுமக்கே கொய்தழைத்
தளிரே ரன்ன தாங்கரு மங்கை
மெல்லிய ளிளைய ணனிபே ரன்பினள்
செல்வே மென்னு நும்மெதி
ரொழிவே மென்னு மொண்மையோ விலளே.

* "கற்கெழுசிறுகுடி" (7)

என்பது : செலவுணர்த்திய தலைமகற்குத் தோழி செலவழுங்கச் சொல்லியது.

—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

பி - ம். 1. மானிற. 8. புரையு. 12.—13.கொய்குழைத் தளிரோன் னதாங்கரு மங்கையள். 14. மெல்லியல் 16. ஒழியோமெ.

320. நெய்தல்

ஒங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇத்
திமிலோன் றந்த கடுங்கண் வயமீன்
றழையணி யல்குற் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகருங்
5 கானலஞ் சிறுகுடிப் பெருநீர்ச் சேர்ப்ப
மலரே ருண்கணைந் தோழி யெவ்வ
மலர்வாய் நீங்கநீ யருளாய் பொய்ப்பினு
நெடுங்கழி துழைஇய குறுங்கா லன்ன
மடம்பம ரெக்க ரஞ்சிறை யுளருந்
10 தடவுநிலைப் புன்னைத் தாதணி பெருந்துறை
நடுங்கயிர் போழ்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
வண்டற் பாவை சிதைய வந்துநீ
தோள்புதி துண்ட ஞான்றைச்
சூளும் பொய்யோ கடலறி கரியே.

என்பது : பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

—மதுரைக் கூலவாணிகன் சீத்தலைசாத்தனார்.

பி-ம். 3. செல்வர்தங்கை. 4. நுவலு. 9. அடம்பூரெக்க ரொரு சிறை. 14. கடலறிகடனே. (சீதங்கஞ்சாத்தன்)

321. பாலை

பசித்த யானைப் பழங்க ணன்ன
வறுஞ்சுனை முகந்த கோடைத் தெள்விளி
விசித்துவாங்கு பறையின் விடரகத் தியம்பக்

கதிர்க்கா லம்பிணை யுணீஇய புகலேறு
குதிர்க்கா லிருப்பை வெண்பூ வுண்ணு
தாண்குரல் விளிக்குஞ் சேண்பால் வியன்சுரைப்
படுமணி யினநிரை யுணீஇய கோவலர்
விடுநில முடைத்த கலுழ்கட் கூவற்
கன்றுடை மடப்பிடி களிறொடு தடவரும்
புன்றலை மன்றத் தங்குடிச் சீறூர்த்
துணையொடு துச்சி லிருக்குங் கொல்லோ
கணையோ ரஞ்சாக் கடுங்கட் காளையொ
டெல்லி முன்னுறச் செல்லுங் கொல்லோ
வெவ்வினை செய்ங்கொ ணெஞ்கோ யானே
யரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ
யாயறி வுறுத லஞ்சி
வேயுயர் பிறங்கன் மலையிறந் தோளே.

என்பது : மகட்போக்கிய செவிலி சொல்லியது.

—கயமனார்.

பி - மி. 6. வியன்சுவற். 13. கற்கூவல். 16. யாயறிந்துணர்தலஞ்சி.

322. குறிஞ்சி

வயங்குவெயின் ளெமியப் பாஅய் மின்னுவசிபு
மயங்குதுளி பொழிந்த பாளுட் கங்கு
லாராக் காம மடூஉநின் றலைப்ப
விறுவரை வீழ்நரி னடுங்கித் தெறுவரப்
பாம்பெறி கோலிற் றமியை வைகித்
தேம்புதி கொல்லோ நெஞ்சே யுருமிசைக்
களிறுகண் கூடிய் வாண்மயங்கு ளாட்பி
ளெளிறுவேற் ரூனைக் கடுந்தேர்த் திதியன்
வருபுன விழிதரு மரம்பயி லிறும்பிற்
பிறையுறழ் மருப்பிற் கடுங்கட் பன்றிக்
குறையார் கொடுவரி குழுமுஞ் சார

லறையறு தீந்தேன் குறவ ரறுப்ப
மூயலுஞர் மூற்று வேற்றரு நெடுஞ்சிமைப்
புகலரும் பொதியில் போலப்
15 பெறலருங் குரையளெம் மணங்கி யோளே.

என்பது : அல்லகுறிப்பட்டுப் போகின்ற தலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது.

—பரணர்

பி - ம். 9. மாபயிலிறும்பில். 11-12. சோலை யறை. 14. போலும். 15. பெறலருங் குரையணம்.

323. பாலை

இம்மென் போரி லிவ்வூர் நம்வயிற்
செறுவோ ரேச்சொல் வாடக் காதலர்
வருவ ரென்பது வாய்வ தாக
வையை செய்ய மதனில சிறியநின்
5 னடிநில னுறுத லஞ்சிப் பையத்
தடவர லொதுக்கந் தகைகொள வியலிக்
காணிய வம்மோ கற்புமேம் படுவி
பலவுப்பல தடைஇய* வேய்பயி லடுக்கத்
தியானைச் செல்லினங் கடிப்ப வானத்து
10 வயங்குகதிர் மழுங்கப் பாஅய்ப் பாம்பின்
பைபட விடிக்குங் கடுங்குர லேற்றெரு
டாலி யழிதுளி தலைஇக்
கால்வீழ்த் தன்றுநின் கதுப்புறழ் புயலே.

என்பது : பிரிவின்கண் வேறுபட்டதலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

—பறநாட்டுப் பெருங்கோற்றனார்.

இப்பாட்டு எதிர்காலநோக்கிற்று.

பி - ம் 1. இம்மென் போல்வர். 4. வாய்வதாக லைய.

* "வரைசேர் சிறுநெறி நிரைபுடன் செல்லுங், கானயானை" (123.)

324. முல்லை

* விருந்தும் பெறுதுநள் போலுந் திருந்திழைத்
† தடமென் பணைத்தோண் மடமொழி யரிவை
தளிரியற் கிள்ளை யினிதினி னெடுத்த
வளராப் பிள்ளைத் தூவி யன்ன
வுளர்பெயல் வளர்த்த பைம்பயிர்ப் புறவிற்
‡ பறைக்க ணன்ன நிறைச்சுனை தோறுந்
துளிபடு மொக்கு டுள்ளுவன சாலத்
தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவன மாய
வளிசினை யுதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்ச்
சிரற்சிற கேய்ப்ப வறற்கண் வரித்த
வண்டு ணறுவீ தமித்த நேமி
தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியு
ணிரைசெல் பாம்பின் விரைபுநீர் மூடகச்
செல்லு நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புக லாய்ந்தே.

என்பது : வினைமுற்றிய தலைமகன் கருத்துணர்ந்து உழையர் சொல்லியது.

—ஒக்கூர் மாசாத்தியார்.

பி - ம். 1. பெறுகுவள். 2. மடமாவரிவை. 4. வளரிளம்பிள்ளை.

325. பாலை

அம்ம வாழி தோழி காதலர்
வெண்மண லிவந்த பொலங்கடை நெடுநகர்
நளியிருங் கங்குற் புணர்குறி வாய்த்த

---

* தலைவன் மீளுங்கால் விருந்து பெறுகுவள்கொல்லென இளையோர் தலைவிநிலையுரைத்தலுக்கு இப்பாட்டினை உதாரணமாகக்காட்டி, "வளராப்பிள்ளை" 'அவர்கள் தங்களுக்குவளராப் பிள்ளை யென்றலுமாம்' என்றும், கூறுவர் நச். (தொல். பொருள். 170.) "விருந்தோ பெற்றன்னள் திருந்திழை தானே" (384.)

† "தடமென் பணைத்தோள், மடநல்லீரே" (110.) ‡ பறைக்கணன்ன நிறைச்சுனை" (178.)

களவுங் கைம்மிக வளர்ந்தன் *றன்னையு
மூட்கொண் டோவாள் காக்கும் பிற்பெரி
திவணுறை வெவ்வீ னெ வளியளென் றருளி
யாடுகடைப் பொலிந்த புகற்சியி னுடுகொள்
வளவன் பிணித்த வதியன் பின்றை
வள்ளுயர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு
மலிகவி னிழந்த கனைகடற் றருஞ்சுரம்
வெய்ய மன்றநின் வையெயி றுணீஇய
தண்மழை யொருநாட் டலையுக வொண்ணுத
லொல்கிய லரிவை நின்னெடு செல்கஞ்
சின்னு ளான்றனை யாகெனப் பன்னு
ளுலவி லுள்ளமொடு வினைவலி யுறீஇய
வெல்லாம் பெரும்பிறி தாக வடாஅது
பல்வேற் பாண னன்னுட் டுள்ளதை
வாட்கண் வானத் தென்றூழ் நீளிடை
† யாட்கொல் யானை யதர்பார்த் தல்குஞ்
சோலை யத்த மாலைப் போகி
யொழியச் சென்மோர் மன்ற
பழியெவ ணுங்கொ னெய்தரு பாலே.

என்பது : கொண்டு நீங்கக்கருதி யொழிந்ததலைமகன் பிரிவின்கட் டலைமகள் தோழிக்குச் சொல்லியது. —மாமூலனார்

இப்பாட்டுக் களவின்வழிப் பாலை.

பி - ம். 4. வலர்ந்தன்றன்னையு. 8. வள்ளைப் பணித்த. 9. கண்ணவிந்தன்ன. 17. நல்வேற்பாணர்நன்னுட். (தலைமகன் குறிப்பறிந்ததோழி தலைமகட்கு. களவில்வழிப்பாலை.)

326. மருதம்

ஊற லவ்வா யுருத்த திற்றிப்
பேரமர் மழைக்கட் பெருந்தோட் சிறுநுத
லல்ல ளம்ம குறுமகள் செல்வர்

---

* "உன்னங் கொள்கையொ டுளங்கரந் துறையும் அன்னை" (65.)

† யானை ஆட்கொல்ல அதர்களில் அல்கல். (247.)

* கடுந்தேர் குழித்த ளெள்ள லாங்க
ணெடுங்கொடி நுடங்கு மட்ட வாயி
லிருங்கதிர்க் கழனிப் பெருங்கவி னன்ன
நலம்பா ராட்டி நடையெழிற் பொலிந்து
விழவிற் செலீஇயர் வேண்டும் வென்வே
லிழையணி யானைச் சோழர் மறவன்
கழையளந் தறியாக் காவிரிப் படப்பைப்
புனன்மலி புறவிற் போஎர் கிழவோன்
பழைய ளெக்கிய வேல்போற்
பிழையல கண்ணவ ளேக்கியோர் திறத்தே.

என்பது : தோழி தலைமகனை வாயின்மறுத்தது.

—பரணர்.

பி - ம். 11. பேஎர்கிழவோன்.

327. பாலை

இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு
நன்புக லமையமு மிரவும் போல
வேறுவே றியல வாகி மாறெதிர்ந்
தூளவென வுணர்ந்தனை யாயி ளொரு
மின்னு வெஞ்சுர நன்னசை தூரப்பத்
துன்னலுந் தகுமோ துணிவி னெஞ்சே!
நீசெல வலித்தனை யாயின் யாவது
நினைதலுஞ் செய்தியோ வெம்மே கனைகதி
ராவி யவ்வரி நீரென நசைஇ
மாதவப் பரிக்கு மாறிரங்கு நனந்தலைக்
களர்கால் யாத்த கண்ணைகன் பரப்பிற்
செவ்வரைக் கொழிநீர் கடுப்ப வரவி
னவ்வரி யுரிவை யணவரு மருங்கிற்
புற்றரை யாத்த புலர்சினை மரத்த

---

* இவ்வடிபுறத்திலும் வந்தது "வரைந்தேர் குழித்த தெருவின் கண்ணே" என்பது பொருள். (புறம். 15.)

மைந்நிற வுருவின் மணிக்கட் காக்கை
பைந்நிணங் கவரும் படுபிணைக் கவலைச்
சென்றோர் செல்புறத் திரங்கார் கொன்றோர்
கோல்கழி பிரங்கு மதர
வேய்பயி லழுவ மிறந்த பின்னே.

என்பது : பொருள்கடைக் கூட்டிய நெஞ்சினைக் கழறியது.

— மருங்கூர்ப்பாகைச் சாத்தன்பூதனர்.

பி - ம். 5. சுரநசைதுரந்தியக்க. 8. நினைதலு நினைதியோ.

328. குறிஞ்சி

வழையம லடுக்கத்து வலனேர்பு * வயிரியர்
முழவதிர்ந் தன்ன முழக்கத் தேறோ
டரவுப்பெயல் பொழிந்த நள்ளென் யாமத்
தரவின் பைந்தலை யிடறிப் பாஅ
ளிரவின் வந்தெம் மிடைமுலை பொருந்தித்
துனிக ணகல வளைஇக் கங்குலி
னினிது னியைந்த நண்பவர் முனிதர
றேற்ரு குதனற் கறிந்தன மாயி
னிலங்குவளை நெகிழப் பரந்துபட ரலைப்பயா
முயங்குதொறு முயங்குதொறு முயங்க முகந்து
டடக்குவ மன்னோ தோழி மடப்பிடி [கொண்
மழைதவழ் சிலம்பிற் கடுஞ்சூ லீன்று
கழைதின் யாக்கை விழைகளிறு தைவர
வாழையஞ் சிலம்பிற் றுஞ்சுஞ்
சார லுடன் சாயன் மார்பே.

என்பது : இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

—மதுரைப் பண்டவாணிக னிளந்தேவனர்.

---

* "வினைஞர் அரிப்பறை யின்குரற் றளிமழை" என்ற அடிகளொடு இவ்வடிகள் ஒப்புமையுடையன என்பர் நச். (மதுரைக்காஞ்சி அடிகள் 262—3.)

பி - ம். 1. வழையமையடுக்க. 3. டிரவுப் பெயல். 6. தனிக் கண்ணகல. 7. நண்பர் (வாணிகனீழற்தேவனர்.)

329. பாலை

பூங்கணு நுதலும் பசப்ப நோய்கூர்ந்
தீங்கியான் வருந்தவு நீங்குத றுணிந்து
வாழ்தல் வல்லுந ராயிற் காதலர்
குவிந்த குரம்பை யங்குடிச் சீறூர்ப்
படுமணி யியம்பப் பகலியைந் தமணர்
கொடுநுகம் பிணித்த செங்கயிற் றுழுகைப்
பகடசாக் கொள்ளும் வெம்முனைத் துகடொகுத்
தெறிவளி சுழற்று மத்தஞ் சிறிதசைந்
தேகுவர் கொல்லோ தாமே பாய்கொள்
புறுவெரி நொடிக்குஞ் சிறுவரிக் குருளை
நெடுநல் யானை நீர்நசைக் கிட்ட
கைகறித் தூறு மைதூங் கிறும்பிற்
புலிபுக் கீனும் வறுஞ்சுனைப்
பனிபடு சிமையப் பன்மலை யிறந்தே.

என்பது : பிரிவிடைவேறுபட்டதலைமகள் தோழிக்குச்சொல்லியது. பிரிவுணர்த்தியதோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

—உறையூர் முதுகூற்றனர்.

பி - ம். 3. றுழுகை. 7. பகடயாக்கொள். 14. பயன்மலை.

330. நெய்தல்.

* கழிப்பூக் குற்றுங் கான லல்கியும்
வண்டடற் பாவை வரிமண லயர்ந்து

---

* இப்பாட்டில் "அறியாமையின் அயர்ந்த நெஞ்சமொடு' என்பது தன்னியனூரிமை என்றும், இகந்து மாயும் என்பது அவன் வயிற்பரத்தைமை என்றும், "கழிப்பூக்குற்றுங்கானலல்கியும்" என்றுந்தோலச்சிலபொருளொழித்துச்சிலபொருண்மேனிற்றல்உரையிற் கொள்க" என்றுங்கூறுவர் நச்.(தொல். பொருள்.111., சொல். 53.)

மின்புறப் புணர்ந்து மிளிவரப் பணிந்துக்
தன்றுயர் வெளிப்பட.த் தவறி நந்துய
ரறியா மையி னயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னே மெல்லம் புலம்பன்
செல்வோன் பெயர்புறத் திரங்கிமுன் னின்று
தகைஇய சென்றவென் னிறையி னெஞ்ச
மெய்தின்று கொல்லோ தானே யெய்தியுங்
காமஞ் செப்ப நாணின்று கொல்லோ
வுதுவ காணவ ரூர்ந்த தேரே
குப்பை வெண்மணற் குவவுமிசை யானு
மெக்கர்த் தாழை மடல்வயி னுனு
மாய்கொடிப் பாசடும் பரிய வூர்பிழிபு
சிறுகுடிப் பரதவர் பெருங்கடன் மடுத்த
கடுஞ்செலற் கொடுந்திமில் போல
நிவந்துபடு தோற்றமொ டிகந்துமா யும்மே.

என்பது : தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை யெப்பக்கூறியது.

—உலோச்சனர்.

பி - ம். 4. வெளிப்படவிறீஇ. 11. 21 உதுக்காண்.

331. பாலை.

நீடுநிலை யரையச் செங்குழை யிருப்பைக்
கோடுகடைந் தன்ன கொள்ளை வான்பூ
வாடுபரந் தன்ன வீன லெண்கின்
சேடுசினை யுரீஇ யுண்ட மிச்சில்
பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்
கண்டிர ணீடமைக் கடிப்பிற் றொகுத்துக்
குன்றகச் சிறுகுடி மறுகுதொறு மறுகுஞ்
சீறூர் நாடு பலபிறக் கொழியச்
சென்றோ ரன்பிலர் தோழி யென்று
மருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்

பாண ரார்ப்பப் பல்கல முதவி
நாளவை யிருந்த நனைமகிழ்த் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
§ வாள்வா யன்ன வறுஞ்சுர மிறந்தே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது:

—மாமூலனார்.

இப்பாட்டிற் பணையர்மகளிரென்பது வேட்டுவிச்சியரையும் உழத்தியரையும்.

பி - ம். 3. வாடுயர்த்தன்ன. பாடுபரந்தன்ன, 4. லெண்கின்; றோடு சினையுரைஇயுண்ட, 5. தழையரம்பழையர். 14. வருஞ்சுர.

332. குறிஞ்சி.

* முளைவளர் முதல மூங்கின் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கி னிரம்பா தொடுங்கிய
† பொருமுர ணுழுவை தொலைச்சிக் கூர்நுனைக்
5 குருதிச் செங்கோ டழிதுளி கழாஅக்
கன்முகை யடுக்கத்து மென்மெல வியலிச்
செறுபகை வாட்டிய செம்மலொ டுறுகால்
யாழிசைப் பறவை யிமிரப் பிடிபுணர்ந்து
‡ வாழையஞ் சிலம்பிற் றுஞ்சு நாட
10 னின்புரைத் தக்க சாயல னெனநீ
யன்புரைத் தடங்கக் கூறிய வின்சொல்
வாய்த்தன வாழி தோழி வேட்டோர்க்

---

§ " வாணடந் தன்ன வழக்கருங் கவலை " (72.)

* கிளைப்பா ராட்டுங் கடுநடை வயக்களிறு, முளைதரு மூட்டி வேண்டுகுள கருந்த". (218.)

† உழுவையொ டுழந்த வுயங்குநடை யொருத்தல், நெடுவகிர் விழுப்புண் கழாஅக்" 308.

‡ இவ்வடி 328 ம் பாட்டிலும் வந்தது.

கம்ழ்ததத் தன்ன கமழ்தார் மார்பின்
வண்டிடைப் படாஅ முயக்கமும்
15 தண்டாக் காதலுந் தலைநாட் போன்மே.'

என்பது : இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழிக்குத்தலைமகள் இயற்பட மொழிந்தது.

—கபிலர்.

பி - ம். 1. முழைவளர். 3. நிறம்பார்த்தொடுங்கிய. 6. கண் முகை. 8. பிடியுணர்ந்து.

333. பாலை.

* யாஅ வொண்டளி ரரக்குவிதிர்த் தன்னநின்
ஞக மேனி யம்பசப் பூர
வழிவுபெரி துடையை யாகி யவர்வயிற்
பழிதலைத் தருதல் வேண்டுதி மொழிகொண்டு
5 தாங்க லொல்லுமோ மற்றே யாங்குநின்
னெவ்வம் பெருமை யுரைப்பிற் செய்பொருள்
வயங்கா தாயினும் பயங்கெடத் தூக்கி
நீடலர் வாழி தோழி கோடையிற்
† குருத்திறு புக்க வருத்தஞ் சொலாது
10 தூம்புடைத் துய்த்தலைக் கூம்புபு திரங்கிய
வேனில் வெளிற்றுப்பனை போலக் கைபெயர்த்
தியானைப் பெருநிரை வானம் பயிரு
மலைச்சே ணிகந்தன ராயினு நிலைப்பெயர்ந்து
நாளிடைப் படாமை வருவர் நமரெனப்
15 பயந்தரு கொள்கையி னயந்தலை திரியாது
நின்வா யின்மொழி நன்வா யாக
வருவ ராயினே நன்றே வாரா
தவணர் காதல ராயினு மிவணம்
பசலை மாய்த லெளிதுமற் றில்ல
20 சென்ற தேஎத்துச் செய்வினை முற்றி

---

* "சாரல் யாஅத் துயர்சினை குழைத்த, மாரி யீர்ந்தளி ரன்ன மேனி" (337) † குருத்து—யானை மருப்பினடி ; (தேவா. திருக்கேதாரம். 9 ச.ம்)

மற்றர வுள்ளத்த ரெனினுங்
குறுகுபெரு நசையொடு தூதுவரப் பெறினே.

என்பது : பிரிவிடைவற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—கல்லாடனார்.

பி - ம். 14. காளிடைப்படாது. 18. தவணாகு காதல.

334. முல்லை

* ஓடா நல்லேற் றுரிவை தைஇய
வாடுகொண் முரச மிழுமென முழங்க
நாடுதிரை கொண்டன மாயிற் பாக
பாடிமிழ் கடலி னெழுந்த சும்மையொடு
5 பெருங்களிற்றுத் தடக்கை புரையக் கால்வீழ்த்
† திரும்பிடித் தொழுதியி னீண்டுவன குழீஇ
வணங்கிறை மகளி ரயர்ந்தன ராடுங்
கழங்குற ழாலியொடு கதழுறை சிதறிப்
பெயலுறுடங் கின்றுல் வானம் வானின்
10 ‡ வயங்குசிறை யன்னத்து நிரைபறை கடுப்ப
§ நால்குடன் பூண்ட கானவில் புரவிக்
கொடிஞ்சி நெடுந்தேர் கடும்பரி தவிரா
தினமயி லகவுங் கார்கொள் வியன்புனத்து
நோன்சூட் டாழி யீர்நிலந் தமிப்ப

---

* "கொல்லேற்றுப் பசுந்தோல் சிவாது போர்த்த, மாக்கண் முரசம்" (மதுரைக்காஞ்சி 732-3); "புனமருப் பழுந்தக்குத்தி புலியொடு பொருது வென்ற, கனைகுர லருமுச் சிற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துனைகுரன் முரசம்" (சிந். 2899.)

† "யானைச் செல்லினங் கடுப்ப வானத்து.....கால்வீழ்த் தன்று.....புயல்" (323.)

‡ "நிரைபறை யன்னத் தன்ன விரைபரிப், புல்லுளைக் கலிமா" (234.) § "நன்னுல்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்." (104.)

15 வீண்டே காணக் கடவுமதி பூங்கேழ்ப்
பொலிவன வமர்த்த வுண்க
ணெலியற் கூந்த லாய்சிறு நுதலே.

என்பது : வினைமுற்றியதலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—மதுரைக் கூத்தனர்.

பி -ம். 2. பாடுகொண்முரச. 7. ரமர்ந்தன. 10. யன்னத் திண் பறைகடுப்ப. (மதுரைக்காடாத்தனர் ; மதுரைக்கந்தரத்தனர் ; மதுரைக்கடாரத்தனர்.)

335. பாலை

இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கு
மருணன் குடைய ராயினு மீதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யாணு மறிவென் மன்னே *யானதன்
5 கொன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந்
தின்ஞ வேனி லின்றுணை யார
முளிசினை மராஅத்துப் பொளிபிளந் தூட்டப்
புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுர
மரிய வல்லமன் னமக்கே விரிதா
10 ராடுகொண் முரசி னடுபோர்ச் செழியன்
மாட மூதூர் மதிற்புறந் தழீஇ
நீடுவெயி லுழந்த குறியிறைக் கணைக்காற்
றொடையமை பன்மலர்த் தோடுபொதிந் தியாத்த
குடையோ ரன்ன கோளமை யெருத்திற்
15 பாளை பற்றழிந் தொழியப் புறஞ்சேர்பு
வாள்வடித் தன்ன வயிறுடைப் பொதிய
நாளுறத் தோன்றிய நயவரு வனப்பி
னரத் தன்ன. வணிகிளர் புதுப்பூ

* "புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை, நெடுநிலையா அ மொற்றி" (59.)

வாருறு கவரியின் வண்டுண விரிய
முத்தி னன்ன வெள்வீ தாஅ
யலகி னன்ன வரிநிறத் தாலி
நூகைநனி வளர்க்குஞ் சிறப்பிற் றகைமிகப்
பூவொடு வளர்ந்த மூவாப் பசுங்காய்
நீரினு மினிய வாகிக் கூரெயிற்
றமிழ்த மூறுஞ் செவ்வா
யொண்டொடிக் குறுமகட் கொண்டனஞ் செலினே.

என்பது : தலைமகன் பொருள்கடைக்கூட்டிய நெஞ்சினைக்கழறிச் செலவழுங்கியது.

—மதுரைத் தத்தங்கண்ணனார்.

பி - ம். 8. நிலம்படு. 13. நெடியமைபன்மலர்க்கோடு. 19. வாடுறுகவரி. 23. பூவாப்பசுங்காய்.

336. மருதம்

*குழற்காற் சேம்பின் கொழுமட லகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த
வுண்ணுப் பிணவி னுயக்களுஞ் சொலிய
நாளிரை தரீஇய வெழுந்த † நீர்நாய்

---

*இதனுள் "யானவண் வாரா மாறே" எனத் தான் மனை யோளைப்போல இல்லுறைதல்கூறி, ஆண்டுச்செல்லிற் சுடரொடு திரியும் நெருஞ்சிபோல என்மகளிரை யான் செல்வுழிச் செல்லும் சேடியர் போலத்திரியும்படி பண்ணிக்கொள்வல் எனக்கூறியவாறு காண்க என்பர் நச். உவமிக்கப்படும் பொருள் இழிந்துவரல்வேண்டும் என்றதற்கு "மாரியம்பின் மழைத்தோற் சோழர்" என்ற அடியினை உதாரணமாகக் காட்டுவர் பேரா. (தொல். பொருள். 151., 278.)

† "வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்" "டொய்கை நீர்நாய்ப் புலவுநாறிரும்போத்து வாளைநாளிரைதேரும்" (6;386)

வானெயொ டுழப்பத் துறைகலுழ்ந் தமையிற்
றெண்கட் டேறல் மாந்தி மகளிர்
நுண்செய லங்குட மிரீஇப் பண்பின்
மகிழ்நன் பரத்தைமை பாடிய வீழிணர்க்
* காஞ்சி நீழற் குரவை யயருந்
தீம்பெரும் பொய்கைத் துறைகே ழூரன்
றேர்தர வந்த நேரிழை மகளி
ரேசுப வென்பவென் னலனே யதுவே
பாக னெடிதுயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற் றியானை நல்கன் மாறே
தாழும் பிறரு முளர்போற் சேறன்
முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவின்
யானவண் வாரா மாறே வரினே, வானிடைச்
† சுடரொடு திரிதரு நெருஞ்சி போல
வென்னெடு திரியா னுயின் வென்வேன்
மாரி யம்பின் ‡ மழைத்தோற் சோழர்
வில்லின்று குறும்பின் வல்லத்துப் புறமிளை
யாரியர் படையி னுடைகவென்
னேரிறை முன்கை வீங்கிய வளையே.

என்பது : கயப்புப்பாத்தை இற்பாத்தைக்குப் § பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

—§ பாவைக்கோட்டிலார்.

இப்பாட்டில் மழைத்தோல் என்பது தோற்கிடுகு.

பி - ம். 1 புழற்காற் ; நூற்காற். 2 பாசிழைப்பரப்பின்; 4. கழீஇய. 19. திரியேனுயின். 21. வல்லத்துக்குறுமிளை.

---

* "காஞ்சி நீழற்றமர் வளம்பாடி" 286

† "நீள்சுடர் நெறியைநோக்கு நிரையிதழ் நெருஞ்சிப்பூ" (சிக்.461.)

‡ "மழைமருள் பம்ரல் மாவண்சோழர்"; " மழைத்தோற் பழையன்காவிரிவைப்பிற்போஓர்" (123; 186.)

§ இப்பொழுது இவ்வூர் நாகபட்டினம் தாலுகாவிற்பாப்பா கோவிலென வழங்குகிறது.

337. பாலை

* சாரல் யாஅத் துயர்சினை குழைத்த
மாரி யீர்ந்தளி ரன்ன மேனிப்
பேரமர் மழைக்கண் புலம்புகொண் டொழிய
வீங்குப்பிரிந் துறைத லினிதன் றுகலி
னவ்வண தாக பொருளென் றுமணர்
கணநிரை யன்ன பல்காற் குறும்பொறைத்
தூதொய் பார்ப்பான் மடிவெள் ளோலைப்
படையுடைக் கையர் வடுதொடர் நோக்கி
யுண்ணு மருங்கு லின்னேன் கையது
பொன்னு குதலு மூண்டெனக் கொன்னே
தடிந்துடன் வீழ்த்த கடுங்கண் மழவர்
திறனில் சிதாஅர் வறுமை நோக்கிச்
செங்கோ லம்பினர் கைங்கொடியாப் பெயரக்
கொடிவிடு குருதித் தூங்குகுடர் கறீஇ
வரிமர லியவி ளெருந்நரி யேற்றை
வெண்பர லிமைக்குங் கண்பறி கவலைக்
கள்ளி நீழற் கதறுபு வதிய
மழைகண் மாறிய வெங்காட் டாரிடை
யெமியங் கழிதந் தோடும் பனியிருட்
பெருங்கலி வானந் தலைஇய
விருங்குளிர் வாடையொடு வருந்துவ ளெனவே.

என்பது : முன்னொருகாலத்துப் பொருள்வயிற்பிரிந்துவந்ததலை மகன் பின்னும்பொருள்கடைக் கூட்டியகெஞ்சிற்குச் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி - ம். 8. கையர்தோரநோக்கி. 11. கடிந்துடன் வீழ்த்த. 14. கழீஇ; கதீஇ. 18. மழைக்கணமாறிய. 21. வருந்துவனெனவே.

---

* "யாஅவொண்டளிரராக்கு விதிர்த்தன்ன.....ஆகமேனியம் பசப்பூர" (333)



338. குறிஞ்சி

குன்றேறுங்கு வைப்பி னுடுமீக் கூறு
மறங்கெழு தானை யரச ருள்ளு
மறங்கடைப் பிடித்த செங்கோ லுடனமர்
மறஞ்சாய்த் தெழுந்த வலனுயர் திணிதோட்
பலர்புகழ் திருவிற் பசும்பூட் பாண்டிய
னணங்குடை யுயர்நிலைப் பொருப்பிற் கவாஅற்
சினையொண் காந்த ணூறு நறுநுதற்
றுணையீ ரோதி மாஅ யோள்வயி
னுன்னகோ லவிர்தொடி வண்புறஞ் சுற்ற
முயங்க லியையா தாயினு மென்றும்
வயவுறு நெஞ்சத் துயவுத்துணை யாக
வொன்னூர் தேஎம் பாழ்பட நூறுந்
துன்னருந் துப்பின் வென்வேற் பொறைய
னகலிருங் கானத்துக் கொல்லி போலத்
தவாஅ லியரோ கட்பே யவள்வயி
னருஅ லியரோ தூதே பொருஅர்
விண்பெறக் கழித்த திண்பிடி யொள்வாட்
* புனிற்றுன் றாவி னிளையர் பெருமகன்
தொகுபோர்ச் சோழர் பொருண்மலி பாக்கத்து
வழங்க லாஞ்சீர் பெருந்துறை
முழங்கிரு முந்நீர்த் திரையினும் பலவே.

என்பது : அல்லகுறிப்பட்ட தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரைக் கணக்காயனார்.

பி - ம். 9. வன்பிற்சுற்ற; யன்புறச்சுற்ற. 17. கண்போற்கழித்த; விண்பொரக்கழித்த.

---

* "ஆகொண் மூதூர்க் கள்வர் பெருமகன் ஏவலிளையர் தலைவன்" (342.)

339. பாலை

வீங்குவிசைப் பிணித்த விரைபரி நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த வ்வாழியாழ் மருங்கிற்
பாம்பென மூடுகுநீ ரோடக் கூம்பிப்
பற்றுவிடு விரலிற் பயறுகா யூழ்ப்ப
வற்சிர நின்றன்ருற் பொழுதே முற்பட
வாள்வினைக் கெழுந்த வசைவி லுள்ளத்
தாண்மை வாங்கக் காமந் தட்பக்
கவைபடு நெஞ்சங் கட்க ணைகைய
விருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி.
யொருதலைப் படாஅ வுறவி போன்றன
நோங்கொ லளிய டானே யாக்கைக்
குயிரிடத் தன்ன நட்பி னவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
சாத லன்ன பிரிவரி யோளே

என்பது : போகாநின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—நரைமுடி நெட்டையார்.

பி - ம். 6. வசையிலுள்ள. 12. குயிரீந்தன்ன. (நரைமுடி நெட்டையார்.)

340. நெய்தல்

* பன்னு ளெவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்பி னின்னிழற் கழிப்பி
மாலை மால்கொள நோக்கிப் பண்ணுயிர்ந்து
வலவன் வண்டே ரியக்க நீயுஞ்

---

* "வேளாண் பெருகெறி வேண்டிய விடத்தும்" என்னுஞ் சூத்திரத்துக்கு இப்பாட்டினை உதாரணமாகக்காட்டி, இதனுள் தனக்கும் புரவிக்கும் கொடுப்பனகூறித் தடுத்தவாறு காண்க என்பர் நச். (தொல். பொருள். 114.) உலகியன்மேம்பட விருந்து விலக்கலுக்கு இப்பாட்டினைக் கொள்வர், (அகப். விள. உரை. 149.)

செலவிருப் புறுத லொழிகதில் லம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி யன்னவிவ
ணல்லெழி விளநலந் தொலைய வொல்லெனக்
கழியே யோத மல்கின்று வழியே
வள்ளெயிற் றரவொடு வயமீன் கொட்குஞ்
சென்றேர்ச் மன்ற மான்றின்று பொழுதென
நின்றிறத் தவலம் வீட வின்றிவட்
சேப்பி னெவனே பூக்கேழ் புலம்ப
பசுமீ னெடுத்த வெண்ணெண் மாஅத்
தயிர்மிதி மிதலை வார்குவ நினக்கே
* வடவர் தந்த வான்கேழ் வட்டங்
† குடபுல வுறுப்பிற் கூட்டுபு நிகழ்த்திய
வண்டிமிர் நறுஞ்சாந் தணிகுவந் திண்டிமி
லெல்லுத்தொழின் மடித்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறுக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதொறும் வினைவிட்டு
முன்றிற் முழைத் தூங்குந்
தென்கடற் பரப்பினெம் முறைவி னூர்க்கே.

என்பது : பகற்குறிக்கண் தோழி தலைமகற்குச்சொல்லியது.

—நக்கீரர்.

பி - ம். 2. னின்னிழறழீஇ. 8. ணல்லெழிலின்னலந். 15. தயிர் மிதிமாஅவார்குவ. 16. வான்கேழ் சாந்தம். 18. சாந்தயர்குவந். 20. கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய்புடன். 24. தென்டிரைப் பரப்பின் எம்முறை வினூரே.

---

* இவ்வடி நெடுநல்வாடையிலும் வந்தது. அதற்கு "வட நாட்டிலுள்ளார் கொண்டுவந்த வெள்ளிய நிறத்தையுடைய சிலா வட்டம்" என்றுரை கூறுவர் நச். (அடி 51.) † குடபுலம் - யவன தேசம். (சிலப். 4-35.)

341. பாலை

உய்தகை யின்ரூற் ரேழி பைப்பயக்
கோங்குங் கொய்குறை யுற்றன குயிலுந்
தேம்பாய் மாஅத் தோங்குசினை விளிக்கு
நாடார் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்
கழையழி நீத்தஞ் சாஅய வ்ழிநாள்
மழைகழிந் தன்ன மாக்கான் மயங்கறல்
பதவுமேய லருந்து துளங்கிமி னல்லேறு
மதவுடை நாட்கோ ளசைவிடப் பருகிக்
குறுங்காற் காஞ்சிக் கோதை மெல்விணர்ப்
பொற்றகை நுண்டா துறைப்பத் தொக்குடன்
குப்பை வார்மண லெக்கர்த் துஞ்சும்
யாணர் வேனின் மன்னிது
* மாணல நுகருந் துணையுடை யோர்க்கே.

என்பது: பிரிவின்கட் டோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—ஆவூர் மூலங்கிழார்.

பி - ம் 6. மழைமகிழ்ந்தன்ன.

342. குறிஞ்சி

ஒறுப்ப வோவலை நிறுப்ப நில்லலை
புணர்ந்தோர் போலப் போற்றுமதி நினக்கியான்
கிளைஞ னல்லனே நெஞ்சே தெளிஅது
வெல்போர்க் கவுரியர் நன்னுட் டுள்ளதை
மண்கொள் புற்றத் தரும்புழைத் திறப்பி
† னுகொண் மூதூர்க் கள்வர் பெருமக
னேவ லிளையர் தலைவன் மேவா
ரருங்குறும் பெறிந்த வாற்றலொடு பருந்துபடப்
பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்

* இவ்வடி 37 ஆம் பாட்டினும் வந்தது காண்க.
† "புனிற்றுன் தரவினிளையர்பெருமகன்" (338).

கெடாஅ நல்லிசைத் தென்னன் நெடாஅ
நீரிழி மருங்கிற் கல்லளைக் கரந்தவவ்
வரையர மகளிரி னரிய
ளவ்வரி யல்கு லணையாக் காலே.

என்பது: அல்லகுறிப்பட்டதலைமகன் தன்னெஞ்சிற்குச்சொல்லியது.

—மதுரைக் கணக்காயனார்.

இப்பாட்டிற் 'செல்' என்பது மேகம்.

பி - ம். 4, கவிரியர்.

343. பாலை

வாங்கமை புரையும் வீங்கிறைப் பணைத்தோட்
சில்சுணங் கணிந்த பல்பூண் மென்முலை
நல்லெழி லாகம் புல்லுத னயந்து
மரங்கொ லும்மண் மகள் பெரும பருகிப்?
புன்றலை சிதைத்த வன்றலை * நடுகற்
கண்ணி வாடிய மண்ணு மருங்குற்
கூருளி குயின்ற கொடுமர பெழுத்த
மாறுசெல் வம்பலர் வேறுப்யம் படுக்குங்
கண்பொரி கவலைய கானத் தாங்க
ணனந்தலை யாஅத் தந்தளிர்ப் பெருஞ்சினை
யில்போ னீழற் செல்லெயி லொழிமார்
நெடுஞ்செவிக் கழுதைக் குறுங்கா லேற்றைப்
புறநிறை பண்டத்துப் பொன்றயசாஅக் களைந்த
பெயர்படை கொள்ளார்க் குயவுத்துணை யாகி
யுயர்ந்த வாள்வினை புரிந்தோய் பெயர்ந்துநின்
றுள்ளினை வாழியென் னெஞ்சே கள்ளின்
மகிழின் மகிழ்ந்த வரிமதர் மழைக்கட்

* "நடுகற், பெயர்பயம் படாத்தோன்றுகுயிலெழுத்தியைபுடனேக்கல் செல்லாது" (297).

சின்மொழிப் பொலிந்த துவர்வாய்ப்
பன்மாண் பேதையிற் பிரிந்த நீயே.

என்பது: தலைமகன் இடைச்சுரத்து மீளக்கருதிய நெஞ்சினைக் கழறிப்போயது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 14. படைகொள்ளாளர்க். 18. செவ்வாய். 19. பெயர்ந்தநீயே.

344. முல்லை

வளமழை பொழிந்த வானிறக் களரி
யுளர்தரு தண்வளி யுறுதொறு நிலவெனத்
தொகுமுகை விரிந்த முடக்காற் பிடவின்
வையோர் வாலெயிற் றெருண்ணுத்தன் முகளிர்
கைமாண் டோணி கடிப்பப் பையென
மயிலினம் பயிலு மரம்பயில் கான
மெல்லிடை யுறுஅ வளவை வல்லே
கழலொலி நாவிற் றெண்மணி கறங்க
நிழலொழிப் பன்ன நிமிர்பரிப் புரவி
வயக்குறு கொடிஞ்சி பொலிய வள்பாய்ந்
தியக்குமதி வாழியோ கையுடை வலவ
பசப்புறு படரட வருந்திய
நயப்பின் காதலி நகைமுகம் பெறவே.

என்பது: வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—மதுரை அளக்கர்ஞாழார்மகனார் மள்ளனார்.

பி - ம். 3. முதுகாற்பிடவி. 5. கையாடோளி. 8. சுழலொலி. 9. நிழலொளிப். (அம்மள்ளனார்.)

345. பாலை

விசும்புதளி பொழிந்து வெம்மை நீங்கத்
தண்பதம் படுதல் செல்கெனப் பன்மா
ணுஞ்செல விழைந்தன மாக வோங்குபுகழ்க்

கானமர் செல்வி யருளலின் வெண்காற்
பல்படைப் புரவி யெய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
வினமழை தவழு மேழிற் குன்றத்துக்
கருங்கால் வேங்கைச் செம்பூம் பிணைய
லிதேந் தல்குல் யாமணிக் துவக்குஞ்
சின்னுள் கழிக வென்று முன்னு
ணம்மொடு பொய்த்தன ராயினுந் தம்மொடு
திருந்துவே லிளையர் சுரும்புண மலைமார்
மாமுறி யின்று மரக்கொம் பகைப்ப
வுறைகழிந் துலந்த பின்றைப் பொறைய
சிறுவெள் ளருவித் துவலையின் மலர்ந்த
கருங்கா னுணவின் பெருஞ்சினை வான்பூச்
செம்மணற் சிறுநெறி கம்மென வரிப்பக்
காடுகவின் பெறுக தோழி யாடுவளிக்
கொல்குநிலை யிற்றி யொருதனி நெடுவீழ்
கல்கண் சீக்கு மத்த
மல்குவெயி னீழ லசைந்தனர் செலவே.

என்பது : தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—குடவாயிற் கீரத்தனர்.

பி - ம். 21. மல்குபயநீழலசைந்தவர்.

346. மருதம்

* நகைநன் றம்ம தானே யிறைமிசை
மாரிச் சுதையி னீர்ம்புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்
வெள்ளி வெண்டோ டன்ன கயல்குறித்துக்

---

* "பிழைத்து வந்திருந்த கிழவனே நெருங்கி, யிழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்" என்ற துறைக்கு இப்பாட்டினை உதாரணமாகக் காட்டினர் நச். (தொல். பொருள். 150.)

கள்ளா ருவகைக் கலிமகி ழூழவர்
காஞ்சியங் குறுந்தறி குத்தித் தீஞ்சுவை
மென்கழைக் கரும்பி னன்பல மிடைந்து
பெருஞ்செந் நெல்லின் பாசமல் பொற்றி
வருத்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
மீதழி கடுநீர் நோக்கிப் பைப்பயப்
பார்வ லிருக்கும் பயங்கே ழூர
யாமது பேணின்றே விலமே நீயின்
பண்ணமை நல்யாழ்ப் பாணனெடு விசிபிணி
மண்ணுர் முழவின் கண்ணதிர்ந் தியம்ப
மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி
யெம்மனை வாரா யாகி முன்னு
ணும்மனைச் சேர்ந்த ஞான்றை யம்மனைக்
குறுந்தொடி மடந்தை யுவந்தன னெடுந்தே
ரிழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூட லாங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவ னல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
யேதின் மன்ன ரூர்கொளக்
கோதை மார்ப னுவகையிற் பெரிதே.

என்பது : தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது.

—நக்கீரர்.

இப்பாட்டின் கருத்துப் பிறரைப் பார்ப்பான் என்றவாறு.

*பி - ம். 3. குறும்பொறை. 21. வேண்டுபுலத்திறுத்த.

347. பாலை

* தோளுந் தொல்கவின் றொலைய நாளு
நலங்கவர் பசலை நல்கின்று நலியச்

---

* இவ்வடி 147-ம் பாட்டிலும் வந்தது.

சால்பெருந் தானைச் சேர லாதன்
மால்கட லோட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின் கண்ணதிர்ந் தன்ன
கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி
யம்ம்ன் மூது ரலர்நமக் கொழியச்
சென்றன ராயினுஞ் செய்வினை யவர்க்கே
வாய்க்கதில் வாழி தோழி வாயாது
மழைகரந் தொளித்த கழைதிரங் கடுக்கத்
தொண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் குவவடி
வெண்கோட் டியானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித் தோடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரிற் றேரு
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—மாமூலனார்.

பி - ம். 12. முழக்கிக்கைவெரீஇ.

348. குறிஞ்சி

என்னு வதுகொ ருனே முன்றிற்
றேன்றேர் சுவைய திரளரை மாஅத்துக்
கோடைக் கூழ்த்த கமழ்நறுந் தீங்கனி
பயிர்ப்புறப் பலவி னெதிர்ச்சுளை யளைஇ
யிருலொடு கலந்த வண்டுமூ சரிய
* னெடுங்க ணுடைமைப் பழுங்கி கடுந்திறற்
† பாம்புக்கடுப் பன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவு ளோங்குவரைக் கோக்கிக் குறவர்

---

* "திருந்தமை விளைந்த தேக்கட்டேறல்"; "வேய்பெயல்விளையுட்டேக்கட்டேறல்" (மலை. 171; 522.") "அம்பணைவிளைந்த தேக்கட்டேறல்" (368.) † "பாம்பு வெகுண்டன்ன தேறல்" (சிறுபாண். 237.) "தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்" (புறம். 392.)

மூறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி
யடுக்க லேன லிரும்புன மறந்துழி
யானை வவ்வின தினையென நோனை
தினையரு முதியருங் கினையுடன் குழீஇச்
சிலையாய்ந்து திரிதரு நாட
னிலையா நன்மொழி தேறிய நெஞ்சே.

என்பது : தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

—மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன்கூத்தனர்.

இதன் கருத்து ஒன்றுசிதைய ஒன்றுசெய்வான் என்றவாறு.

பி-ம்.- 2. மாஅத்து. 11. தினையெனனினைனை து. 14. நிலையா நின்மொழி. (சிறைப்புறத்தானுகத் தலைமகள் தோழிக்குச்சொல்லி யது.)

349. பாலை

ஆரம்போ முவ்வளை செறிந்த முன்கை
வரைந்துதாம் பிணித்த தொல்கவின் றொலைய
வெவனுய்ந் தனர்கொ றோழி னெமன்ன
றெரிகோ லன்ன செயிர்தீர் செம்மொழி
யுலந்த வொக்கல் பாடுநர் செலினே
யுரன்மலி யுள்ளமொடு முனைபா ழாக
வருந்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கு நன்ன னன்னுட்
டேழிற் குன்றத்துக் கவாஅற் கேழ்கொளத்
திருந்தரை நிவந்த கருங்கால் வேங்கை
யெரிமருள் கவள மாந்திக் களிறுதன்
வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்லூர் பாம்பிற் றுன்றுஞ்
* சொல்பெயர் தேளத்த சுரனிறந் தோரே.

* "மொழிபெயர்தேஎம்" (127; 211.)

என்பது : தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—மாமூலனார்.

பி - ம். 9. கேழ்கிளரத்.

350. நெய்தல்

கழியே, சிறுகுர னெய்தலொடு காவி கூம்ப
வெறிதிரை யோதந் தரலா னுதே
துறையே, மருங்கிற் போகிய மாக்கலை மருப்பி
னிருஞ்சேற் றீரளை யலவ னிவப்ப
வழங்குந ரின்மையிற் பாடான் றன்றே
கொடுநுக நுழைந்த கணைக்கா லத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண வேவா
தேந்தெழின் மழைக்க ணிவள்குறை யாகச்
சேர்ந்தனை சென்மோ பெருநீர்ச் சேர்ப்ப
விலங்கிரும் பரப்பி னெறிசுரு நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவ
ரொலிதலைப் பணில மார்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை யெதிர்கொள விழிதருங்
குவவுமண லெடுங்கோட் டாங்க
ணுவக்காண் டோன்றுமெஞ் சிறுநல் லூரே.

என்பது: பகற்குறிவந்து நீங்குந்தலைமகற்குத் தோழிசொல்லியது.

—சேந்தன் கண்ணனார்.

பி - ம். 15. ணுவவுக்காண். (பகற் குறிவந்த தலைமகற்குத்)

351. பாலை

வேற்றுநாட் டிறையுள் - விருப்புறப் பேணிப்
பெறலருங் கேளிர் பின்வந்து விடுப்பப்
பொருளகப் படுத்த புகன்மலி நெஞ்சமொடு
குறைவினை முடித்த னிறைவி னியக்க

மறிவுறூஉங் கொல்லோ தானே கதிர்தெறக்
கழலிலே யுகுத்த கால்பொரு தாழ்சினை
யழலகைங் தன்ன வங்குழைப் பொதும்பிற்
புழல்வீ யிருப்பைப் புன்காட் டத்த
மறுதர வுள்ளமொடு குறுகத் தோற்றிய
*செய்குறி யாழி வைகறே றெண்ணி
யெழுதுசுவர் நினைந்த வழுதுவார் மழைக்கண்
விலங்குவீ ழரிப்பனி பொலங்குழைத் தெறிப்பத்
திருந்திழை முன்கை யணலசைத் தூன்றி
யிருந்தணை மீது பொருந்துழிக் கிடக்கை
வருந்துதோட் பூசல் களையு மருந்தென
வுள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத்தொழு துறைவி செவிமுத லானே.

என்பது : பொருண்முற்றி மறுத்தராநின்ற தலைமகன் றன்னெஞ் சிற்குச் சொல்லியது.

—பொருந்தி லிளங்கீரனார்.

இப்பாட்டு நிலத்தாற் பாலை.

பி-ம். 9. மறிதரவுள். 11. நினைந்த. 14. பொருந்துவீக்கிடக்கை.

352. குறிஞ்சி

முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமி ழருவிப் பாறை மருங்கி
னுடுமையின் முன்ன தாகக் கோடியர்
விழவுகொண் மூதூர் விறலி பின்றை
முழவன் போல வகப்படத் தழீஇ
யின்றுணைப் பயிருங் குன்ற நாடன்
குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியல னன்பின னெனநீ

* "காளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து" "காண்முறை யிழைத்ததிண் சுவர் நோக்கி" (61; 289.)

வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை காணிற் காதலந் தோழீஇ
கடும்பரிப் புரவி நெடுந்தே ரஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவற்
றொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மக
னென்னு முறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
* வதுவை நாளினு மினியனு லெமக்கே.

என்பது : வரைந்தெய்திய பின்றை மணமனைக்கட்சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது; வரைவுமலிந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் மசொல்லியதூஉமாம்.

—அஞ்சிலாந்தைமக ணுகையார்.

பி - ம். 1. முடவுமுதற்டலவின். 4. கோடியர். 9. நெடுநா. 10. வல்லிற்கூறி. 11. தோழி. (அஞ்சியத்தைமகனார்:)

353. பாலை

ஆள்வினைப் பிரிதலு முண்டோ பிரியினுங்
கேளினி வாழிய நெஞ்சே நாளுந்
கனவுக் கழிந்தனை யாகி நன்வி
னுளது செலவு மூப்பினது வரவு
மரிதுபெறு சிறப்பிற் காமத் தியற்கையு
மிந்நிலை யறியா யாயினுஞ் செந்நிலை
யமையா டங்கழை தீண்டிக் கல்லென
வெமையிலை யுதிர்த்த வெரிவாய்க் கோடை
நெடுவெண் களரி நீறுமுகந்து சுழலக்
கடுவெயி றிருகிய வேனில் வெங்காட்
டியங்குநடை மடப்பிணை தழீஇய வயங்குபொறி
யறுகோட் டெழிற்கலை யறுகய நோக்கித்

*"முர்ருன்கண்ட ஞான்றினும், பிற்பெரிதளிக்கும் பண்பி னனே" (173,) தண்டாக்காதலுந் தலைநாட்போன்மே" (332.)

தெண்ணீர் வேட்ட சிறுமையிற் றழைமறந்
துண்ணீ ரின்மை யுலெல்குவன தளர
மாநிழ லற்ற வியவிற் சுரனிறந்
துள்ளுவை யல்லேயோ மற்றே யுள்ளிய
விருந்தொழி வறியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருஉ ரோம்பித் தண்ணெனத்
தாதுதுக ளுதிர்த்த தாழ்பூயங் கூந்தல்
வீழித ழுலரி மெல்லகஞ் சேர்த்தி
மகிழணி முறுவன் மாண்ட சேக்கை
நம்மொடு நண்மொழி நவிலும்
பொம்ம லோதிப் புணையிழை குணனே.

என்பது : முன்னொருகாலத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பொருண்முற்றி வந்திருந்தகாலத்து மீண்டும்பொருள் கடாவின நெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரை அளக்கர்ஞாழார்மகனர் மள்ளனர்.

பி - ம். 3. கழிந்தனையவாகி 10. வேனிலங்காட் 17. பெருந்தோண் மாதர். (பின்னும்பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்கு. அம்மள்ளனர்.)

354. முல்லை

மதவலி யானை மறலிய பாசறை
யிடியுமிழ் முரசம் பொருகளத் தியம்ப
வென்றுகொடி யெடுத்தனன் வேந்தனுங் கன்
கறவைப் புல்லினம் புறவுதொ றுகளக் [றெடு
குழல்வாய் வைத்தனர் கோவலர் வல்விரைந்
திளைய ரேகுவனர் பரிய வியப்ப
விரியுளைக் கடுநடைப் புரவி வழிவா
யோட வலவன் வள்புவலி யுறுப்பப்
புலவர் புகழ்குறி கொண்ட வுலவிய
சுரும்புகடி கொண்ட பொலந்தா ரகலத்துத்
தண்கமழ் சாந்த நுண்டுக ளணிய
வென்றிகொ ளுவகையொடு புகுதல் வேண்டின்

யாண்டுறை வதுகொ ருனே மாண்ட
போதுறழ் கொண்ட வுண்கட்
டூதி லாட்டி திருநுதற் பசப்பே.

என்பது : வினைமுற்றிய தலைமகற்கு உழையர் சொல்லியது.

—மதுரைத்தமிழ்க்கூத்தன் கடுவன்மள்ளனார்.

பி - ம். 1. வலியபாசறை. 2. யிடியிமிழ்முரசம். 4. கதவைப் டல்லினம். 10. சுரும்புகுடிகொண்ட.

355. பாலை

மாவும் வண்டளி ரீன்றன குயிலு
மின்றீம் பல்குரற் கொம்பர் நுவலு
மூதிலை யொழித்த போதவிழ் பெருஞ்சினை
வல்லோன் றைவரும் வள்ளுயிர்ப் பாலை
5 *நரம்பார்த் தன்ன வண்டின மூரலுந்
துணிகயந் துன்னிய தூமண லெக்கர்த்
தாதுகு தண்பொழி லல்கிக் காதலர்
செழுமனை மறக்குஞ் செவ்வி வேனி
ருனே வந்தன் ருயி ளுஞ
10 திலங்குவளை நெகிழ்ந்த வெவ்வங் காட்டிடப்
புலந்தனம் வருகஞ் சென்மோ தோழி
† யாமே யெமிய மாக நீயே
பொன்னயந் தருளிலை யாகி
யின்னே யாகுத லொத்தன்ரு லெனவே.

என்பது: பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—தங்காற் போற்கொல்லனார்.

பி - ம். 10. நெகிழ்த்த, 11. சென்மா. 12. யாமே யெளியமாக. (தங்கான் முடக்கொற்றனார்; கோவனார்.)

---

* இரண்டாம் பாட்டினும் நம்பார்த்தன்னபறவை எனவந்தது.

† இவ்வடி 33, 57-ம் பாடல்களினும் வந்துள்ளது.

356. மருதம்

மேற்றுறைக் கொளீஇய கழாலிற் கீழ்த்துறை
யுகுவா ரருந்தப் பகுவா யாமை
கம்பு ளியவ ளுக விசிபிணித்
தெண்கட் கிணையிற் பிறழு மூர
னிடைநெடுங் தெருவிற் கதுமெனக் கண்டென்
பொற்றொடி முன்கை பற்றின ளுக
வண்ணு யென்றனெ னவன்கைவிட் டனனே
தொன்னகை சாலாமை நன்னன் பறம்பிற்
*சிறுகா ரோடன் பயிலெடு சேர்த்திய
கற்போ ஞவினே னுகி மற்றது
செப்பலென் மன்னுல் யாய்க்கே நற்றேர்க்
கடும்பகட் டியானைச் சோழர் மருக
னெடுங்கதிர் நெல்லின் வல்லங் கிழவோ
னல்லடி யுள்ளா னுகவு மொன்னூர்
கதவ முயறலு முயல்ப வதாஅன்
றெலிபல் கூந்த னம்வயி னருளாது
கொன்றன னுயினுங் கொலைபழு தன்றே
யருவி யாட்டல் கலித்த முன்றுறை
நன்னு னுஅய்பிரம் பன்ன
மின்னீ ரோதி யென்னேநின் குறிப்பே.

என்பது : பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்ததோழி தலைமகளுக் குறைநயப்பக் கூறியது.

—பரணர்.

பி - ம். 14. மொல்லார்.

357. பாலை

கொடுமு ளீங்கைச் சூரலொடு மிடைந்த
வான்முகை யிறும்பின் வயவொடு வதிந்த

---

* இவ்வுவமை முதற்பாட்டிலும் வந்தது நோக்குக.

வுண்ணுப் பிணவி னுயக்கங் தீரிய
தடமருப் பியானை வலம்படத் தொலைச்சி
5 வியலறை சிவப்ப வாங்கி மூணங்குநிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி
பயிலிருங் கானத்து வழங்கல் செல்லாது
பெருங்களிற் றினநிரை கைதொடூஉப் பெயருந்
தீஞ்சுளைப் பலவின் ரெழுதி யும்பர்ப்
10 பெருங்கா டிறந்தன ராயினும் யாழநின்
றிருந்திழைப் பணைத்தோள் வருந்த நீடி
யுள்ளா தமைதலோ விலரே நல்குவர்
மிகுபெய னிலைஇய தீநீர்ப் பொய்கை
யடையிறந் தவிழ்ந்த தண்கமழ் நீலங்
15 காலொடு துயல்வந் தன்னநின்
னுயிதழ் மழைக்க ணமர்த்த நோக்கே.

என்பது: பிரிவிடைவேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

பி - ம். 8. கைகொடூஉப்பெயருந். 12. நல்குவர.

358. குறிஞ்சி

நீலத் தன்ன நிறங்கிள ரெருத்திற்
காமர் பீலி யாய்மயிற் ரோகை
யின்றீங் குரல துவன்றி மென்சீ
ராடுதகை யெழினலங் கடுப்பக் கூடிக்
5 கண்ணே ரிதழ தண்ணறுங் குவளைக்
குறுந்தொட ரடைச்சிய நறும்பல் கூழை
நீடுநீர் நெடுஞ்சுனை யாயமொ டாடா
யுயங்கிய மனத்தை யாகிப் புலம்புகொண்
டின்னே யாகிய நின்னிற நோக்கி
10 யன்னை வினவிஎ ளாயி னன்னே
வென்னென வுரைக்கோ யானே தின்னிய

பெருவரை யிழிதரு மெடுவெள் ளருவி
யோடை யானை யுயர்மிசை யெடுத்த
வாடுகொடி கடுப்பத் தோன்றுங்
கோடுயர் வெற்ப னுறீஇய நோயே.

என்பது : பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்

பி - ம். 10. யன்னை வினவுவளாயி. (மதுரை மருதங்கண்ணனார்.)

359. பாலை

பனிவா ருண்கணும் பசந்த தோளு
நனிபிற ரறியச் சாஅய் நாளுங்
கரந்தன முறையு நம்பண் பறியார்
நீடினர் மன்ற காதல ரெனநீ
யெவன்கை யற்றனை யிகுளை யவரே
வான வரம்பன் வெளியத் தன்னநம்
மாணலந் தம்மொடு கொண்டனர் முனஅ
தருஞ்சுரக் கவலை யசைஇக் கோடியர்
பெருங்கன் மீமிசை யியமெழுந் தாங்கு
* வீழ்பிடி கெடுத்த வெடுக்தாள் யானை
சூர்புக லடுக்கத்து மழைமாறு முழங்கும்
பொய்யா நல்லிசை மாவண் புல்லி
† கவைக்கதிர் வரகின் யாணர்ப் பைந்தாண்
முதைச்சுவன் மூழ்கிய கான்சுடு குரூஉப்புகை
யருவித் துவலையொடு மயங்கும்
பெருவரை யத்த மியங்கி யோரே.

என்பது : பிரிவிடைவேறுபட்டதலைமகட்குத் தோழிசொல்லியது.

—மாமூலனார்.

பி - ம். 11. முழக்கும்.

---

*"வீழ்பிடி கெடுத்த வெண்கோட்டியானை, உணகுளகுமறுத்த வுயக்கம்" (392.) † "வாதிகை யன்ன கவைக்கதிர்" (மலை. 112.)

360. நெய்தல்

பல்பூந் தண்பொழிற் பகலுடன் கழிப்பி
யொருகா லூர்திப் பருதியஞ் செல்வன்
குடவயின் மாமலை மறையக் கொடுங்கழித்.
தண்சேற் றடைஇய கணைக்கா னெய்த
லுண்டா துண்டு வண்டினந் துறப்ப
வெருவரு கடுந்திற லிருபெருந் தெய்வத்
துருவுட னினையந்த தோற்றம் போல
வந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்த மாலை பெயரின் மற்றிவள்
பெரும்புலம் பினளே தெய்ய வதனுற்
* பாணி பிழையா மாண்வினைக் கலிமா
துஞ்சூர் யாமத்துத் தெவிட்ட லோம்பி
நெடுந்தே ரகல நீக்கிப் பையெனக்
குன்றிழி களிற்றிற் குவவுமண னீந்தி
யிரவின் வம்மோ வரவுநீர்ச் சேர்ப்ப
வினமீ னருந்து நாரையொடு பனிமிசை
யன்றில் சேக்கு முன்றிற் பொன்னென
நன்மலர் நறுவீ தாஅம்
புன்னை நறும்பொழிற் செய்தகங் குறியே.

என்பது : பகற்குறிவந்த தலைமகற்குத் தோழிபகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்தது.

—மதுரைக் கண்ணத்தனார்.

பி - ம். 12. தஞ்சாயாமத்து. 19. புன்னைய நறும் பொழிற் செய்தனங்குறியே

361. பாலை

† தூமலர்த் தாமரைப் பூவி னங்கண்
மாயிதழ்க் குவளை மலர்பிணைத் தன்ன

---

* பாணிவயங்கு தொழிற்கலிமா (134.).

† "தாமரைப் போதிற் பூத்த தண்ணறுங் குவளைப்பூப்போற், காமருமுகத்திற் பூத்த கருமழைத்தடங்கண்" சிந். 2133. "குவளை மலர்ந்த தாமரை" (கம்பராமாயணம். ஆரணிய காண்டம். மாரீசன் வதைப்படலம் 115.)

திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்க
ணணிவளை முன்கை யாயிதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினுங்
கவவுப்புலந் துறையுங் கழிபெருங் காமத்
தின்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன் றில்லென
வன்பான் மொழிந்த வென்மொழி கொள்ளாய்
பொருள்புரி வுண்ட மருளி னெஞ்சே
கரியாப் பூவிற் பெரியோ ராரை
*வழலெழு தித்திய மடித்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்
குள்ளுத லோம்புமதி யினிநீ முள்ளெயிற்றுச்
சின்மொழி யரிவை தோளே பன்மலை
வெவ்வறை மருங்கின் வியன்சுர
மெவ்வங் கூர விறந்தனம் யாமே.

என்பது : பொருள்வயிற்பிரிந்துபோகாநின்ற தலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது.

— எயினந்தைமகனார் இளங்கீரனார்.

இப்பாட்டினுள் 'நித்தியம்' என்பது வேள்விக் குண்டம்.

பி . ம். 4. ணரிமயிர் முன்கை. 13. குள்ளுதலொழிமதிநீயே.

362. குறிஞ்சி

பாம்புடை விடர பனிநீ ரிட்டுத்துறைத்
தேங்கலந் தொழுக யாறுநிறைந் தனவே
வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வள்ளுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கா ராறே யாயிடை

---

* "நெடுமணி யூபத்திட்ட தவழ்நடை யாமை நீணீர்த், தொடு மணிக் குவளைப் பட்டந் தாணையொடு நினைப்பதேபோல்" சிந். 2878.

யெல்விற் றென்னுன் வென்வே லேந்தி
நசைதர வந்த நன்ன ராள
னெஞ்சுபழு தாக வறுவியன் பெயரி
னின்றிப் பொழுதும் யான்வா ழுலனே .
யெவன்கொல் வாழி தோழிநம் மிடைமுலைச்
சுணங்கணி முற்றத் தாரம் போலவுஞ்
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு ருளிர்ப்பி
னிலங்குவெள் ளருவி போலவு
நிலங்கொண் டனவாற் றிங்களங் கதிரே.

என்பது : இரவுக்குறிச்சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

—வேள்ளிவீதியார்.

பி - ம். 1. மணி நீ. 5. முருகரும்பன்னவல்லுகிர்.

363. பாலை

நிரைசெல விவுளி விரைவுடன் கடைஇ
யகலிரு விசும்பிற் பகல்செலச் சென்று
மழுகுசுடர் மண்டில மாமலை மறைய
பொழுதுகழி மலரிற் புனையிழை சாஅ
யணையணைந் தினைய யாகல் கணையரைப்
புல்லிலை நெல்லிப் புகரில் பசுங்காய்
கல்லதர் மருங்கிற் கடுவளி யுதிர்ப்பப்
பொலஞ்செய் காசிற் பொற்பத் தாஅ
மத்த நண்ணி யதர்பார்த் திருந்த
கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழின் மறவ
ராறுசென் மாக்க ளருநிறத் தெறிந்த
வெஃகுறு விழுப்புண் கூர்ந்தோ ரெய்திய
வளைவாய்ப் பருந்தின் வள்ளுகிர்ச் சேவல்
கிளைதரு தெள்விளி கெழுமுடைப் பயிரு
மின்னு வெஞ்சுர மிறந்தோர் முன்னிய
செய்வினை வலத்த ராகி யிவணயந்

தெய்த வந்தனரே தோழி மையெழிற்
றுணையே ரெதிர்மல ருண்கட்
பிணையோர் நோக்கம் பெருங்கவின் கொளவே.

என்பது: பிரிவிடைவேறுபட்ட தலைமகட்குத் தோழிசொல்லியது.

—மதுரைப் பொன்செய்கொல்லன் வெண்ணாகனார்.

பி - ம். 3. மழுங்குசுடர். 4. சாஅயவீணே. 14. இனைதரு வெள்விளி கெடுமுடைப் பயிரு. 16. செய்வினை மனத்த.

364. முல்லை

மாதிரம் புதையப் பாஅய்க் கால்வீழ்த்
தேறுடைப் பெருமழை பொழிந்தென வவரே
* ருடுகளப் பறையின் வரிநுணல் கறங்க
† வாய்பொன் னவிரிணை தூக்கி யன்ன
நீடிணர்க் கொன்றை கவின்பெறக் காடுடன்
சுடர்புரை தோன்றிப் புதறலைக் கொள்ள
முல்லை யில்லமொடு மலரக் கல்ல
பதுவாய்ப் பைஞ்சுனை மாவுண மலிரக்
கார்தொடங் கின்றே காலை காதலர்
வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை
வென்றி வேட்கையொடு நம்மு முள்ளார்
யாதுசெய் வாங்கொ ரூழி நோதகக்
கொலைகுறித் தன்ன மாலை
தினைதரு போழ்தி னீந்தலோ வரிதே.

என்பது: பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—மதுரை மருதங்கிழார்மகனார் பெருங்கண்ணனார்.

பி - ம். 5. கவின்பெறக்காட்ட. 12. யாது செய்வர்கொ.

---

* தேரை சிறுபல்லியம்போல ஒலித்தல் 154 ; 301 ஆம் பாடல்களினும் கூறப்பட்டது காண்க.

† "பொலன்செய் கிண்கிணிக், காசி னன்ன போதின் கொன்றை" (குறுந். 148.)

365. பாலை

அகல்வாய் வான மாலிருள் பரப்பப்
பகலாற்றுப் படுத்த பையென் மூற்றமொடு
சினவல் போகிய புன்கண் மாலை
யத்த நடுகல் லாளென வுதைத்த
5 கான யானைக் கதுவாய் வள்ளுகிர்
நிரும்பனை *யிதக்கையி னெடியு மாங்கட்
கடுங்க ணுடவ ரேமுயல் கிடக்கை
வருந ரின்மையிற் களையுநர்க் காணா
வென்றூழ் வெஞ்சுரந் தந்த நீயே
10 துயர்செய் தாற்ரு யாகிப் பெயர்பாங்
குள்ளினை வாழிய நெஞ்சே வெண்வேன்
மாவண் கழுவுள் காழூ ராங்கட்
பூதந் தந்த பொரியரை வேங்கைத்
தண்கமழ் புதுமலர் நாறு
15 மஞ்சி லோதி யாய்மடத் தகையே.

என்பது : தலைமகன் இடைச்சுரத்துநின்று சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 7. ரேவியல்கிடக்கை. 11. வாழியெனெஞ்சே. 12. காழூர். (இடைச்சுரத்துச்சொல்லியது.)

366. மருதம்

தாழ்சினை மருதந் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்பழித்துக்
கள்ளார் களமர் பகடுதலை மாற்றிக்
கடுங்காற் றெறியப் போகிய தரும்புடன்
5 காயற் சிறுதடி கண்கெடப் பாய்தலி
னிருநீர்ப் பரப்பிற் பனித்துறைப் பரதவர்

* இத்தகை - நுங்கின் தலையிலுள்ளதோடு. இஃதியானையின் கால் நகம் போலும்.

தீம்பொழி வெள்ளுருப்பு சிதைத்தலிற் சினைஇக்
கழனி யுழவரொடு மாறெதிர்ந்து மயங்கி
யிருஞ்சேற் றள்ள லெறிசெருக் கண்டு
10 * நரைமூ தாளர் கைபிணி விடுத்து
நனைமுதிர் தேறல ளுளையர்க் கீயும்
பொலம்பூ ணெவ்வி நீழ லன்ன
நலம்பெறு பணைத்தோ ணன்னுத லரிவையொடு
மணங்கமழ் தண்பொழி லல்கி நெருநை
15 நீதற் பிழைத்தமை யறிந்து
கலுழ்ந்த கண்ணளெம் மணங்கி னளே.

என்பது : பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில் வேண்டிய விடத்துத் தோழி சொல்லியது.

—குடவாயிற் கீரத்தனர்.

இப்பாட்டினுட் "காயற் சிறுதடி" என்பது உப்புப்பாத்தி.

பி - ம். 6. னீணீர்ப்பரப்பிற். 7. தீம்புளி வெள்ளுருப்பு

367. பாலை

இலங்குசுடர் மண்டிலம் புலந்தலை பெயர்ந்து
பல்கதிர் மழுகிய கல்சே ரமையத்
தலந்தலை மூதே ருண்குரல் விளிப்ப
மனைவளர் நொச்சி மாசேர்பு வதிய
5 மூனையுழை யிருந்த வங்குடிச் சீறூர்க்
கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்
மிகுபத நிறைந்த தொகுகூட் டொருசிறைக்
† குவியடி வெருகின் பைங்க ணேற்றை
யூனசைப் பிணவி னுயங்குபசி களைஇயர்

* நரையையுடைய முதியோர். (புறம். 52.)

† "வெருக்கடியன்ன குவிமுகிழிருப்பை." (257.)

10 * தளிர்புரை கொடிநற்றிற் செறிமயி ரெருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன
நெற்றிச் சேவ லற்றம் பார்க்கு
புல்லென் மாலையு மினிதுமன் றம்ம
நல்லக வனமுலை யடையப் புல்லுதொ
15 றுயிர் குழைப் பன்ன சாயற்
செயிர்தீ ரின்றுணைப் புணர்ந்திசி னோர்க்கே.

என்பது : பிரிவிடைவேறுபட்ட தலைமகள் வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 5. முழையுழையிருந்த. 9. பிணலினுணங்குபசி.

368. குறிஞ்சி.

தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனங்
கரிபுரங் கழீஇய பெரும்பாட் டூரத்துத்
தோடுவளர் பைந்தினை நீடுகுரல் காக்கு
மொண்டொடி மகளிர்க் கூச லாக
5 வாடுசினை யொழித்த கோடிணர் களுலிய
குறும்பொறை யயலது நெடுந்தாள் வேங்கை
மடமயிற் குடுமியிற் றோன்று நாட
னுயர்வரை மருங்கிற் காந்தளஞ் சோலைக்
† குரங்கறி வாரா மரம்பயி லிறும்பிற்
10 கடிசுனைத் தெளிந்த மணிமரு ணீர்
பிடிபுணர் களிற்றி னெம்மொ டாடிப்
பன்னு ளும்பர்ப் பெயர்ந்து சின்னுள்
கழியா மையே வழிவழிப் பெருகி

---

* "குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன, தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்" (குறுந். 107.)

† "மந்தியு மறியா மரம்பயி லிறும்பு" (92.) "மந்தியு மறியா மரம்பயி லடுக்கம்" (முருகு. 42.)

*யம்பணை விளைந்த தேக்கட் டேறல்
வண்டுபடு கண்ணியர் மகிழுஞ் சீறூர்
ரெவன்கொல் வாழி தோழி கொங்கர்
முணியரை யாத்து மறுகி ஞடு
முள்ளி விழவி னன்ன
வலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

என்பது : பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவா ளாய்த் தோழிசொல்லியது.

—மதுரை மருத்தனிளநாகனார்.

பி - ம். 1. கோடுவளர். 5-6. கோடினர் களுலிக். குறும்பொறை. 12. பலகாளும்பர்; சில நாள். 13. களியாமை.

269. பாலை.

கண்டிசின் மகளே கெழீஇ யியைவெனே
யொண்டொடி செறித்த முன்கை யூழ்கொள்பு
மங்கையர் பலபா ராட்டச் செந்தார்க்
கிள்ளையுந் தீம்பா லுண்ணு மயிலியற்
சேயிழை மகளி ராயமு மயரா
தாழியு மலர்பல வணியா † கேழ்கொள்
காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப்
பாவையும் பலியெனப் பெருஅ நோய்பொர
விளைகண் டினைவதன் றலையு நினைவிலென்
கொடியோன் முன்னிய துணைரோன் ரெடியோ
யின்றுநின் னெலிகுரான் மண்ண லென்றதற்
கெற்புலந் தழிந்தன ளாகித் தற்றகக்
கடலந் தானைக் கைவண் சோழர்

---

* "நெடுங்க ணுடமைப் பழுங்கி நடுந்திறற் பாம்புக்கடுப் பன்ன தோப்பி பருகி" (348.)

† கேழ்கொள்காழ் - நிறங்கொண்ட வயிரப்பச்சை. இதனை யியற்றிய பாவை என்க.

கெடலரு நல்லிசை யுறந்தை யன்ன
நிதியுடை நன்னகர்ப் புதுவது புனைந்து
தமர்மண னயரவு மொல்லாள் சுவர்முத
லோமை நீடிய வுலவை நீளிடை
மணியணி பலகை மாக்காழ் நெடுவேற்
றுணிவுடை யுள்ளமொடு துதைந்த மூன்பி
னறியாத் தேனத் தருஞ்சுர மடுத்த
சிறியோர்க் கொத்தவென் பெருமடத் தகுவி
சிறப்புஞ் சீரு மின்றிச் சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
யோரா யாத்த வொருதூண் முன்றி
லேதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ
மேயினள் கொல்லென நோவல் யானே.

என்பது : மகட்போக்கிய செவிலிசொல்லியது.

—நக்கீரர்.

பி - ம். 1. மகளே கேழியைவெனை. 4. இளியியற். 7. காழ்புணர்ந்தி யற்றிய. 12. ளாகிக்கிளர்தார். 24. யோரா வார்த்தவொருதாழ்.

370. நெய்தல்

வளைவாய்க் கோதையர் வண்ட றைஇ
யிளையோர் செல்ப வெல்லு மெல்லின்
*றகலிலைப் புன்னைப் புகரி னீழற்
பகலே யெம்மொ டாடி யிரவே
காயல் வேய்ந்த தேயா நல்லி
னெயொடு வைகுதி யாயி னுண்தை
யருங்கடிப் படுவலு மென்றி மற்றுநீ
செல்ல லென்றலு மாற்றுய் செலினே
வாழலெ னென்றி யாயின் ஞாழல்

* "உழைப்புறத் தன்ன புள்ளி நீழல்" (379.)

வண்டுபடத் *ததைந்த கண்ணிய நெய்தற்
றண்ணரும் பைந்தார் தயல்வர வந்திக்
கடல்கெழு செல்வி கரைநின் முங்கு
நீயே கான லொழிய யானே றந்]
† வெறிகொள் பாவையிற் பொலிந்தவெ னணிது
தாமமகள் போலப் பெயர்த
லாற்றேன் றெய்ய வலர்கவிவ் வூரே.

என்பது : பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச்சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

—அம்முவனார்.

பி - ம். 14. பொலிந்தனவணிதுறந்; பொலிந்தன ரனிதுறந்.

371. பாலை

அவ்விளிம் புரீஇய விசையமை நோன்சிலைச்
செவ்வாய்ப் பகழிச் செயிர்நோக் காடவர்
‡ கணைவிடக் கழிந்ததன் வீழ்துணை யுள்ளிக்
குறுநெடுந் தணைய மறிபுடை யாடப்
புன்கண் கொண்ட திரிமருப் பிரலை
மேய்பத மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
நெய்தலம் படுவிற் சின்னீ ருண்ணு
தேகுறு மாந்தரி னினைந்துகண் படுக்கும்
பைதற வெம்பிய பாழ்சே ரத்த
மெலிய நீந்து மெம்மினும் பனிவார்ந்
தென்ன வாங்கொ ருமே தெண்ணீர்.
ராய்சுனை நிகர்மலர் போன்மென நசைஇ

---

* ததைதல் - சிதறுதல் ; மலர்தலுமாம்.

† "வல்லோன், பொறியமை பாவையிற்றூங்கல்" (98.)

‡ கணையிட—அம்புவிட

வீதேர் பறவை விழையும்
போதார் கூந்தனங் காதலி கண்ணே.

என்பது : பொருள்வயிற் பிரிந்துபோகாநின்ற தலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது.

—எயினந்தைமக னிளங்கீரனார்.

பி - ம். 7. சிறுநீருண்ணு. 9-10. பாழ்சோத்தந் தமியநீந்தும்.

372. குறிஞ்சி

அருந்தெறன் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகா ணனந்தலை
யணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
வருங்கல வெறுக்கையி னரியோள் பண்புநினைந்து
வருந்தின மாதோ வெனினுமஃ தொல்லா
யிரும்பணைத் தொடுத்த பலரா டூச
லூர்ந்திழி கயிற்றிற் செலவர வருந்தி
நெடுநெறிக் *குதிரைக் கூர்வே லஞ்சி
கடுமுனை யலைத்த கொடுவி லாடவ
ராகொள் பூசலிற் பாடுசிறந் தெறியும்
பெருந்துடி வள்பின் வீங்குபு நெகிழா
† மேய்மணி யிழந்த பாம்பி னீநனி
தேம்பினை வாழியை னெஞ்சே வேந்தர்
கொண்டணி யெயிலிற் காப்புச்சிறந்
தீண்டருங் குரையணம் மணங்கி யோளே.

என்பது : அல்லகுறிப்பட்டுப் போகாநின்ற தலைமகன் தன்னெஞ் சிற்குச் சொல்லியது.

—பரணர்.

---

* குதிரை—குதிரைமலை : "குதிரைக்கூர்வேல்.....எழினி" எனப்புறத்தும் (158.) வந்துளது.

† மேய்மணி—மேய்தல் காரணமாக உமிழ்ந்த மணி (72.)

பி - ம். 1. அருந்திறன். 10. கடுமுனை மலைத்த தொடுவி லாடவர்; கடுமுனையலைக்கக் கொடுவிலாடவர். 15. கொண்டனி யெய்விலித்.

373. பாலை

முனைகவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீரெழுந்து
மனைபாழ் பட்ட மரைசேர் மன்றத்துப்
* பணைத்தாள் யானை பரூஉப்புற முரிஞ்சிச்
செதுகாழ் சாய்ந்த முதுகாற் பொதியி
லருஞ்சுர நீந்திய வருத்தமொடு கையற்றுப்
பெரும்புன் மாலை புலம்புவந் துறுதர
மீளி யுள்ளஞ் செலவுவலி யுறுப்பத்
தாழ்கை பூட்டிய தனிநிலை யிருக்கையொடு
தன்னிலை யுள்ளு நெஞ்சிலை யுணரா
லிரும்பல் கூந்தற் சேயிழை மடந்தை
கனையிரு ணடுநா ளணையொடு பொருந்தி
வெய்துற்றுப் புலக்கு நெஞ்சமொ டைதுயிரா
வாயிதழ் மழைக்கண் மல்க நோய்கூர்ந்து
பெருந்தோ ணனைக்குங் கலுழ்ந்துவா ரரிப்பனி
மெல்விர லுகிரிற் றெறியினள் வெண்வே
லண்ணல் யானை யடுபோர் வேந்த
ரொருங்ககப் படுத்த முரவுவாய் ஞாயி
லோரெயின் மன்னன் போலத்
துயிறுறந் தனள்கொ லளிய டானே.

என்பது : பிரிந்துபோகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.

—பாண்டியனேனுதி நெடுங்கண்ணனார்.

பி - ம். 3. பருஉப்புறமுருஞ்சச். 8. தாள்கை பூட்டிய.

---

* "யானை வெரிநோக்கு சிறுபுற முரிஞ வொல்கி, யிட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென" (167.)

374. முல்லை

மாக்கடன் முகந்து மாதிரத் திருளி
மலர்தலை யுலகம் புதைய வலனேர்பு
பழங்கண் கொண்ட கொழும்பல கொண்மூப்
போழ்ந்த போலப் பலவுடன் மின்னித்
தாழ்ந்த போல நணிநணி வந்து
சோர்ந்த போலச் சொரிவன பயிற்றி
யிடியு முழக்கு மின்றிப் பாணர்
வடியுறு நல்யாழ் நரம்பிசைத் தன்ன
வின்குர லழிதுளி தலைஇ நன்பல
பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறைச்
செறிமண னிவந்த களர்தோன் றியவிற்
குறுமோட்டு மூதாய் குறுகு றேடி
* மணிமண்டு பவழம் போலக் காயா
வணிமிகு செம்ம லொளிப்பன மறையக்
கார்கவின் கொண்ட காமர் காலைச்
† செல்க தேரே நல்வலம் பெறுந
பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற்
‡ நிருந்திழை யரிவை விருந்தெதிர் கொளவே.

என்பது: பாசறைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச்சொல்லியது.

—இடைக்காடனார்.

பி-ம். 5. நணியணிவந்து. 15. காமர் மாலை. 18. யிகழ்ந்தெதிர் கொளவே.

---

* மணிமிடை பவளம் 14, 304.

† "செல்க தேரே நல்வலம் பெறுந" என்பது தானுற்ற இன்பத்தினைப் பாகற்குக் கூறியது என்பர், நச். (தொல் பொருள். சூ. 146) இவ்வடி 34-ஆம் பாட்டிலும் வந்தது காண்க.

‡ "விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழை" (324.)

375. பாலை

சென்று நீடிய ரல்ல ரவர்வயி
னினைத லானு யென்றிசி னிகுளை
யம்புதொடை யமைதி காண்மார் வம்பலர்
* கலனில ராயினுங் கொன்றுபுள் ளூட்டுங்
கல்லா வினைஞர் கலித்த கவலைக்
கண்ணரி யினனெடு குழீஇ நிணனருந்து
நெய்த்தோ ராடிய மல்லன் மொசிவிர
லத்த வெருவைச் † சேவல் சேர்ந்த
வரைசேர் யாத்த வெண்டிரள் விளைவிற
லெழாஅத் திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த விளம்பெருஞ் சென்னி
குடிக்கட வுகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டிற் ரேன்று
மஞ்சுவரு மரபின் வெஞ்சர மிறந்தோர்
நோயிலர் பெயர்த லறியி
னுழன் மன்னே தோழியென் கண்ணே.

என்பது: பிரிவிடை வேறுபட்டதலைமகள்தோழிக்குச்சொல்லியது.

—இடையன் சேந்தன்கோற்றனர்.

15 - ம். 9 - 10 விளைவிற லெழூஉத்திணி. 11. வளம் பெருஞ். 13. பாழினூறி. (இடையன் செங்கொற்றனர்.)

376. மருதம்

செல்லன் மகிழ்நநிற் செய்கட் டுடையென்மன்
கல்லா யானை கடிபுனல் கற்றென

---

* "கைப்பொரு ளில்லை யாயினு மெய்க்கொண்
டின்னுயிர் செகார்விட் டகறப் பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு வரியத ளிறுக்கு
மதனில் வேந்த னுளும், வதனுறு குன்றம்," (109)

† சேவல் சேர்ந்த யாத்த வெண்டிரள் கோட்டிற்ரேன்று மென்க.

மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
யொலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த வின்னிசை
யொண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச் சியாத்த காண்பி னவ்வயிற்
றிரும்பொலம் பாண்டின் மணியொடு தெளிர்ப்பப்
புனனயந் தாடு மத்தி யணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு மன்னே
நும்வயிற் புலத்தல் செல்லே மெம்வயிற்
பசந்தின்று காண்டிசி னுதலே யசும்பி
னந்தும்பு வள்ளை யழற்கொடி மயக்கி
வண்டோட்டு நெல்லின் வாங்குபீள் விரியத்
துய்த்தலை முடங்குத் தெறிக்கும் பொற்புடைக்
குரங்குளைப் புரவிக் குட்டுவன்
* மாந்தை யன்னவென் னலந்தந்து சென்மே.

என்பது : காதற் பரத்தை புலந்து சொல்லியது.

—பரணர்.

பி - ம். 16. முடங்குபு தெறிக்கும்.

377. பாலை

கோடை நீடலின் காடுபுலந் துருகச்
சிறுபுல் லுணவு நெறிபட மறுகி
நுண்பல் லெறும்பு கொண்டலைச் செறித்த
வித்தா வல்சி வீங்குசிலை மறவர்
பல்லூர் புக்குப் பயனிரை கவரக்
கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து
நரைமூ தாள ரதிர்தலை யிறச்சிக்
கவ்வைமனத் திருந்தும் வவ்வுவனப் பழிய
வரிநிறச் சிதலை யரித்தலிற் புல்லென்று

---

* இதையனுர்களவியற் பாடல்களாம் மாந்தை யென்றே தெரிகின்றது காண்க.

10 பெருநலஞ் சிதைந்த பேதைமுதிர் பொதியி
லின்னு வொருசிறைத் தங்கி யின்னகைச்
சிறுமென் சாயல் பெருநல மூள்ளி
வம்பல ராகியுங் கழிப மன்ற
நசைதர வந்தோ நிரந்தவை
15 யிசைபடப் பெய்த லாற்று வோரே.

என்பது: பொருள் கடைக்கூட்டியநெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

மாறோக்கத்துக் காமக்கண்ணி நப்பாலத்தனர்.

பி - ம். 1. வாடுபுலந்தக்க. 3. லெறும்பின் கொண்டனை. 12 நலமுன்னி. 13. கழிப்பினதந்தை மன்ற.

378. குறிஞ்சி

* நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பின்
வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள
வங்கூ ழாட்டிய வங்குழைய வேங்கை
நன்பொ னன்ன நறுந்தா துதிரக்
5 காமர் பீலி யாய்மயிற் றோகை
வேறுவே றினைத்த வரைவாழ் வருடைக்
கோடுமுற் றிளந்தகர் பாடுவிறந் தயல
வாடுகள வயிரி னினிய வாகப்
பசும்புற மென்சீ ரொசிய விசும்புகந்
10 திருங்க ணுடமைத் தயங்க விருக்கும்
பெருங்க ணுடன் பிரிந்த புலம்பு

---

* இவ்வடி மலைபடுகடாத்திலும் (478) வந்தது; ஆண்டு நச்சி னார்க்கினியர், "காவினையும், மதிலினையும், நியமத்தினையும், மறுகி னையும், தெருவினையுமுடைய பொருட்டாள் தங்கும் மிகவோங்கும் மதில்" என்று உரை கூறினர். "விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்" (227) என்னுமிடத்தும் இப்பொருளே கொள்க.

முடன்ற வன்னே யமரா நோக்கமும்
வடந்தை தூக்கும் வருபனி யற்சிரச்
சுடர்கெழு மண்டில மழுங்க ஞாயிறு
குடகடல் சேரும் படர்கூர் மாலையு
மனைத்து மடூஉநின்று கலிய வுளுற்றி
யாங்ங்னம் வாழ்தி யென்றி தோழி
நீங்கா வஞ்சினஞ் செய்துகத் தறந்தோ
ருள்ளா ராயினு முளனே யவர்நாட்
டள்ளிலைப் பலவின் கனிகவர் கைய
கல்லா மந்தி கடுவனெ டுகளுங்
கடுந்திற லணங்கி னெடும்பெருங் குன்றத்துப்
* பாடின் னருவி சூடி
வான்றேய் சிமையங் தோன்ற லானே.

என்பது : இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழிசொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

—காவட்டனர்.

பி - ம். 8. னினியவாகப். 13. யச்சிர. 16. கலியநீமற்றி. 24. வான்செய் சிமையங். (காவட்டனர்.)

379. பாலை

நங்கயங் துறைவி தொன்னல மழியத்
தெருளா மையிற் றீதொடு கெழீஇ
யருளற நிமிர்ந்த மூன்பொடு பொருள்புரிந்
தாள்வினைக் கெதிரிய மீளி நெஞ்சே
நினையினை யாயி னெனவ' கேண்மதி
விரிதிரை முந்நீர் மண்டிணி கிடக்கைப்
பரிதியஞ் செல்வம் பேர்துறை யின்றி
நனவி னியன்ற தாயினுங் கங்குற்
கனவி னற்றதன் கழிவே யதனுன்
விரவுறு பன்மலர் வண்டுசூழ் படைச்சிச்

* பாடின்னருவி - ஒலியினிய அருவி (82)

சுவன்மிசை யசைஇய நிலைதயங் குறுமுடி
யீண்டுபன் னூற்றம் வேண்டுவயி னுவப்பச்
செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்
பெய்திய கனைதுயி லேற்றெறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றே விலனே நீநின்
பல்பொருள் வேட்கையிற் சொல்வரை நீவிச்
செலவுவலி யுறுத்தனை யாயிற் காலொடு
கனையெரி நிகழ்ந்த மிலையி லங்காட்
டுழைப்புறத் தன்ன புள்ளி நீழ
லசைஇய பொழுதிற் பசைஇய வந்திவண்
மறப்பரும் பல்குண நிறத்துவந் துறுதர
வொருதிற நினைத்தல் செல்லாய் திரிபுநின்
றுறுபுலி யுழந்த வடுமருப் பொருத்தற்குப்
பிடியிடு பூசலி னடிபடக் குழிந்த
நிரம்பா நீளிடைத் தூங்கி
யிரங்குவை யல்லையோ வுரங்கெட மெலிந்தே.

என்பது : முன்னொருகாலத்துப் பொருண்முற்றிவந்த தலைமகன் பின்னும் பொருள்கடைக்கூட்டிய கெஞ்சிற்குச் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி - ம். 4. தாள்வினை தருக்கிய. 12. யீண்டுமணநாற்றம். 19, கனையெரி திகழ்ந்த.

380. நெய்தல்

* தோர்சே ணீக்கித் தமியன் வந்துநும்
மூர்யா தென்ன நுணிநணி யொதுங்கி

---

* "தோழி தலைமகனை மறுத்தற் கருமைபாராட்டற்கு உதாரண மாகக் கொண்டார் அகப்பொருள் விளக்க உரைகாரர் (சூ.148.) "நீகண்டனை யெனின் வாழ்....." என்ற திருக்கோவையார் 84 ஆம் செய்யுளில் இவ்வகப்பாட்டின் கருத்து அமைக்கப் பெற்றிருப்பது காண்க.

முன்னுட் போகிய துறைவ னெருநை
யகலிலை நாவ லுண்டுறை யுதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
ழுழை வேரள வீழ்துணைக் கிடூஉ
மலவற் காட்டி நற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிதுபெயர்ந் தோனே
யுதுக்காண் டோன்றுந் தேரே யின்று
நாமெதிர் கொள்ளா மாயிற் ழுனது *
துணிகுவன் போலா நாணுமிக வுடையன்
வெண்மண னெடுங்கோட்டு மறைகோ
வம்ம தோழி கூறுமதி நீயே.

என்பது : பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 1-2. தமியனில் வந்து, நும்மூர் யாதென்றுன்னி னனியொ துங்கி. 2. நீரணி யொதுங்கி. 7 நற்பாற்றம்மென. 9. யுவக்காண். 13. அம்மா வரிவை; அம்மவாழி.

381. பாலை

† ஆளி நன்மா னணங்குடை யொருத்தன்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப
வேந்தல் வெண்கோடு வாங்கிக் குருத்தருந்து
மஞ்சுவரத் தகுந வாங்கண் மஞ்சுதப
வழல்கான்று திரிதரு மலங்குகதிர் மண்டில
நிழல்சூன் றுண்ட நிரம்பா நீளிடைக்
கற்றுரிக் குடம்பைக் கதநாய் வடுகர்
விற்சினந் தணிந்த வெருவரு கவலைக்
குருதி யாடிய புலவுநா றருஞ்சிறை
யெருவைச் சேவ லீண்டுநிலைத் தொழுதி

---

* 'அது' என்பது மடம்லறுதலை.

† "வெண்மருப்பினைக் கீழ்ந்து சிங்கங் குருகுண்ண" (தேவா. திருக்கேதாரம். 9. சம்.)

பச்சூன் கொள்ளை சாற்றிப் பறைநிவந்து
செக்கர் வானின் விசும்பணி கொள்ளு
மருஞ்சுர நீந்திய நம்மினும் பொருந்தார்
மூனையரண் கடந்த வினைவ ருனைத்
தேணிமிர் நறுந்தார் * வானவ னுடற்றிய
வொன்னுத் தெவ்வர் மன்னெயில் போலப்
பெரும்பாழ் கொண்ட மேனிய ணெடிதுயிர்த்து
† வருந்துங்கொ லளிய டானே சுரும்புண
ரெடுநீர் பயந்த நிரையிதழ்க் குவளை
யெதிர்மல ரிணைப்போ தன்னதன்
‡ னரிமதர் மழைக்கண் டெண்பனி கொளவே.

என்பது : தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரை இளங்கௌசிகனார்.

பி - ம். 4. மஞ்சுவருதகைய. 11. பறையநிவந்து. 13. மருஞ்சுர முன்னிய.

382. குறிஞ்சி

பிறருறு விழுமம் பிறரு நோப
தம்முறு விழுமம் தமக்கோ § தஞ்சங்
கடம்புகொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல வொருதுக் கின்னியங்
காடுகெழு நெடுவேட் பாடுகொளைக் கேற்ப
வணங்கமர் வியன்களம் பொலியப் பையத்
தூங்குதல் புரிந்தனர் நமரென வாங்கவற்
கறியக் கூறல் வேண்டுந் தோழி
யருவி பாய்ந்த கருவிரன் மந்தி

---

* "வானவரம்ப, னுடன்முனைக் கலங்கிய வுடைமதி லோரரண் போல" (45.)

† "வருந்துமா லளியடிருந்திழைதானே" (169; 221.)

‡ இவ்வீற்றடி. 149-ஆம் பாட்டிலும் வந்தது காண்க.

§ தஞ்சம் - எளிது என்னும் பொருட்டு. (தொல். சொல். 166.)

10 * செழுங்கோட் பலவின் பழம்புணை யாகச்
சாரற் பேரூர் முன்றுறை யிழிதரும்
வறனுற லறியாச் சோலை
விறன்மலை நாடன் சொன்னயந் தோயே.

என்பது : இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

—கபிலர்.

பி - ம். 5. பாடுகொளைக்கொப்ப. 6. அணங்கயர்வியன். 9 அருவியாய்ந்த.

383. பாலை

† தற்புரந் தெடுத்த வெற்றுறந் துள்ளா
லூருஞ் சேரியு மோராங் கலரெழக்
காடுங் கானமு மவணெடு துணிந்து
நாடுந் தேயமு நனிபல விறந்த
5 சிறுவன் கண்ணிக் கேர்தே றுவரென
வாடினை வாழியோ வயலை நாடொறும்
பல்கிளைக் கொடிக்கொம் பலமர மலர்ந்த
வல்குற் றலைக்கூட் டங்குழை யுதவிய
வினையமை வரனீர் விழுத்தொடி தத்தக்
10 கமஞ்சூற் பெருநிரை தயங்க முகந்துகொண்
டாய்மடக் கண்ண டாய்முக நோக்கிப்
பெய்சிலம் பொலிப்பப் பெயர்வனள் வைகலு
மாரநீ ரூட்டிப் புரப்போர்
யார்மற்றுப் பெறுகுவை யளியை நீயே.

என்பது : மகட்போக்கிய தாய் சொல்லியது.

—கயமனார்.

பி - ம். 1. தற்பயந்; வெற்றுறந்தருளா; 3. காடுங்காவு. 7-8. பல்கிளைக் கொடிக்கொம் பலர்ந்த வல்குற் றழையணிக் கூட்டுங் குழைபல வுதவிய. 14. பெறுகுவை யையநீ யெனவே.

---

*மந்திபலாப் பழந்தழுவுதலை, 352-ஆம் பாடலினுங் காண்க.

† "ஈன்று புறந்தந்த வெம்மு முள்ளாள்' 35.)

384. முல்லை

* இருந்த வேந்த னருந்தெழின் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யாணு
மேறிய தறிந்தன் றல்லது வந்தவாறு
நனியறிந் தன்றே விலனே தாஅய்
முயற்பற ழுகளு முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூ ராங்கண்
மெல்லிய லரிவை யில்வயி னிறீஇ
யிழிமி னென்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
வுரைமதி வாழியோ வலவ வெனத்தன்
வரைமருண் மார்பி னளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனை னெடுந்தகை
யிருந்தோ பெற்றன டிருந்திழை யோளே.

என்பது : வினைமுற்றிய தலைமகனது வரவுகண்டு உழையர் சொல்வியது.

—ஒக்கூர் மாசாத்தியார்.

பி - ம். (குடவாயிற் கீரத்தனர்.)

385. பாலை

தன்னே ரன்ன வாயமு மயிலிய
லென்னே ரன்ன தாயருங் காணைக்
கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை யுறந்தை யன்ன
பொன்னுடை நெடுநகர்ப் புரையோ ரயர
நன்மாண் விழவிற் றகர மண்ணி
யாம்பல புணர்ப்பச் சொல்லாள் காம்பொடு

---

* இது 'பாகன் சிறப்புக் கூறியவாறு" என்றும், "பெருந் தேர் யாணு.....வாழியோவலவ" என உள்ளம் போல; உற்றுழி உதவிற்றென தலைவன் கூறியவாறு காண்க" என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 146; 174.)

நெல்லி நீடிய கல்லறைக் கவாஅ
னத்த வாலத் தலந்தலை நெடுவீழ்
திதிக் குறங்கிற் றிருந்த வுரிஞு
வளையுடை முன்கை யளஇக் கிளைய
பயிலிரும் பிணையற் பசுங்காழ்க் கோவை
யகலமை யல்குல் பற்றிக் கூந்த
லாடுமயிற் பீலியிற் பொங்க நன்றுந்
தானமர் துணைவ னூக்க வுங்கி
யுள்ளாது கழிந்த முள்ளெயிற்றுத் துவர்வாய்ச்
சிறுவன், கண்ணி சிலம்புகழீஇ
யிறியாத் தேளத்த ளாகுதல் கொடிதே.

என்பது : மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

—குடவாயிற் கீரத்தனர்.

386. மருதம்

* பொய்கை நீர்நாய்ப் புலவுநா றிரும்போத்து
† வாளை நாளிரை தேரு மூர
நாணினென் பெரும யானே பாணன்
மல்லடு மார்பின் வலியுற வருந்தி
யெதிர்தலைக் கொண்ட வாரியப் பொருந
னிறைத்திரண் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணைய ணுணி யாங்கு மறையினண்
மெல்ல வந்து நல்ல கூறி
மையீ ரோதி மடமோ யாணுதற்
சேரி யேனே யயலி லாட்டியே

---

* இதனுள் யான் நினக்குத் தோழியாவேனெனப் பரத்தை நீவிய பேணுவொழுக்கத்திற்குத் தலைவி நாணியதுகண்டு தான் நாணினேனென்று தலைவற்குத் தோழி கூறியவாறு காண்க" என் பர் நச், (தொல். பொருள். 150.)

† "வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்"; "நாளிரை தரீஇய வெழுந்த நீர்நாய் வாளையொ டுழப்ப" (16; 336)

னுங்கை யாகுவ னினக்கெனத் தன்கைத்
தொடுமணி மெல்விர றண்ணெனத் தைவர
நுதலுங் கூந்தலு நீவிப்
பகல்வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே.

என்பது : தோழி வாயின்மறுத்தது; தலைமகட்குச்சொல்லிய துஉமாம்.

—பரணர்.

பி - ம். 2. தருஉமூர. 6. நிறைத்தாண் முழவுத்தோள்.

387. பாலை

* திருந்திழை நெகிழ்ந்து பெருந்தோள் சாஅ
யரிமதர் மழைக்கண் கலுழச் செல்வீர்
வருவீ ராகுத லுரைமின் மன்னே
புகருணப் பறைந்த புன்றலைச் சிறுஅரொ
டவ்வரி கொன்ற கறைசேர் வள்ளுகிர்ப்
† பசைவிரற் புலித்தி நெடிதுபிசைந் தூட்டிய
பூந்துகி லிமைக்கும் பொலன்கா ழல்கு
லவ்வரி சிதைய நோக்கி வெவ்வினைப்
பயிலரிற் கலப்பை வேட்டுவிளி வெரீஇ
வரிப்புற வீதலின் மணிக்கட் பேடை
நுண்பொறி யணிந்த வெருத்திற் கூர்முட்
செங்காற் சேவற் பயிரு மாங்கண்
வில்லீண் டருஞ்சமந் தகைய நூறி
‡ கல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகற் பொருந்தி யிமையா

---

* "செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்,
வல்வரவு வாழ்வார்க் குரை." என்ற (1151) குறளோடு இப் பாட்டுக் கருத்தொத்தமை காண்க.

† "பசைகொள் மெல்விரற் பெருந்தோட் புலித்தி" (38)

‡ "கல்லமர்க்கடந்த நாணுடை மறவர் பெயரும் பீடுமெழுதி"

திரைநுரைஇக் கிடந்த முதுவாய்ப் *பல்லி
சிறிய தேற்றுவ தாயிற் பெரிய
வோடை யானை யுயர்ந்தோ ராயினு
நின்றுங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென விருக்கிற் போர்க்கே.

என்பது . தலைமகளது குறிப்பறிந்து தோழி தலைமகனைச் செல வழுங்கச் சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 1. திருந்திழை யெனிழ்த்தும். 3. வருவீராகி. 8. யெவ்வினைப். 9. பயில் வரிற் கலப்பை.

388. குறிஞ்சி

அம்ம வாழி தோழி நம்மலை
யமையறுத் தியற்றிய வெவ்வாய்த் தட்டையி
னறுவிரை யார மறவெறிந் தழுத
வுலைக்குரற் சிறுதினை கவர்தலிற் கிளையமல்
பெருவரை யடுக்கத்துக் குரீஇ யோப்பி
யோங்கிருஞ் சிலம்பி னெள்ளினர் நறுவீ
வேங்கையங் கவட்டிடை நிவந்த விதணத்துப்
பொன்மரு ணறுந்தா தூதுந் தும்பி
யின்னிசை யோரா விருந்தன மாக
†மையீ ரோதி மடநல் லீரே
நொவ்வியற் பகழி பாய்ந்தெனப் புண்கூர்ந்
தெவ்வமொடு வந்த வுயர்மருப் பொருத்தனும்
புனத்துழிப் போக வுறுமோ மற்றென
சினவுக்கொண் ணுமலி செயிர்த்துப்புடை யாடச்
சொல்லிக் கழிந்த வல்விற் காளை
சாந்தா ரகலமுந் தகையு மிகநயந்
தீங்குரா முழக்கு மெவ்வ முணரா

---

* "கணிவாய்ப் பல்லியகாடு' (151.)

† இக்கருத்து 48-ஆம் பாட்டினும் கூறப்பெற்றது.

ணன்னர் நெஞ்சமொடு மயங்கி வெறியென
வன்னை தந்த முதுவாய் வேல
னெம்முறை யணங்கலின் வந்தன் றிந்நோய்
தணிமருந் தறிவ லென்னு மாயின்
வினவி னெவனு மற்றே கனல்சின
மையல் வேழ மெய்யுளம் போக
வூட்டி யன்ன வுன்புர ளம்பொடு
காட்டுமா னடிவழி யொற்றி
வேட்டஞ் செல்லுமோ நும்மிறை யெனவே.

என்பது : இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது; தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.

—ஊட்டியார்.

பி - ம். 4. வினைகுரற் சிறுதினை. நொவ்வையிற். 12. தெவ்வமொடு போந்த. 22. வினவினெவனே.

389. பாலை

அறியாய் வாழி தோழி நெறிகுரற்
சாந்தார் கூந்த லுளரிப் போதணிந்து
* தேங்கமழ் திருநுதற் றிலகந் தைஇயு
பல்லித ழெதிர்மலர் கிள்ளி வேறுபட
நல்லிள வனமுலை யல்லியொ டப்பியும்
பெருந்தோட் டொய்யில் வரித்துஞ் சிறுபரட்
டஞ்செஞ் சீறடிப் பஞ்சி யூட்டியு
மெற்புறந் தந்து நிற்பா ராட்டிப்
பல்பூஞ் சேக்கையிற் பகலு நீங்கார்
மனைவயி னிருப்பவர் மன்னே துணைதந்
திரப்போ ரேந்துகை நிறையப் புரப்போர்
புலம்பி லுள்ளமொடு புதுவதந் துவக்கு
மரும்பொருள் வேட்ட மெண்ணிக் கறுத்தோர்
சிறுபுன் னிளவிச் செல்லல் பாழ்பட
நல்லிசை தம்வயி னிறுமார் வல்வேல்

* முருகு 24 - 37 ஆம் அடிகளை நோக்குக.

வான வரம்ப னன்னுட் டும்பர்
வேனி னீடிய வெங்கடற் றடைமுத
லாறுசெல் வம்பலர் வேறுபிரிந் தலறக்
கொலைவெம் மையி னிலைபெயர்ந் துறையும்
பெருங்களிறு தொலைச்சிய விருங்கே ழேற்றைச்
செம்புல மருங்கிற் றன்கால் வாங்கி
வலம்படு வென்றியொடு சிலம்பகஞ் சிலம்பப்
படுமழை யுருமின் முழங்கு
* நெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

என்பது : பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.

—நக்கீரர்.

பி - ம். 10. மனைவயினிருந்தவர். 12. புதுவதுந்துய்க்கும். 13. பெரும்பொருள்.

390. நெய்தல்

உவர்விளை யுப்பின் கொள்ளை சாற்றி
யதர்படு பூழிய சேட்புலம் படரும்
ததர்கோ லுமண ரூர்போகு நெடுநெறிக்
கணநிரை வாழ்க்கை தானன்று கொல்லோ
வணர்சுரி முச்சி முழுதுமற் புரள
வைதக லல்குல் கவின்பெறப் புனைந்த
பல்குழைத் தொடலை யொல்குவயி னெல்லி
† நெல்லு மூப்பு நேரே யூரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறு நுவலு
மவ்வாங் குந்தி யமைத்தோ ளாய்நின்
மெய்வா ழுப்பின் விலையெய் யாமெனச்
சிறிய விலங்கின மாகப் பெரியத
னரிவே யுண்க ணமர்த்தன ணோக்கி
யாரீ ரோவெம் விலங்கி யீரென

---

* இவ்வீற்றடி 347-ஆம் பாட்டிலும் வந்தது காண்க.

† "நெல்லினேரே வெண்கலுப் பென" (140)

15 மூரன் முறுவலள் பேர்வன ணின்ற
சின்னிரை வால்வளைப் பொலிந்த
பன்மாண் பேதைக் கொழிந்ததென் னெஞ்சே.

என்பது : தலைமகன் பாங்கற்குச் சொல்லியது; நெஞ்சிற்குச் சொல்லியதாகுமாம்.

—அம்மூவனார்.

பி . ம். 1. உயர்வினை .2. யதர்படுவழிய. 4. வாழ்க்கைக் கான என்று. 9. சேரிதொறியலு. 11. விலையேயாமென. 15. போவன ணின்ற. 17. டன்மாண்கோதை.

391. பாலை

பார்வல் வெருகின் கூரெயிற் றன்ன
வரிமென் முகைய நுண்கொடி யதிரல்
பல்கல வட்டியர் கொள்விடம் பெறுஅர்
விலைஞ ரொழித்த தலைவேய் கான்மலர்
5 தேம்பாய் முல்லையொடு ஞாங்கர்ப் போக்கித்
தண்ணறுங் கதுப்பிற் புணர்ந்தோர் புனைந்தவென்
பொதிமாண் பன்முடி காண்டொறும் பண்டைப்
பழவணி யுள்ளப் படுமா ரூழி
யின்ரெடு சின்னுள் வரினுஞ் சென்றுநனி
10 படாஅ வாகுமெங் கண்ணே கடாஅ
வான்மருப் பசைத்தல் செல்லாது யானைதன்
வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை
குன்றுபுகு பாம்பிற் ரூன்று
மென்றூழ் வைப்பிற் சுரனிறந் தோரே.

என்பது : பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—காவன்முல்லைப் பூதனார்.

பி - ம். (காவன் முல்லைப்பூதத்தனார்.)

392. குறிஞ்சி

தாழ்பெருந் தடக்கை தலைஇக் கானத்து
* வீழ்பிடி கெடுத்த வெண்கோட் டியானை
யுண்குளகு மறுத்த வுயக்கத் தன்ன
பண்புடை யாக்கைச் சிதைவுநன் கறீஇப்
பின்னிலை முனியா னுகி நன்றுந்
தாதுசெய் பாவை யன்ன தேயன்
மாதர் மெல்லியன் மடநல் லோள்வயிற்
றீதின் றுக நீபுணை புகுகென
வென்னுந் தண்டு மாயின் மற்றவ
னழிதகப் பெயர்த்த னனியின் னுதே
யொல்லினி வாழி தோழி கல்லெனக்
கணமழை பொழிந்த கான்மடி யிரவிற்
றினைமே யானை யினனிரிந் தோடக்
† கல்லுயர் கழுதிற் சேணு னெறிந்த
வல்வாய்க் கவணின் கடுவெடி யொல்லென
மறப்புலி யுரற வாரணங் கதற
நனவுறு கட்சி நன்மயி லால
மலையுடன் வெரூஉம் மாக்கல் வெற்பின்
பிரியுந ருகலோ வரிதே யதாஅன்
றுரிதல் பண்பிற் பிரியுந ருயின்
வினைதவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன்
மூனைகொ ருனையொடு முன்வந் திறுப்பத்
தன்வரம் பாகிய மன்னெயி லிருக்கை
யாற்ரு மையிற் பிடித்த வேல்வலித்
தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற
விழைதக வோங்கிய கழைதுஞ்சு மருங்கிற்

---

* "வீழ்பிடி கெடுத்த நெடுந்தாள் யானை, சூர்புக லடுக்கத்து மழைமாறு முழங்கும்" (359.)

† கவண்கொண் டெறிந்து யானை முதலியவற்றை ஓட்டலை (292; 309) முதலியபாடல்களிற் காண்க.

கானமர் நன்னன் போல
யாஞ குவனின் னலந்தரு வேனே.

என்பது : பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலை மகட்குக் குறை நயப்பக் கூறியது.

—மோசிகீரனார்.

பி - ம். 1. தலைஇயகான. 6. தையன். 16. மறப்புலி யுற்ற வர்ரணங். 18. பிலையுட்ன் வரூஉம். 24. யாற்றருமையிற் பிடித் தவேல். 25. பிழைவர.

393. பாலை

கோடுயர் பிறங்கற் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதர வுள்ளத்
தாறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
மூதைச்சுவற் கலித்த வீரிலை நெடுந்தோட்டுக்
கவைக்கதிர் வரகின் காறொகு * பொங்கழி
கவட்டடிப் பொருத பல்சினை யுதிர்வை
யகன்கட் பாறை வெவ்வயிற் றெறீஇ
வரியணி பணைத்தோள் வார்செவித் தன்னேய்ர்
பண்ணை வெண்பழத் தரிசி யேய்ப்பச்
சுழன்மரஞ் சொலித்த சுளகலை வெண்காழ்
தொடிமா ணுலக்கை யூழிற் போக்கி
யுரன்முகங் காட்டிய சுரைநிறை கொள்ளை
யாங்க ணிருஞ்சுனை நீரொடு மூர்வாய்க்
கழிபடு குழிசிக் கல்லடுப் பேற்றி
யிணர்தை கடுக்கை யீண்டிய தாதிற்
குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்
மதர்வை கல்லான் பாலொடு பகுக்கு
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்றூங் குயர்வரை நன்னாட் டும்பர்
வேங்கட மிறந்தன ராயினு மாண்டவர்

* பொங்கழி - தானற்றுப்பொலி.

நீடலர் வாழி தோழி தோற்றுகொ
ளுருகெழு மஞ்ஞை யொலிசே ரேய்ப்பத்
தகர மண்ணிய தண்ணறு முச்சிப்
புகரில் குவளைப் போதொடு தெரியிதழ்
வேணி * லதிரல் வேய்ந்தநின்
னேமுறு புணர்ச்சி யின்றுயின் மறந்தே.

என்பது : பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழிவற்புறுத்தியது.

—மாமூலனர்.

பி - ம். 3. காய்பசி நீர. 6. பல்கிளையுதிர்பவை. 7. பாறைச் செவ்வையிற். 8. வண்செவித் தன்னையர். 24. ததரிதழ்.

394. முல்லை

களவும் புளித்தன விளவும் பழுனின
சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயி
ரிதைப்புன வரகி னவைப்புமா ணரிசியொடு
கார்வாய்த் தொழிந்த வீர்வாய்ப் புற்றத்
தீயல்பெய் தட்ட வின்புளி வெஞ்சோறு
சேதான் வெண்ணெய் வெம்புறத் துருக
விளைய ரருந்தப் பின்றை நீயு
மிடுமுள் வேலி மூடக்காற் பந்தர்ப்
புதுக்கலத் தன்ன செவ்வாய்ச் சிற்றிற்
புனையிருங் கதுப்பினின் மனையோ ளயரப்
பாலுடை யடிசி றுரூஇய வொருநாண்
மாவண் டோன்றல் வந்தனை சென்மோ
காடுறை யிடையன் யாடுதலைப் பெயர்க்கு
மடிவிடு வீளை வெரீஇக் குறுமுயன்
மன்ற விரும்புத லொளிக்கும்
புன்புல வைப்பினெஞ் சிறுநல் லூரே.

* மகளிர் அதிரற்பூச்சூடுதல், 393-ஆம் பாட்டினுங் கூறப்பட்டது காண்க.

என்பது: இரவுக்குறித் தலைமகளை இடத்துய்த்துவந்து தோழி தலைமகனை வரைவுகடாயது.

—நன்பலூர்ச் சிறுமேதாவியார்.

பி - ம். 4. சார்வாய்ப் பொழிந்த.

395. பாலை

தண்கயம் பயந்த வண்காற் குவளை
மாரி மாமலர் பெயற்கேற் றன்ன
நீரொடு நிறைந்த பேரமர் மழைக்கண்
பனிவா ரெவ்வந் தீர வினிவரி
னன்றுமன் வாழி தோழி தெறுகதி
ரீர மைத்த நீரறு நனந்தலை
யழன்மேய்ந் துண்ட நிழன்மா யியவின்
வறன்மரத் தன்ன கவைமருப் பெழிற்கலை
யறலவிர்ந் தன்ன தேர்நசை யோடிப்
புலம்புவழிப் பட்ட வுலமர லுள்ளமொ
டோய்பிணைப் பயிரு மெலிந்தழி படர்கூர
லருஞ்சுரஞ் செல்லு ராட்செத் தோர்க்குந்
திருந்தரை ஞெமைய பெரும்புனக் குன்றத்
தாடுகழை யிருவெதிர் நாலுங்
கோடுகாய் கடற்ற காடிறந் தோரே.

என்பது: பிரிவிடைத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—எயினந்தைமகனார் இளங்கீரனார்.

பி - ம். 2. மாரியாம்பல் பெயற்கேற். 9. யறலிவர். 11. மேய்பிணை.

369. மருதம்

* தொடுத்தென் மகிழ்ந செல்லல் கொடித்தேர்ப்
பொலம்பூ ணன்னன் புள்ளுநாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்க

---

* இப்பாட்டினைக் காமக்கிழத்தி என் றலைத்தலைவனத்தொடுத்துக் கூறியதற்கு உதாரணமாகக் கொள்வர் நச். (தொல். பொருள். 151.)

ணஞ்ச லென்ற வாஅ யெயின
னிகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்தன்
னுயிர்கொடுத் தனனே சொல்லிய தமையாது
தெறலருங் கடவுண் முன்னர்த் தோற்றி
மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்
தார்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்பநின்
மார்புதரு கல்லாய் பிறனு யினையே
யினியான் விடுக்குவெ னல்லென் மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திற லத்தி யாடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்குநின்
மனையோள் வவ்வலு மஞ்சுவல் சினைஇ
யாரிய ரலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி யன்னவென் னலந்தந்து சென்மே.

என்பது : காதற்பாத்தை தலைமகற்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 2. புனலுடு. 14. கொண்டொழுத்தாங்கு. 18. வேந்தரைப்பணித்தோன்.

397. பாலை

என்மகள் பெருமடம் யான்பா ராட்டத்
தாய்தன் செம்மல் கண்டுகட னிறுப்ப
முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்
மணனிடை யாகக் கொள்ளான் கல்பகக்
கணமழை துறந்த நான்மயங் கழுவ
மெளிய வாக வேந்துகொடி பரந்த
பொறிவரி யல்குன் மாஅ யோட்கெனத்
தணிந்த பருவஞ் செல்லான் படர்தரத்
துணிந்தோன் மன்றவத் தினைவெங் காளை

கடும்பகட் டொருத்த னடுங்கக் குத்திப்
போழ்புண் படுத்த பொரியரை யோமைப்
பெரும்பொளிச் சேயரை நோக்கி யூன்செத்துக்
கருங்கால் யாத்துப் பருந்துவந் திறுக்குஞ்-
சேணுயர்ந் தோங்கிய வானுயர் நெடுங்கோட்டுக்
கோடை வெவ்வளிக் குலமரூஉம்
புல்லிலை வெதிர நெல்லிளை காடே.

என்பது : மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

—கயமனார்.

பி - ம். 15-16. வெவ்வளிக் குரல.

398. குறிஞ்சி

இழைநிலை நெகிழ வெவ்வங் கூரப்
படர்மலி வருத்தமொடு பலபுலந் தசைஇ
மென்றோ ணெகிழச் சாஅய்க் கொன்றை
யூழுறு மலரிற் பாழ்பட முற்றிய
பசலை மேனி நோக்கி நுதல்பசந்
தின்னே மாகிய வெம்மிவ ணருளா
னும்மோன் செய்த கொடுமைக் கிம்மென்
றலமரன் மழைக்கண் டெண்பனி மல்க
நன்றுபுற மாறி யகறல் யாழநின்
குன்றுகெழு நாடற் கென்னெனப் படுமோ
கரைபொரு நீத்த முரையெனக் கழறி
நின்னெஞ் புலத்த லஞ்சி யவர்மலைப்
பன்மலர் போர்த்து நாணுமிக வொடுங்கி
மறைந்தனை கழியு நிற்றந்து செலுத்தி
நயனறத் துறத்தல் வல்லி யோமே
நொதுமல ளாக வேண்டா
தழற்சினை வேங்கை நிழற்றவிர்ந் தசைஇ
மாரி புறந்தர நந்தி யார்ரியர்
பொன்படு நெடுவரை புரையு மெந்தை
பல்பூங் கானத் தல்கி யின்றிவட்

சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
குயவரி யிரும்போத்துப் பொருத புண்கூர்ந்
துயங்குபிடி தழீஇய மதனழி யானை
வாங்கமைக் கழையி னசலுமவ
25 ரோங்குமலை நாட்டி னெடுவரு வோயே.

என்பது : கர்மமிக்க கழிபடர்கிளவியால் வரைவிடத்துக்கண் தலைமகள், தலைமகன் வரையினின்றும்போந்த ஆற்றெறுபுலந்து சொல்லியது.

—இம்மென் கீரனார்.

பி - ம். 1. இழை நிலை நெகிழ்ந்த.

399. பாலை

சிமையக் குரல சாந்தருந்தி யிருளி
யிமயக் கான நாறுங் கூந்த
னன்னுத லரிவை யின்னுற் லாகம்
பருகு வன்ன காத லுள்ளமொடு
5 திருகுபு முயங்க லின்றியவ ணீடார்
கடற்றடை மருங்கிற் கணிச்சியிற் குழித்த
வுடைக்க ணீண்டமை யூற லுண்ட
பாடின் றெண்மணிப் பயங்கெழு பெருநிரை
வாடுபுலம் புக்கெனக் கோடுதுவைத் தகற்றி
10 யொல்குநிலைக் கடுக்கை யல்குநிழ லசைஇப்
பல்லான் கோவலர் கல்லா தூதுஞ்
சிறுவெதிர்ந் தீங்குழற் புலம்புகொ டெள்விளி
மையில் பளிங்கி னன்ன தோற்றப்
பல்கா னெல்லிப் பைங்கா யருந்தி
15 மெல்கிடு மடமரை யோர்க்கு மத்தங்
காய்கதிர் கடுகிய கவினழி பிறங்கல்
வேய்கண் ணுடைந்த சிமைய
வாய்படு மருங்கின் மலையிறந் தோரே.

என்பது : தலைமகன்பிரிவின்கண் தலைமகளைத் தோழிவற்புறுத்தியது.

—எயினந்தைமகனார் இளங்கீரனார்.

400. நெய்தல்

நகைநன் றம்ம தானே யவனெடு
மனையிறந் தல்கினு மலரென நயந்து
கான லல்கிய நங்கள வகலப்
பல்புரிந் தியற வுற்ற நல்வினை
நூலமை மரபி னீல வுந்திக்
கொய்ம்மயி ரெருத்தம் பிணர்படப் பெருகி
நெய்ம்மிதி முனைஇய கொழுஞ்சோற் றூர்கை
நிரலியைந் தொன்றிய செலவிற் செந்தினைக்
குரல்வார்ந் தன்ன குவவுத்தலை நண்ண
வீங்குசுவன் மொசியத் தாங்குநுகந் தழீஇப்
பூம்பொறிப் பல்படை யொலிப்பப் பூட்டி
மதியுடை வலவ னேவலி னிகுதுறைப்
புனல்பாய்ந் தன்ன வாமான் றிண்டேர்க்
கணைகழிந் தன்ன நோன்கால் வண்பரி
பால்கண் டன்ன வூதை வெண்மணற்
கால்கண் டன்ன வழிபடப் போகி
யயிர்ச்சேற் றள்ள லழுவத் தாங்க
ணிருணீ ரிட்டுச்சுர நீந்தித் துறைகெழு
மெல்லம் புலம்பன் வந்த ஞான்றைப்
பூமலி யிருங்கழித் துயல்வரு மடையொடு
நேமி தந்த நெடுநீர் நெய்தல்
விளையா விளங்க ணுறப் பலவுடன்
பொதியவிழ் தண்மலர் கண்டு நன்றும்
புதுவ தாகின் றம்ம பழவிறற்
பாடெழுந் திரங்கு முந்நீர்
நீடிரும் பெண்ணைநம் மழுங்க வூரே.

என்பது : தலைமகன் வரைந்தெய்திய பின்றைத் தோழி தலைமகட்குச்சொல்லியது.

—உலோச்சனார்.

பி - ம். 10, நுகர்தளா. 23. பொதியவிழ்தலாக் கண்டு.

நெடுந்நோகை ஆகிய அகநானூறு நிறைவேறியது.

ஸ்ரீ :

பாயிரம்

நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதிய ரவைக்க
ணறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்மேய் நல்லிசைச் சான்மேர் குழீஇ
யருந்தமிழ் மூன்றுங் தெரிந்த காலை
யாய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டு
ணெடிய வாகி யடிநிமிர்ந் தொழுகிய
வின்பப் பகுதி யின்பொருட் பாட
னனு றெடுத்து நூனவில் புலவர்
களித்த மும்மதக் களிற்றி யானைநிரை
மணியொடு மிடைந்த வணிகிளர் பவள
மேவிய நித்திலக் கோவை யென்றுங்
கத்தகு பண்பின் முத்திற மாக
முன்னினர் தொகுத்த நன்னெடுந் தொகைக்குக்
கருத்தெனப் பண்பிலே ருரைத்தவை நாடி
னவ்வகைக் கவைதாஞ் செவ்விய வன்றி
வரியவை யாகிய பொருண்மை நோக்கிக்
கோட்ட மின்றிப் பாட்டொடு பொருந்தத்
தகவொடு சிறந்த வகவ னடையாற்
கருத்தினி தியற்றி யோனே பரித்தேர்
வளவர் காக்கும் வளநாட் டுள்ளூ
நாடெனச் சிறந்த பீடுகெழு சிறப்பிற்
கெடலருஞ் செல்வத் திடையள நாட்டுத்
தீதில் கொள்கை மூதூ ருள்ளூ
மூரெனச் சிறந்த சீர்கெழு மணக்குடிச்
செம்மை சான்ற தேவன்
பெருண்மை சான்ற நன்மை யோனே.

இத்தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினன், இடையளநாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனென வில்லவதரையன்.

நெடுந்தொகை நானூறுங் கருத்திலோடு முடிந்தன. இவைபாடின கவிகள் நூற்றுநாற்பத்தைவர்.

இத்தொகைப்பாட்டிற் கடியளவு சிறுமை பதின்மூன்று, பெருமை மூப்பத்தொன்று. தொகுப்பித்தான் பாண்டிய னுக்கிரப்பெருவழுதி. தொகுத்தான் மதுரை உப்பூரிகுடிகிழான்மகனுவான் உருத்திரசன்மனென்பான்.

"வண்டுபடத்ததைந்தகண்ணி" என்பது முதலாக "நெடுவேண்மார்பின்" என்பதீறுகக்கிடந்தபாட்டுநூற்றிரு பதும் களிற்றியானை நிரை யெனப்படும். இப்பெயர் கார ணத்தாற்பெற்றது; இது பொருட்காரணமாகக் கொள்க.

இத்தொகையிற் பாட்டிற்கடியளவு பதின்மூன்றிற்கொண்டு மூப்பத்தேழளவு முயரப்பெறும்.

"வண்டுபடத் ததைந்த" என்பது முதலாக "நெடுவேண்மார் பின்" என்பதீறுகக் கிடந்த நூற்றிருபது பாட்டும் "களிற்றியானை நிரை"; இப்பெயர் காரணப்பெயர்; செய்யுட் காரணமோ பொருட் காரணமோ எனிற் பொருட்காரணமென வுணர்க.

"நாணைகையுடைய நெஞ்சே" என்பது முதலாக "நாள்வலி" என்பதீறுகக் கிடந்த நூற்றொண்பது பாட்டும் "மணிமிடைபவ ளம்"; இப்பெயர் உவமையாற்பெற்ற பெயர், செய்யுளும் பொரு ளுந் தம்முள் ளொவ்வாமையால்.

"வறனுறு" என்பது முதலாக "நகைகன்று" என்பதீறுகக் கிடந்தபாட்டுநூறும் "நித்திலக்கோவை", இவை செய்யுளும் பொருளு மொக்குமாகலின்.

வழக்கத்தாற் பாட்டாராய்ந்து தொகுத்தான் மதுரை யுப்பூரி கிழான் மகனுவான் உருத்திரசருமன்; தொகுப்பித்தான் பாண்டிய னுக்கிரப்பெருவழுதி.

அகநானூறு முடிந்தது என்றும் பாடம்.

"நாணகையுடைய" என்பது முதலாக "நாள்வலை முகந்த கோள்வலைப் பரதவர்" என்பதீறுகக் கிடந்தபாட்டு நூற்றெண்பதும் மணிமிடைபவளம் எனப்படும். இது வுங்காரணப் பெயர்; என்னை? செய்யுளும் பொருளும் ஒவ் வாமையால்.

"வறனுறுசெய்தி" என்பது முதலாக "நகைநன்றம்ம தானேயவனெடு" என்பதீறுகக் கிடந்த பாட்டுநூறும் நித்திலக் கோவை யெனப்படும்; செய்யுளும் பொருளு மொக்குமாகலான்.

வியமெல்லாம் வெண்டே ரியக்கங் கயமலர்ந்த
தாமரையா ருகத் தகைபெறீஇக் காமர்
நறுமுல்லை நான்காக நாட்டி வெறிமாண்ட
வெட்டு மிரண்டுங் குறிஞ்சியாக் குட்டத்
திவர்திரை பத்தா வியற்பட யாத்தான்
ருகையி னெடியதனைத் தோலாச் செவியான்
வகையி னெடியதனை வைப்பு.

ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை யோதாது
நின்றவற்றி னுன்கு நெறிமுல்லை—யன்றியே
யாரு மருத மணிநெய்த லேயிரண்டு
கூரு தவைகுறிஞ்சிக் கூற்று.

பாலை வியமெல்லாம் பத்தாம் பணிநெய்த
னுலு நனிமுல்லை நாடுங்கான்—மேலையோர்
தேறு மிரண்டெட்ட டிவைகுறிஞ்சி செந்தமிழி
னுறு மருத * மகம்.

ஹரிஃ ஓம்.

---

* மவை என்றும் பாடம்.

ஸ்ரீ:

செய்யுண் முதற் குறிப்பகாதி.

அகல் வாய்வான, 365.
அகலறை மலர்ந்த, 105.
அகலிரு விசும்பசம், 214.
அணங்குடை நெடுவரை, 22.
அணங்குடை முன்னீர், 207.
அத்தப் பாதிரி, 191.
அம்மவாழி கேளிர், 130.
அம்மவாழி தோழி காதலர், 325.
அம்மவாழி தோழிகைம்மிக, 141
அம்மவாழி தோழி நம்மலை, 388.
அம்மவாழி தோழி பன்னுள், 249
அம்ம வாழிதோழி பொருள் புரிந்து, 235. [201.
அம்மவாழி தோழி பொன்னி,
அம்மவாழி தோழி யிம்மை, 101.
அயத்துவளர் பைஞ்சாய், 62.
அரக்கத்தன்ன, 14. [9.
அரம்போ முவ்வளை செறித்த,
அரம்போ முவ்வளைத் தோணிலை,
அரிபெய் சிலம்பிலு, 6. [125.
அரியற் பெண்டிர், 157.
அருஞ்சுர மிறந்த, 195.
அருந்தெறன் மரபிற், 37
அரும்புமுதிர் வேங்கை, 242.
அருளன்றுக, 75.
அரையுற் றமைந்த, 100.
அலமரன் மழைக்கண், 233.
அவ்விளிம் புரீஇய, 371.
அவரையாய் மலர், 243.
அழியா விழவின், 115.
அழிவி லுள்ளம், 47.
அளிதோதானே, 239.
அளிநிலை பொருஅ, 5.
அறந்தலைப் பிரியா, 173.
அறன்கடைப்படாஅ, 155.
அறியாய்வாழி தோழி நெறி, 389.
அறியாய்வாழி தோழி பொறிவரி, 268.
அறியாய்வாழி தோழி மிருளற, அன்புமடனுஞ், 225. [53.
அன்றவ ணொழிந்தன்று, 19.
அன்னுய் வாழி வேண்டன்னை நம்படப்பை, 68.
அன்னுய் வாழி வேண்டன்னை நின்மகள், 48.
அன்னை யறியினும், 110.
ஆடமைக் குயின்ற, 82.
ஆய்நலந் தொலைந்த, 69.
ஆள்வழக்கற்ற, 51.
ஆள்வினைப் பிரிதலு, 353.
ஆளிநன் மான, 381.
ஆறுசெல்வம்பலர், 137.
இகுளை கேட்டிசின், 138.
இடம்படு பறியா, 252.
இடைபிறரறிதலஞ்சி, 303.
இம்மென் போரி, 323.
இம்மை யுலகத்தி, 66.
இருங்கழி மலர்ந்த, 270.
இருங்கழி முதலை, 3.
இருந்த வேந்த, 384.
இருபெரு வேந்தர், 174.
இரும்பிடிப் பகிலர், 311.
இரும்பிழி மகாஅரிவ், 122.
இரும்புலி தொலைத்த, 272.
இருவிசும்பதிர, 274.
இரு விசும்பிவர்ந்த, 304.

இருள்கிழிப் பதுபோல், 72.
இருள்படு கெஞ்சத், 335.
இலங்குசுடர் மண்டிலம், 367.
இலங்குவளை ஞெகிழ. 127.
இலமலரன்ன, 142.
இலையொழித் துலறிய, 293.
இழைநிலை ஞெகிழ்ந்த. 398.
இன்பமுமிடும்பையும், 327.
இன்னிசை யுருமொடு, 58.
இனிப்பிறி தண்டோ, 313.
ஈயற்புற்றத், 8.
ஈன்றுபுறந்தந்த, 35.
உண்ணுமையி, 123.
உணர்குவெனல்லேன், 226.
உய்தகையின்று, 341.
உயிர்கலந்தொன்றிய, 205.
உயிரினுஞ் சிறந்த, 245.
உருமுரறு கருவிய, 158.
உலகுகிளர்ந்தன்ன, 255.
உலகுட னிழற்றிய, 204.
உவக்குக ளாயினு, 203.
உவர்விளையுப்பின், 390.
உழுந்துதலைப் பெய்த, 86
உழுவையொ டுழந்த, 308.
உள்ளல் வேண்டு, 129.
உள்ளாங் குவத்தல், 111.
உளமான்றுப் பின், 102.
உறுகழி மருங்கி, 230.
உன்னங்கொள்கையொடு,65.
ஊறலவ்வா, 326.
ஊருஞ்சேரியும், 220.
எம்வெங்காம, 15.
எரியகைந்தன்ன தாமரைப்பழனத்து, 106.
எரியகைந்தன்னதாமரை யிடையிடை, 116.
எல்லையுமிரவு, 299.
எல்வளை ஞெகிழ, 185.
எவன்கொல் வாழி, 250.
என்மகள் பெருமடம், 397.
என்னுவதுகொ, 348.
என்னெனப் படுங்கொ, 206.
ஏனலுமிறங்குகுரல், 132.
ஒடுங்கீரோதி, 160.
ஒழித்தது பழித்த, 39.
ஒழியச் சென்மார், 285.
ஒறுப்ப வோவலை, 342.
ஒங்குதிரைப் பரப்பின், 320.
ஒங்குநிலைத்தாழி, 275.
ஒங்குமலைச் சிலம்பின், 147.
ஒடா நல்லேற்று, 334.
கடல்கண்டன்ன, 176.
கடல்பாடவிந்து, 50.
கடவுட்கற்பொடு, 184.
கடன்முகந்துகொண்ட, 43.
கடுந்தே ரிளையரொடு, 310.
கண்டிசின் மகளே, 369.
கதிர்கையாக, 164.
கயந்தலை மடப்பிடி, 165.
கரைபாய் வெண்டிரை, 199.
கழிப்பூக் குற்றுங், 330.
கழியே, சிறுகுரு னெய்த, 350.
கள்ளியங் காட்ட, 97.
களவும் புனித்தன, 394.
களையுமிடனுற், 64.
கறங்கு வெள்ளருவி, 118.
காணினிவாழி, 232.
காய்ந்துசெலற்கனலி, 55.
கார்பயம் பொழிந்த, 234.
கார்விரி கொன்றை (கடவுள்வா)
கானப் பாதிரி, 261.
கானமானதர், 318.
கானலுங் கழுருது, 170.
கானன் மாலை, 40.
கானுயர் மருங்கின், 193.
கிளியும்பந்து, 49.
கிளைபா ராட்டுங், 218.
குடுமிக் கொக்கின், 290.
குணகடன் முகந்த, 278.
குவளையுண் கண், 183.

குழற்காற்சேம்பின், 336.
குறியிறைக்குரம்பை, 210.
குன்றியன்ன, 133.
குன்றேங்குவைப்பி, 338.
கூர்முண்முள்ளி, 26.
கூழையுங்குறுநெறி, 315.
கூழ்செய்வது, 292.
கூறுவங்கொல்லோ, 198.
கூனலெண்ணின், 112.
கேள்கேடின்றவுங், 93.
கேளாய்வாழியோ, 63.
கேளாயெல்லதோழிவாலிய, 211.
கேளாயெல்லதோழிவேலன், 114
கொடுந்தாண்முதலை, 80.
கொடுந்திமிற்பரதவர், 70.
கொடுமுளீங்கை, 357.
கொடுவரியிரும்புலி, 27.
கொல்லினைப்பொலிந்த, 9.
கொளக்குறைப்படா, 162.
கோடுயர்பிறங்கன், 393.
கோடுறநிவந்த, 266.
கோடைநீட்லின், 377.
கோதையினர, 296.
கோழிலைவாழை, 2.
சாரல்யாஅத், 337.
சிமையக்குரல, 399.
சிலம்பிற்போகிய, 302.
சிலையேறட்ட, 289.
சிறியிலைநெல்லி, 284.
சிறுகரும்பிடவின், 34.
சிறுநுதல்பசந்து, 307.
சிறுபுன்சிதலை, 149.
சிறுபைந்தூவி, 57.
சீர்கெழுவியனகர், 219.
செய்வதுதெரிந்தறிசின், 281.
செய்வினைப்பிரி, 143.
செல்கபாக, 224.
செல்லன்மகிழ்நகிற், 376.
செவ்வீஞாழற், 240.
செறுவோர்ச்செம்மல், 231.
சென்மதிசிறக்கநின், 288.
சென்றுநீடுக, 375.
சேற்றுநிலைமுனை இய, 46.
தண்கதிர்மண்டிலம், 277.
தண்கயத்தமன்ற, 59.
தண்கயம்பயந்த, 395.
தந்தையந்துறைவோர், 151.
தயங்குதிரைப்பெருங்கடல், 263.
தற்புரந்தெடுத்த, 383.
தன்கடற்பிறந்த, 13.
தன்னோரன்ன, 385.
தாவினன்பொன், 212.
தாழ்சினைமருதின், 366.
தாழ்பெருந்தடக்கை, 392.
திதலைமாமை, 135.
திருந்திழையெகிழ்த்து, 387.
திரையுழந்தசைஇய, 190.
தீந்தயிர்கடைந்த, 87.
துஞ்சுவதுபோல, 139.
துறைநீர்வழங்கு, 316.
துன்னருங்கானம், 181.
துனியின்றியைந்த, 241.
தூதுஞ்சென்றன, 251.
தூமலர்த்தாமரை, 361.
தெண்கழிவிளைந்த, 159.
தெறுகதிர்ஞாயிறு, 89.
தேம்படுசிமைய, 94.
தேர்சேணீக்கி, 380.
தொடங்குவினைதவிரா, 29.
தொடிதோளிவர்க, 269.
தொடியணிமுன்கை, 287.
தொடுத்தென்மகிழ்க, 396.
தொடுதோற்கானவன், 368.
தொன்னலஞ்சிதைய, 177.
தோட்பதனமைத்த, 79.
தோன்புலம்பகல, 187.
தோளுந்தொல்கவின்றொலந்
தன, 209.
தோளுந்தொல்கவின்றொலைய,
347.

நகைநன்றம்மதானேயவனெடு 400. [சை, 346.
நகைநன்றம்மதானேயிறைமி நகைநனியுடைத்தாற், 180.
நகைநீகேளாய், 248.
நகையாகின்றே, 56.
நட்டோரின்மையு, 279.
நந்நயந்துறைவி, 379.
நறவுண்மண்டை, 96.
நறைவிராவுற்ற, 254.
நன்கலங்களிற்றெடு, 124.
நன்மரங்குழீஇய, 166.
நன்றல்காலையு, 113.
நன்னனுதியன், 258.
நன்னுதல்பசப்பவும்பெரு, 85.
நன்னுதல்பசப்பவுமாள்வினை,77.
நன்னெடுங்கதுப்பொடு, 283.
நனந்தலைக்கானத்து, 78.
நனைவிளைகறவின், 221.
நாண்கொளுண்கோ, 216.
நாணகையுடைய, 121.
நாயுடைமுதுநீர், 16.
நாள்வலைமுகந்த, 300.
நாளுலாவெழுந்த, 81.
நிதியந்துஞ்சு, 378.
நிரைசெலலிவுளி, 363.
நிலநீரற்று, 295,
நிலாவினிலங்கு, 200.
நிழலறுநனந்தலை, 103.
நிறைந்தோர்த்தேரு, 71.
நின்வாய்செத்து, 126
நீசெலவயர, 107.
நீடுநிலையரைய, 331.
நீர்நிறங்கரப்ப, 18.
நீலத்தன்னநிறங்கிள, 358.
நீலத்தன்னநீர்பொதி, 314.
நீளிரும்பொய்கை, 276.
நுதல்பசந்தன்றே, 227.
நுதலுந்தோளு, 119.
நுதலுநுண்பசப், 171.
நெஞ்சுடம்படுதலி, 312.
நெஞ்சுநடுங்கரும்படர், 152.
நெஞ்சுநெகிழ்தகுந, 267.
நெடுங்கயிறுவலந்த, 30.
நெடுங்கரைக்கான்யாற்று, 25.
நெடுங்கொடிநுடங்கு, 196.
நெடுமலையடுக்கம், 92.
நெடுவேண்மார்பி, 120.
நெருநலெல்லை, 32.
நெருப்பெனச்சிவந்த, 31.
நோகோயானே, 153.
நோற்றோர்மன்ற, 61.
ப்கல்செய்ப்ல்கதிர், 229.
பகலிறுமகலாதாகி, 305.
பகுவாய்வராஅல், 36.
பசித்தயானை, 321.
பசும்பழப்பலவின், 189.
பசைபடுபச்சை, 244.
படுமழைபொழிந்த, 154.
பயங்கெழுதிருவிற், 298.
பல்பூந்தண்பொழிற், 360.
பல்லிதழ்மென்மலர், 109.
பன்னுளெவ்வம், 340.
பனிவரைநிவந்த, 98.
பனிவாருண்கணு, 359.
பனைத்திரளன்ன, 148.
பாம்புடைவிடர, 362.
பார்வல்வெருகின், 391.
பானுட்கங்குலும், 297.
பிணங்கரில்வள்ளை, 256.
பிணர்மோட்டுந்தின், 246.
பிரசப்பல்கிளை, 228.
பிரிதல்வல்லிய, 223.
பிறருறுவிழுமம், 382.
பின்னுவிடநெறித்த, 150.
பின்னெடுமுடித்த, 73.
புகையிற்பொங்கி, 265.
புணர்ந்தோர்புன்க, 108.
புன்காற்பாதிரி, 237.
பூங்கண்வேங்கை, 182.

பூங்கணுறுதலு, 329.
பெய்துபுலந்திறந்த, 217.
பெருங்கடல்வேட்ட, 140.
பெருங்கடற்பரப்பி, 60.
பெருங்கடன்முகந்த, 188.
பெருநீரழுவத்து, 20.
பெரும்பெயர்மகிழ்ந, 306.
பெருமலைச்சிலம்பின், 282.
பேருறைதலை இய, 194.
பைப்பயப்பசந்தன்று, 95.
பொய்கைநீர்நாய், 386.
பொறிவரிப்புறவின், 271.
பொன்னடர்ந்தன்ன, 280.
மங்குன்மாமழை, 294.
மன்கண்குளிர்ப்ப, 23.
மன்கனைமுழவமொடு, 76.
மண்டிலமழுங்க, 260.
மண்ணுமுத்த, 247.
மணிமருண்மலர, 236.
மணிவாய்க்காக்கை, 319.
மதவலியானை, 354.
மதியிருப்பன்ன, 192.
மரந்தலைகரிந்து, 169.
மஃபெயற்கலித்த, 42.
மலைமிசைக்குலை இய, 84.
மழையில்வான, 264.
மறந்தவணமையா, 37.
மன்றுபாடவிந்து, 128.
மனையிளமொச்சி, 21.
மாக்கடன்முகந்து, 374.
மாகவிசும்பின், 317.
மாதிரம்புதைய, 364.
மாமலர்வண்ண, 197.
மாவும்வண்டளி, 355.
மான்றமையறியா, 238.
முடவுமுதிர்பலவின், 352.
முதைச்சுவற்கலித்த, 88.
முதைபடுபசுங்காட், 262.
முரசுடைச்செல்வர், 156.
முல்லைவைந்நுனை, 4.
மூலமுகஞ்செய்தன, 7.
மூளவளர்முதல, 332.
மூனைகவர்ந்துகொண்டென, 373.
மூத்தோரன்ன, 90.
மெய்யிற்றீரா, 28.
மேற்றுறைக்கொளீஇய, 356.
மைப்பறப்புழுக்கிய, 136.
மௌவலொடுமலர்ந்த, 117.
யாஅவொண்டளி, 333.
யாமநும்மொடு, 168.
யாமவிரவின், 208.
யாயேகண்ணினுங், 12.
யானெவன்செய்கோ, 67.
வண்டுபடத்ததைந்த, 1.
வந்துவினைமுடித்தனன், 44.
வயங்குமணிபொருத, 167.
வயங்குவெயின்ஞெமிரிய, 322.
வயங்குவெள்ளருவி, 202.
வயவாளெறிந்து, 309.
வயிரத்தன்ன, 178.
வருதுமென்ற, 144.
வழையமலடுக்கத்து, 328.
வலஞ்சுரிமாஅத்து, 83.
வலந்தவள்ளி, 52.
வலிமிகுமுன்பின், 146.
வளங்கெழுதிருநகர், 17.
வளமழைபொழிந்த, 344.
வளைவாய்க்கோதையர், 370.
வறனுறுசெய்தியின், 301.
வாங்கமைபுரையும், 343.
வாடலுழிஞ்சில், 45.
வாரணமுரசு, 172.
வாள்வரிவயமான், 99.
வான்கடற்பரப்பிற், 10.
வானம்பெயல்வளம், 291.
வானம்வாய்ப்ப, 134.
வானம்வேண்டா, 186.
வானமூர்ந்த, 11.
வானுறவிவந்த, 222.
விசும்புதளிபொழிந்து, 345.

விசும்புவிசைத்தெழுந்த, 273.
விசும்புறநிவந்த, 131.
விண்டோய்சிமைய, 179.
விண்ணதிர்புதலிய, 163.
விரியினர்வேங்கை, 38.
விருந்தின்மன்னர், 54.
விருந்தும்பெறுகுநளன், 324.
விலங்கிருஞ்சிமைய, 215.
விளங்குபகலுதவிய, 91.
வினைகவில்யானை, 213.
வினைகன்றுதல், 33.
வினைவயிற்பிரிதல், 161.
வினைவலம்படுத்த, 74.
வீங்குவிளிம்புரீஇய, 175.
வீங்குவிசைப்பிணித்த, 339.
வெள்ளிவிழுத்தொடி, 286.
வேந்துவினைமுடித்த, 104.
வேர்முழுதுலறி, 145.
வேலும்விளங்கிலை, 259.
வேளாப்பார்ப்பான், 24.
வேற்றுநாட்டுறையுள், 351.
வேனிற்பாதிரி, 257.
வைகலோரும், 253.
வைகுபுலர்விடியல், 41.